# பாகிஸ்தான்

[ஜின்னா - பின்னம்]

ஆசிரியர் :

வி. மஹாலிங்கய்யர், எம். ஏ.

நவயுகப்பிரசுராலயம்

ஜி. டி. சென்னை

பதிப்புரிமை பெற்றது]

[ரூ. 1—0—0

ஜுபிடர் பிரஸ்
சென்னை

‘ஜின்னுக்கள் தோன்றுவார்கள்,
ஜின்னுக்கள் மறைவார்கள்,
ஆனல் ஹிந்துக்களும் முஸ்லிம்களும்
இணை பிரியாமலே இருந்து வருவார்கள்.’

— கன்யாலால் முன்ஷி

'எந்த ராஜாங்கத்தில் பற்பல ஜாதியினர், மதத்தினர், இடுக்கண்கள் இல்லாமல் வாழ்ந்து வருகிறார்களோ, அதுதான் சிறந்த ராஜாங்கம். பல ஜாதிகள் கலந்து வாழாமல் இருக்கும் நாடுகள், பூரணத்தை அடையாத நாடுகள் என்றே சொல்லவேண்டும். "ஒரு ராஜாங்கத்தில், பல ஜாதியினர் ஒரு காலத்தில் வாழ்ந்தனர் — இப்போது வித்தியாசங்களெல்லாம் மழுங்கிப் போய்விட்டன" என்றால், அந்த ராஜாங்கம் நொண்டியாகிவிட்டது என்று அர்த்தம்.'

— ஆக்டன் பிரபு

# பொருளடக்கம்

முன்னுரை

| | | |
|---|---|---|
| 1. | வாதங்களின் சுருக்கம் | பக்கம் 1 |
| 2. | சரித்திர விசித்திரம் | 8 |
| 3. | அகிலாண்ட இஸ்லாம் | 10 |
| 4. | அரசியல் மெக்கா—கான்ஸ்டாண்டிநோபிள் | 21 |
| 5. | 1914-18 மகா யுத்தம் | 27 |
| 6. | வெர்ஸேல்ஸ் படலம் | 37 |
| 7. | பாலஸ்தீனப் புரட்டு | 42 |
| 8. | பாலஸ்தீனப் படுகொலைகள் | 52 |
| 9. | மர்மங்கள் | 65 |
| 10. | பிரிவினை மருந்து | 69 |
| 11. | வகுப்புவாத விபரீதங்கள் | 74 |
| 12. | இங்கும் அங்கும் | 85 |
| 13. | மிஸ்டர் ஜின்னு | 92 |
| 14. | பாகிஸ்தான் பிரச்னை | 102 |
| 15. | அபிப்பிராய வெள்ளம் | 115 |
| 16. | முரண்மயத் திட்டங்கள் | 132 |
| 17. | மஹாத்மாவின் மணிவாசகம் | 138 |
| 18. | அமிர்த-இந்தியா | 150 |


## படங்கள்


| | | |
|---|---|---|
| 1. | முஸ்லிம் லீக் தலைவர் மிஸ்டர் ஜின்னு | 1 |
| 2. | காக்ஸார் படைத் தலைவர் ஜனப் அல்லாமா மஷ்ரூகி | 85 |

# முன்னுரை

ஸ்ரீ. மஹம்மத் அலி ஜின்னு, பொது வாழ்க்கையில், அக்பராகத் தோன்றி, இப்பொழுது ஔரங்கஸீபாகக் காட்சியளிக்கிறார். பாகிஸ்தான் இயக்கத்தின் பிதா அவர்தான்.

பாகிஸ்தான் கிளர்ச்சி ஏற்பட்ட வரலாறுகளையும், அந்த இயக்கத்தைப் பற்றி வெவ்வேறு கட்சியினரின் கருத்துக்களையும் எல்லோரும் நன்கு புரிந்துகொள்ளும் வண்ணம் இப்போது ஒரு புஸ்தகம் வெளிவருவதை நான் மிகவும் வரவேற்கிறேன். இதற்கு ஒரு முன்னுரை எழுதுமாறு நவயுகப் பிரசுராலயத்தார் என்னிடம் கேட்டுக்கொண்ட பொழுது, அவ் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளத் தயங்கினேன். இதற்கு ஒரு காரணம் உண்டு. அதைச் சற்று பட்டவர்த்தனமாகச் சொல்லிவிடுவதுதான் நல்லது.

இப்போது முஸ்லிம்களின் மனதில் சில அனுவசியமான கலவரங்கள் இருக்கின்றன. இப்போது எந்த விஷயத்திலும் பல முஸ்லிம்கள், 'யார் சொல்லுகிறார்கள் ?' என்ற கேள்வியைக் கொண்டு கவனிக்கிறார்களே யல்லாது, 'என்ன சொல்லுகிறார்கள் ?' என்பதைக் கவனிப்பதில்லை. பொது விஷயங்களைப் பற்றி ஒருவர் பேசினாலும், மதத்தின் பெயரால் பேசினால்தான் கவனிக்கிறார்கள். ஹிந்து - முஸ்லிம் பிரச்னை தீருவதற்குப்

பக்குவமான காலம் இன்னும் வரவில்லை என்று சொல்வதன் காரணம் இதுதான். எனது தயக்கத்துக்கும் இதுதான் மூல காரணம்.

மற்றொரு காரணமும் உண்டு. பாகிஸ்தான் பற்றிய முழு உண்மையும் ஹிந்துக்களுக்குத் தெரிந்தால், ஹிந்து சமூகத்தில் ஒருவிதமான கோபம் ஏற்படும். பாகிஸ்தானைவிட பாகிஸ்தான் மனப்பான்மை மிகவும் பயங்கரமானது; இன்னும் அதிகமான ஆத்திரத்தை ஊட்டக் கூடியது. சந்தர்ப்பங்களின் மாறுதலால், ஒருகால், இந்த பாகிஸ்தான் இயக்கம் கைவிடப்படுவதாக இருக்கலாம். அதற்கு சாவகாசம் கொடுக்காமல், ஹிந்துக்களின் ஆத்திரத்தைத் தூண்டிவிடக்கூடிய எதையும் நான் செய்ததாக இருக்கக் கூடாது. ஏனென்றால், ஹிந்து சமூகம் எவ்வளவு சீர்கெட்டிருந்த போதிலும், பெரிய நெருக்கடிகளில், ஸாம, தானம், பேதம், தண்டம் ஆகிய நாலு உபாயங்களையும் ஒரே காலத்தில் கைக்கொள்வதற்கான சாதன அமைப்புக்களை உயிர்ப்பித்துவிடக்கூடிய தன்மை வாய்ந்தது. ஒவ்வொரு உபாயத்திலும் கைதேர்ந்தவர்கள் ஹிந்து சமூகத்தில் நிறைந்துள்ளனர். அப்படி 'ஒரு நெருக்கடி சம்பவித்துள்ளது' என்ற உணர்ச்சி ஏற்படாதவாறு காரியம் செய்ததால் தான், அக்பர் போன்ற மன்னர்களின் ஆட்சியும், பிரிட்டிஷ் ஆதிக்கமும் ஆபத்தில்லாமல் வியாபகம் அடைய முடிந்தது. ஹிந்துக்களிடையே 'நெருக்கடி உணர்ச்சி'யை விளைவித்த ஔரங்கஸீப் முகலாய ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு அடி

கோலினர். பஞ்சாபில் ஹிந்து தர்மம், சீக்கிய மதம் என்ற பெயருடன், சுதந்திரத்தை நிலை நாட்டியது.

ஹிந்துக்களிடையே 'நெருக்கடி உணர்ச்சி' ஏற்பட்டுவிடுவது இப்போது விரும்பத்தக்க தல்ல என்பது என் அபிப்பிராயம். இந்த அபிப் பிராயம்தான் இறுதியில் நான் முன்னுரை எழுத ஏற்றுக்கொண்டதற்கும் காரணமாயிற்று. பாகிஸ்தான் என்பது காரிய சாத்தியமான ஓர் அரசியல் லட்சியம் அன்று என்பதை இங்கே சிறிது விளக்கினல், வீண் பீதி ஏற்படாம லிருக் கும் என்று முடிவு கட்டினேன்.

* * *

இனி இந்த முன்னுரையின் முகவுரையை விட்டு, முன்னுரைக்கே வருகிறேன். இந்தப் புஸ் தகத்தை முழுதும் படித்தேன். பாகிஸ்தான் என் பது மதத்தைப்பற்றிய அரசியலாக இருப்பதால், இப் புஸ்தகத்தில் 'அகிலாண்ட இஸ்லாம்' இயக் கத்தைப் பற்றி ஒரு பெரிய அத்தியாயம் காணப் படுவது இயற்கையே. ஆனல், அந்த இயக்கம் இப்போது உயிரற்றுப் போய்விட்டது. இந்தியா வைத் தவிர வேறெந்த இடத்திலும் இப்போது இந்த இயக்கத்திற்கு உயிர் இல்லை. 'அகிலாண்ட இஸ்லாம்' பெயரளவில் இஸ்லாமிய இயக்க மாகத் தோன்றினலும், அது உண்மையில் தேசீய இயக்கமே யாகும். ஐரோப்பாவை அடுத்துள்ள இஸ்லாமிய நாடுகள், ஒவ்வொன்ருக ஐரோப்பிய ரால் ஆக்கிரமிக்கப்பட்ட காலத்தில், அந்த நாடு களில் தேசீய உணர்ச்சி ஏற்பட்டது. அந்த ஆக்

கிரமிப்பை எதிர்ப்பதற்கு கீழ்நாடுகள் ஒன்றுபட வேண்டும் என்பதுதான் அப்போது கிளம்பிய 'அகிலாண்ட இஸ்லாம்' இயக்கத்தின் நோக்கம். 'அகிலாண்ட இஸ்லாம்' என்ற கோஷம் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக ஏற்பட்ட மதக் கிளர்ச்சி அல்ல. அது ஒரு தேசீயக் கிளர்ச்சிதான். சென்ற ஐரோப்பிய யுத்தத்தின்போது இந்த உண்மை நன்கு வெளியாயிற்று. அராபிய நாடுகள் முஸ்லிம்கள் வாழும் நாடுகளே. துருக்கியும் முஸ்லிம்கள் வாழும் நாடுதான். அப்படியிருந்தும், அராபியரைத் துருக்கிக்கு எதிராகக் கிளப்பிவிட முடிந்தது. துருக்கிய மன்னர் எல்லா முஸ்லிம்களின் 'பாத்திஹா'வுக்குப் பாத்திரமாக இருந்த கலிபா என்ற ஸ்தானத்தை வகித்த போதிலும், அரபு நாடுகள் கலிபாவின் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் கிளம்பின. ஆகவே, அதற்கு முன்னுல் இருந்த 'அகிலாண்ட இஸ்லாம்' கிளர்ச்சி உண்மையில் தேசீயக் கிளர்ச்சியேயாகும். ஐரோப்பாவில் எல்லாத் தேசங்களும் கிறிஸ்தவர்கள் வாழும் தேசங்கள்தான். ஆனுல், அவற்றைச் சேர்த்துவைப்பதோ, பரஸ்பரம் சண்டையிடச் செய்வதோ மதம் அன்று, தேசீயம்தான். அதே போல, தேசீய சுதந்திரம் என்ற லட்சியம்தான் உண்மையில் 'அகிலாண்ட இஸ்லாம்' என்ற உருவத்தில் தோன்றியது. ஐரோப்பிய யுத்தத்தை உபயோகித்துக்கொண்டு, அராபிய இஸ்லாமிய நாடுகள் துருக்கிய இஸ்லாமிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்றன. கமால் பாஷா பதவிக்கு வந்த பிறகு, துருக்கியரல்லாத இஸ்லாமிய நாடுக

ளேத் தம் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்வதே தவறு என்று நினைத்தார்.

ஆகவே, இந்தியாவில் காணப்படும் 'அகிலாண்ட இஸ்லாம்' உணர்ச்சியானது உண்மையான பழைய 'அகிலாண்ட இஸ்லாம்' இயக்கத்திற்குச் சம்பந்தமுள்ளதல்ல. சம்பந்தம் இருப்பதாகக் கற்பிப்பது இந்திய முஸ்லிம்கள் பொய்க் கனவு காணும்படி செய்வதாகும். 'அகிலாண்ட இஸ்லாம்' என்பது ஒரு மத சாம்ராஜ்யமாக இருக்குமானால், அதன் தலைமைப் பதவி இந்தியாவிலுள்ள முஸ்லிம்களிடம்தான் இருக்கும். அரேபியாவிலோ, பாரசீகத்திலோ உள்ள முஸ்லிம்கள் இந்திய முஸ்லிம்களின் ஏகாதிபத்தியத்தை ஒரு நிமிஷத்திற்குக் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மொராக்கோ முதல் சிந்து நதி வரை வியாபிக்கும் ஒரு பெரிய ஏகாதிபத்தியம் ஏற்படுவதை ஐரோப்பிய வல்லரசுகள் அரை நிமிஷத்திற்குக் கூட அனுமதிக்க மாட்டா. ஆகையால், பாகிஸ்தான் கனவுக்குக் காரணமாயுள்ள ('அகிலாண்ட இஸ்லாம்' பற்றிய) தப்பு அபிப்பிராயத்தை இந்திய முஸ்லிம்கள் தம் மனதில் நுழையாமல் அப்புறப்படுத்திக்கொள்ள வேண்டும். பாகிஸ்தான் விஷமம் போதிய அளவு ஏறவில்லை என்று சில பிரிட்டிஷ் ராஜதந்திர விஷமிகள் நினைத்தால், அப்போது 'அகிலாண்ட இஸ்லாம்' என்ற பொய்க் கனவைக் கிளப்பிவிட அவர்கள் முயற்சிப்பார்கள். முடிவில் முஸ்லிம்களை ஏமாற்ற மடையச் செய்வார்கள். ஆதலால், இதுபற்றி முஸ்லிம்கள்

முன்னதாக சற்று ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

* * *

பாலஸ்தீன் பிரச்னை சம்பந்தமான நிலைமையின் ரகசியத்தை இப் புத்தகம் நன்கு விளக்குகின்றது. 'நோய்க்குத் தகுந்த மருந்து கொடுப்பது உலக முறை. ஆனால், மருந்துக்குத் தக்க நோயை ஏன் உண்டாக்கிக்கொள்ளக் கூடாது? ......பாலஸ்தீனம் ஒரு குட்டி இந்தியாவாகச் செய்யப்பட்டது. இப்போது இந்தியா ஒரு பெரிய பாலஸ்தீனமாவதற்கே பாகிஸ்தான் கிளர்ச்சி வந்து விழுந்திருக்கிறது போல் தோன்றுகிறது' என்று இந் நூலின் பத்தாவது அத்தியாயத்தில் காணப்படும் வாக்கியங்கள் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளன. இங்கு பாகிஸ்தான் வேண்டுமென்று கிளர்ச்சி செய்யும் லீகர்கள் பாலஸ்தீன் பிரிவினையைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைச் சற்று பகிரங்கமாகச் சொல்லத் துணிவார்களா?

'பாகிஸ்தானுக்கு ஒரு தாய்ச் சனியன் உண்டு; அதுதான் தனித் தொகுதி' என்று ஆசிரியர் கூறுகிறார். 'தனித் தொகுதி தனி ராஜ்யமாகப் பரிணமித்துவிட்டது' என்கிறார். உண்மைதான். ஆனால், எந்த வகையில்? முதலில் ஒன்று கேட்டு, அது கொடுக்கப்பட்டதும் அதனிலும் பெரிதான ஒன்றைக் கேட்கிறார்கள், என்ற வகையிலா? இல்லை. தனித் தொகுதியால் முஸ்லிம்களுக்கு ஒரு பாதகம் ஏற்பட்டது. தமக்குப் பாது

காப்பு என்று முஸ்லிம்கள் கருதிய தனித் தொகுதி, முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு அரசியல் நிர்வாக அதிகாரத்தில் போதிய பங்கு ஏற்பட வசதியில்லாமல் செய்தது. தாம் நல்லதென்று கருதி மிகவும் போராடிப் பெற்ற ஒரு சாதனம், தமக்கே கெடுதியாக வந்து சேர்ந்ததைப் பார்த்ததும் முஸ்லிம் தலைவர்களுக்குப் பெரிய ஆத்திரம் கிளம்பியது. ஆனால், 'தனித் தொகுதி வேண்டாம்; அரசியல் சட்டத்தை மாற்றி எங்களுக்குக் கலப்புத் தொகுதியில் ஸ்தானங்கள் ஒதுக்குங்கள்' என்று கேட்பதற்கு லீக் தலைவர் ஸ்ரீ. ஜின்னாவுக்கு வெட்கமாக இருந்தது. ஏனென்றால், தனித் தொகுதிக்காக மிகவும் போராடினவர் அவர்தான். தாமே தேடிக் கொடுத்த பொருள்தான் முஸ்லிம்களுக்கு அரசியல் ஆதிக்கம் இல்லாமல் செய்தது என்று ஒப்புக் கொள்வதற்கு வேண்டிய உண்மையான காம்பீரியம் அவரிடம் இல்லாததால், 'தனி ராஜ்யம்' கேட்கத் தலைப்பட்டார். தனித் தொகுதியால் முஸ்லிம்களுக்கு விளைந்த அனர்த்தம் மிகவும் சொற்பம். தனி ராஜ்யக் கிளர்ச்சியால் முஸ்லிம்களுக்கு ஏற்படவிருக்கும் கெடுதி, தனித் தொகுதியால் ஏற்பட்ட கெடுதியைவிட பன்மடங்கு பெரிதாக இருக்கும்.

* * *

**பா**கிஸ்தான் கிளர்ச்சியின் அந்தரங்கக் காரணம் என்ன என்பதை சிறிது கவனிப்போம்.

காங்கிரஸ் ராஜ்யத்தில் முஸ்லிம்கள்மீது கொடுமைகள் புரியப்பட்டதாகச் சொல்லப்படுவ

தெல்லாம் வெறும் புரளியே. உண்மையில் காங்கிரஸ் மெஜாரிட்டி மாகாணங்களில் முஸ்லிம்கள் செல்லப் பிள்ளைகளாகவே நடத்தப்பட்டார்கள். ஆனால், அரசியல் நிர்வாகத்தில் அவர்களுக்குப் போதிய பங்கு கிடைக்கவில்லை. கிடைப்பது சாத்தியமாகவில்லை. ஏன் சாத்தியமாகவில்லை? தேர்தலின்போது, அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்னைகளை ஆதாரமாகக் கொண்ட கட்சிகளில் சேர்ந்தவர்களாக முஸ்லிம்கள் தேர்தலுக்கு நிற்பது அசாத்திய மாகிவிட்டது. தேர்தல் தொகுதியானது மதத்தைப் பற்றிய தொகுதியாக இருந்ததால், ஜனங்களிடையே மத சம்பந்தமான பீதியைக் கிளப்பி, மதத்தைக் காப்பாற்றுவதாகக் கோஷிப்பதுதான் தேர்தல் மேடையின் பொது அம்சமாக இருந்தது. யார் அதிகமான பீதியைக் கிளப்புகிறார்களோ அவர்கள்தான் அதிகமாக மதத்தைக் காப்பாற்றுவதாகப் பாமர மக்கள் கருதிவிடுவது சகஜம். ஆகையால், 'இஸ்லாத்துக்கு ஆபத்து' என்று கோஷிப்பதைத்தான் தேர்தல் விக்ஞாபனமாகப் பல முஸ்லிம்கள் கொள்ள வேண்டி யிருந்தது. அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளை அடிப்படையாய்க் கொண்ட கட்சிகளுடன் அந்த அபேக்ஷகர்கள் தம்மைச் சேர்த்துக்கொள்ள வசதியில்லாமல் போய்விட்டது. பார்லிமென்டரி ஜனநாயக முறைப்படி, எந்தக் 'கட்சிக்கு' மெஜாரிட்டி யிருக்கிறதோ அந்தக் கட்சிதான் நிர்வாகத்தை நடத்தவேண்டும். மெஜாரிட்டி பெற்ற கட்சிகளில் போதிய முஸ்லிம்கள் இருந்தால் மந்திரி சபைகளில் அதிக

மான முஸ்லிம்கள் இருப்பது முற்றிலும் சாத்தியமே. மெஜாரிட்டி கட்சியில் போதிய முஸ்லிம்கள் இல்லாவிடில், முஸ்லிம்களுக்கு மந்திரி ஸ்தானங்கள் அதிகமாகக் கிடைப்பது சாத்தியமில்லே.

தனித் தொகுதி முறை இருப்பதால் ஹிந்துக்கள் மெஜாரிட்டி ஜனத் தொகையாகவுள்ள மாகாணங்களில், மெஜாரிட்டி கட்சியில் போதிய முஸ்லிம் அங்கத்தினர் இல்லே. மந்திரி சபையிலும் அவர்களது தொகை குறைவாக இருந்தது. இதைக் கண்ட ஸ்ரீ. ஜின்னு, இந்த நிலேமைக்குக் காரணம் தனித் தொகுதிதான் என்ற உண்மையை மறந்து, அல்லது மறைத்து, பார்லிமென்டரி ஜனநாயக முறைதான் காரணம் என்று ஜனநாயக முறைமீது பழியைப் போட்டார். பழியைப் போடவேண்டியது பார்லிமென்டரி ஜனநாயக முறை மீது அல்ல; தனித் தொகுதி மீது.

கலப்புத் தொகுதி இருந்திருக்குமாயின், சென்னே போன்ற ஒரு மாகாணத்தில், ஜனத் தொகையில் சுமார் 8% கூட இல்லாத முஸ்லிம்கள் மந்திரி சபையில் சுமார் 25% ஸ்தானங்கள் வரையில்கூடப் பெறுவது அசாத்தியமல்ல. இந்தியா சுதந்திர மடைந்துவிட்டால், பிறகு தேர்தல்கள், 'சுயராஜ்யம் வேண்டுமா, அடிமை வாழ்வு வேண்டுமா?' என்ற முறையில் நடைபெறமாட்டா. அம்முறையில் ஒரே கட்சி பெருவாரியான மெஜாரிட்டியுடன் வெற்றி பெறும் நிலேமை மாறும். 'நிலவரிதான் பிரதான வரியாக இருக்கவேண்டுமா, வர்த்தக வரிதான் பிர

தான வரியாக இருக்கவேண்டுமா?' என்பது போன்றவைதான் தேர்தல் பிரச்னைகளாக அமையும். அப்போது முஸ்லிம்களும் ஹிந்துக் களும் எல்லாக் கட்சிகளிலும் இருப்பார்கள். 'ஹிந்துக்கள் ஆதிக்கம்' 'முஸ்லிம்களின் ஆதிக் கம்' என்ற நிலைமை இருக்காது. இவ்வாறு நெடுங் காலத்து வாழ்வைப் பற்றிய தூரதிருஷ்டியுடன் யோசிக்காமல், மத வெறியைக் கிளப்பிவிடுவது ஸ்ரீ. ஜின்னு போன்ற அறிவாளிகளுக்கு ஏற்றதே யல்ல.

அது ஒருபுறமிருக்க. இப்போது முஸ்லிம் களின் உண்மையான மனக்குறை முஸ்லிம்களுக் குப் போதிய மந்திரிப் பதவிகளும் அரசியல் செல் வாக்கும் கிடைக்கவில்லை என்பதுதான். 'இந்தக் குறையைத் தீர்த்துக்கொள்வதற்கு ஸ்ரீ. ஜின்னு என்னென்னவோ கேட்கலாம். நாட்டைத் துண்டு துண்டாகப் பிளக்கவேண்டு மென்று கேட்கவேண்டியதில்லை' என்று ஸ்ரீ. ராஜகோபா லாசாரியார் கூறினுர். முஸ்லிம்களின் இயற்கை யான அபிலாஷையை நிறைவேற்றி மனக் குறையை நீக்க என்ன செய்யலாம் என்ற கேள் விக்கு ஸ்ரீ. ஜின்னு இன்னும் பதில் சொல்லி யாக வில்லை. பிரச்னைக்குப் பதில் சொல்லத் தயாரா யில்லாததால்தான், தம்மைத் தலைவராகக் கொண்டாடுவோரின் மனதை பிரமிக்க வைத் துக் கவர்ந்துகொள்வதற்கு ஒரு சூத்திரமாக 'பாகிஸ்தான்' என்ற வார்த்தையை அவர் உப யோகிக்கிறுர்.

*   *   *

'பாகிஸ்தான்' திட்டம் வேண்டு மென்ப தற்குப் பலர் சொல்லும் காரணங்களும், பாகிஸ் தான் கூடாது என்பதற்கு வேறு பலர் சொல்லு கிற காரணங்களும் இப் புஸ்தகத்தில் தரப்படு கின்றன. பாகிஸ்தான் வேண்டாம் என்பதற் குக் காரணம் நன்கு தெரியவேண்டுமானுல் அதன் சில அம்சங்களை நாம் ஊடுருவிக் கவன மாகப் பார்க்கவேண்டியது அவசியம்.

இந்தியாவில் முஸ்லிம்கள் பெரும்பான்மை யாக வசிக்கும் பாகங்களை ஆங்காங்கு தனி ராஜ் யங்களாக அமைக்கவேண்டும் என்பது பாகி ஸ்தான் வாதிகளின் கோரிக்கைகளில் ஒன்று. இப்போது இந்தியா 11 மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாகாணப் பிரி வினை இப்படியே இருந்து தீரவேண்டு மென்று யாரும் வாதாடவில்லை. பாஷை வாரியாக மாகா ணங்களைப் பிரித்தால் சௌகரியமாக இருக்கும் என்றே பலர் எண்ணுகிருர்கள். இந்தக் கொள் கையைக் காங்கிரஸும் ஏற்றுக்கொண்டிருக் கிறது. பாஷையை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களை மாற்றி யமைப்பது போல, ஜனத் தொகையில் எந்த மதத்தினர் எங்கு அதிகமாக இருக்கிருர்கள் என்று பார்த்து வேறு விதமாக மாகாணங்களை ஏன் வகுக்கக் கூடாது என்று கேட்கலாம். பாகிஸ்தான் என்பதன் அர்த்தம் அவ்வளவுதான் என்ருல், அதற்கு இவ்வளவு கடு மையான ஆட்சேபம் இருக்காது. ஆனுல், 'பாகிஸ்தான்' என்ற இயக்கத்தின் கருத்து அதுவல்ல. அவ்வாறு பிரிக்கப்பட்ட மாகாணங்

கள் 'முஸ்லிம் மாகாணம்' அல்லது 'ஹிந்து மாகாணம்' என்று கருதப்பட்டு, மதத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதுதான் ஆட்சேபத்திற்குக் காரணம். அதாவது, ஆட்சி நடத்துவோர் முஸ்லிமாக அல்லது ஹிந்துவாக இருப்பினும், அந்த ஆட்சி முஸ்லிம் ஆட்சியாகவோ ஹிந்து ஆட்சியாகவோ இருக்கக் கூடாது. அக்பர் ஔரங்கஸீப் இருவரும் முஸ்லிம்களே. ஆனல், அக்பர் 'இந்திய ராஜ்ய'மாக ஆண்டார். ஔரங்க ஸீப் 'முஸ்லிம் ராஜ்ய'மாக ஆண்டார். அது போல ஔரங்கஸீப் - ராஜ்யமாக ஆளவேண்டும் என் பது பாகிஸ்தான் மனப்பான்மை. ஆட்சேபிப் பது மாகாணங்களை மாற்றி யமைக்கும் பிரே ரணையை அல்ல; அந்தப் பிரேரணையின் அடிப் படை நோக்கத்தைத்தான் ஆட்சேபிக்கிருர்கள். உதாரணமாக ஸர் ஸிக்கந்தர் ஹயாத்கான் இப் போது பஞ்சாப் பிரதம மந்திரியாக இருந்தாலும், அவர் 'முஸ்லிம் ராஜ்ய'மாக நிர்வகிக்கவில்லை. ஜமீன்தாரி ராஜ்யமாகவே நிர்வகிக்கிருர். பாகிஸ் தான் திட்டப்படி அவர் அந்த மாகாணத்தை நிர்வகிப்பாராயின் அவர் முஸ்லிம் ராஜ்யமாக நிர்வகிக்க வேண்டியிருக்கும். அதுதான் பாகிஸ் தான் பிரிவினைக்குள்ள ஓர் ஆட்சேபம்.

துருக்கியில் பிரஜைகள் யாவரும் முஸ்லிம் களே; ஆள்பவரும் முஸ்லிம்கள்தான். ஆனுலும் அது 'இஸ்லாமிய ராஜாங்கம்' அல்ல. அது போலவே இந்தியாவில் எந்தப் பகுதியிலும் முஸ்லிம்களே ஜனத்தொகையில் மெஜாரிட்டி

யாகவும், சர்க்காரை நிர்வகிப்பவர்களாகவும் இருப்பதில் தேசீயவாதிகளுக்கு ஆட்சேபமில்லை. ஆனால், எந்தப் பகுதியும் 'இஸ்லாமிய ராஜாங்க'மாக நிர்வகிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. அது போலவே இந்தியாவின் எந்தப் பகுதியும் 'ஹிந்து ராஜாங்க'மாக நிர்வகிக்கப்படுவதையும் அனுமதிக்க முடியாது.

*　　　*　　　*

பாகிஸ்தான் திட்டத்தின் மற்றொரு அம்சமும் குறிப்பிடத் தக்கது.

பாகிஸ்தான் திட்டப்படி ஏற்படும் முஸ்லிம் மாகாணங்கள் தம்மிடையே ஒரு சமஷ்டியை அமைத்துக்கொள்ள வேண்டும்; இது பூர்ணமான ராஜாங்கக் கௌரவம் (Sovereign rights) உள்ளதாக இருக்கவேண்டும் என்பது பாகிஸ்தான் திட்டத்தின் பிரதான அம்சம். இதில் 'ராஜாங்கக் கௌரவம்' என்ற சொற்களின் பொருளைப் பலரும் பூர்ணமாக உணர்ந்தால் இத்திட்டம் எவ்வளவு பெரும் கொடுமை என்பது புலனாகும். 'ராஜாங்கக் கௌரவ'த்துடன் கூடிய இந்த பாகிஸ்தான் ஏற்பட்டால், அதுவும் இந்தியாவின் மற்றப் பகுதிகளும் பரஸ்பரம் அந்நிய நாடுகளாக மதிக்கப்படும். முஸ்லிம் ராஜாங்கமும், ஹிந்து ராஜாங்கமும் பரஸ்பரம் பிரிட்டனும் பிரான்ஸும் போல சேர்ந்து வாழலாம்; அல்லது பிரிட்டனும் ஜெர்மனியும் போல சண்டை போட்டுக்கொண்டிருக்கலாம். இந்தியாவுக்குள்ளேயே இரண்டு

பகுதிகள் ஒன்றோடொன்று யுத்தம் செய்வதற்குக் கூட உரிமை இருக்கவேண்டும் என்பது தான் 'ராஜாங்கக் கௌரவ'த்தின் எல்லை. இதனால், சிந்து நதி தீரத்தில் வாழ்பவர்களை கங்கை நதிக் கரையில் வாழ்பவர்கள் வெளி நாட்டாராக மதிக்கும் நிலைமை ஏற்படும். இன்று பர்மாவுக்கும் இந்தியாவுக்குமிடையே உள்ளது போன்ற உறவுதான் தமிழ் நாட்டுக்கும் திரௌபதி பிறந்த பாஞ்சால நாட்டுக்கு மிடையேயும் இருக்கும். சீனா - ஜப்பான் யுத்தம் ஒன்றில், கிழக்கு வங்காள ராஜ்யம் ஜப்பானுடனும், மேற்கு வங்காளம் சீனாவுடனும் சேர்ந்துகொண்டு, சீனா - ஜப்பான் யுத்தத்தை இந்தியாவுக்குள்ளேயே நடத்தும் நிலைமையும் ஏற்படலாம். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே ஏற்படுவது போன்ற பிரச்னைகள், ஜனங்களின் போக்குவரவு, ஏற்றுமதி இறக்குமதித தடைகள் முதலியன இந்தியாவுக்குள்ளே யிருக்கும் பிராந்தியங்களுக் குள்ளேயே ஏற்பட முடியும். மகாராஷ்டிரமும், நிஜாம் ராஜ்யமும் பரஸ்பரம் யுத்தம் செய்துகொண்டு, 'முதல் மராட்டா யுத்தம்', 'இரண்டாவது மராட்டா யுத்தம்' என்பது போன்ற யுத்தங்களை நீடித்து நடத்தலாம். தனி 'ராஜாங்கக் கௌரவம்' என்பதில் இதெல்லாம் விளையக்கூடும் என்பது வெறும் கற்பனையல்ல. இது போன்ற நிலைமைகளில் அந்நியர்கள் பிரவேசிப்பார்கள்; அப்போது மகாராஷ்டிரம் நிஜாம் ராஜ்யம் இரண்டும் சுதந்திரத்தை இழக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். பஞ்சாப் கோது

மைக்கு மகாராஷ்டிரத்தில் இறக்குமதி வரி, பம்பாய் மாகாண ஜவுளிக்கு பஞ்சாபில் இறக்குமதி வரி — இவை சகஜமாகிவிடும். ஆஸ்டிரியா - ஹங்கேரி ஏகாதிபத்தியம் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கைப்படி, ஆஸ்டிரியா, ஹங்கேரி, ஜுகோஸ்லேவியா என்று பல துண்டுக ளாக்கப்பட்டது. ஒவ்வொரு துண்டும் பூர்ண 'ராஜாங்கக் கௌரவ'முள்ள நாடாக ஏற்படுத்தப்பட்டதன் பயனாக, அந்த ஒவ்வொரு தனி நாடும் பொருளாதார அமைப்பில் தனித்து வாழச் சக்தியற்று உயிரிழந்து போயிற்று. இதே நிலைமை தான் சம ராஜாங்க அந்தஸ்துள்ள பிரிவுகளால் இங்கு ஏற்படக் கூடியது. ஆகவே இந்தத் தனி ராஜாங்கங்கள், பொருளாதாரச் சீர்கேடு, நதிகளின் உரிமை பற்றிய தகராறுகள், பரஸ்பர யுத்தம் முதலிய பல நோய்களுக்கு இலக்காகி, அந்நிய ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுப் போகும் நிலைமை வெகு சீக்கிரத்தில் ஏற்பட்டுவிடும். அப்போது முஸ்லிம் ராஜ்யமும் இருக்காது, ஹிந்து ராஜ்யமும் இருக்காது.

தற்காலம் ஒவ்வொரு பிரதேசத்திலும் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் கலந்து இருப்பதால், பாகிஸ்தான் ஏற்படும்போது ஒவ்வொரு ராஜ்யமும் ஒரு செக்கோஸ்லேவேகியாவாக, தன்னுள்ளே ஒரு 'ஸுடேட்டன்' இயக்கத்தைச் சமாளிக்கவேண்டிய நிலைமையில்தான் இருக்கும்.

ஆகையால் தனித் தனியாக ராஜாங்கக் கௌரவமுள்ள ராஜ்யங்களாக இந்தியாவைப்

பிரிப்பதாயின், முதன் முதலாக மூன்று காரியங்கள் செய்தாகவேண்டும்:

(i) ஹிந்துக்களே இல்லாத முஸ்லிம் மாகாணங்களும், முஸ்லிம்களே இல்லாத ஹிந்து மாகாணங்களும் ஏற்படவேண்டும். பஞ்சாப் முதலிய இடங்களிலுள்ள ஹிந்துக்கள் எல்லோரையும் வேறு இடத்திற்குக் குடியேற்றவேண்டும். தமிழ் நாடு முதலிய இடங்களிலுள்ள முஸ்லிம்களை பஞ்சாப், கிழக்கு வங்காளம் போன்ற இடங்களுக்குக் குடியேற்றவேண்டும். இதற்கு ஹிந்து மெஜாரிட்டி மாகாணங்களிலுள்ள முஸ்லிம்களும், முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணங்களிலுள்ள ஹிந்துக்களும் தயாரா? ஹிந்துக்கள் தயாரா யிருப்பதாகத் தெரியவில்லை. முஸ்லிம்கள் தயாரா என்பதை பாகிஸ்தான் வாதிகள் சொல்லட்டும்.

(ii) ஹிந்து மாகாணங்களில் யாரும் இஸ்லாம் மதத்தில் சேரக்கூடா தென்றும், முஸ்லிம் மாகாணங்களில் யாரும் அந்த மதத்தை விட்டு மாறக்கூடா தென்றும் ஏற்பாடு செய்யவேண்டும்.

(iii) சீக்கியருக்குத் தனி ராஜ்யம் வேண்டாமா? கிறிஸ்தவர்களுக்குத் தனி ராஜ்யம் வேண்டுமா? அல்லது யார் யாருக்கு என்னென்ன பாதுகாப்புகள் அளிக்கப்பட வேண்டும்? இந்தப் பிரச்னைகளும் தீர்க்கப்பட வேண்டும்.

இத்தனை பிரச்னைகளுக்கும் சமாதானம் ஏற்படாமல் ஸ்தாபிக்கப்படும் பாகிஸ்தான்-முஸ்லிம்

ராஜ்யங்கள் அதிகக் காலம் முஸ்லிம் ராஜ்யங்க ளாக நிலைநிற்க முடியாது.

மேலும், ஒரு முஸ்லிம் மாகாணத்துக்கும் மற்றொரு முஸ்லிம் மாகாணத்துக்கும் இடையே நூற்றுக் கணக்கான மைல்கள் ஹிந்து ராஜ்யம் இருக்குமாகையால், முஸ்லிம் சமஷ்டியின் ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற் குப் போவதற்குப் பாதை வசதிகள்[1] முதலியன பற்றி ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந்தப் பாதைகளை, அந்நிய ராஜாங்கத்தின் துருப்புகள் போய் வருவதற்கும் உபயோகிக்கும்படி விட்டு விட எந்த ராஜாங்கமும் ஒப்புக்கொள்ள முடியா தென்பதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும்.

பாகிஸ்தான் பிரிவினைத் திட்டத்தைப் பற் றிய கஷ்டங்களை இங்கு மிகைப்படுத்திக் கூறி யிருப்பதாகச் சிலர் சொல்லலாம். அது தவறு. ‘பூர்ணமான ராஜாங்கக் கௌரவமுள்ள தனி முஸ்லிம் ராஜ்யங்களாகப் பிரிக்கவேண்டும்’ என்று லீக் கோருவதால், ‘பூர்ண ராஜாங்கக் கௌரவம்’ என்ற வார்த்தைகளின் முழு அர்த் தத்தையும் விளக்குவது அவசியமாயிற்று. லீக் விரும்புவது இது அல்ல என்று இருக்குமாயின் அப்படி வெளிப்படையாக அறிவிப்பது லீகின் கடமையாகும்.

* * *

லீக் விரும்புவது மாகாணங்களை மாற்றி யமைத்து, முஸ்லிம்களுக்குச் சந்தேகமற்ற மெஜா

---

[1] Corridors.

ரிட்டியுள்ளனவாகச் சில மாகாணங்கள் வேண்டும் என்பதேயாயின் அது வேறு விஷயம்.

சிந்து மாகாணம் இப்போது சந்தேகமற்ற முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணமாகவே இருக்கிறது. வடமேற்கு எல்லைப்புற மாகாணம் சந்தேகமற்ற முஸ்லிம் மெஜாரிட்டி மாகாணமாகவே இருக்கிறது. பஞ்சாப் மாகாணத்தை இன்னும் சற்று சிறிதாகச் சுருக்கினுல் முஸ்லிம்களுக்குத் தெளிவான மெஜாரிட்டி ஏற்பட்டுவிடும். கிழக்கு வங்காளம், அஸ்ஸாம் இரண்டையும் சேர்த்துத் தனி மாகாணமாக்கி அங்கும் முஸ்லிம் மெஜாரிட்டி ஏற்படுத்திவிடலாம். (ஆனுல், அஸ்ஸாம் முஸ்லிம்களுக்குத்தான் அதிக உத்தியோகங்கள் கொடுக்கவேண்டுமா அல்லது வங்க முஸ்லிம்களுக்குத்தான் அதிகமான உத்தியோகங்கள் கொடுக்கவேண்டுமா? அஸ்ஸாம் முஸ்லிம்கள் வங்காளி பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமா, அல்லது வங்காள முஸ்லிம்கள் அஸ்ஸாமி பாஷையைக் கற்றுக்கொள்ள வேண்டுமா, அல்லது இருவருமே புதிதாக உர்தூ படிக்க ஆரம்பிக்கவேண்டுமா என்று சில பிரச்னைகள் ஏற்படலாம். இவற்றை முஸ்லிம்கள் தமக்குள்ளேயே தீர்த்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.)

இந்த முறைகளில் எதையாவது விரும்பினுல் முஸ்லிம் லீக் பட்டவர்த்தனமாகச் சொல்ல ஏன் தயங்குகின்றது? இவ்வாறு மாகாணங்களை மாற்றி யமைத்துவிடலாம் என்று வைத்துக்கொள்வோம். ஹிந்து மெஜாரிட்டி மாகாணங்க

ளிலுள்ள மைனுரிட்டிகளுக்கு இதனுல் ஏற்படும் லாபம் என்ன? ஒன்றுமில்லே. ஆகையால் மாகாண மாறுபாட்டை மைனுரிட்டி மாகாண முஸ்லிம்கள் விரும்புவதற்குக் காரணமில்லே. மெஜாரிட்டி மாகாணங்களில் முஸ்லிம்கள்மீது சர்க்கார்கள் கொடுமை புரிவதாகத் தெரியவில்லே யாகையால் மாறுதல் வேண்டுமென்று அந்த மாகாணங்கள் விரும்புவதற்குக் காரணமில்லே. அப்படியானுல் இந்த மாகாணப் பரிவர்த்தனே யாரைத் திருப்தி செய்வதற்காக என்பது நமக்குப் புலனுகவில்லே.

பாகிஸ்தான் வேண்டும் என்பதற்கு ஸ்ரீ. ஜின்ன காரணம் சொல்லும்போது, இந்தியா எந்தக் காலத்திலும் ஒரே தேசிய சமுதாயமாக இருந்ததில்லே யென்றும், ஒரே தேசமாக ஆளப்பட்டதில்லே யென்றும் கூறுகிருர். இவ்வளவு பெரிய நிலப்பரப்பை ஒரே தேசம் என்று சொல்லுவது பொருந்தாது என்கிருர். ரயில் ஏற்படாத காலத்துக்கு அவர் சொல்வது உண்மையாகஇருக்கலாம். காலேயில் திருவனந்தபுரத்திலிருந்து புறப்பட்டு பிற்பகலுக்குள் டில்லி போய்ச் சேருவதை சாத்தியமாக்கிய ஆகாய விமானம் சர்வ சாதாரணமாய்விட்ட இந்தக் காலத்தில், இந்தியாவைவிட நிலப்பரப்பில் பெரிதாக உள்ள நாடுகூட 'ஒரு தேச'மாக இருக்க முடியும். சிறுசிறு நாடுகள் தனித்து வாழ்வதென்பது ரயில் வராத காலத்துக்குத்தான் பொருந்தும். இன்று ஐரோப்பாவில் காணப்படும் அல்லலகளுக்கு முக்கியமான காரணம், பூர்ண ராஜாங்கக் கௌரவமுள்ள நாடு

கள், உண்மையான ராஜாங்கக் கௌரவத்துக்குப் போதிய நிலப் பரப்பும் இயற்கைப் பொருளா தார வசதியும் பெற்றிராததுதான். ஸ்ரீ. ஜின்னு சொல்லும் முறையில் இந்தியாவைத் தனி ராஜாங்கக் கௌரவமுள்ள துண்டுகளாக வெட்டினுல் எந்தப் பகுதியும் அந்த ராஜாங்கக் கௌரவத்தின் உண்மையான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வசதிகளைப் பெற்றதாக அமையாது.

பாகிஸ்தான் பற்றி ஸ்ரீ. ஜின்னு கூறும் மற்ருெரு காரணம் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே அவர் கற்பிக்கும் கலைப் பண்பு வேற்றுமை. இந்த வேற்றுமை உண்மையில் இருக்கிறதா என்ற ஆராய்ச்சி அவ்வளவு பயனுள்ளதாகாது. அவசியமும் இல்லை. ஏனென்ருல், கலைப் பண்புக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தி விடுவது அசாத்தியமல்ல.

மேலே விவரிக்கப்பட்டவை போன்ற பல காரணங்களால், பாகிஸ்தான் காரிய சாத்திய மற்றது, அனுவசியமானது. பாகிஸ்தான் திட்டம் முஸ்லிம்களின் நலனுக்கு நிரந்தரமான தீங்கு செய்யக்கூடியது. அதனுல்தான் வங்காள சட்ட சபை அங்கத்தினர் கான்பகதூர் ஷேக் மஹமத் ஜான் என்பவர், 'பாகிஸ்தான்பற்றி காங்கிரஸும் ஹிந்துக்களும் சிறிது காலம் மௌனம் சாதிக்கட்டும்; பிறகு முஸ்லிம்கள் தாங்களாகவே இந்த பாகிஸ்தான் திட்டத்தை எதிர்ப்பார்கள்' என்று கூறுகிருர்.

ஆயினும், பாகிஸ்தானை எதிர்க்கவேண்டிய அவசியத்தை உணரும் முஸ்லிம் பிரமுகர்கள்,

பொது ஜனங்களை அணுகும்போது, ஒரு திட்டத்துடன் அணுகவேண்டும். பொய்யான அட்டூழியப் பிரசாரத்தின் பயனாக முஸ்லிம் பாமர மக்களிடையே சில பீதிகள் கிளப்பப்பட் டிருக்கின்றன. பொய்யா யிருந்தாலும், பீதி பீதிதான். அதை நீக்குவதற்கு அரசியல் அமைப்பில் சில ஏற்பாடுகள் இருப்பது அவசியம்தான்.

*　　　*　　　*

ஜனநாயக ஆட்சிமுறையில் பிரிட்டிஷ் முறையைப் பின்பற்ருமல் அமெரிக்க முறையைப் பின்பற்றி ஏதாயினும் ஒரு திட்டம் வகுக்கலாமோ என்று சிந்தனை செய்யுமாறு சமீபத்தில் இந்தியா மந்திரி ஸ்ரீ. அமெரி உபதேசம் செய்தார். அமெரிக்கத் திட்டம், பிரெஞ்சுத் திட்டம், பிரிட்டிஷ் திட்டம் அல்லது எந்தத் திட்டத்தையும் பற்றி யோசிக்க இந்தியர்கள் தயார்தான். இவற்றை யோசித்து முடிவுசெய்யத் தகுதியான சாதனம் அரசியல் நிர்ணய சபை மூலம் ஏற்படுத்தும் ஒரு ஸப்-கமிட்டிதான். ஸ்ரீ. ஜின்னுவின் பிரேரணைகளை அமுலுக்குக் கொண்டுவருவதானுல்கூட, ஏதாயினும் ஓர் அரசியல் நிர்ணயக் கமிட்டி மூலம்தான் நிர்ணயித்து முடிவுசெய்ய முடியும். ஆகவே, இந்த அரசியல் நிர்ணய சபைக் கோரிக்கையை ஸ்ரீ. ஜின்னு நிராகரிக்க நியாயமில்லை. இந்தக் கோரிக்கையை அவர் நிராகரிப்பதால்தான், அவர் உண்மையில் ஆக்கமான எந்த உரிமைக்காகவும் பாடுபடவில்லையென்றும், சுயராஜ்யத்துக்கு முட்டுக்கட்டை

போடும் உரிமைக்குத்தான் அவர் பாடுபடுகிறார் என்றும் சொல்லவேண்டி யிருக்கிறது.

முஸ்லிம்களுக்கு சந்தேகத்துக் கிடமில்லாத மெஜாரிட்டி இருக்கும்படி சில மாகாணங்கள் இருக்கவேண்டு மென்று சில முஸ்லிம்கள் நினைக்கிறார்கள். அந்த நிலைமை ஏற்கனவே இருக்கிறது என்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டும். மத்ய சர்க்காரில் ஹிந்து மெஜாரிட்டியே இருப்பதால், மாகாணங்களுக் கென்று ஒதுக்கப்பட்ட விஷயங்கள் அதிகமாக இராவிடில், அநேக விஷயங்கள் அந்த ஹிந்து மெஜாரிட்டியின் ஆதிக்கத்தில் இருக்குமே என்பது லீகர்களின் நெடுநாளைய பிரசாரம். ஆனால் எந்த விஷயங்கள் மத்ய சர்க்காரின் ஆதிக்கத்தில் இருக்கவேண்டும் என்பதை ஸ்ரீ. ஜின்னா வியக்தமாகக் கூற மறுக்கிறார். அமெரிக்க அரசியலில் மத்ய சர்க்காரிடம் எத்தனை விஷயங்கள் விடப்பட்டிருக்கின்றனவோ அத்தனையையும் இந்தியாவிலும் மத்ய சர்க்காரின் ஆதிக்கியத்திலேயே விட்டுவைக்க ஸ்ரீ. ஜின்னா இணங்குகிறாரா என்பது பற்றி அவர் மௌனம் சாதிக்கக் கூடாது.

தேசப் பாதுகாப்பு, ராணுவம், ஏற்றுமதி இறக்குமதி, வெளிநாட்டு வர்த்தகம், உள்நாட்டில் மாகாணங்களிடையே நடக்கும் வர்த்தகம் ஆகியவை அமெரிக்காவில் மத்ய சர்க்காரிடமே விடப்பட்டிருக்கின்றன. இவற்றி லெல்லாம் மதம், கலைப் பண்பு முதலியவை பற்றி அபிப்பிராய பேதங்கள் ஏற்பட நியாயமில்லை.

மாகாணங்களில் ஹிந்து ராஜ்யம் அல்லது முஸ்லிம் ராஜ்யம் என்ற மனப்பான்மையில் நிர்வாகம் நடத்தவேண்டும் என்ற நோக்கம் இல்லை என்பது உறுதிப்படுமாயின், மாகாண சுயாட்சியின் அதிகாரங்கள் அதிகரிப்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

ஆகவே, மத்ய சர்க்காரில் ஹிந்து மெஜாரிட்டி ஏற்படக் கூடும் என்பது பற்றி முஸ்லிம்கள் கவலைப்பட இடம் இருக்காது. கூட்டுத் தொகுதி இருக்குமாயின் மத்ய சர்க்காரில் மந்திரிப் பதவியில் முஸ்லிம்களுக்குச் சரியான பங்கு இருக்குமென்பதும் நிச்சயம்.

அரசியல் செல்வாக்கு சம்பந்தப்பட்ட மட்டில் இந்த ஏற்பாடுகள் முஸ்லிம்களுக்குள்ள மனக் குறையை நீக்கிவிடலாம்.

*   *   *

மிச்ச மிருப்பது ஒரே ஒரு விஷயம்தான். மதப் பற்றில்லாத சர்க்கார்கள், மத விஷயங்களில் தவறுதலாக எதுவும் செய்துவிடாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம்? இந்திய அரசியலைப் பற்றிய இவ்வாராய்ச்சி சுதந்திர இந்தியாவைப் பற்றியதாகும். ஆகையால், தனி நபர்களிடம், கவர்னர் அல்லது குடியரசுத் தலைவரிடம், விசேஷ அதிகாரங்களை ஒப்படைப்பது என்பது சாத்தியமல்ல. ஆகையால் அரசியல் அமைப்பிலேயே ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்.

மத விஷயங்களில் சர்க்கார் தலையிடாமல் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை அந்தந்த

மதத்தினரின் பிரதிநிதிகளிடமே ஒப்படைத்து விடலாம். இந்தப் பொறுப்புக்கென்று ஏற்படுத் தப்படும் ஸ்தாபனம் அல்லது கமிட்டியானது அந்தந்த வகுப்பினரால் தனித் தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்கவேண்டும். தம்மிடம் அபிப்பிராயத்துக்காக சமர்ப்பிக்கப் படும் சட்டமானது மத விஷயமாக பாதகம் விளைப்பதாகும் என்று அந்தக் கமிட்டியார் (ஒரு வர் பாக்கியில்லாமல்) **ஏக மனதாகக்** கூறினல் அந்தச் சட்டம் கைவிடப்படவேண்டு மென்று ஏற்பாடு செய்யலாம். இந்த முறையில், ஹிந்துக் கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் ஆகிய ஒவ்வொரு முக்கியமான மதத்தினருக்கும் சட்ட பூர்வமாக கமிட்டிகள் ஏற்படுத்தலாம்.

இந்தக் கொள்கையை அடிப்படையாய்க் கொண்டு, 'வகுப்பு ஒற்றுமை'[1] என்ற ஆக்ஸ் போர்ட் பிரசுரம் ஒன்று வெளிவந்திருக்கிறது.

அதன் சாராம்சமாவது:

ஒவ்வொரு மாகாணத்திலும் சட்டம் இயற்றும் சட்டசபை பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக் கப்படவேண்டும். மந்திரி சபைகள் இந்தச் சட்ட சபைக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டும்.

இந்தப் பிரதான சட்டசபை இயற்றும் சட்டங் கள் சட்டசபையின் ஏதாவது ஓர் அங்கத்தினரின் கோரிக்கை மீது ஒரு ஸின்டிகேட் சபைக்கு அனுப்பப்படலாம்.

அந்த ஸின்டிகேட் சபையில் எல்லா மதத்தின ருக்கும் ஸ்தானங்களின் தொகை ஒரே மாதிரி

[1] Communal Harmony - by Percival Spear.

இருக்கும். இந்த சபையில் எல்லா ஸ்தானங் களுக்கும் தனித் தொகுதி மூலமே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஒரு மதத்தின் பிரதிநிதிகள் சேர்ந்தது ஒரு ஸின்டிகேட். சட்ட சபை இயற்றின சட்டத்தின்மீது திருத்தங்கள் சிபார்சு செய்யவும், அல்லது அந்தச் சட்டங்களை நிராகரிக்கவும் இந்த ஸின்டிகேட்டுகளுக்கு உரிமை யுண்டு. ஆனால் தீர்மானம் ஏகமனதாக இருக்க வேண்டும். ஸின்டிகேட்டில் சட்டத்துக்குத் திருத்தங்கள் சிபார்சு செய்யப்பட்டால் திருத்தத் துடன் அந்தச் சட்டம் சட்டசபையில் சமர்ப் பிக்கப்படும். அந்தத் திருத்தங்களைச் சட்டசபை ஏற்றுக்கொண்டால்தான் சட்டம் ஊர்ஜிதமாகும். இல்லாவிடில் சட்டம் கைவிடப்படும்.

மத ஸ்தாபனங்கள், மத சம்பந்தமான தர்ம சொத்துக்கள், மதவாரியான ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் முதலியவை சம்பந்தமான விஷயத்தில் ஸின்டிகேட்டுகளுக்கு நிர்வாக அதிகாரமும் கொடுக்கப்படலாம்.

இதுதான் மேற்கூறிய பிரசுரத்தில் அதன் ஆசிரியர் பெர்ஸிவல் ஸ்பீயர் கூறும் யோசனை. மத்ய சர்க்காரிலும் இது போன்ற ஸின்டிகேட்டு கள் ஏற்படுத்தலாமென்று அவர் யோசனை கூறு கிறார். இது பற்றி எவ்வித அபிப்பிராயமும் இப்போது நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால், இந்த யோசனையைப் பற்றி முஸ்லிம் அறிவாளி கள் கவனம் செலுத்துவது நல்லது என்று எனக் குத் தோன்றுகிறது.

மாகாண சர்க்கார்களை 'முஸ்லிம் ராஜ்யம்' அல்லது 'ஹிந்து ராஜ்யம்' என்ற தன்மையுள்ளனவாக ஆக்காமல், எல்லா மதங்களுக்கும் ஒரே மாதிரியான பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்ய எந்த யோசனை கூறப்பட்டாலும், அதன் குண தோஷங்களை ஆராய்ச்சி செய்யவும், இறுதியில் மைனாரிட்டி பிரதிநிதிகள் தம்மிடையே பெருவாரியான வோட்டின் மூலம் வற்புறுத்தும் யோசனையை ஏற்றுக்கொள்ளவும் தேசீயவாதிகள் தயாராயிருப்பார்கள்.

'தினமணி'
4 - 12 - 40

ஏ. என். சிவராமன்



முஸ்லிம் லீக் தலைவர்

மிஸ்டர் ஜின்னு

அத்தியாயம் - 1

## வாதங்களின் சுருக்கம்

'பாகிஸ்தான் உருவாகிவிட்டது! இந்தியாவில் மூன்றில் ஒரு பாகம் முஸ்லிம்களுக்கு! சென்னையும் சில ஜில்லாக்களைப் பறிகொடுக்க வேண்டியிருக்கும்!......' இவ்வாறு ஒரு நாள் பத்திரிகையில் செய்தி வெளிவந்தது. இந்த விஷயம் ஏதோ திடீரென்று ஆகாயத்திலிருந்து தொப்பென்று விழுந்துவிட்டது போல ஜனங்களில் அநேகர் நினைக்கின்றனர். ஆனால், உண்மை இதற்கு மாறானது.

பாகிஸ்தான் திடீரென்று தோன்றிய ஒரு தனிப்பட்ட பிரச்னை அன்று. கேவலம் முஸ்லிம் - அல்லாதாரைத் திகைக்க வைப்பதற்காக வந்த புதிர் அன்று. நெடுநாளாகச் சிந்தனை-உலகத்தில் அமர்ந்திருந்து, இப்பொழுது செயல் - உலகத்திற்கு அது வெளிப்பட்டிருக்கிறது. அகில உலகத்திலுமுள்ள முஸ்லிம்களின் இயக்கத்திற்கும் அதற்கும் சம்பந்தம் உண்டு. இஸ்லாம் மத சரித்திரத்திலும், ஹிந்துஸ்தானத்தின் சரித்திரத்திலும் பாகிஸ்தான் பிரச்னை ஒரு முக்கியமான கட்டம். 'சிந்திப்பதற்கும் லாயக்கற்ற விஷயம் இது! இதை வாயால்கூட உச்சரிக்கக் கூடாது!'

என்று வெறும் வாயடி அடித்துவிட்டால் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடாது. ஆதலால்தான் தேசத் தலைவர்கள் பாகிஸ்தான் சம்பந்தமாகத் தீவிரமாகச் சிந்திக்க முற்பட்டிருக்கின்றனர். நாமும் இதைப் பற்றி, வேரிலிருந்து நுனிக் கொழுந்துவரை, தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஆகவே, முதலில், பாகிஸ்தானைப் பற்றிய வாதப் பிரதிவாதங்களின் சாராம்சத்தைக் கவனிப்போம்.

மிஸ்டர் ஜின்னாவின் வாதம் :

'இந்தியாவைத் துண்டுபோட வேண்டும். வடமேற்குப் பிரதேசமான பஞ்சாபில் முஸ்லிம்கள் மெஜாரிட்டியில் இருக்கிறோம். அவ்விதமே வடகிழக்குப் பிரதேசமான வங்காளத்திலும் மெஜாரிட்டியில் இருக்கிறோம். இந்த இரண்டு பாகங்களையும் இதர இந்தியாவிலிருந்து துண்டித்துவிட வேண்டும். இவைகள் சுதந்திர நாடுகளாக இருந்து வரவேண்டும். இவைகள் சேர்ந்து புண்ணிய ஸ்தானம் — பாகிஸ்தானம். இந்தியா ஒருபோதும் ஒரே தேசமாக இருந்தது கிடையாது ; ஒரு தேசமாக இருக்கவும் முடியாது. ஹிந்துக்கள் வேறு ; முஸ்லிம்கள் வேறு — முற்றிலும் வேறு. இவர்களை இணைக்கவே முடியாது. ஹிந்துக்கள் மெஜாரிட்டியிலிருந்துகொண்டு, குடியரசு நடத்துவதை முஸ்லிம்கள் ஒருபோதும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. பிரிட்டிஷ் ஈட்டிகளுடைய உதவியில்லாமல் ஹிந்துக்கள் குடியரசை நடத்திவிட முடியுமா? மேலும் ஹிந்துக்கள் அக்கிரமக்காரர்கள். அவர்களுக்கு நியாய புத்தியே கிடையாது. சிநேக புத்தியும் கிடையாது. சிநேகப் பேச்செல்லாம் முலாம் பூச்சு. காங்கிரஸ் உண்மையில் முஸ்லிம்களுக்கு விரோதி. காங்கிரஸ் அக்ராசனர் முதற்கொண்டு தேசிய முஸ்லிம்கள் அனைவரும் கூலிகள், அல்லது கோழைகள். அவர்கள் முஸ்லிம்களின் விரோதி

கள், துரோகிகள். நான் பக்ரீத்தின் போது ராஜியாகப் போவதன் மகிமையைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். நான் இணங்கி வருகிறேன் என்று காங்கிரஸ்காரர்கள் நினைத்துக்கொண்டார்கள். காங்கிரஸுக்கு இணங்கும் எண்ணம் எனக்குக் கிடையவே கிடையாது. நியாயமாக இந்தியா முழுவதும் முஸ்லிம்களுக்குத்தான் சேரவேண்டும். முஸ்லிம்களுடைய கையிலிருந்துதான், பிரிட்டிஷார் இந்தியாவை அடைந்தார்கள். பிரிட்டிஷார் விலகும்போது, இந்தியா திரும்பவும் நமது கைக்குத்தான் வரவேண்டும். நமது பாத்தியதையைக் கொஞ்சம் தளர்த்திக்கொண்டாலும், சரி பாதியாவது நமக்குக் கிடைக்க வேண்டும். அதையும் நான் விட்டுக் கொடுத்தேன். வடமேற்கும் வடகிழக்கும் பாகிஸ்தானத்திற்குக் கிடைத்தால் போதும் என்று நான் சொன்னேனே—அதுதான் எனது ராஜித் திட்டம். இதை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் உள்நாட்டுக் கலகம்தான் நடைபெறும். இந்தியா ஒரு துப்பாக்கிஸ்தானமாகத்தான் பிரகாசிக்கும்.'

### பிரிட்டிஷ் வர்க்கத்தினருடைய வாதம் :

'எங்களுக்கென்னவோ, நிலைமை அவ்வளவு மோசமாகத் தோன்றவில்லை. உங்கள் மனம் அவ்வளவு புண்பட்டிருப்பதால், "இந்தியாவையே துண்டு போடு!" என்று கேட்க உமக்கு மனம் வந்தது. எங்களுக்கு என்னவோ காங்கிரஸ் மந்திரி சபைகள் நியாயமாக நடந்துகொண்டதாகத் தோன்றியது. ஆனல் நாங்கள் சூதையும் வாதையும் அறியாதவர்கள். நீங்கள் கொடுத்திருக்கும் புகார் ஜாபிதாவைப் பார்த்தால் மனம் தாளவேயில்லை. நாங்களும் ஏமாந்தோமா என்று நினைக்கும்போது, விசனமும் வெட்கமும் மனத்தை அறுக்கின்றன. ஆயினும், உங்களுடைய புகார் முழுவதும் வாஸ்தவமாக இருக்கும் என்று நம்ப முடியாது.

இருந்தாலும் பெரும்பாலும் உண்மையாக இல்லாமலிருக்க வும் முடியாது. நீங்கள் சொல்லியிருக்கும் அனந்தமான புகார்களை விசாரிக்கப் புகுந்தோமானால், பல மாதங்க ளல்லவா பிடிக்கும்! அதனால் கசப்பு எவ்வளவு பெருகும்! ஆகையினால் விசாரணை வேண்டாம். புகார்கள் ஒரு புறம் இருக்கட்டும். "நடந்தது நடந்துவிட்டது — இனி வருங்காலம் சுபமாக இருந்தால் போதும். அதற்கு உபா யத்தைச் சொல்லுங்கள்" என்றதற்கு, நீங்கள் பாக்கிஸ் தான் என்ற இடியைத் தூக்கிப் போடுகிறீர்கள். உங்கள் மனது மிகவும் புண்பட்டிருக்கிறது! நாங்கள் எந்த அக்கிர மத்திற்கும் மனதார உடந்தையாக இருக்கவில்லை — மன் னிக்க வேண்டும். துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்கிற பழமொழியைப் பின்பற்றி, "பிரித்துவிடுங்கள்" என்று சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்வது அநியாயம் என்று நாங்கள் ஒருபோதும் சொல்லமாட்டோம். முற்றிலும் நியாயம் என்றுகூட நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆயி னும், ஒரு விஷயம்: உங்களுடைய உள்ளம் முற்றிலும் உடைந்துவிட்டதனால், நீங்கள் அவ்விதம் சொல்கிறீர்கள். ஹிந்துக்களை நீங்கள் நம்ப முடியாது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அவர்கள் உங்களுக்குப் பரம்பரை விரோதிகள். மேலும், மெஜாரிட்டியில் இருந்துகொண்டு உங்களுடைய மனமே உடைந்து போகும்படி நடந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஹிந்துக்களை நம்ப வேண்டாம். எங்களை நம்புங்கள். ஏறக்குறைய 200 வரு ஷங்களாக, நாங்கள் இந்தியாவில் ஒற்றுமையை ஸ்தாபிக்க முயன்று வரவில்லையா? நியாயத்தை ஸ்தாபிக்கவில்லையா? இந்தியாவைத் துண்டுபோட எங்களுக்கு இன்னமும் மனம் வரவில்லை. இந்த ஹிந்துக்கள் மாத்திரம் இந்தியாவில் இருந்துவந்த வரைக்கும், ஏக இந்தியா என்பது கிடையவே

கிடையாது. துண்டு துண்டாக, கந்தை கந்தையாகத்தான் கிடந்தது. நீங்கள் — முகலாயர்கள் — இந்தியா என்பதில் ஓர் ஒற்றுமையை ஸ்தாபிக்க முயற்சி செய்தீர்கள். பெரும் பாலும் வெற்றி கிட்டியே வந்தது. பின்பு ஏதேதோ நடந்தது. நாங்கள் வந்தோம். ஒற்றுமையை ஸ்தாபிப்பதே எங்களுடைய கங்கணம். ஆயினும், எங்களுக்குப் பாக்கிய மில்லை. ஒற்றுமைக்காகவே தனித் தொகுதியைக்கூட ஸ்தா பித்தோம். அப்படியும் ஒற்றுமை ஏற்படவில்லையே! விபரீத மாக, விரோதமல்லவோ முற்றிவருகிறது! இருந்தாலும் பார்ப்போம். நாங்கள் நம்பிக்கையை இன்னமும் இழக்க வில்லை. யுத்த காரியம் முதலில் நடக்கட்டும். சென்ற யுத்தத்தி லாவது துருக்கியை மோசம் செய்து ஜெர்மனி தன் வலையில் இழுத்துக்கொண்டது. உங்களுடைய விஸ்வாசம் எங்கள் பேரில் விழுந்தது. பின்பு என்னென்னவோ நடந்தது. இந்த யுத்தத்திலோ, அந்தக் கவலையெல்லாம் ஒழிந்தது. உலகத்திலுள்ள முஸ்லிம்கள் அனைவரும் ஒரே கட்சி — அது வும் எங்கள் கட்சி. ஜெர்மனியை எவன் நம்புவான்? இன் றைக்கு எங்களை நம்பாதவன் எவன்? இந்த ஹிந்துக்களில் ஒரு சாரார் எது வேணுமானாலும் சொல்லிக்கொண் டிருக் கட்டும். யுத்தம் முடிந்ததும் பாகிஸ்தானத்தை ஆலோ சனைக்கு எடுத்துக்கொள்வோம். அதற்குள்ளாக, நாங்கள் ஒற்றுமைக்குப் பாடுபடுகிறோம். நீங்கள் முஸ்லிம்களை ஒற் றுமைப்படுத்துங்கள். ஆனால் எப்போதும் சமரஸத்திற்கும் தயாராயிருங்கள். இன்றைக்கு எங்களுடைய நட்பெல்லாம் ஏக இந்தியாவிற்குத்தான் — மன்னிக்கவேண்டும்.'

**ஹிந்து மஹா சபை:**

"பாக்கிஸ்தான் விபத்து, காந்தி - காங்கிரஸினாலேதான் வந்தது. ருசி கண்ட பூனை உறிக்கு உறி தாவுகிறது. காந்திஜி

முஸ்லிம்களுக்கு வெண்ணெய் வைக்கப் போனதினுல், என்ன வேண்டுமானுலும் கேட்கலாம் என்று ஆரம்பித்து விட்டார்கள். நியாயத்திற்கு மீறிச் சலுகை காட்டினுல், சலுகையே நியாயமாகிவிடுகிறது. சலுகையை அதிகரித்துக்கொண்டே போனுல், அநியாயமே நியாயமாகிவிடுகிறது — நியாயமும் அநியாயமாகி விடுகிறது. இந்தியா ஒன்று — பாரத வர்ஷம். இந்தியரல்லாதார் இந்தியாவை விட்டு வெளியே போகட்டும்; அல்லது சுயஆட்சிக்கு உட்பட்டிருக்கட்டும். தாயைத் துண்டு போட முடியாது. பாகிஸ்தான் விஷயத்தில் சமரசம் கிடையாது. பூச்சாண்டிகளைக் கண்டு இன்றைக்கு நடுங்குவார் கிடையாது. சலுகை என்பதும் இனிக் கிடையாது. "லஞ்சம் போன்ற சலுகையைக் கொடுத்தால்தான் ஒற்றுமை" என்று சொல்பவருடன் ஒற்றுமை தேவையில்லை. 30 கோடி ஹிந்துக்கள், 8 கோடி முஸ்லிம்களின் உதவியின்றியே, சுயராஜ்யத்தை அடைய முடியும்.'

காங்கிரஸ் கூறுவதாவது:

'ஆசியாவையே ஒற்றுமையாகத் திரட்டி, அடிமை நாடுகளை யெல்லாம் விடுவித்து, எங்கும் ஜனநாயகம் தழைக்கச் செய்யவேண்டு மென்று நினைத்து வரும்போது இதென்ன பாகிஸ்தான்?

'இந்தியாவிலுள்ள சகல மதஸ்தர்களுக்கும் மத சம்பந்தமாகப் பூரண சுதந்திரம் அளிப்பதிலும், அவரவர் பாஷைகள், கலாசாரங்களைப் பாதுகாப்பதிலும், எல்லோருடைய பிரஜா உரிமைகளையும் நிர்த்தாரணப்படுத்தி நிலை நிறுத்துவதிலும் காங்கிரஸ் யாருக்கும் பின்னுல் நின்றதில்லை.

'பாகிஸ்தானின் அரசியல் அம்சங்கள் எவையாயிருந்தபோதிலும், அது சென்ற 700 வருஷங்களாக இந்நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுசேர்ந்து உரு

வகப்படுத்தியுள்ள கலாசார, சமூக அமைப்புக்குப் பெரும் ஆபத்து என்பதில் சந்தேகமில்லை. வகுப்புவாத தத்துவத்தின் கடைசி எல்லைக்கோடே பாகிஸ்தான்.

'இந்தியா இரு - தேசமில்லை, ஒரே தேசந்தான். இந் நாடு பிளக்க முடியாதது. அநுபவம் வாய்ந்த எல்லோரும் பாகிஸ்தான் திட்டத்தை எதிர்த்தே தீர்வார்கள். மேலும், கோடிக்கணக்கான எல்லா முஸ்லிம்களும் இத் திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்பதும் இல்லை. முஸ்லிம்களுக்கு நாம் பலவிதச் சலுகைகள் காட்ட என்றும் போல் இப்பொழுதும் தயாரா யிருக்கிறோம். அவசியமானால், அரசியல் நிர்ணய சபைக்கு, அவர்கள் தாங்களாகவே, தனித் தொகுதி மூலம், தங்களுக்கு வேண்டிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பட்டும்.'

மகாத்மா காந்தி :

'இந்தியா ஒன்று. பாகிஸ்தான் இயக்கம் அசாத்தியம். இந்தியாவைத் துண்டுபோட முடியாது. முதலில் என்னைத் துண்டு போடட்டும் — பின்பு இந்தியாவைத் துண்டு போடலாம்.'

பின்வரும் அத்தியாயங்களில், சரித்திர மார்க்கத்தில் சென்று, இந்த வாதப் பிரதிவாதங்களை ஆராய்வோம்.

# சரித்திர விசித்திரம்

இஸ்லாம் என்றாலே சாந்தம், அமைதி, சமரஸம் என்பதுதான் பொருள். நபி நாயகமும் விவேகத்தை மிகவும் விசேஷமாகப் போதித்தார். ஆயினும் சரித்திரத்தில் முஸ்லிம்கள் நடந்துகொண்ட விதம் எப்படியிருக்கிறது? நண்பர்கள் வீர பக்தர்கள் என்று சொல்லும்படிக்கும், விரோதிகள் மத வெறியர்கள் என்று சொல்லும்படிக்கும் இருக்கிறது. அவர்களிடத்தில் விவேகத்தைக் காட்டிலும் வீரமே அதிகமாகப் பிரகாசிக்கிறது என்பது இதிலிருந்து விளங்குகின்றது.

விவேகத்திலும் சாந்தத்திலும் புறப்பட்ட மதம், நடைமுறையில் ஏன் வீரத்தையே பின்பற்றி வருகிறது? இதென்ன விபரீதம்! இதென்ன ஆச்சரியம்!

ஆயினும் ஆச்சரியப்படத் தேவையில்லை. ஹிந்து மதத்தின் சிகரத்தில் நிற்கும் வார்த்தை தர்மம் என்பதுதான். தர்மம் என்றாலே கடினத்தைக் குறிக்கிறது. 'தர்மம்' என்றால் தான தர்மம் என்று அர்த்தமில்லை; சட்டம், தாட்சண்யமற்ற சட்டம் என்று அர்த்தம். தர்மத்தைப் பார்க்கினும் கடினமான விஷயம் வேறில்லை. ஆயினும்

அந்தக் கடினத்தை அநுசரிக்க வேண்டியவர்கள், உலகத்தி லெல்லாம் 'மிருதுவான ஹிந்து' என்ற பிரசித்தியை அடைந்துவிட்டார்கள். இதுதான் ஹிந்து சரித்திர விசித் திரம்.

கிறிஸ்தவ விபரீதத்தைப் பற்றிச் சொல்லத் தேவை யில்லை. கிறிஸ்தவ மதம் அன்பைக் கொண்டாடி, கர்வம் என்பதை மகா மகா பாதகமாக நிந்தித்தது. ஐரோப்பியப் போட்டியையும் கசாப்புச் சரித்திரத்தையும் நோக்கும்போது, கிறிஸ்தவ விபரீதம் நன்கு பிரகாசமாகிறது.

இதனாலெல்லாம் என்ன ஏற்படுகிறது? குணாகுணங் களைக் கணக்குப் போட்டுப் பார்த்தால், ஒரு மதத்தினருக்கும் மற்ற மதத்தினருக்கும் வித்தியாசம் அதிகமாக இருக்காது. ஆனால், சிறிது காலத்திற்குச் சிறிய வித்தியாசங்களைக்கூட அழுத்திப் பிரமாதப்படுத்திக் கொண்டிருந்தால், ஒருவருக் கொருவர் மாற்சரியங்களை உண்டாக்கிவிட முடியும். ஒருவர் தம்மைத் தேவனாக நினைத்துக்கொண்டு, மற்றவரை மிருக மாக நினைத்துக்கொண்டுவிடலாம்; அல்லது தம்மைச் சிங்க மாக நினைத்துக்கொண்டு, மற்றவரை அசிங்கப் புழுவாக மதித்துவிடலாம்.

அந்த முறையை விடுத்து, சிறிய வித்தியாசங்களைப் பெரிதாக்காமல், ஒற்றுமையான அம்சங்களை அன்புடன் கொண்டாடினோமானால், நாமும் மனிதர், மற்றவரும் மனிதர் என்ற வாசனையே வீசி, உள்ளம் கசப்பை விடுத்து, ஆனந் தத்தில் மிதந்துகொண்டும், மூழ்கிக்கொண்டும், நீந்திக் கொண்டும் இருக்கலாம்.

# அகிலாண்ட இஸ்லாம்

1937-ல் லாகூரில் காக்ஸார் இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது. இதில் நான்கு லட்சம் பேர்கள் இன்றையக் கணக் குக்குச் சேர்ந்துவிட்டார்கள். இவர்களுடைய கட்டுப்பாட் டுக்குச் சமமான கட்டுப்பாடு நாஜி ஜெர்மனியிலும்கூட இருக்காது என்று தோன்றுகிறது. சமீபத்தில் ஒரு பாரிஸ்டர், காக்ஸார் ஒழுங்கு தவறிவிட்டதற்காக, நடு ரோட்டில் நிறுத்திவைக்கப்பட்டுக் கசையடி அடிக்கப்பட்டார்.

'நான் நமது சிறந்த இயக்கத்தை அழுக்குறச் செய் தேன். எனது ஒழுங்குத் தவறுதலை நான் ஒப்புக்கொள்கி றேன். இனித் தவறு செய்யமாட்டேன். பன்மடங்கு ஒழுங்காக நடந்துகொள்வேன். என்னைத் தண்டிக்காவிட் டால், நான் துக்கப்படுவேன்' என்று அவர் சொல்லாமல் சொன்னார். 'கட்டுப்பாடு — இல்லையென்றால் பாடை கட்டு' என்று உபதேசிப்பது போல, அந்தப் பாரிஸ்டருக்குப் பகி ரங்கமாகத் தண்டனை நடைபெற்றது.

600 - வருஷங்களுக்கு முன்னால், தமது முதற் படை யெடுப்பில் முகம்மது கோரி தோல்வியுற்றார். குதிரைகளுக்கு வாயில் கொள்ளுப் பையைக் கட்டிவிடுவது போல், அந்தத்

தோல்விக்குக் காரணமாயிருந்த பிரபுக்களுடைய திரு முகத்தில் கொள்ளுப் பையைக் கட்டிவிட்டு, ஊர்வலத்தை நடத்தி, அவர்களுக்கு ரோஷத்தை மூட்டி, இரண்டாவது படையெடுப்பில் அவர்களைக் கொண்டே அவர் பெரும் வெற்றியை அடைந்தார்.

அந்த ரோஷமுள்ள கட்டுப்பாடுதான் ஆதிமுதல் நாளிதுவரை இஸ்லாத்தின் முக்கியமான ஆசாரம்.

இடையிடையே சரித்திர மார்க்கத்தில் கட்டுப்பாடுகள் சீர்குலைவதுண்டு. அப்போது இஸ்லாமுக்குத் தோல்விதான்.

தோல்வியினின்றும் ஒரு ரோஷம் பிறக்கும். உடனே திரும்பவும் கட்டுப்பாட்டைக் கெட்டிப்படுத்தும் இயக்கம் ஆரம்பித்துவிடும்.

பிரிட்டன் தற்சமயம் இஸ்லாம் உலகத்தின் நட்பைப் பெரிதும் வேண்டி நிற்கிறது. காக்ஸார் படையும் திரண்டு நிற்கிறது. அகிலாண்ட இஸ்லாம் இயக்கத்தின் ஒரு சிறிய அலைதான் இந்தக் காக்ஸார் படை. இந்த அனுகூலங்களை அநுசரித்துத்தான் பாகிஸ்தான் திட்டத்தை அவிழ்த்துவிட்டிருக்கிறார்கள்.

அகிலாண்ட இஸ்லாம் இயக்கம் என்பது என்ன? இவ் வியக்கத்தைப் பற்றி நாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஐரோப்பியரின் ஆக்கிரமிப்பை இஸ்லாம் தொன்று தொட்டே கவனித்துக்கொண்டுதான் வந்திருக்கிறது. அகண்டமான, ஆழமான விசனம் இஸ்லாம் உலகத்தைக் கவ்விக்கொண்டது. மொராக்கோ முதல் சைனு வரை, துருக்கிஸ்தான் முதல் காங்கோவரை, விசனம் பொங்கிக்கொண்டிருந்தது. இந்தப் புகையைப் பற்றவைத்த தீப்பொறி அரேபியாவில்தான் ஏற்பட்டது. அது மிகவும் பொருத்தமே. அரேபியாவின் பாலைவனம்தான் இஸ்லாத்தின் தொட்டில்.

அப்துல் வாஹாப் என்ற மகான்தான் இந்த முஸ்லிம் எழுச்சிக்கு மூல காரணம். அவருடைய சீடர்கள், சரித்திரத்தில் வாஹாபியர்கள் என்ற பெயருடன் விளங்குகிறார்கள்.

இவர்கள் துருக்கியர்களை அதமர்களாகக் கருதினார்கள். இஸ்லாத்தின் ஆதிக்கியம் அராபியருடைய கையில் இருக்க வேண்டியது நியாயமாயிருக்க, அதை அக்கிரமமாக இந்தத் துருக்கியர்கள் அபகரித்துக்கொண்டுவிட்டார்கள் என்பது வாஹாபியரின் தீர்மானம். மகான் அப்துல் வாஹாபின் முக்கிய சீடராகிய ஸாட் 1814-ல் துருக்கியின் வசத்திலிருந்த ஸிரியாவின்மீது படையெடுக்கத் தயாராயிருந்த போது மாண்டுபோனார்.

ஆயினும் வாஹாபியர்கள் இஸ்லாம் உலகத்தையே பரிசுத்தப்படுத்தி, கிழக்கு உலகம் பூராவையும் தங்கள் வசமாக்கிக் கொள்வார்கள் போல் தோன்றியது.

வாஹாபியர்கள் எகிப்து தேசத்தினுள் பிரவேசித்தார்கள். மஹமத் அலி என்பவர் ஐரோப்பிய ஆயுதங்களைக் கொண்டு இவர்களை எதிர்த்தார். வாஹாபியரின் வீர வெறி கூடத் துப்பாக்கிகளுக்கு ஜவாப் கொடுக்க முடியவில்லை.

இந்தியாவிலிருந்து மெக்காவிற்குச் சென்ற முஸ்லிம்கள் ஊக்கத்துடன் ஊர் திரும்பினார்கள். வட இந்தியாவில் ஒரு வீர வாஹாபி ஸையத் ஆஹ்மத் என்பவர் பஞ்சாப் முஸ்லிம்களைப் பிரமாதமாகக் கிளப்பிவிட்டார். முஸ்லிம் மத ராஜ்யம் ஒன்றை ஸ்தாபித்துவிட்டார். அவர் மாத்திரம் தற்செயலாக மாண்டு போகாமலிருந்தால், வட இந்தியா முழுவதையுமே வாஹாபி நாடாகச் செய்திருப்பார். ஆனால் அவர் ஸ்தாபித்துப் போன மத ராஜ்யத்தை 1830-ஆம் வருஷத்தின்போது சீக்கியர்கள் தவிடு பொடியாக்கிவிட்டனர்.

ஆயினும் வாஹாபியரின் வீரம் சாம்பலாகிவிடவில்லை. தணல் ஜ்வலித்துக்கொண்டுதான் இருந்தது. 1857-ஆம்

வருஷத்திய மகத்தான இந்தியக் கலகத்தை வாஹாபியரும் கூடச் சேர்ந்துதான் கிளப்பினார்கள். இங்கிலீஷ்காரருக்கு எல்லையற்ற தொல்லையைக் கொடுத்துவந்தார்கள். ஆப்கானிஸ்தானத்தையும் எல்லைப்புறத்தையும் இங்கிலீஷ்காரருக்குக் கொடிய விரோதிகளாகச் செய்தார்கள்.

இந்தத் தலைமுறையில் அல்ஜீரியா வாசியாகிய மகான் ஸையது முகம்மது ஸென்னூஸி கிளம்பினார். அவர் மெக்காவிற்கு வந்தார்; வாஹாபிக் கொள்கைகளை உட்கொண்டார்; அகிலாண்ட இஸ்லாத்தை ஸ்தாபித்தார்.

உலகத்திலுள்ள முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்றாகத் திரட்டுவதுதான் அகிலாண்ட இஸ்லாம் இயக்கம். முகம்மது நபி நாயகத்தின் கொள்கையே இதுதான். இந்தப் பாடம் முஸ்லிம் உள்ளங்களில் ஆழமாகப் பதிந்துவிட்டது.

14 நூற்றாண்டுகளாகியும், பாடம் மறக்கவில்லை. இந்தக் கொள்கை பலஹீனம் அடையவில்லை. கிறிஸ்தவருக்குக் கிறிஸ்தவர் இவ்வளவு கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வது கிடையாது. ஹிந்துக்களைக் குறித்தோ சொல்லவேண்டியதே யில்லை.

முஸ்லிம்கள் தங்களுக்குள் மிகவும் கொடுமையாகச் சண்டைகள் செய்துகொள்வதுண்டு; ஆயினும் முஸ்லிம்களல்லாதாரின் எதிரே—சொந்தச் சண்டைகளை ஒதுக்கி வைப்பார்கள். இஸ்லாத்தின் சகோதரத்துவக் கொள்கை இவ்வளவு கெட்டியாக இருப்பதனால்தான், முஸ்லிம்களின் மதப்பற்று அவ்வளவு தீவிரமாக இருந்து வருகிறது. வேறு எந்த மதத்திற்கும் தன் மதத்தினர் மீது இத்தனை பிடிப்புக் கிடையாது. கோடிக்கணக்கில் கிறிஸ்தவர்களையும் ஹிந்துக்களையும் இஸ்லாம் தன்வசப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் இஸ்லாம் மதத்தைத் தழுவிய எந்தப் பிரதேசமும் இஸ்லாத்திலிருந்து நழுவிப் புற மதம் சென்றதை நாம் காணவில்லை. ஸ்பெயினில் இப்போது இஸ்லாம் இல்லை

என்பது உண்மைதான். ஆனால் ஸ்பானிஷ் முஸ்லிம்களாகிய மூர்களை ஹதம் செய்ய முடிந்ததே ஒழிய, இஸ்லாமை விட்டுப் பிரிக்கவே முடியவில்லை.

இந்த அகிலாண்ட இயக்கத்திற்கு இரண்டு ஊற்றுக்கள் உண்டு. ஒன்று, கிலாபத் ஸ்தாபனம்; இரண்டு, மெக்கா யாத்திரையாகிய 'ஹஜ்'. இவ் விரண்டினுள் ஹஜ் யாத்திரை தான் சிறந்த ஊற்று.

முகம்மது நபிநாயகம் பக்தியின் மிகச் சிறந்த செய்கையாக இந்த ஹஜ் யாத்திரையை நியமித்தார். வருஷா வருஷம் எட்டுத் திசைகளிலிருந்தும் ஒரு லட்சம் பக்தர்கள் வந்து திரளுகிறார்கள்; பக்திப் பரவசத்தில் கலந்துகொள்கிறார்கள்; உள்ளத்தைப் பூரிக்கச் செய்திடும் 'ஹாஜி' என்ற பரிசுத்தப் பட்டத்துடன் இருப்பிடம் திரும்புகிறார்கள். மரணம் வரைக்கும் சகோதர முஸ்லிம்களின் மரியாதைக்கு இவர்கள் பாத்திரர்களாகிறார்கள். இவ்வளவு அற்புதமான ஆனந்தங்களுடன் கூடிய வைபவத்திலிருந்து அரசியல் இயக்கம் எவ்வளவு உன்னதமாகப் புறப்படும்!

ஆமாம், அகிலாண்ட முஸ்லிம் காங்கிரஸ்தான் அது. முகம்மதிய உலகத்தின் சகல பாகங்களிலிருந்தும் பிரதிநிதிகள் சந்தித்து, மதத்தினருடைய சகல விதமான அக்கறைகளையும் குறித்துக் கலந்து ஆலோசனை செய்கிறார்கள். இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்கும் பிரசாரம் செய்வதற்கும் உபாயங்களை அமைத்துக்கொள்கிறார்கள். இந்தப் புண்ணிய சங்கங்களில்தான் மகான் அப்துல் வாஹாபும், மகான் ஸென்னூஸியும், மகான் ஜமாலுதீன் ஆப்கானியும், மற்றப் பிரமுகர்களும் அல்லாவின் அழைப்பைப் பெற்றார்கள்.

ஐரோப்பியரின் ஆதிக்கமும் செல்வாக்கும் பெருகுவதைக் கண்டு முஸ்லிம் உலகத்தில் அவநம்பிக்கையும் பகையும் கடுமையாக வீசியது. 1870, 1880-வருஷங்களில் இஸ்லாமி

யப் போர் - அலை, இந்த முனையிலிருந்து அந்த முனை வரை யிலும் மோதி யடித்தது. வட ஆப்பிரிக்கா பூராவிலும் ஆவேசம் கொண்ட புண்ணிய புருஷர்கள் ஜீஹாத் என்ற புண்ணியப் போரை ஆக்ஞாபித்தார்கள்.

எகிப்தில் மாஹ்தீ கிளம்பினர். ஆப்கானியர்கள் இங்கிலீஷ்காரர் கலங்கும்படி போராடினார்கள். இந்திய சர்க்காருக்குத் தூக்கமில்லாமல் அடித்தார்கள். சீன முஸ்லிம்கள் சும்மா இருக்கவில்லை. ஜாவா ஸுமத்ரா போன்ற டச்சுத் தீவுகளிலுள்ள முஸ்லிம்களும் கலகம் செய்தனர். இயக்கம் எங்கும் நடந்தது. ஆனால் ஏற்பாட்டுடன் நடைபெறவில்லை. குறிப்பான திட்டம் கிடையாது; அமைப்பான உபாயம் இல்லை. எகிப்தில் மாஹ்தீ இன்றைய காக்ஸார்களைப் போலவே, 'உலகம் முழுவதிலும் நியாயத்தையும் தர்மத்தையும் பரப்புவேன். உலகம் பூராவையும் இஸ்லாம் ஜயிக்கும்படி செய்திடுவேன்' என்று கோஷித்தார். பக்தர்கள், 'இவரே நவயுக நாதன்' என்று கொண்டாடினர். முஸ்லிம் திருக்கூட்டத்தினரின் ஆவேசம் எல்லை கடந்துவிட்டது. ஆயினும், மாஹ்தீ கிளப்பிய வேகம் வைக்கோல் தீ போலத்தான். காரியம் ஒன்றும் பலிக்கவில்லை. நிரந்தரமான பலன் யாதொன்றும் ஏற்படவில்லை. திடீரென ஜ்வாலை இங்கும் அங்கும் வீசியது. பின்பு அணைந்தது. வெற்றிக் கனவு கண்ட திருக்கூட்டங்கள், 'ஏமாந்தோம்' என்ற அதைரிய உணர்ச்சியுடன், சில காலம் சொரணையற்றுக் கிடந்தன.

ஐரோப்பாவின் கட்டுப்பாடான வல்லமையின் சந்நிதானத்தில், தனித் தனியாகச் சிதறி நடந்த ஸ்தல இயக்கங்கள் என்ன செய்திட முடியும்? ஆகையினால், நீண்ட தயாரிப்பு வேண்டும், முயற்சியிலே பூர்ணமான கட்டுப்பாடும் ஒத்துழைப்பும் வேண்டும் என்று தீர்மானித்து, தலைவர்கள் புதிய இயக்கங்களை நடத்தினார்கள்.

புதிய இயக்கங்களில் முக்கியமானவை இரண்டு. முதலாவது இயக்கம் மகான் ஸென்னூஸி ஆரம்பித்து வைத்தது. அதை 'முஸ்லிம் சகோதர கோஷ்டிகள் இயக்கம்' என்று சொல்லலாம். இரண்டாவது இயக்கம் மகான் ஜமாலுத்தீன் தோற்றுவித்தது. இவ் விரண்டு இயக்கங்களைப் பற்றியும் சிறிது கூறுவோம்.

முதல் ஸென்னூஸி தமது இரண்டாவது மகனைத்தான் தமது வாரிசாக நியமித்துக்கொண்டார். மூத்த மகன், இளைய மகன் இருவரையும் ஒருநாள் அவர் அழைத்தார். உயரமான பேரீச்சமரத்தின்மீது ஏறும்படி செய்தார். அவர்கள் உச்சி போய்ச் சேர்ந்ததும், 'அல்லாவை நம்பிக் கீழே குதியுங்கள்!' என்றார். மூத்தவன் வெகு ஜாக்கிரதைக்காரனாக நடந்து கொண்டான். அவன் குதிக்கவேயில்லை. இளையவன் குபீரென்று குதித்துவிட்டான். ஒரு காயமும் ஏற்படவில்லை. உடனே அவனையே தந்தை தமது வாரிசாக நியமித்துக் கொண்டார்.

பல தலைமுறைகளாக இந்த ஸென்னூஸி கோஷ்டிகள் வேலை செய்து வருகிறார்கள். மொராக்கோவிலிருந்து ஸோமாலிலாந்து வரைக்கும் பாலைவனங்களுக் குள்ளிருந்து வேலைசெய்து வருகின்றனர். தலைவர் கம்பீரமாக நடுவனத்தில் இருந்து வருகிறார். ஒரே ஓர் ஐரோப்பியன்தான் அவரைக் கண்ணால் கண்டிருக்கிறான். முஸ்லிமல்லாதார் எவரும் அவரைக் காண முடியாது. அங்கிருந்துகொண்டு அவர் வட ஆப்பிரிக்கா முழுவதற்கும் ஆக்கினைகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார். நிரம்ப ஜாக்கிரதையுடன் கூடிய கொள்கையை அனுசரிக்கிறார். நீண்ட காலத்திற்குத் திட்டம் போட்டு வேலை செய்கிறார். பெரிய பராக்கிரமமான காரியங்களை இன்னும் ஆரம்பிக்கவில்லை யாயினும், கண்ணிமை கொட்டாமல் வேலைகள் செய்து வரப்படுகின்றன. கிணறு

களை வெட்டுவது, சத்திரங்களைக் கட்டுவது, வியாபாரத்தை அபிவிருத்தி செய்வது போன்ற நிர்மாண வேலைகள் நடந்த வண்ணமா யிருக்கின்றன. சரியான முகூர்த்தத்திற்கு முன்னதாக ஒரு சொட்டுச் சக்தியைக்கூடச் செலவழிக்காமல் தலைவர் வல்லமையைத் திரட்டி வருகிறார்.

இவருடைய கோஷ்டியினர் நீக்ரோக்களை (ஆப்பிரிக்காவிலுள்ள கறுப்பர்களை) லட்சக் கணக்கில் இஸ்லாம் மதத்தில் சேர்த்துக்கொண்டு வருகிறார்கள்.

ஐரோப்பாவில் தவிர மற்ற இடங்களிலெல்லாம் மதம் மாற்றும் வேலை பிரமாதமாக நடந்து வருகிறது. பிரத்தியேகமாக இதற்கென்றே நியமிக்கப்பட்ட பிரசாரகர்களைத் தவிர ஒவ்வொரு முஸ்லிமும் ஓரளவு மதப் பிரசார வேலையைச் செய்திடுவார். பிரயாணிகள், வியாபாரிகள், கூலிகள், தையற்காரர்கள் முதற்கொண்டு மதப் பிரசாரம் செய்வார்கள். அது அவர்களுடைய ரத்தத்திலேயே ஊறிக் கிடக்கின்றது.

பாலைவனங்களில் இடையிடையே கிடக்கும் கிராமங்கள் மடங்களைப் போலத்தா னிருக்கும். அங்கிருந்து பல்லாயிரம் பக்கிரிகள் வெளியே கிளம்புகிறார்கள். படபடவென்று துடிக்கும் மார்புடன், ஜ்வாலை வீசும் கண்களுடன், அவர்கள் இஸ்லாத்தின் அற்புதங்களைப் பிரசாரம் செய்து வருகிறார்கள். மேற்கு ஆப்பிரிக்காவிலும் மத்திய ஆப்பிரிக்காவிலும் அவர்கள் செய்திருக்கும் வேலை அபாரமானது. இதை நினைக்கும்போது, இதன்முன் கிறிஸ்தவ மதப் பிரசாரம் ஒன்றுமே யில்லை யென்றுதான் சொல்லவேண்டும்.

இந்த நூறு வருஷங்களாக இஸ்லாத்தின் சுறுசுறுப்பை அளவிட முடியாது — அவ்வளவு பாடுபட்டிருக்கிறது.

இப்படி ஆவேசம் பூண்ட முஸ்லிம்கள் தங்களுக்கு வழக்கமான பராக்கிரமத்தைப் போர்க்களங்களிலும் காட்டி

வந்திருக்கிறார்கள். சைனாவில் ஒரு கோடி முஸ்லிம்கள் இருந்து வருகிறார்கள். சீன முஸ்லிம்களும் உலகம் கவனிக்கவேண்டிய கூட்டம் என்பதை ஞாபகத்தில் இறுத்திக் கொள்ளவேண்டும்.

நமது இந்தியாவிலும் இஸ்லாம் தூங்கவே யில்லை. ஜாவா, சுமத்ரா முதலிய தீவுகளிலும் இஸ்லாம் வேலைசெய்து வருகிறது.

இரண்டாவது இயக்கத்தின் தலைவரான மகான் ஜமாலுத்தீன் ஆப்கானிஸ்தானத்தில் பிறந்தவர். பாரசீகத்திற்குப் போய் வசித்து வந்தார். மதக் கொள்கைகளைப்பற்றி அவர் அதிகமான பிரசாரம் செய்யவில்லை; பெரும்பாலும் அரசியலிலேயே அவர் அக்கரை கொண்டார்; மேல்நாட்டினரால் அதிகமான அபாயம் ஏற்படப்போகிறது என்று தெளிவாக அவர் எச்சரிக்கை செய்தார். தற்காப்புச் செய்து கொள்வதற்குரிய திட்டங்களை யெல்லாம் போட்டுக் கொடுத்தார். ஐரோப்பியர் குடியேறிய நாடுகளிலுள்ள அதிகாரிகள் மகான் ஜமாலுத்தீனைத் தங்களுடைய விசேஷ விரோதியாகக் கருதினார்கள். இங்கிலீஷ்காரரே அவரைக் கண்டு பயந்தார்கள். அவருக்குத் தீங்குகளை இழைத்தார்கள். இந்தியாவில் சில காலம் அவர் கைதியாக யிருந்தார். பின்பு 1880-ல் எகிப்துக்குச் சென்றார். அங்கு ஐரோப்பியருக்கு விரோதமாக அரபிபாச்சாவின் இயக்கத்தைத் தூண்டிவிட்டார். 1882-ல் இங்கிலீஷ்காரர் எகிப்தை ஆக்கிரமித்துக் கொண்டனர்; ஜமாலுத்தீனை நாடு கடத்தினர். அவர் எங்கெங்கோ அலைந்தார். கடைசியாக கான்ஸ்டான்டிநோபிள் போய்ச் சேர்ந்தார். அங்கு துருக்கி சுல்தான் கலிபா அப்துல் ஹமீது, தமது அகிலாண்ட இஸ்லாம் இயக்கத்தைத் தொடுத்துக்கொண்டிருந்தார். பழம் நழுவிப் பாலில் விழுந்தது. மகான் ஜமாலுத்தீனைக் கண்டதும், சுல்தான் பிரேமை கொண்டுவிட்

டார். பின்னர், 1896-ல், விருத்தாப்பிய தசையில், பாடு பட்டுக்கொண்டே மகான் உயிர் நீத்தார்.

ஜமாலுத்தீன் முஸ்லிம் உலகத்திற்கு உயில் எழுதிவைத்தாற்போல் பின்வரும் உபதேசங்களைச் செய்துவிட்டுச் சென்றார்:

1. கிறிஸ்தவ உலகத்தில் நாட்டுக்கு நாடு பேதங்களும் சச்சரவுகளும் இருந்தபோதிலும்—கிழக்கு உலகத்தை—அதிலும் விசேஷமாக முஸ்லிம் உலகத்தை—சகல முஸ்லிம் ராஜ்யங்களையும்—கிறிஸ்தவ உலகம் விழுங்கவே காத்துக் கொண்டிருக்கிறது.

2. 800-வருஷங்களுக்கு முன்பு இஸ்லாத்திற்கு விரோதமாக பீடர் சந்நியாசி விதைத்த விதை இன்றைக்கும் சளைக்காமல் முளைத்துக்கொண்டேயிருக்கிறது. மதப் படையெடுப்புக்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. அந்தரங்கத்தில் கிறிஸ்தவ உலகம் இஸ்லாத்தின்மீது வெறி போன்ற பகையையும் உதாசீனத்தையும் கொண்டிருக்கிறது. இந்த மனப்பான்மை எத்தனையோ விதங்களில் வெளியாகிறது. சர்வதேச சட்டங்களில் முஸ்லிம் நாடுகளை அதம நாடுகளாகக் கருதி வருகிறார்கள்; கிறிஸ்தவ நாடுகளுக்குச் சமமாக மதிப்பதே கிடையாது.

3. கிறிஸ்தவ சர்க்கார்கள், முஸ்லிம் ராஜ்யங்களின் மீது குவிக்கப்படும் அவமானங்களையெல்லாம், தாக்குதல்களையெல்லாம், மன்னித்து விடுகிறார்கள். முஸ்லிம் நாடுகள் அவ்வளவு அநாகரிகமான பிற்போக்கான நிலைமையில் இருக்கின்றனவாம். ஆனால், முஸ்லிம் நாடுகளில் சீர்திருத்தம் செய்ய முயற்சி செய்பவர்களுக்கு, இதே கிறிஸ்தவ சர்க்கார்கள் இடையூறுகள் செய்து வருகிறார்கள்.

4. இஸ்லாத்தின்மீது பகையென்பது சகல கிறிஸ்தவ தேசங்களுக்கும் பொதுவான குணமாகும். சில நாடுகளுக்

குத்தான் அந்தத் துர்க்குணம் என்று நினைத்துவிட வேண்டாம். இப்படிப் பரவிக் கிடக்கும் குணம் காரணமாக, இஸ்லாத்தை அடியோடு அழித்திடும் பொருட்டு, ஓசைப்படாமல், இடைவிடாமல் முயற்சி நடந்து வருகிறது.

5. ஒவ்வொரு முஸ்லிம் உணர்ச்சியையும், ஆவலையும், முயற்சியையும் கிறிஸ்தவ உலகம் கேலி செய்து வருகிறது; அல்லது அதற்காகப் பழியைச் சுமத்தி வருகிறது. மனிதனைக் குரங்காகச் சித்திரிப்பதுபோல், நமது முயற்சிகளைச் சித்திரிக்கிறார்கள். இந்த ஐரோப்பியர்கள், தங்கள் சொந்த நாட்டில் 'தேசியம்' என்பதையே, நமது கிழக்கு உலகில் 'மத வெறி' என்கிறார்கள். சொந்த நாட்டில் 'சுயமரியாதை' என்பதை, மற்ற நாட்டில் 'அகங்காரம்' 'தடித்தனம்' என்கிறார்கள். தங்கள் நாட்டில் 'தேசத்தின் கௌரவம்' என்பதை, நமது 'சண்டித்தனம்' என்கிறார்கள்.

6. இவற்றிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் என்ன? அடியோடு நாசமாய்ப் போகாமல் முஸ்லிம் நாடுகள் பிழைக்க வேண்டுமானால், முஸ்லிம் உலகம் முழுதும் ஒன்றாகச் சேரவேண்டும். தற்காப்பு ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளவேண்டும். மேலும், மேல்நாட்டு ராணுவ நாகரிகத்தைக் கற்றுக்கொண்டுவிட வேண்டும். ஐரோப்பிய வல்லமையின் ரகசியம் பூராவையும் நமதாக்கிக் கொள்ள வேண்டும்.

மகான் ஜமாலுத்தீனுடைய இந்த உபதேசங்கள் முஸ்லிம்களை 'உஷார்' படுத்தவே செய்யப்பட்டன. இவற்றிலிருந்து அவருடைய தீர்க்கதரிசனம் சிறப்பாகத் தெரிகிறது.

அத்தியாயம் - 4.

# அரசியல் மெக்கா - கான்ஸ்டாண்டிநோபிள்

சுல்தான் கலீபா அப்துல் ஹமீதும், கலீபா என்ற தமது பதவியைப் பூரணமாகப் பிரயோகித்துப் பிரமாதமான அரசியல் வேலைகளைச் செய்யவேண்டுமென்று ஆசைகொண்டார். மகா தந்திரமான பரம ரகசியமான முறைகளை யெல்லாம் கையாண்டார். மகான் ஜமாலுத்தீன் போன்ற மேற்கு நாடுகளின்மீது விரோதம் கொண்டவர் அனைவருக்கும், கான்ஸ்டாண்டிநோபிள் ஒரு மெக்கா போல் ஆகிவிட்டது. அங்கிருந்து பொறுக்கி யெடுத்த கைதேர்ந்த தூதர்கள், வரிசை வரிசையாக, எட்டுத் திசைகளிலும் சென்றுகொண்டேயிருந்தார்கள்.

கூடு விட்டுக் கூடு பாய்வதுபோல், பல ரூபங்களில் சென்றார்கள். இந்தத் தூதர்கள் மூலமாக, கலீபா தமது நம்பிக்கையையும், தைரியத்தையும், கிறிஸ்தவ ஆட்சியினின்றும் அடுத்து வரப்போகும் விடுதலைச் செய்தியையும் மற்றவர்களுக்கு அனுப்பி வந்தார். மேற்கு நாட்டினர்மீது இஸ்லாம் உலகத்திற்குள்ள அவநம்பிக்கைக்கும் பகைக்கும் ஓர் அவதாரமாக சுல்தான் கலீபா அப்துல் ஹமீது வேலை செய்து வந்தார்.

துருக்கியின் முற்போக்குக்கு உழைத்துவந்த, இளைஞர் கூட்டத்தினரான 'இளம் துருக்கியர்'களுக்கு சுல்தான் மீது துவேஷம் ஏற்பட்டிருந்தது. அவர்கள் அவருடைய முயற்சிகளுக்குக் குறுக்கே விழுந்தார்கள். இதனால் சஞ்சலம் விளைந்தது. 1908 முதல் 1912 வரைதான் இந்தச் சஞ்சலமான காலம் நீடித்திருந்தது.

அந்தச் சஞ்சலத்தை மேல்திசை வல்லரசுகள் பரிபூர்ணமாக உபயோகித்துக்கொண்டன.

1911-ல் கொஞ்சங்கூட வெட்கமில்லாமல், முகாந்திரம் யாதொன்றுமில்லாமல், திரிபோலியின்மீது இத்தாலி படையெடுத்தது. அங்கே படுகொலைகளைச் செய்தது.

1912-ல் பால்கன் கும்பல்கள் (நாடுகள்) துருக்கியைத் தாக்கின; அதை முடமாக்கின; அதன் மானத்தையே ஹத்தி செய்தன.

1912-ல் ரஷ்யாவும், இங்கிலாந்தும், பாரசீகப் புரட்சியைக் கிள்ளி யெறிய முன்வந்தன.

இரண்டே வருஷங்களில் ஐரோப்பிய நாடுகள் இவ்வாறு பிரமாதமான ஆக்கிரமிப்புகளைச் செய்துவிட்டன. கொஞ்சங்கூடக் காரணமில்லாமல், சதி செய்து முடிப்பது போல், ஏககாலத்தில் இந்த அக்கிரமங்கள் செய்யப்பட்டன.

இவற்றின் பலன் உடனே தெரிந்தது. மண்டையில் அடிபட்டாற்போல், முஸ்லிம் உலகம் அதிர்ச்சியை அடைந்தது. கோபமும், உயிர் போனால் போகட்டும் என்ற ஆவேசமும் முஸ்லிம் உலகத்தில் பரவ ஆரம்பித்தன. இந்தத் தாக்குதல்கள் காரணமாகவே இஸ்லாம் இயக்கம் பகிரங்கமாக முளைக்க ஆரம்பித்துவிட்டது.

மஹான் ஜமாலுத்தீன் செய்துவிட்டுப் போன, தீர்க்க தரிசனமான எச்சரிக்கைகள் சரியானவை என்று ஏற்பட்டது. ஆமாம், மேற்கு உலகம் இஸ்லாத்தின் நாசத்திற்கே கங்க

ணம் கட்டிக்கொண்டுவிட்டது என்பது நிதர்சனமாகி விட்டது.

திரிபோலியில் பல தலைமுறைகளாகத் துருக்கியரும் அரபியரும் பரஸ்பரம் பரம விரோதிகளாக யிருந்து வந்தனர். இப்போது அகிலாண்ட இஸ்லாத்தில் ஏற்பட்ட பிரேமையில் இரு வகுப்பாரும் ஆவேசத்துடன் ஒன்று பட்டார்கள்.

கைகளைக் கோத்துக்கொண்டு சிநேகக் கூத்தாடினர். இத்தாலியப் படைகளை வீராவேசத்துடன் தாக்கித் துறை முகங்களுக்கு விரட்டியடித்தனர். இஸ்லாம்-உலகம் பூராவும் செய்தியைக் கேட்டு ஆனந்தக் கூத்தாடினர். மேற்கத்திய தலைவர்கள், 'இதென்ன புதுமை! ஆபத்தில் தள்ளும்போ லிருக்கிறதே!' என்று திகைத்து, யோசனைக்குள் ஆழ்ந்தார் கள். ஒரு பிரெஞ்சுத் தலைவர், 'என்ன விபரீதம்? அநாதை யாகக் கிடந்த திரிபோலியில் இத்தாலி பரிதவிக்கிறதே! என்ன, குளவிக் கூண்டில் இத்தாலி கையை விட்டுவிட்டதா? ஆமாம், இதுவரைக்கும் துருக்கியுடன் போராடினல் போது மானதாக யிருந்தது. இனிமேல் இஸ்லாம் - உலகம் பூரா வுக்குமே ஜவாப் சொல்லவேண்டும் போலிருக்கிறதே! இத்தாலி பந்து விளையாட்டை ஆரம்பித்துவிட்டது. இத்தாலிக்கு இனிச் சங்கடமேதான். நமக்குந்தான் — நம் மனைவருக்குமே சங்கடந்தான்' என்று புலம்பலானர்.

முஸ்லிம்களுக்கு ரஷ்யாமீது கோபம்; பிரிட்டன்மீது கோபம்; பிரான்ஸின்மீது கோபம். அடுத்தாற்போல் பால்கன் யுத்தம் வந்ததும், இஸ்லாத்தின் கோபம் கொழுந்து விட்டெரிந்தது. சைனமுதல் காங்கோ வரைக்கும் மத பக்த சிகாமணிகளான முஸ்லிம் வகுப்பினர், 'துருக்கி தோற்றது! தோற்றது!' என்ற விசனச் செய்தியைக் கேட்டார்கள், சொன்னர்கள். கோபமும் தாபமும் கொண்டு குமுறினர்கள்.

முஸ்லிம்கள் பிரிட்டனுக்கு எச்சரிக்கை செய்தனர்: 'பிரிட்டிஷ் சர்க்கார், துருக்கிக்கு விரோதமான தமது மனப்பான்மையை உடனே மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல், பலகோடிப் பிரஜைகளுடைய கோபம் ஜ்வாலைகளை வீச ஆரம்பித்துவிடும். அதினின்றும் நாசம்தான் அனைவருக்கும் ஏற்படும்.'

இதைக்காட்டிலும் பெரிய விசேஷம் ஒன்று உண்டு. ஆசியா கண்டத்து முஸ்லிமல்லாதாரிடமும் இச் செய்தி சொல்லப்பட்டது. அவர்களுடைய நட்பும் நாடப்பட்டது. 'நாங்களும் நீங்களும் ஏகமனத்துடன் பகைத்திடும் மேல் நாடுகளை ஒழிக்கவேண்டிய தருணம் வந்துவிட்டது!' என்ற கோஷம் எழுந்தது. இதற்குமுன், இப்படி நடந்ததே கிடையாது. மூன்று கண்டங்களில் இந்த அழைப்பு அதிர்ச்சியை யுண்டாக்கிவிட்டது.

ரஷ்யாவை ஜப்பான் 1904-ல் முறியடித்தபோது — அந்த வெற்றியை முஸ்லிம் உலகம் ஆனந்தமாகக் கொண்டாடிற்று. ஜப்பானை இஸ்லாம் மதத்திற்கு மாற்றவேண்டும் என்ற ஆசை பிறந்தது. 1906-ல் எகிப்து தேசத்துப் பத்திரிகை ஒன்று, 'இங்கிலாந்துக்குக் கீழ்ப்பட்டு இந்தியாவில் 6 கோடி முஸ்லிம் பிரஜைகள் இருந்து வருகிறார்கள். ஜப்பானும் இஸ்லாம் மதத்தைத் தழுவுமானால் தனக்கு என்ன கதி நேர்ந்திடுமோ என்று இங்கிலாந்து நடுங்குகிறது. ஜப்பான் இஸ்லாமானால், முஸ்லிம்களின் அரசியலே பெருத்த மாறுதலை யடைந்துவிடும்' என்று எழுதியது.

கிழக்குக் கோடியில் ஒரு சீன முஸ்லிம் ஷேக், 'ஜப்பான் பெரிய வல்லரசாகவேண்டுமானால், மற்றக் கண்டங்களையும் தனது வசமாக்கிக்கொள்ள விரும்பினால், அது பரமானுக்கிரஹத்தை அளித்திடும் இஸ்லாம் மதத்தைத் தழுவினால் எளிதில் சாத்தியமாகிவிடும்', என்று எழுதினர்.

ஜப்பானுடைய வெற்றியால் ஏற்பட்ட ஆனந்தத்தின் தொடர்பாக, மேலே சொல்லிய அழைப்புக்கள் நடைபெற்றன.

1910-1912-ல் பரவிய விசன வெள்ளத்தில், இந்திய முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு ஓர் அழைப்பை விடுத்தனர். அதற்கு, '**கீழ்த்திசையின் அழைப்பு**' என்று மகுடமிட்டிருந்தது:

'கீழ்த் திசையின் ஆவியே, ஹிந்துஸ்தானமே, எழுந்திரு! மேற்கத்திய ஆக்கிரமிப்பை விரட்டியடி! ஹிந்துஸ்தானத்தின் குழந்தைகளே! உங்களுடைய ஞானம், நாகரிகம், ஐசுவரியம், இவைகளைக் கொடுத்து உதவி புரியுங்கள். உங்களுடைய புராதனமான வல்லமையை எங்களுக்குக் கடன் கொடுங்கள். ஹிமாலயத்தின் உன்னத சிகரங்களில் வசித்து வரும் உத்தம சக்திகளைப் படைத்த யோகிகள் கிளம்பி வரட்டும். யுத்தங்களில் வெற்றிகளை அனுக்கிரகம் செய்திடும் தெய்வங்களுக்குப் பிரார்த்தனைகளைச் செய்திடுங்கள். "அயோக்கிய வல்லமையைப் புழுதியில் தள்ளட்டும்; நியாயம் ஜயிக்கட்டும்" என்று பிரார்த்தனைகளை உயரே அனுப்புங்கள். ஹிந்து நண்பர்களே! உங்களுடைய கோடிக் கணக்கான தெய்வங்களும் கிளம்பி, சத்துருக்களின் சேனைகளை ஒழிக்கட்டும், அழிக்கட்டும்!'

1912, ஏப்ரலில் பௌத்தர்களுக்கு அழைப்பு அனுப்பப் பட்டது.

உலகத்திலேயே பெரிய புரட்சிதான் ஏற்பட்டுவிட்டது. சீன முஸ்லிம்கள், 'ஐரோப்பாவின் அகம்பாவம் சகல எல்லைகளையும் மீறிவிட்டது. அது நமது சுதந்திரத்தைப் பிடுங்கிக் கொள்ளும். நம்மை அடியோடு நாசம் செய்திடும். உடனே வேலை செய்யாவிடில், வல்லமையைத் திரட்டாவிடில், எதிர்ப்புக்குத் தயார் செய்யாவிடில், நாம் தொலைந்தோம்!' என்றார்கள்.

சைனாவின் சுதந்திர இயக்கத்தின் பிதாவும் தலைவருமான டாக்டர் ஸன்-யாட்-ஸன், ‘ நமது சைனாவில் அமைதியும் சுதந்திரமும் நிலவுவதற்கு நமது சீன முஸ்லிம் சகோதரர்கள் பேருதவி புரிந்திருக்கிறார்கள். அதை மற்ற சீனர்கள் என்றைக்கும் மறக்க முடியாது,’ என்றார்.

இவ்வாறு முஸ்லிம் - உலகில் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டது. முஸ்லிம்களுக்கு மற்ற ஐரோப்பியரிடம் ஏற்பட்டிருந்த துவேஷத்திற்கு ஓர் உதாரணம் மட்டும் காட்டுவோம். துருக்கி-பால்கன் யுத்தம் முடியும் தருவாயில் துருக்கி ஆசிரியர் ஒருவர் எழுதியது வருமாறு :

‘பல்கேரியத் துருப்புகள் எவ்வளவு அதமத்தனமாக நடந்துகொண்டன! சேனையென்றால், காட்டுமிராண்டிக் காலத்திற்குத் திரும்ப வேண்டும்போ லிருக்கிறது. ரத்த தாகம் கொள்ளவேண்டும் ; குழந்தைகள், ஸ்திரீகள், கிழவர்கள், பலவீனர்கள் என்று வேற்றுமை பாராமல் வதை செய்ய வேண்டும் ; கருணையையே ஹத்தி செய்துவிட வேண்டும் ; மற்றவரின் சொத்து, உயிர், மானம், எதையும் பொருட்படுத்தக்கூடாது ; ரத்தம், கஷ்டம், அட்டூழியம், துக்கம் இவற்றைத்தான் நாம் பரப்பவேண்டும். இந்த விதமாக நாம் செய்தால்தான் நாகரிக உலகம்—பல்கேரியாவின் சேனையைக் கொண்டாடியது போல் நம்மையும் கொண்டாடும் !’

முஸ்லிம்களிடையே கோபமும் உணர்ச்சியும் கொந்தளித்தபோதிலும், செயலில் அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. எனவே, ஐரோப்பிய வல்லரசுகளுக்குள்ளேயே சண்டை ஏற்பட்டு, ஒருவரை யொருவர் பட்சித்துவிட மாட்டார்களா என்று எதிர்பார்த்துக்கொண் டிருந்தனர். அவர்கள் பிரார்த்தனையின் பலனே தோன்றிவிட்டதுபோல் 1914-ல் ஐரோப்பிய யுத்தம் தோன்றியது. யுத்தம் ஆண்டவனின் அனுக்கிரகம் என்று போற்றப்பட்டது.

# 1914 - 18 மகா யுத்தம்

பாரசீகத்தை ரஷ்யா, எகிப்தையும் இந்தியாவையும் பிரிட்டன், திரிபோலியை இத்தாலி, அல்ஜீரியாவையும், மொராக்கோவையும், ட்யூனிஸியாவையும் பிரான்ஸ், மற்றதை பல்கேரியா, மற்றதை ஸ்பெயின் — இந்த விதமாக முஸ்லிம் உலகத்தை ஆக்கிரமித்துக்கொண்ட கிறிஸ்தவ உலகத்தில், ஜெர்மனி மாத்திரம்தான் இஸ்லாத்தைப் பிரமாதமாகத் தீண்டவில்லை. ஜெர்மன் கெய்ஸர் தமது மோகன வலைகளை வீசி, யுத்தத்தில் துருக்கியைத் தமது கட்சிக்கு இழுத்துக் கொண்டார்.

அத்துடன், துருக்கியின் சுல்தான், கலீபா என்ற ஹோதாவில், ஜீஹாத் என்ற புண்ணியப் போரை இஸ்லாமிய நாடுகளை ஆக்கிரமித்திருக்கும் நேச தேசங்களின்மீது ஆக்ஞாபிக்கும்படி கெய்ஸர் தூண்டிவிட்டார். சுல்தான் கலிபாவும் ஜீஹாத் ஸ்ரீமுகத்தை விடுத்தார்.

நேச தேசத்தினருக்கு உட்பட்டிருந்த ஒவ்வொரு முஸ்லிம் நாட்டிலும் குழப்பங்கள் நிகழ்ந்தன. எகிப்தில் கலகம், பத்து மடங்குத் துருப்புகளைக் கொண்டு பிரிட்டன் கலகத்தை அடக்கவேண்டியதாயிற்று. திரிபோலியில் கலகம் ஜ்வாலை

களையே வீசியது: இத்தாலியர்கள் துறைமுகங்களுக்கு ஓடி விட்டார்கள்; நாட்டிற்குள் தலைகாட்டுவது கிடையாது. பாரசீகம் துருக்கியுடன் சேரும் தறுவாயில், ரஷ்யா, பிரிட்டன் இரண்டும் சேர்ந்து வேலைசெய்து அமுக்கிவிட்டன. இந்தியாவின் வடமேற்கு எல்லையில் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் துருப்புகளை வைத்துக்கொண்டு, மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. பிரிட்டிஷ் சர்க்கார், தங்களுடைய தஸ்தாவேஜிகளிலேயே, '1915-ல் நேசதேசத்தினரின் ஆசியா நாடுகளும் ஆப்பிரிக்கா நாடுகளும் நிர்மூலமாகும் எல்லை வரைக்கும் கலகம் எட்டிவிட்டது,' என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இஸ்லாத்தின் தலைவர்கள் முடிவான உத்தரவு போன்ற வார்த்தையை உச்சரித்திருந்தால் போதும் — கலகங்கள் சகல நாடுகளிலும் நடந்திருக்கும். தலைவர்கள் அந்த வார்த்தையை உச்சரிக்கவில்லை. துருக்கிக்கு வெளியேயுள்ள, செல்வாக்குப் படைத்த முஸ்லிம் தலைவர்கள், துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டதைத்தான் கண்டனம் செய்தார்கள். துருக்கியின் சுல்தான்-கலிபா விடுத்த ஸ்ரீமுகத்தை ஜெர்மன் ஸ்ரீமுகம் என்று வர்ணித்து, இது ஜீஹாத் அல்லவென்று போதித்து, ஆவேசம் பூண்ட ஜனத்திரளை சாந்தப்படுத்தினார்கள்.

'நாம் எதற்கு இதில் புகவேண்டும்? மேற்கத்தியினர் தங்களுடைய யமப் போரைத் தங்களுக்குள்ளேயே நடத்திக் கொள்ளட்டும்; பலவீன மடையட்டும்; போர் முடிந்த பின், தங்கள் தங்கள் அந்தரங்க அபிப்பிராயங்களை வெளியிடட்டும். அதுவரைக்கும் இஸ்லாம் தமாஷாவைக் கவனித்து வரட்டும். தனது பலத்தைத் திரட்டிக்கொள்ளட்டும். நல்ல நாளை எதிர்பார்த்துக்கொண் டிருக்கட்டும்' என்று புத்திமான்கள் போதித்தார்கள்.

நேச தேசங்கள்மீது ஜீஹாத்தை முஸ்லிம்கள் நடத்த வில்லை. ஆனால் இதைக் கண்டு நேச தேசங்களின் மந்திரிகள் திருப்தியடையவில்லை. முஸ்லிம்கள் துருக்கியர்மீது போர் செய்யவேண்டும் என்று இந்த மந்திரிகள் விரும்பினர். துருக்கியர்களுக்கும் அராபியர்களுக்கும் மனஸ்தாபங்கள் இருந்துவந்ததை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம். இந்த மனஸ்தாபத்தை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும், என்று நேச தேச மந்திரிகள் தீர்மானித்தனர். மேலும், இந்திய முஸ்லிம்கள், பிரிட்டிஷ் இந்தியச் சேனையில் பெரு வாரியாக இருந்துவந்தார்கள்; இவர்களையும் துருக்கியின்மீது செய்யும் போரில் உபயோகித்துக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தனர். ஆனால் இந்திய முஸ்லிம்கள்—இஸ்லாத் திற்கே மிகவும் முக்கியமான புண்ணிய ஸ்தலங்களாகிய பாலஸ்தீனமெல்லாம் முஸ்லிம்களின் ஆதிக்கியத்தை விட்டு மற்றவருடைய கைகளுக்குள் செல்வதை விரும்புவார்களா? ஆகையினால், இந்த விஷயத்தில் முஸ்லிம்களைத் திருப்தி செய்யவேண்டி யிருந்தது.

எவ்விதம் திருப்தி செய்வது? ஒப்பந்தங்கள், வாக் குறுதிகள் அளிப்பதே மார்க்கம். வேறு வழி கிடையாது. வெறும் வாக்குறுதிகளையும் காகித உறுதிகளையும் நம்பலாமா? கண்டிப்பாக நம்பலாம்: ஏனென்றால் நேச தேசங்கள் ஜெர் மனியின்மீது போர் தொடுத்ததற்குக் காரணமே உடன் படிக்கைகளின் பரிசுத்தத்தைக் காப்பாற்றும் பொருட்டுத் தான் என்று நேச தேசங்கள் பூமண்டலம் முழுவதற்கும் தெரிவித்திருந்தனர். 'இந்தக் கெய்ஸர் உடன்படிக்கைகளைக் காகிதத் துண்டுகள் என்று கேவலப்படுத்தி யிருக்கிறார். நாங் கள் உடன்படிக்கைகளின் கற்பைப் பாதுகாக்கவே புறப்பட் டிருக்கிறோம்', என்று கோஷித்தார்கள். அப்போர்க்கொத்த அரிச்சந்திரர்களின் வாக்குறுதிகளும் எழுத்துறுதிகளும்

செய்து கொடுக்கும்போது, எப்படி முஸ்லிம்கள் நம்பாம லிருக்க முடியும்? ஆகையினுல், நேச தேச அதிகாரிகளின் பேச்சையும் எழுத்தையும் நம்பித் துருக்கிக்கு எதிரிடையாக, முஸ்லிம்கள் அந்த யுத்தத்தில் மிகப் பெரிய பங்கை எடுத்துக் கொண்டார்கள்.

5-1-1918 ல் பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ், 'நாங்கள் துருக்கியிடமிருந்து அதன் ராஜதானியையோ அல்லது பிரசித்தியையும் வளத்தையும் படைத்த ஆசியா மைனர், திரேஸ் பிரதேசங்களையோ பிடுங்கிக்கொள்வதற் காக இந்தப் போரை நடத்தவில்லை' என்று தெளிவான வாக்குறுதியைக் கொடுத்தார்.

இது மனமறிந்த பொய். 1915-ஆம் வருஷத்திலேயே நேச தேசங்கள் அந்தரங்க உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள ஆரம்பித்து, வரிசை வரிசையாகத் தங்களுடைய ஆசைகளைப் பெருக்கிக்கொண்டு வந்திருந்தன. இந்த ஒப் பந்தங்களின் பிரகாரம் ஆசியா மைனர் பூராவையும் நேச வல்லரசுகள் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளும் விதத் தையே நிர்ணயித்துக்கொண்டு விட்டன.

பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் ஏன் இந்த மனோஹரமான பொய்யைப் புகன்ருர்? அவர் தம்முடைய சொந்த அக் கரைக்காகப் புளுகவில்லை. காரியத்தில்தான் கண்ணும் கருத்துமா யிருக்கவேண்டும். யுத்தம் எதற்கு? ஜயிப் பதற்கு; எதிரியைத் தோற்கடிப்பதற்குத்தான் யுத்தம். தோற்கடிப்பதற்கு எந்தமுறையையும் கையாளலாம்; 'காதலி லும் போரிலும் எது செய்தபோதிலும் நியாயம்,' என்பது ஐரோப்பிய நாடுகளில் நடமாடும் பழமொழி.

இஸ்லாத்தினருக்குப் புனிதமான க்ஷேத்திரங்களைப் பொறுத்தமட்டில் அந்தத் திருவாக்குப் பிரயோகிக்கப் பட்டது.

அராபியர்களுடைய விஷயத்தில் மட்டும் மிகவும் விசேஷமான வேலைமானங்கள் நடந்தன.

1916-ல் மெக்காவின் ஷெரீபினுடைய தலைமையில் அராபியக் கலகம் ஆரம்பித்தது. துருக்கிக்கு உட்பட்டிருந்த சகல அரபு மாகாணங்களுக்குள்ளும் கலகம் விரைவாகப் பரவியது. துருக்கியின் எதிர்ப்பு பெரும்பாலும் தளர்ந்து போனதற்குக் காரணமே அந்த அராபியரின் கலகம்தான். இந்தக் கலகம் அராபியர்கள் தாங்களாக, முன் தயாரிப்பின்றி, திடீரென வெளித் தூண்டுதலில்லாமல், நடத்திய கலகமல்ல. இந்தக் கலகம் நல்ல ஜாக்கிரதையுடனும் முன் யோசனையுடனும் நடத்தப்பட்ட கலகம். நேச தேசங்கள் ஆதரித்த கலகம். நேச தேசங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நம்பியே அராபியர் நடத்திய கலகம் இது.

எகிப்திலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள், யுத்தம் ஆரம்பித்தவுடனேயே துருக்கியின் ஆட்சியில் அதிருப்தி கொண்டிருந்த தேசீய அராபியர்களுடன் பேச்சுக்களை அவிழ்த்து விட்டார்கள். அவர்களை அன்பால் ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். 'ஆமாம், துருக்கியருடைய சக்கியம் உங்களுக்கு உதவாது. எங்களுடன் சேர்ந்து போர் புரியுங்கள்' என்று யோசனை கூறினார்கள். இந்த அராபியர்கள் மாத்திரம் கலகம் செய்தால், எகிப்தையும் ஸூயெஸ் கால்வாயையும் சுலபமாகப் பாதுகாத்துக்கொள்ளலாம்; துருக்கி ராஜ்யத்திற்குள்கூடப் படையெடுத்துத் தாக்கலாம்.

ஆனால், அராபியர்கள் 'தளவாடங்கள் பணங்கள் முதலியவற்றை எங்களுக்கு அளித்துவந்தால் போதாது. தனிப்பட்ட அரபு ராஜ்யத்தை ஸ்தாபித்துத் தரவேண்டும். அதில், துருக்கி சாம்ராஜ்யத்தினுள் அடங்கியுள்ள சகலமான அரபு மாகாணங்களும் அடங்கியிருக்கவேண்டும். சுதந்திர அரேபியாதான் எங்களுடைய கலகத்திற்குப் பரிசு. இதைச்

செய்து தருவதாக நீங்கள் சபதம் செய்தால், நாங்கள் கலகம் செய்கிறோம். இல்லாவிட்டால் கலகம் செய்யமாட்டோம்!' என்றார்கள்.

சபதம் செய்வதெப்படி? பிரான்ஸும், பிரிட்டனும், துருக்கியின் அரபு மாகாணங்களின் கதியைக் குறித்து, சொந்த அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டிருந்தன. இந்தப் பிரதேசங்களைத் தங்களுடைய 'செல்வாக்கு மண்டலங்க'ளாக அமைத்துக்கொண்டுவிட வேண்டும் என்று நீண்ட காலமாக ஆசை கொண்டிருந்தன. பாரசீக வளை குடாவின் தலைப்பிலுள்ள தெற்கு மெஸபொடேமியா, இங்கிலீஷ் மண்டலமாகவும் — லெபேனன் மாகாணம் பிரெஞ்சு மண்டலமாகவும் இருக்கத்தக்கதென்று யுத்தத்திற்கு முன்னமேயே பிரிட்டனும் பிரான்ஸும் செய்துகொண்ட அந்தரங்க ஒப்பந்தம். இரண்டு மண்டலங்களினுடைய விஸ்தீர்ணமும் அதிகமில்லைதான். ஆனால் 'செல்வாக்கு மண்டலம்' என்றாலே, ரப்பரைக் காட்டிலும் நீளக்கூடிய சுபாவம் அதற்கு உண்டு. சந்தர்ப்பங்கள் அனுகூலமா யிருந்தால் மண்டலங்கள் விபரீதமாக விரிந்துவிடும்.

மகா யுத்தம் பொருத்தமான சந்தர்ப்பம் அல்லவா? ஆகையினால் பிரான்ஸும் பிரிட்டனும் கூடி யோசித்தன. 5-3-1915-ல் இரகசிய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. ஸிரியாவில் பிரான்ஸுக்கு ஆதிக்கியம், மெஸொபொடேமியாவில் பிரிட்டனுக்கு ஆதிக்கியம் என்று நிர்ணயித்துக் கொள்ளப்பட்டது. எல்லைகள் குறிக்கப்படவில்லை. ஆயினும் எண்ணம் என்ன? துருக்கியின் மாகாணங்களை இரு நாடுகளும் பங்கிட்டுக்கொண்டுவிட வேண்டியது என்பதுதான்.

இந்த ஒப்பந்தத்தினால், துருக்கியின் அரபு மாகாணங்களுக்குச் சுதந்திரம் கிடையாது என்று ஏற்பட்டது. அராபியர்களோ சுதந்திரத்தைக் குறித்துச் சபதம் வேண்டினார்கள்.

சபதம் இல்லையென்றால் கலகமில்லை. கலகம் உண்டானால், நேச நாட்டினருக்குப் பெருத்த லாபம் உண்டு. கலகமில்லையேல், அந்த லாபத்தை இழக்க வேண்டியதுதான். லாபத்தைக் கைவிடுவதா? அது மாத்திரம் ஒருகாலும் சரிப்படாது. சத்தியத்தைக் கைவிட்டாலும், வேறு எதைக் கைவிட்டாலும் லாபத்தை மாத்திரம் கைவிடக் கூடாது அல்லவா! ஆகையினால், அரபுத் தலைவர்களைத் திருப்தி செய்யும்படியான ஒரு சூத்திரத்தைப் பிரிட்டிஷ் தூதர்கள் தயாரித்தார்கள்.

25-10-1915ல் மெக்கா ஷெரீபின் பிரதிநிதியிடம் எகிப்தின் கவர்னர்-ஜெனரலாகிய ஸர் ஹென்றி மாக்மஹான் ஒரு சாஸனத்தைச் சமர்ப்பித்தார். அதன் பிரகாரம், அராபியர்கள் துருக்கிக்கு விரோதமாகக் கலகம் செய்யும் பட்சத்தில் தெற்கு மெஸொபொடேமியாவைத் தவிர துருக்கியிலுள்ள மற்ற மாகாணங்களுடைய சுதந்திரத்தைப் பிரிட்டன் அங்கீகரிக்கும் என்று கண்டிருந்தது. அதில், 'பிரான்ஸின் அக்கறையைப் பொருட்படுத்தாமல் நடந்துகொள்வதற்குப் பிரிட்டன் தடைப்பட்டிருந்தால் ஒழிய' என்ற ஷரத்தும் சேர்க்கப்பட்டிருந்தது. தேளின் வால் நுனியில் கொடுக்கு இருப்பதுபோல இந்த ஷரத்து புகுந்திருந்தது. 'இந்த ஷரத்து எதற்கு?' என்று கேட்டபோது, 'அது சும்மா, உபசாரத்திற்கு — பிரான்ஸும் ஒரு தோழன் அல்லவா? பிரான்ஸை அவமதித்தோம் என்று எதற்கு ஏற்படவேண்டும்? தமாஷாகக் காணவேண்டியதுதானே!' என்று பதில் சொல்லப்பட்டது. ஸர் ஹென்றி மாக்மஹானும் தமாஷாகச் சிரித்தார். வேலை முடிந்துவிட்டது.

யுத்தம் ஆரம்பித்த பின்னர் ஏற்பட்ட ரகசிய ஒப்பந்தம் மெக்கா தூதருக்குத் தெரியாது. யுத்தத்திற்கு முன்பு ஏற்பட்டிருந்த ஒப்பந்தம் லெபனோனை மாத்திரம் பாதித்தது.

இந்தச் சொற்பமான பிரதேசத்தைக் குறித்துத்தான் அந்தத் 'தமாஷ்' ஷரத்தை நுழைத்திருக்கிறார்கள் என்று அவர் நினைத்துக்கொண்டார். பரமானந்தத்துடன் மாக்மஹான் அவர்களை ஒரு மஹான் என்று நினைத்துக்கொண்டு நன்றி செலுத்திவிட்டு அவர் மெக்கா சென்றார். கலகத்திற்கு ஏற்பாடுகளை முனைந்து செய்தார். 1916-நவம்பரில் கலகம் ஆரம்பமாகிவிட்டது.

1915 - மே மாதத்தில் நடந்த ஒப்பந்தம் அராபியர்களுக்குத் தெரிந்திருக்குமானால், 1916-நவம்பரில் அவர்கள் ஒருகாலும் கலகத்தைத் துவக்கியிருக்க மாட்டார்கள்.

அந்த 1916-நவம்பரிலேயே, அரபுக் கலகம் ஆரம்பமான மாதத்திலேயே, பிரான்ஸும் பிரிட்டனும் இன்னுமோர் ஒப்பந்தம் செய்துகொண்டன. துருக்கியினுடைய அரபு மாகாணங்கள் பூராவையும் விவரமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். இதுவும் ரகசிய உடன்படிக்கைதான். பாலஸ்தீனம் மாத்திரம் சர்வ தேசங்களுக்கும் பொதுவாக இருக்க வேண்டியது; அதன் முக்கிய துறைமுகமாகிய ஹைபா பிரிட்டிஷாரின் வசத்தில் இருக்கவேண்டும்; பாலஸ்தீனம் பிரிட்டிஷ் மண்டலத்தைச் சார்ந்தது என்ற முறையில் உடன்படிக்கை நிறைவேறியிருந்தது.

அராபியருக்கு ஸர் ஹென்றி மாக்மஹான் அளித்த வாக்குறுதியும் எழுத்துறுதியும் காற்றிலே காணமற் போய்விட்டன. ஆனால் இது திரைகளுக்குப் பின்புறத்தில் நடந்த விஷயம். அராபியர்களுக்கு இதன் தகவலே தெரியாது. சுதந்திர சூரியன் உதயமாகப் போகிறான் என்ற கொண்டாட்டத்தில், அராபியர்கள், துருக்கியரை ஹதம் செய்ததோடு தங்களுடைய உயிரையும் விட்டுவந்தார்கள்.

பிரிட்டிஷார் பிரான்ஸுடன் ரகசிய ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது போகட்டும். அதை மறைத்து வைத்தது

போகட்டும். கலகத் தூண்டுதலையாவது கொஞ்சம் மட்டுப் படுத்திக் கொண்டார்களா? கிடையவே கிடையாது. 'தேசியம், தேசியம், சுதந்திரம், சுதந்திரம்' என்ற அமிர்தம் போன்ற வாக்குகளை அபரிமிதமாகப் பரிமாறி, துருக்கியர் கள்மீது மகத்தான ஊக்கத்துடன் போர் புரியும் வண்ணம் தூபம் போட்டுக்கொண்டே யிருந்தார்கள். அரபு நாடு களுக்குச் சதி செய்வதில் வெகு சமர்த்தர்களான அதிகாரி களைப் பிரிட்டிஷ் சர்க்கார் அனுப்பிக் கொடுத்தார்கள். அதில் கர்னல் லாரென்ஸ் என்பவன் மகா 'வில்லன்'; இளைஞன். அரபுத் தலைவர்களை யெல்லாம் மயக்கிவிட்டான். ஒரு புருஷ-மோகினியைப் போல் வேலை செய்தான். 'அரபுப் புரட் சிக்கே இவன்தான் ஆத்மா' என்ற பிரசித்தியை லாரென்ஸ் அடைந்துவிட்டான். அவனுக்குப் பெயரே 'அரேபியாவின் கர்னல் லாரென்ஸ்' என்றாகிவிட்டது.

பிரிட்டன் அனுப்பிய அதிகாரிகளுக்கு ரகசிய உடன் படிக்கையைப் பற்றி ஒரு வார்த்தைகூடத் தெரியாதாம். அதன் வாசனைகூடத் தெரியாதாம். பிரிட்டிஷ் தளபதிகளும், தங்களுடைய கோஷம் போன்ற ராணுவ அழைப்புக்களில், 'அராபியர்களே! வீரர்களே! சுதந்திரப் போரை நடத்துங் கள்—ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து நடத்துங்கள்!' என்றெல் லாம் உற்சாகப்படுத்தி விட்டார்கள்.

இதெல்லாம் போதாதது போல், பிரிட்டிஷ்-பிரெஞ்சு சர்க்கார்கள் இரண்டும் சேர்ந்து ஒரு வாக்குறுதியை அரபு மாகாணங்கள் முழுவதிலும் பரப்பினார்கள். அது வருமாறு:

'ஜெர்மனியின் பேராசை இவ்வுலகத்தின்மீது அவிழ்த்து விட்டிருக்கும் போரில் நாங்கள் ஏன் நுழைந்திருக்கிறோம் என்றால், துருக்கியர்களால் நீண்ட காலமாக நாசம் செய்யப் பட்ட சகல ஜாதியினருக்கும் பூர்ணமான, முடிவான விடு தலையைப் பிடுங்கித் தரவேண்டும். அத்துடன் தேசிய சர்க்

காரையும் தேசீய நிர்வாகத்தையும் ஸ்தாபிப்போம். இவர்களுடைய அதிகாரம் ஜனங்களுடைய சுயேச்சையிலிருந்து உதயமாக வேண்டும். இதற்காகத்தான் நாங்கள் இந்தப் போரை நடத்துகிறோம்' என்ற வசனத்தைப் பரப்பினார்கள்.

சில கோடி ஐரோப்பியர்களும் மற்றவர்களும் பிணங்களான பின்பு, 1918-ல் போர் முடிந்தது. நேச தேசங்கள் சத்துருவை முறியடித்துவிட்டன. யுத்த மேடையில் திரை இறக்கிவிடப்பட்டது. பின்னர்தான் அராபியர் உண்மையைக் காண ஆரம்பித்தனர்.

எப்படிக் கண்டார்கள்? ஸிரியன் கரையில் பிரெஞ்சுத் துருப்புகள் வந்திறங்கின. என்ன சங்கதி என்று விசாரித்தால், ரகசிய ஒப்பந்தங்கள் வெளியாயின. தங்களை எவ்விதம் சதி-மோசம் செய்தனர் என்பதை அராபியர் கண்டு கொண்டனர்.

# வெர்ஸேல்ஸ் படலம்

அராபியர்களுடைய கோபம் கொடிய விஷம் போல் கசந்து கறுப்பாகிவிட்டது. முஸ்லிம் நாடுகளின்மீது ஐரோப்பிய வல்லரசுகளுக்கு உண்டாயிருந்த பிடிப்பை ஒரு அங்குலமேனும் விட்டுக்கொடுக்கும் அபிப்பிராயம் ஒருவருக்கும் கிடையாதென்பது பிரகாசமாகிவிட்டது. துருக்கியின் பிணத்தை இந்தக் கழுகுகள் பங்கிட்டுக்கொள்வதற்கு ஏற்கனவே அந்தரங்க ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருந்தன என்பதும் வெட்ட வெளிச்சமாயிற்று. எகிப்து பிரிட்டிஷ் பாதுகாப்பிற்கு உட்பட்டு இருந்து வரவேண்டியது; பாரசீகமும், பெயரில் இல்லாவிட்டாலும், வாஸ்தவத்தில் அவ்விதமே பிரிட்டனுக்கு உட்பட்டு இருந்து வரவேண்டியது என்பதும் தெளிவாயிற்று.

போர் கடுமையாக நிகழ்ந்துகொண்டிருந்தபோது, நேச தேச மந்திரிகளுடைய பேச்சின் போக்கு முற்றிலும் வேறு விதமா யிருந்தது. 'புதிய உலகத் திட்டத்தை அமைக்கப் போகிறோம். சிறிய நாடுகளின் சுதந்திரம், சகல ஜாதியினருக்கும் சுதந்திரம், சுய நிர்ணயம், இவற்றின் பொருட்டுத் தான் போர் புரிகிறோம்' என்று உத்தியோக முறையில் நேச

தேச மந்திரிகள் அனைவரும், ஒரு முறையல்ல, பன்முறை கூறி யிருந்தார்கள்.

கிழக்குத் தேசங்கள் அனைத்தும் இந்தத் திருவாக்கியங்களை மகத்தான பொக்கிஷங்களாக அபிமானித்து மனத்தினுள் பத்திரப்படுத்தி வைத்திருந்தன. பின்னால் யுத்தம் முடிந்ததும் அதே மந்திரிகள் கையை விரித்து, இவர்களுடைய ஆசைச் சட்டிகளை ஓசையின்றி உடைக்கவே, இந்த மகத்தான அநீதியினால் ஏற்பட்ட கோபத்திற்கு அளவேயில்லை.

ஆவேச உறுதியின் அலைகள் கிழக்கத்திய உலகம் முழுவதும் மோதிச் சென்றன. எங்கும் ஐரோப்பிய விரோத உணர்ச்சியின் நெருப்பு குமுறி வந்தது.

முஸ்லிம் தேசீயத்திற்கும் அகிலாண்ட இஸ்லாம் இயக்கத்திற்கும் முரண்பாடுகள் உண்டு என்பது உண்மைதான். ஆயினும் ஐரோப்பிய ஆதிக்கியம் அழுத்தும்போது—அந்நியன் தாக்கும்போது — இந்த முரண்பாடுகள் ஒதுங்கிக் கொண்டு, ஒற்றுமைக்கு இடம் கொடுத்துவிடுகின்றன. ஐரோப்பிய அரசியலின் ஆதிக்கியத்திலிருந்து இஸ்லாம் விடுதலை பெறவேண்டுமென்பது சகல இஸ்லாம் நாடுகளின் ஏகோபித்த அபிப்பிராயமே தவிர வேறில்லை.

வெர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தினுடைய ஷரத்துக்களின் துர்நாற்றம் அடிக்க அடிக்க, முஸ்லிம் உலகத்தில் மிகுந்த கோபம் தாண்டவமாட ஆரம்பித்துவிட்டது. ஜீஹாத் அல்லது புண்ணியப் போருக்கு வேண்டிய பிரச்னைகள் மலையைப் போல் குவிந்துவிட்டன. மொத்தத்தில் முன் இருந்ததை விட முஸ்லிம் உலகுக்கு அதிகக் கேடுதான் விளைந்திருந்தது.

வெள்ளையர்களுடைய கண்மூடித்தனமான சாம்ராஜ்யப் பித்தினால் ஏற்பட்ட அபாயங்கள் தாம் இவை. ஐரோப்பியச் சதிகளைப் பற்றிய செய்திகள், வெகு வேகமாக மொராக்கோ

முதல் சைனு வரைக்கும் சென்றுகொண்டே யிருந்தன. பத்திரிகைகள் வேலை செய்தன. இஸ்லாத்திற்கு விரோதமாக ஐரோப்பா யோசிப்பதும், தீர்மானிப்பதும், செய்வதும், உடனுக்குடனே, மின்னல் வேகத்துடன், இஸ்லாம் உலகம் பூராவிற்கும் பரவிவந்தது.

ஒவ்வொரு முஸ்லிம் நாடும் மற்ற ஒவ்வொரு முஸ்லிம் நாட்டுடனும் சம்பந்தம் வைத்துக்கொண்டது. விசேஷத் தூதுகள், பிரயாணிகள் மூலம் தகவல்கள், வியாபாரங்கள், தபால், புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள்—எல்லாம் பறந்து சென்று செய்திகளைப் பரப்பிய வண்ணமாயும், ஊக்கத்தைப் பெருக்கிய வண்ணமாயும் இருந்தன.

கெய்ரோ பத்திரிகைகள் பெஷாவரில் கிடைக்கும். கான்ஸ்டான்டிநோபிள் பத்திரிகைகள் பம்பாயில் கிடைக்கும். கல்கத்தா பத்திரிகைகள் கார்பலாவில் கிடைக்கும். மகான் ஸென்னூஸியின் சகோதர கோஷ்டிகள் அகிலாண்ட இஸ்லாமைப் பிரசாரம் செய்துகொண்டே சென்றுர்கள். ஜனங்களுடைய மத பக்தியைக் கிளப்பிக்கொண்டே சென்றுர்கள்.

முஸ்லிம் பிரசாரகர்கள் ஆயிரம் ரூபங்களில் சென்றுர்கள். வியாபாரிகள், பகிரங்கப் பிரசாரகர்கள், மாணவர்கள், டாக்டர்கள், கூலியாட்கள், பிச்சைக்காரர்கள், பக்கிரிகள், கோமாளிகள், பாடகர்கள்—இப்படிப் பலவித வேஷங்களில் சென்றுர்கள். இவர்கள் எங்கே சென்றுலும் முஸ்லிம்களால் மகத்தான அன்புடன் வரவேற்கப்பட்டார்கள். ஐரோப்பிய வேவுகாரர்களுடைய சந்தேகிக்கும் கண்கள் இவர்களை லேசாகக் கண்டுகொள்ள முடியாதிருந்தது.

முஸ்லிம் உலகம் கலகம் செய்யத் தயாராயிருந்தது.

ஆனுல் மெக்கா ஷெரீபின் திருக்குமாரர் அமீர்பாஸல் பொறுமையைப் போதித்தார். 'யுத்தம் நம்மை எங்கு

கொண்டுபோய்த் தள்ளுமோ? சற்று நிதானத்தைப் பின் பற்றுங்கள்!' என்று உபதேசம் செய்தார்.

1919-ல் அராபியர்கள் சாந்தத்தையே அனுசரித்தார்கள். ஆனால் உள்ளம் குமுறிக்கொண்டேயிருந்தார்கள்.

பைசல்களைச் செய்யும் மந்திரி சபை பாரிஸ் நகரத்தையடுத்த வெர்ஸேல்ஸ் மண்டபத்தில் அமுல் நடத்தினர்கள். அங்கு அமீர் பாஸல் சென்றார்; தமது கட்சியை வெகு அழகாக, திறமையாக, கம்பீரமாக எடுத்துச் சொன்னார். அரட்டை மன்னர் ஸ்ரீ. லாயிட் ஜார்ஜ், 'அமீர் சொல்வது முற்றிலும் நியாயமே. அரபுத் துருப்புகள் பிரிட்டனுக்குக் கொடுத்த வாக்கை நன்றாக நிறைவேற்றின. நாமும் நமது சபதங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்' என்று அமீருடன் ஒத்துப் பேசுபவர் போல் பேசி, 'மேண்டேட்டரி' என்ற திட்டமான கல்லைத் தலையில் போட்டார். 'ஐரோப்பிய வல்லரசுகளுக்கு மேலதிகாரம், மேற்பார்வையே தவிர வேறு ஒன்றும் கிடையாது. உங்களை மற்றவர்கள் வந்து விழுங்காமல் இருக்கவேண்டும்; நீங்களோ புதிய ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொள்கிறீர்கள்; சச்சரவுகள் ஏற்படக்கூடும்; நாங்கள் சமரசப்படுத்துவோம். உங்களுக்குள்ளேயே சிறுபான்மையினர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் நல்வாழ்வைக் கொடுக்கவேண்டும். உங்களுடைய உற்ற நண்பர்களாக இருந்துகொண்டு சேவை புரிவோம், அவ்வளவுதான்' என்று சொல்லி அமீரின் கண்களில் சர்க்கரையைத் தூவப் பார்த்தார்கள்.

சூடுண்ட பூனையைப் போல், அராபியர்கள் படிக்கவேண்டிய பாடத்தை முன்னரே நன்கு கற்றுக்கொண்டுவிட்டார்கள். இனி இந்தப் பசப்புப் பருப்பு வேகாது. இனிப் பறவை வலையில் சிக்காது. அமீரும் தீர்மானம் செய்துகொண்டார்: 'இனியும் இவர்களை நம்பினால், இன்னமும்

மோசம் போகவேண்டியதுதான். இனி, முஸ்லிம்கள் தங்களுடைய முயற்சிகளைக் கொண்டுதான் காரியத்தைச் சாதித்துக்கொள்ள முடியும். தந்திரப் பிரயோகமோ ஆயுதப் பிரயோகமோசெய்ய வேண்டியதுதான்.'

அரசியல் வானை நோக்கும்போது — முதன் முதலாக, நேச தேசங்களே ஒன்றையொன்று 'திருடன்', 'மோசக்காரன்', 'பேராசைக்காரன்' என்று தூஷித்துக் கொள்ளப் புறப்பட்டன.

பிரெஞ்சுக்காரர், 'அராபியராவது, சுதந்திரத்தை விரும்புவதாவது! பிரிட்டிஷ் பிரசாரகர்கள் தூண்டிவிட்டு நமக்கு இடைஞ்சலைச் செய்யும்பொருட்டுச் செய்த வேலை இது!' என்றார்கள்.

இங்கிலீஷ்காரர், 'உங்களுடைய பேராசைதான் காரணம்' என்றனர்.

பிரெஞ்சுக்காரர், 'உலகத்தில் பாதியை நீங்கள் விழுங்கிக்கொண்டு, எங்களைப் பேராசைக்காரர்கள் என்கிறீர்களா?' என்றனர்.

சற்று முன்புதான் இரு நாடுகளும் சாஸ்வதமாக, சந்திர சூரியர் அழியும்வரைக்கும் தாம் பரிசுத்த நண்பர்கள் என்று சபதம் செய்துகொண்டிருந்தன!

அராபியர்கள், பரம துக்கத்திலும்கூட, கைகொட்டிச் சிரித்தார்கள், — உலகமே சிரித்தது.

# பாலஸ்தீனப் புரட்டு

[ 1919—1939 ]

பாலஸ்தீனப் புரட்டைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யாவிடில், நமக்கு இந்தப் பாகிஸ்தான் என்னும் புரட்சியின் ரகசியமே தெரியவராது. பாகிஸ்தானின் மூலஸ்தானம் பாலஸ்தீனத்தில் இருந்துவருகிறது.

பாகிஸ்தான் அகிலாண்ட இஸ்லாம் இயக்கத்துடன் சம்பந்தப்பட்டது. ஆகையினல்தான் அந்த இயக்கத்தைப் பற்றி முன்னர் விவரித்தோம். பல்லாயிரம் மைல்களுக் கப்பால் நடக்கும் முஸ்லிம்களைப் பற்றிய ஒவ்வொரு விசேஷ சம்பவத்தையும் ஒவ்வொரு முஸ்லிம் நாட்டிற்கும் தெரிவித்து வருகிறார்கள். பிரயாணம் செய்யும் முஸ்லிம் பிரசாரகர்கள் அனந்தம் பேர். ஒவ்வொரு மசூதியும் அகிலாண்ட இஸ்லாத்தின் பிரசார சபையாக வேலை செய்கிறது. சுவாமி சிரத்தானந்தர் ஒரு முஸ்லிமால் கொலை செய்யப்பட்டு மாண்டு போனார். அவர் ஒரு வீர ஹிந்து. பல முஸ்லிம்களை இந்துக்களாக மாற்றியிருந்தார். இதன்பொருட்டு 'சுத்தி' இயக்கத்தை நடத்திவந்தார். அவர் அமிர்தசரஸ் காங்கிரஸில் வரவேற்புக்

கமிட்டித் தலைவராகவும் இருந்தார். ஆயினும் தென்னிந்திய ஜில்லாக்களில் அவரை ஹிந்துக்களுக்கு நன்ருகத் தெரியாது. 1925-ல் கோயமுத்தூரில் அவர் ஒரு கூட்டத்தில் பிரசங்கம் செய்தபோது, இரண்டாயிரம் ஹிந்துக்களும், ஐயாயிரம் முஸ்லிம்களும் பிரசன்னமா யிருந்தனர். பின்னிட்டு விசாரித்த போது, உர்து பத்திரிகைகளின் பிரசாரத்தால், சுவாமியையும் அவருடைய மதப் பிரசாரத்தையும் முஸ்லிம் தலைவர்கள் இஸ்லாத்திற்கு விரோதமாகக் கருதினர்கள் என்பதும் வெளியாயிற்று. இஸ்லாமிய-அகில-இந்தியப் பிரச்னைகளி லும் அகிலாண்ட இஸ்லாம் பிரச்னைகளிலும் முஸ்லிம்களுக்கு இருந்துவரும் ஞானத்தில் அரைக்கால் பங்குகூட ஹிந்துக் களுக்குக் கிடையாது. ஆகையினல்தான், ஹிந்து சமூகம் கந்தையாகக் கிடக்கிறது; முஸ்லிம் சமூகம் கெட்டியாக நிற்கிறது.

முஸ்லிம் உலகம் ஐரோப்பிய உலகத்துடன் நெருங்கிப் பழகி வருகிறது. ஐரோப்பிய வல்லரசுகளுடைய சாகசங்கள் எல்லாவற்றையும் இந்தியரல்லாத முஸ்லிம்கள் அனுபவித்துக் கொண்டே வருகிருர்கள். ஐரோப்பிய வல்லரசுகளுடைய சூதுவாதுகளும் தந்திரங்களும் முஸ்லிம்களைப் பாதித்துக் கொண்டே வருகின்றன. முஸ்லிம்கள், கூடியமட்டில், அந்த ஐரோப்பியர்களுடன், சமயோசிதம்போல் போராடுகிருர்கள். இப்போது யுத்த சமயம். பிரிட்டனுக்குக் கொஞ்சம் நெருக்கடி யான சமயம் என்றே சொல்லவேண்டும். பிரிட்டன் தனியே நின்று நாஜிக் கொடுமையை எதிர்க்கிறது. இந்தச் சமயத்தில் முஸ்லிம்களுக்குச் சௌகரியமான யுத்த 'காண்டிராக்'டைச் செய்துகொள்ளலாம் என்று சில முஸ்லிம் தலைவர்கள் புறப் பட்டிருக்கிருர்கள்.

சென்ற மகா யுத்தத்தின்போது பிரிட்டிஷாருடன் ஏற் பட்ட சில ஒப்பந்தங்கள் பாலஸ்தீனத்தைப் பாதித்தன.

அந்த 'யுத்த காண்டிராக்டு' களை ஆராய்ச்சி செய்தால் இப்போது மிஸ்டர் ஜின்னு உத்தேசிக்கும் 'யுத்த காண்டிராக்'டினுடைய அந்தரங்க அர்த்தங்கள் நன்ருக விளங்கும்.

முந்தின அத்தியாயத்தில் மெக்காவின் ஷெரீபுடன் பிரிட்டன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தோம். பாலஸ்தீனம் துருக்கியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த அரபுப் பிரதேசங்களில் ஒன்ருகும். ஆகையினுல் பாலஸ்தீனத்திலும் அரபு சுயராஜ்யத்தை ஸ்தாபித்துத் தரவேண்டியது பிரிட்டனுடைய கடமையாகும்.

இந்தக் கடமைக்கு முற்றிலும் முரணுக பிரிட்டிஷ் சர்க்கார் யூதர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு ஒரு தேசிய வீடு ஸ்தாபித்துத் தருவதில் பூர்ண முயற்சிகள் செய்வதாக வாக்களித்தார்கள். இதை 2-11-1917-ல் பிரசுரம் செய்தார்கள். இதற்கு 'பால்போரின் வாக்குறுதி' என்ற பிரசித்தப் பெயர் கிடைத்தது. பால்போர் என்பவர்தான் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரியாக இருந்தார்.

அதாவது, ஒரே பிரதேசத்தைக் குறித்து இன்னும் இரண்டு முரண்பட்ட ஒப்பந்தங்களைப் பிரிட்டிஷ் சர்க்கார் செய்து கொடுத்தார்கள். ஒரே பூமியைக் குறித்து, வெவ்வேறு நபர்களுக்குக் கிரய சாஸனங்களைச் செய்துகொடுப்பது போல் நடந்துகொள்ளப்பட்டது. இந்த நடத்தையைக் குறித்து விமரிசனம் செய்ததில், ஜெப்ரெஸ் என்பவர், 'ஏற்கனவே ஒரு மனைவி யிருப்பதை மறைத்து, இன்னெருத்தியை மணந்துகொண்டு, பின்னிட்டு இருவரையும் சக்களத்திகளாக முட்டவிட்டு, மானங் கெட்ட வாழ்க்கையை நடத்துவதற்குச் சமானம்தான் இது' என்று எழுதுகிருர்.

இந்த 'பால்போரின் வாக்குறுதி', பால்போர் மாத்திரமோ, அல்லது பிரிட்டிஷ் சர்க்கார் மாத்திரமோ தயாரித்த

தன்று. அமெரிக்க யூதர் தலைவர்களும் பிரிட்டிஷ் யூதர் தலைவர்களும் இதன் நகலை இருபது முறை திருத்தி, கடைசியாக அனைவரும் ஒப்புக்கொண்டு, வெளியிட்டதாகும். இதன் உண்மையான சரித்திரம் இவ்வாறிருக்க, பால்போர், யூதர் தலைவரான பாரன் ராத்ஸ்சைல்டு என்ற கோடீச்வரருக்கு எழுதும்போது, 'இதைத் தயவு செய்து யூதர் சங்கத்திற்குத் தாங்கள் தெரிவித்தால், நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்,' என்று மாமூல்படி எழுதியிருந்தாரே தவிர வேறில்லை.

'பால்போரின் வாக்குறுதி'யில், ஒவ்வொரு வார்த்தையையும் பலமுறை தராசில் போட்டு நிறுத்துப் பிரயோகம் செய்திருந்தும், பிற்காலத்தில் சங்கடங்கள் நிகழ்ந்தபோது, 'ஏதோ அவசரத்தில், யுத்தப் பிரளயத்தில், சிநேக பாவத்தில் சொல்லிவைத்த வார்த்தைகளை அப்படி அவசரப்பட்டுப் பேசியிருக்கக் கூடாதுதான்; அதற்காக ஏதோ அட்டூழியம் செய்துவிட்டாற்போல ஏசுவது பிசகு' என்று சொல்லப்பட்டது.

முன்கூறிய ஸ்ரீ. ஜெப்ரெஸ், '1939-ஆம் வருஷத்தில் தேசாபிமானம் என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு, நாம் பயங்கொள்ளித்தனமாக உண்மையை மறைக்கப் புறப்படுவது, உபயோகமற்ற, பயன்படாத வேலையாகும். இந்த 1939-ஆம் வருஷத்தில் நமக்குத் தேவையான இங்கிலாந்து எதுவென்றால், தான் செய்த பாபங்களையெல்லாம் பரிஷ்காரமாக ஒப்புக்கொள்ளும் இங்கிலாந்துதான். பரிசுத்தப் படுத்தப்பட்ட, மனச்சாட்சிக்கு உரித்தான பலத்தைக் கொண்ட இங்கிலாந்து, சகல தேசங்களுக்கும் தலைமையில் தனது ஸ்தானத்தை ஸ்தாபித்துக்கொள்ள வேண்டும்' என்று எழுதியிருக்கிறார்.

அந்த வாக்குறுதியில், பின்னிட்டுச் சௌகரியப்படி அர்த்தம் செய்துகொள்வதற்காகவே வாசகங்கள் உபயோகிக்

கப்பட்டன. வாக்குறுதிக்குக் காரணமான அந்தரங்க எண்ணம் யூதர்களுக்குப் பேருதவி செய்யவேண்டும் என்பது.

பாலஸ்தீனத்தில் அராபியர்கள் 100க்கு 91 பேர் இருக்க, அவர்களை அராபியர் என்று குறிப்பிடுவதை விட்டு, 'யூதர்-அல்லாதார்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அறிக்கையில் ஸிவில் உரிமைகள், மத உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று கண்டிருந்ததே தவிர, அரசியல் உரிமைகள் காணப்படவில்லை. 'யூதர்-அல்லாதார்' என்று பிரயோகித்ததே அராபியர்கள் பெரும்பான்மையினராக இருப்பதை மறைப்பதற்குத்தான்.

ஸ்ரீ. லாயிட் ஜார்ஜினுடைய தர்க்க முறையே அலாதியாக இருக்கும். எது முக்கியப் பிரச்னையோ, அதை ஒரு மூலையில் ஒதுக்கித் தள்ளிவிடுவார். யூதர்களுக்கு இந்த வாக்குறுதி கொடுத்ததற்குக் காரணம் என்னவென்பதை அவர் பார்லிமெண்டில், பின்னால் சங்கடம் ஏற்பட்ட காலத்தில், விவரித்தார் :

'மர - ஆல்கஹால் நமக்குக் கிடைக்கவில்லை. இருந்ததெல்லாம் தீர்ந்துபோய்விட்டது. புதிதாகக் கொண்டுவருவதற்கு வசதிகள் கிடையாது. ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்கள் குறுக்கிட்டன. ஏதாவது ஒரு வழி செய்தாகவேண்டும். இல்லாவிட்டால், பெரிய பீரங்கிகளைத் தயாரிக்கவே முடியாது. யூதரின் தேசியத் தலைவர் டாக்டர் வீஸ்மன்—ரசாயன சாஸ்திரி—உபாயத்தைக் கண்டுபிடித்தார். சஞ்சீவியாக உதவினார். எனது நன்றியறிதலால் எனது மனம் இளகிவிட்டது. "உமக்கு என்னவேண்டும்?" என்று கேட்டேன். அவர் மகாத்மா. தமக்கு ஒன்றும் வேண்டாம், யூதர் தேசிய வீட்டைப் பாலஸ்தீனத்தில் ஸ்தாபித்துக் கொடுத்துவிட்டால் போதும் என்றார். நான் எப்படி மறுக்க முடியும்? அப்போது நமது நிலைமை பரம சங்கடம். அமெரிக்

காவும், யுத்தத்தில் நுழைவதா இல்லையா என்று இருவித யோசனையில் இருந்தது. அமெரிக்க யூதர்களுக்கு அமெரிக்க சர்க்காரிலும்கூட மிகுந்த செல்வாக்கு உண்டு. அந்தச் செல்வாக்கை நமது பக்கம் திருப்பிவிடட்டும் என்பதற்காகவும், நான் டாக்டர் வீஸ்மனுடைய வேண்டுகோளுக்கு இணங்கினேன். இவ்விரண்டு காரணங்களுக்காகத்தான் — ரசாயனம், அமெரிக்க உதவி — இவ்விரண்டுக்குமாகத்தான் நான் இணங்கியது. யூதர் இயக்கத் தத்துவத்தின் நியாயத்தை நான் ஆலோசிக்கவே யில்லை. அது நியாயமில்லாதிருக்கலாம். ஆயினும் நாம் எப்போது வாக்குறுதி கொடுத்துவிட்டோமோ — அதைக் காப்பாற்றிவிடவேண்டும். காப்பாற்ருவிட்டால், நமக்கு அவமானம்தான்.'

'அநியாயத்தை ஆதரிக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்துவிடுகிறது; பின்பு அதை ஆதரிக்காவிட்டால் அவமானம் என்று வாதம் செய்வது. இது சுத்த முட்டாள்தனம்' என்று ஸ்ரீ. ஜெப்ரெஸ் வியாக்கியானம் செய்கிருர்.

பாலஸ்தீனத்தை யூதர்களுக்குக் கொடுப்பதாக வாக்குக் கொடுப்பதற்கு முன்னுல், அது யாருடைய சொத்து என்பதை விசாரித்திருக்க வேண்டும். சரித்திரத்தில் எத்தனையோ சேனுதிபதிகள் தேசத்தையே காப்பாற்றி யிருக்கிருர்கள். அதற்காக அவர்களுக்கு என்ன பரிசை அளித்திருக்கிருர்கள்? லாயிட் ஜார்ஜ் கூறிய ரசாயனத்திற்காகச் சரித்திரத்தைக் கவிழ்த்தார்கள்; பூகோள சாஸ்திரத்தை ஒளித்தார்கள்; அராபியர்களுடைய சுதந்திரத்தைப் பறித்தார்கள்.

அராபியரைக் கவிழ்த்த சூழ்ச்சி மிகப் பெரிய அநீதி. யுத்தத்தின்போது தளவாடங்களைத் தயாரித்த கம்பெனிகளும் தரகர்களும் மலை போன்ற கொள்ளை லாபங்களைச்

சம்பாதிக்க முடிந்தது. ஆனால் இந்த 'ரசாயன'க் கொள்ளை அவற்றை யெல்லாம் மீறிவிட்டது.

இந்தத் தாராளத்தினால், 'இங்கிலாந்தைக் காப்பாற்றினோம்!' என்று மார்தட்டிக் கொள்ளுகிறார்கள். ஆயினும் இவர்கள் இங்கிலாந்தைக் காப்பாற்றவில்லை. இவர்களுடைய வியாபாரத்தினால், நாணய இங்கிலாந்தை, நற்பெயர் பெற்ற இங்கிலாந்தைக் கொலை செய்துவிட்டார்கள். மிஞ்சி நின்ற இங்கிலாந்து, நற்பெயரை இழந்துவிட்ட இங்கிலாந்துதான்.

எனவே, பால்போர் தயாரித்த திட்டம், சொற்களில் சர்வ மோசமாயும், கிரியாம்சையில் விபரீதமாயும், முடிவில் அநீதியாயும் உள்ள ஒரு தஸ்தாவேஜாக விளங்கியதில் வியப்பில்லை.

மெக்கா ஷெரீபை பிரிட்டிஷ் மந்திரிகள் என்னவென்று நினைத்துக்கொண்டார்கள்? சமயம் வரும்போது, அவருடைய வாயை அடைக்க, மரியாதை நிறைந்த பதங்களை வாரிவிட்டு, அத்துடன் சாக்குகள் நிறையத் தங்கத்தையும் கொட்டி, ஓரிரண்டு கொடுத்தால் 'சரி' என்று சொல்வார் கிழவர் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். இவ்விதமான உதாசீன எண்ணத்தில் மண்தான் விழுந்தது. பல வருஷங்களுக் கப்பால், யூதர்களுடைய அழைப்பின் பேரில், லார்ட் பால் போர் பாலஸ்தீனத்திற்குச் சென்றார். யூதருக் கென்று ஏற்பட்ட சர்வகலாசாலையைத் திறந்துவைத்தார். உலகத்தின் பிரமுகர்களெல்லாம் பிரசித்தி பெற்ற ஓமார் கலீபாவின் மசூதிக்குள் அனுமதிக்கப்படுவது வழக்கம். 'உள்ளே நுழையாதே!' என்று பால்போர் மட்டும் விரட்டி விடப்பட்டார். திரும்பிப் போகும்போது, பிரெஞ்சு ஸிரியாவின் முக்கிய நகரமாகிய டமாஸ்கஸ் நகரத்தில் அவர் தங்கினார். பெருங் கூட்டங்கள் இவரைத் தாக்குவதற்கு வந்துவிட்டன. தளபதி ஸெரெய்ல் தமது பூரண வல்லமையையும் தந்திரத்தையும்

பிரயோகித்து, அவரைப் பின்புறக் கதவு வழியாக ஊருக்கு அனுப்ப வேண்டியதாயிற்று.

முந்தின அத்தியாயத்தில் நாம் குறிப்பிட்ட சதி-தீரன் லாரென்ஸ், தனது பெருமையையும் சிறுமையையும் பின் வருமாறு வர்ணித்துக் கொள்கிறான்: 'நாம் போரில் ஜயித்துவிட்டோமானல்—நாம் அராபியருக்குக் கொடுத்திருக்கும் எழுத்துறுதியெல்லாம் குப்பைக் காகிதம் போலாகி விடும். ஆயினும், அராபியருடைய ஆவேச வீரம்தான் நமக்கு இந்தக் கிழக்குப் பிரதேசங்களில் ஜயத்தைத் தந்துவருகிறது. ஆகையினால், இங்கிலாந்து தனது வார்த்தையிலிருந்தும் எழுத்திலிருந்தும் நழுவாமல், உத்தேசத்தை யதார்த்தமாக நிறைவேற்றும் என்று உறுதி சொல்லி வந்தேன். நிறைவேற்றாது என்று தெரிந்தும், அப்படிப் பொய்யையே சொல்லி வந்தேன். இந்த எனது ஆறுதலுடன் அவர்கள் அற்புதமான பராக்கிரமங்களைச் செய்து வந்தார்கள். ஆயினும் என் மனத்தில் நான் பெருமை கொள்ள முடியவில்லை. எப்போதும் மிகவும் கசப்பான அவமானமே என் மனத்தில் சூழ்ந்து சுரந்துகொண்டிருந்தது. கடைசி நாட்களில் நான் அமீர் பாசலிடம் இவ்வாறு சொல்லிவந்தேன்: "அராபியர்களுடைய சுதந்திரத்தைக் குறித்து பிரிட்டிஷ் சர்க்கார் உமக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டார்கள். அதை அவர்கள் நிறைவேற்றிவிடுவார்கள் என்ற கோழைத்தனமான நம்பிக்கை உமக்கு எதற்கு? பிரிட்டிஷார் என்ன உம்மைக் காப்பாற்றுவது? போரை ஜோராக, பயங்கரமாக நடத்தும். துருக்கியரை நீர் உதைத்து நாசம் செய்தால், துருக்கியர் பயப்படுகிற மாதிரி பிரிட்டிஷாரும் பயந்து, நீர் விரும்பியபடி நடந்துகொண்டு விடுவார்கள். நீர் அவர்கள் கொடுத்த வாக்கையே பிரமாதப்படுத்திக்கொண்டு இருக்க வேண்டாம்!" இப்படியெல்லாம் நான் போதிக்க வேண்டியிருந்தது.'

லாயிட் ஜார்ஜிலிருந்து லாரென்ஸ் வரையிலும், எல்லோருடைய கூற்றையும் கவனித்தால், பாலஸ்தீன் பிரச்னையின் அடிப்படையிலிருந்த ஊழல் உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கிவிடும்.

பாலஸ்தீன சம்பந்தமாக அராபியர் விஷயத்தில் பிரிட்டிஷார் நடந்துகொண்டதைப்பற்றி ஒரு பிரிட்டிஷ் ஆசிரியர், 'அராபியரின் பிறப்புரிமையாகிய சுதந்திரம் தொலைந்தால் நமது பிறப்புரிமையும் அத்துடன் தொலைந்துவிடும். நமது கண்ணியமெல்லாம் தொலைந்துவிட்டது; நமது முன்னோர் தேடிவைத்திருந்த நற்பெயரெல்லாம் தொலைந்தது. "பிரிட்டிஷ்" என்ற பெயரைச் சொன்னாலே ஒருவரும் நம்ப மாட்டார்கள்' என்று பரம விசனத்துடன் எழுதியிருக்கிறார்.

ஆங்கில ராஜதந்திரிகள் சுதந்திரம் என்ற மந்திரத்தைச் சொல்லிச் செப்படிவித்தை செய்துவிட்டார்கள். அவர்கள் வார்த்தைகளெல்லாம் ரப்பர் போல் ஆகிவிட்டன. வாக்குறுதிகளை வெடி வைத்துத் துளைத்துவிட்டார்கள். அவர்களுடைய பாரபட்சமற்ற நடுநிலைமை மறைந்துகொள்வதற்கு ஒரு புகைத் திரை போல்தான் பயன்பட்டது. பார்லிமெண்டிலும், மற்றப் பொது ஸ்தாபனங்களிலும் இந்தப் பாலஸ்தீன விஷயமாக மகத்தான தர்மாதர்ம ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. இவையெல்லாம் நாடக நடிகர்கள், காயப்படாமல், வலியில்லாமல், ஒருவரை யொருவர் தாக்கிக்கொள்வது போலிருந்தன. ஏமாந்துபோன அராபியர்கள் சர்வதேச சங்கத்திற்கு அப்பீல் செய்துகொள்ளலாம். ஆனால், அங்கேயிருந்தவர்களும் இவர்களைப் போன்றவர்கள் தானே!

'இவ்வுலகம் பிறந்த நாள் முதல் இதுவரைக்கும் இதைப் போன்ற அண்டப் புளுகு கிடையவே கிடையாது. அடே, களைப்பு சளைப்புத்தான் ஏற்படாதா? இவ்வளவு புளுகு மூட்டை கனக்கத்தான் செய்யாதா? ஒரு முகூர்த்தம்தான்

அதை இறக்கி வைக்கலாகாதா? உண்மைப் பாதையில் போவதற்கே வழியில்லாமல், தண்டவாளங்களை யெல்லாம் கழற்றி யெறிந்துவிட்டிருக்கிறார்களே!' என்று புலம்புகிறார் ஓர் அறிஞர்.

# பாலஸ்தீனப் படுகொலைகள்

1914-க்கு முன்னுல் பல அராபியர்கள் அநேகம் ரகசியச் சங்கங்களை ஸ்தாபித்திருந்தார்கள். அரைகுறை யான ரகசியச் சங்கங்களும் உண்டு. சபதங்கள் செய்து கொண்ட வீரக் கட்சிகளும் உண்டு. இக்கட்சிகளின் அங் கத்தினர்களெல்லாம், 'நமது யஜமானர்களான துருக்கியர்க ளுடைய ராணுவ ஞானத்தையெல்லாம் சம்பாதித்துக் கொள் வோம்; பின்பு அந்த ஞானத்தை நம் அராபியரின் சார்பாக, துருக்கியருக்கு விரோதமாக, கலக முகூர்த்தம் வந்ததும் உபயோகிப்போம்' என்ற சபதத்தைச் செய்துகொண்டார் கள். துருக்கி சாம்ராஜ்யத்தை அழிப்பதாகவே சபதம் செய்துகொண்டார்கள். பெரிய கலகத்தை உண்டாக்கித் துருக்கியின் சாம்ராஜ்யத்தைத் தவிடுபொடியாக்கத் தலைப் பட்டு விட்டார்கள்.

இந்த நிலைமை பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்குத் தெரி யாமலில்லை. துரோக கோஷ்டிகளை பிரிட்டிஷ் பிரதிநிதிகள் 'ஆதரிக்காமல் ஆதரித்தனர்'. இது வெகு நாசூக்கான வேலை. சாம்ராஜ்ய வாசனையே இன்னதென்று தெரியாத நமக்கு, வெளுத்ததெல்லாம் பால், கறுத்ததெல்லாம் நீர் என்று நினைக்கும் நமக்கு, — இந்த மர்மங்களும் தந்திரங்களும்

என்ன தெரியப்போகிறது? நூல் ஏணியில் ஏறும் வேலை இது; தாமரைத் தண்டை முறித்து, அதிலிருந்து வரும் நூலைக் கொண்டு ஏணி செய்து ஏறுவதற்கு ஒப்பான வேலை இது. சபதக் கோஷ்டியின் பிரதிநிதி ஒருவர் 1914-ல், யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னமேயே, லார்ட் கிச்னர் எகிப்தின் அதிபதியா யிருந்தபோது, அவரையே சந்தித்துப் பேசியிருக்கிறார். இதைக் குறித்து லார்ட் கிச்னர் பின்னிட்டுப் பிரஸ்தாபிக்கையில், 'அவனை வாயைத் திறக்கவிடாமலே செய்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டார். யுத்தம் ஆரம்பமான பின்பு கிச்னர் பிரிட்டனுக்குச் சென்று ஆள் திரட்ட :ஆரம்பித்துவிட்டார். எகிப்துக்கு ஸர் ஹென்றி மாக்மஹான் வந்துவிட்டார். அவர் மூலமாக மேலே சொல்லிய கலகத் தலைவர், 'லார்ட் கிச்னர் பட்சமாக ஆள் சேர்ந்துவிட்டது. எனது சம்பாஷணை அவருக்கு நன்றாக ஞாபகமிருக்கும். எதிர்பார்த்த நாள் வந்துவிட்டது!' என்று தகவல் கொடுத்தார்.

கிச்னர், தமது தபால்களில், 'அராபியர் ஒரு கோஷ்டிதான், ஒரே தேசத்தினர்தான்; அவர்களுக்கென்று ஒரு ராஜ்யம் சுயராஜ்யமாக ஏற்படவேண்டியது நியாயந்தான்' என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார். இது அராபியர்களுடைய நட்பை ஆவலுடன் விரும்பிய காலத்தில் ஏற்பட்ட வாக்கு. ஆனால், பின்னால், அராபியருடைய உபகாரத்தையெல்லாம் அடைந்த பிறகு, அவர்கள் சுதந்திர சுயராஜ்யத்தை விரும்பிய காலத்தில், 'அராபியராகிய நீங்கள் ஒரு நாட்டினர் அல்லர்; உங்களுக்குள் எவ்வளவு வித்தியாசங்கள் இருக்கின்றன! இதோ, இபன் ஸாத் மெக்கா ஷெரீபுக்கு விரோதியா யிருக்கிறார். இன்னும் எத்தனையோ அமீர்கள் விரோதம்!' என்றெல்லாம் அளந்து, சுயராஜ்யத்தை அனுமதிக்கா திருப்பதற்குச் சாக்குகளைத் தொடுத்தார்கள். இந்த

வித்தியாசங்கள் ஆட்களைப் பொறுத்த வித்தியாசங்கள், ஜனங்கள் ஒரே ஜாதிதான் என்று என்ன சொல்லியும் கேட்பார் கிடையாது.

இதனால்தான், போரில் வெகு உண்மையாகவும் வீரமாகவும் அமீர் பாஸல் நடந்துகொண்ட போதிலும், அவருடைய மனத்தில் சந்தேகப் புகை அடிக்கடி சூழ்ந்துகொள்ளும். அவர், சதி-வில்லன் லாரென்ஸிடம், சில சமயங்களில், பிரிட்டிஷார் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லியே ஸூடானை எடுத்துக்கொண்டதைச் சுட்டிக் காட்டி, 'ஆமாம் பாலைவனப் பூமிகளைக் கண்டாலே உங்களுக்குப் பசியெடுத்து விடுகிறது. அதே போல, எங்களுடைய அரேபியா — பாலைவனமும் என்றாவதொரு நாள் சிறந்த நாடென்று தோன்றிப் பசியை உண்டாக்கிவிடுமோ!' என்று பயந்து கூறியுள்ளார்.

1916-நவம்பரில் துருக்கிக்கு விரோதமாக அராபியரின் கலகம் ஆரம்பமாகிவிட்டது. ஆகையினால் துருக்கியைத் தங்களுக்குள் பிரித்துக்கொள்வதற்குத் தெளிவான ஒப்பந்தத்தை அந்த 1916-லேயே பிரிட்டனும் பிரான்ஸூம் செய்து முடித்துக்கொண்டன. இதற்குத்தான் ஸைக்ஸ்-பிக்கோ ஒப்பந்தம் (Sykes - Picot Agreement) என்று பெயர். இதைக் குறிப்பிட்டு அராபியர்கள் வினவியபோது, 'அது கிடையவே கிடையாது. துருக்கியரும் ரஷ்யாவின் போல்ஷிவிக்கர்களும் சேர்ந்து கட்டிவிட்ட கதை!' என்று ஓங்கியடித்தார் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ்.

அரபு சுயராஜ்யத்திற்கு ஸைக்ஸ் - பிக்கோ ஒப்பந்தம் என்ற ஒரு முட்டுக்கட்டையைப் போட்டாகிவிட்டது. மந்திரிகளுக்கு அது போதவில்லை. அத்துடன் மீண்டும் வேறு ஒரு முட்டுக்கட்டையைத் தயாரித்தார்கள். அதுதான் 2-11-1917 ல் வெளியிடப்பட்ட, யூதரைப் பற்றிய பால்போர் வாக்குறுதி. உலகத்தின் மூலை முடுக்குகளிலிருந்

தெல்லாம் யூதர்களை வருஷம் முப்பதினுயிரம் ஐம்பதினுயி ரம் என்ற பெருங் கணக்கில் அந்தச் சிறிய பாலஸ்தீனப் பிரதேசத்தில் கொண்டு போய்த் திணிக்கவேண்டும். நாளடை வில் அவர்களும் ஒரு பெருங் கூட்டமாகி விடுவார்கள். அப் படி ஆன பிற்பாடு, அராபியர் ஒரு ஜாதி, யூதர் வேறு ஒரு ஜாதியாக யிருக்கும்போது — சுயராஜ்யம் எப்படிக் கொடுக்க முடியும்?

'தங்கள் நாடு என்று ஒன்றில்லாமல் இந்த யூதர்கள் உலகெங்கும் அலைகிறுர்கள். அவர்களுக்குத் தாய்வீடு என்று ஒன்று வேண்டாமா? பாலஸ்தீனம் அவர்கள் ஆதியில் வாழ்ந்துவந்த இடம்' என்று, பழைய கதை, புதிய கதை எல்லாம் சொல்லி, சமாதானமாக யூதர்கள் அங்கே புகுந்து கொள்வதற்கு வசதி கொடுக்கப்பட்டது. எப்படியும் வெகு காலம் வரை அராபியர்கள் தான் மெஜாரிட்டியில் இருந்து வரு வார்கள். இந்த யூதர்களுக்கும் சண்டை செய்யாமல் இருக் கத் தெரியாது. அவர்களுடைய ஜாதகமே அப்படி. மெஜா ரிட்டியாகவுள்ள அராபியர்கள் விரோதிகளாக இருந்துவரும் போது யூதர்கள் பிரிட்டிஷாரை நம்பித்தான் உயிர் வாழ வேண்டும். ஒரு நாட்டில் இரண்டு கோஷ்டிகள் சம பலம் இல் லாமல் சண்டையிட்டுக்கொண்டே யிருக்குமானுல், பிரிட்டி ஷாருக்கு அலுவலில்லாமல் போகாது. நியாயமான அலுவல், சமரசப்படுத்துவதுதான். இந்த 'சாம்ராஜ்ய அலுவ'லை நடத்திக்கொண்டு காலத்தைக் கடத்தலாம் என்பது பிரிட்ட னின் கருத்து.

கிழக்கு மத்தியதரைக் கடலில் தங்குதடை யில்லாத ஆதிக்கியம் வேண்டுமானுல், கண்டிப்பாக பாலஸ்தீனப் பிர தேசம் பிரிட்டிஷ் செல்வாக்கில் இருந்து வரவேண்டும். கடற் படைக்கு ஸூயஸ் கால்வாயைப் போல், விமானப் படைக்கு பாலஸ்தீனம் உபயோகப்படும். ஆகையினுல் சாம்ராஜ்யத்தின்

பாதுகாப்பு; அராபியரை சுயராஜ்யத்திற்கு லாயக்காக்கும் தர்ம காரியம்; யூதர்களுக்குத் தேசீய வீட்டைத் தயாரித்துக் கொடுக்கும் தர்ம காரியம்; இவ்விரு ஜாதியினரையும் ஒற்றுமைப் படுத்தும் கைங்கரியம் — இத்தனை வேலைகளைப் பாலஸ்தீனத்தில் பிரிட்டன் தனது தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டது. சர்வதேச சங்கத்திலும் இந்த 'மேண்டேட்'டை பிரிட்டன் தலையில்தான் வைத்தார்கள்.

1918-நவம்பரிலேயே யுத்தம் முடிந்துவிட்டது; 1919-20 ஆகிய இரண்டு வருஷங்களிலும் பாலஸ்தீனப் பிரச்னை யாதொரு முடிவும் அடையவில்லை. யூதர்கள் வந்து குடியேறட்டும் என்று பிரிட்டன் காத்துக்கொண்டிருந்தது. அதே காரணத்தினால், அராபியர்கள் உடனே முடிக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். முஸ்லிம் அராபியர்களும் கிறிஸ்தவ அராபியர்களும், ஒற்றுமையாக, ஏகமனதாக, 1921-ல் ஹைபா நகரத்தில் பாலஸ்தீன அரபு காங்கிரஸைக் கூட்டி, தேசீய சர்க்கார் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அவர்கள் யாதொரு மத வித்தியாசத்தையும் காட்டவே யில்லை.

யூதர்கள் பணத்தைக் கொண்டுவந்து தள்ளினார்கள். பண மோகத்தில் சில காலம் குழப்ப மில்லாமல் சென்றது. குழப்பமில்லா திருந்ததால் யூதர்கள் பெருங் கூட்டமாக வந்து குடியேறவும் வசதியா யிருந்தது. யூதர் கூட்டம் பெருகுவதைக் கண்டு, திரும்பவும் குழப்பமும் கிளர்ச்சியும் ஏற்பட்டது.

படித்த வகுப்பாருக்குள் அமைதி ஏற்படுத்த ஒரு சங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டனர். யூதர்கள், அராபியர்கள் இரு ஜாதியினரும் இந்தச் சங்கத்தில் இருந்தார்கள். 'பாலஸ்தீனம் யூதர் ராஜ்யமாகவும் இருக்கக் கூடாது. அராபிய ராஜ்யமாகவும் இருக்கக் கூடாது; யூதர் - அராபியர் இருவரும் சேர்ந்த ராஜ்யமாக இருந்து வரவேண்டும். யூதர்களுக்

காகட்டும் அராபியர்களுக்காகட்டும் சமமான ஸிவில், மத, அரசியல் உரிமைகள் இருந்து வரவேண்டும். சிறுபான்மை பெரும்பான்மை வித்தியாசம் பாராட்டக் கூடாது. தனிப் பட்ட சமூக விஷயங்களில் ஒவ்வொரு சமூகத்தினரும் சுதந் திரமாக நடந்துகொள்ளலாம்; பொதுவான விஷயங்களில் ஒற்றுமையாக நடந்துகொள்ளவேண்டும்.' இவையெல்லாம் அந்தச் சங்கத்தின் கொள்கையும் நோக்கமுமாக இருந்தன. தொழிலாளர்களுக்குள்ளும், யூதத் தொழிலாளிகள் அரபுத் தொழிலாளிகள் இரு வகையினருக்கும் பொதுவான சங்கங் கள் ஸ்தாபிக்கப்பட்டன.

ஆனல் அரபுப் பத்திரிகைகள் இந்தச் சங்கத்தை ஆதரிக்கவில்லை. 'அராபியர்களைத் தப்பிதமான வழியில் இழுத்துச் செல்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு யூதர் இலாக்காதான் இந்தச் சங்கம்' என்று இந்தச் சங்கத்தை அவை வர்ணித்தன. 'ஐக்கிய அரேபியாவை உடனே ஸ்தாபிக்கவேண்டும். "மேண்டேட்"டை முடித்துவிடுங்கள்' என்று 1929-ல் சர்வ தேச சங்கத்தில் வற்புறுத்தப்பட்டது.

1933-ல் ஜனத்தொகையில் யூதர் ஐந்தில் ஒரு பாகத் தினராகத்தான் இருந்தார்கள். இந்த நிலைமையில் தேசீய சர்க்காரை நியமிப்பது அபாயகரம் என்று தீர்மானிக்கப் பட்டது. யூதரிலாகட்டும் அராபியரிலாகட்டும், சமரசவாதி களுக்குச் செவி சாய்ப்போர் கிடையாது. சர்வ தேச சங்கத் திலோ, கோர்ட்டுகளில் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறு கிற மாதிரி, எல்லைவரை யில்லாத ரிப்போர்ட்டுகளும் வியாக் கியானங்களும் நடைபெற்று வந்தன. அதிருப்தியும் மனஸ் தாபமும் அணையாமல் ஜ்வாலை வீசிக்கொண்டே யிருந்தன.

எரியும் உடம்பில் எண்ணெயைக் காய்ச்சி ஊற்றினுற் போல, இத்தாலி வேலை செய்யப் புறப்பட்டுவிட்டது. அராபியரின் மனத்திலே யூதருக்கு விரோதமாகவும், பிரிட்ட

னுக்கு விரோதமாகவும், அது சதி செய்து, உணர்ச்சிகளைக் கிளப்பிய வண்ணமா யிருந்தது. கிழக்கு மத்தியதரைக் கடலில் எந்த வல்லரசுக்கு ஆதிக்கியம் என்பதை முடிவு செய்யும் யுத்தரங்கம் பாலஸ்தீனந்தான் என்பதைச் சகல வல்லரசுகளும் கண்டுகொண்டன.

இங்கே ஓர் அற்புத நகரம் நிர்மாணிக்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிடவேண்டியது அவசியம். டெல்-அவீவ் என்பது 6,000 பேர்கள் வசித்துவந்த ஒரு கிராமமாக இருந்துவந்தது. சொற்ப காலத்திற்குள்ளாக யூதர்கள் புகுந்து வேலை செய்து, அதை 150,000 பேர் கொண்ட பெருத்த நகரமாகச் செய்துவிட்டார்கள். இந்த நகர சிருஷ்டியைக் கண்டதுமே, அராபியர்களுக்குத் திருஷ்டி தெளிந்துவிட்டது. இன்னும், சொற்ப காலம் சென்றால், அராபியர்களுக்கு நிவர்த்திக்க முடியாத ஆபத்து நிலைத்துவிடும் என்பதைக் கண்டுகொண்டனர். ஆகையினால் கிறிஸ்தவ அராபியர், முஸ்லிம் அராபியர், அனைவரும் சேர்ந்து, ஒற்றுமையாக அரபுத் தலைமைக் கமிட்டி ஒன்றை 1935-ல் ஸ்தாபித்துக்கொண்டார்கள்.

1936-ல் டெல்-அவீவ் நகரத்தில் யூதர்கள் அகில உலகக் கண்காட்சியை நடத்தத் தீர்மானித்து, அதற்கு வேண்டிய தயாரிப்புக்களைச் செய்துகொண்டிருந்தார்கள். உலகத்தின் சகல திக்குகளிலிருந்தும் பிரமுகர்கள் வந்தனர். யூதரின் பிரபாவங்களைக் கண்டு களிப்பதும், உபசரிப்புக்களை அனுபவிப்பதும், அவர்களுடைய விசேஷக் கோலாகலமா யிருந்தன. பத்திரிகாசிரியர்களும் அந்த வைபவங்களை உலகத்திற்கு வர்ணிக்கவும் புறப்பட்டுவிட்டால், உலகம் தங்களுடைய கட்சியைக் குப்பையில்தான் தள்ளிவிடும் என்பதைத் தீர்க்க தரிசனத்துடன் அராபியர்கள் கண்டுகொண்டார்கள்.

ஆகையினால், அராபியர்கள் தங்களுக்குத் தெரிந்த வேலையைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள். ஜாபா நகரத்தில்

சாதாரணமான அலுவல்களைக் கவனித்துக்கொண்டு, ரஸ்தாவில் சென்றுகொண்டிருந்த யூதர்களைத் திடீரெனத் தாக்கினார்கள் ; அனைவருக்கும் காயம் ; சிலர் கொலையே செய்யப்பட்டார்கள். வேலை நிறுத்தம் நடைபெற்றது. அரபுத் தலைமைக் கமிட்டி வேலை நிறுத்தத்தை ஆதரித்தது ; அத்துடன், 'தேசிய அரபு சர்க்காரை ஸ்தாபிக்கவேண்டும்' என்றும் கேட்டது. பின்னிட்டுக் கலகங்கள் ஏற்பட்டன. ரஸ்தாக்களிலெல்லாம் பகிரங்கமாகக் கொள்ளையடித்தார்கள். தெருக்களிலே, ரயில்வேக்களிலே, வெடி குண்டுகளை வீசினார்கள். யூதர்கள், முற்றுகை செய்யப்பட்டவர்கள் போல, வெளியிலே தலையே காட்டவில்லை. யூதர்மீதும், சர்க்காரின் முக்கியமான உத்தியோகஸ்தர்கள்மீதும், சர்க்காரின் துருப்புகள்மீதும், பலாத்காரத்தை ஆட்சேபித்த அராபியர்கள் மீதும் அவர்கள் தங்களுடைய பயங்கரச் செயல்களைப் பிரயோகித்தார்கள். அராபியர்கள், 'ஹை கமிஷனருடைய சர்க்கார் அங்கிருந்தால், அரபுத் தலைமைக் கமிட்டி சர்க்கார் எங்களுக்கு இருக்கிறது !' என்று வர்மம் கூறினார்கள்.

மகா யுத்தத்தின்போது சகல வகைச் சண்டைகளையும் கர்னல் லாரென்ஸிடமிருந்து அராபியர்கள் கற்றுகொண்டுவிட்டார்கள். கற்ற வித்தையைப் பிரிட்டிஷாரிடமே பிரயோகிக்கப் புறப்பட்டுவிட்டார்கள்.

பிரிட்டிஷ் போலீஸும் ராணுவமும் கலகக்கார அராபியர்களை வேட்டையாடி முறித்தெறியாமல், சாமான்யமாக விட்டுவிட்டார்கள். கொஞ்சங்கூட உறுதி காட்டவில்லை. வெகு மிதமாக நடந்துகொண்டார்கள். 'கலகம் நடக்கட்டுமே!' என்ற யோசனையுடன் நடந்துகொண்டாற் போலத் தோன்றியது. 'அனுமதித்த கலகமோ !' என்று சொல்லும்படியாகக் கூட இருந்தது. போலீஸின் வேலையும் ராணுவத்தின் வேலையும் துவண்டு விழுந்தாற்போல் உறுதியற்று நடந்தது.

ஐந்து மாதங்கள் இம்மாதிரியே கொலைகளும், கலகங்களும் நடைபெற்றுவந்தன.

கொள்ளைக்கார அராபியர்கள் ரஸ்தாக்களில் சென்ற வண்டிகளை நிறுத்தினார்கள். மோட்டார்களில் சென்றவர்களை யெல்லாம் கொள்ளையடித்தார்கள். சில விசாரணைகளில் உண்மை புலனாகாமற் போகவில்லை.

பத்திரிகைகள் கலகத்திற்குத் தூண்டக்கூடாதென்று சர்க்கார் எச்சரிக்கை செய்தனர். ஆயினும் குறும்புகளைத் தயாரிப்பவர்கள் ஜாபாவில் சும்மா இருந்துவிடவில்லை. 19-4-1936ல் யூதர்கள் அராபியர்களைத் தாக்குகிறார்கள் என்ற பொய்ப் புகாரைக் கிளப்பிவிட்டார்கள். சாதாரண அராபியர்களுக்கு ஆவேசம் வந்துவிட்டது. யூதர் யார் போனாலும் அராபியர் தாக்கினார்கள். யூதர்களின் பஸ்களின்மீது கல்மழை பெய்தார்கள். இரண்டு யூதர்கள் மாண்டனர். அந்த ஆவேசக் கூட்டத்தின்மீது போலீஸ் படை சுட்டது. இரண்டு அராபியர் மாண்டனர். அமைதி நிலவுவதற்குமுன், பத்து யூதர்கள் செத்தனர், ஐம்பது யூதர்கள் காயமுற்றனர். ஒரு எஞ்சினீயர், அவர் மனைவி, குழந்தை மூவரும் மாண்டனர். யூதர்களுடைய பிணங்கள்கூட அடையாளமே கண்டு கொள்ள முடியாதபடி வெட்டித் தள்ளப்பட்டனவாம்.

வேலை நிறுத்தங்கள் நடைபெற்றன. கொள்ளைக்காரர்கள் உல்லாசமாகக் கொள்ளையடித்தார்கள்.

1-5-1936ல் யூதர்களுடைய பெரிய மரக்கடை ஒன்றுக்குத் தீ வைத்துவிட்டார்கள். யூதர்களுடைய மகசூல்களை யெல்லாம், ஆலிவ் மரத் தோப்புக்களை யெல்லாம் அழித்தார்கள். ஆரஞ்சுத் தோப்புக்களை நிர்மூலமாக்கினார்கள்.

பிரிட்டிஷ் 'மேண்டேட்' சர்க்கார் அரபுக் கிராமங்களின் மீது தண்டவரிகளை விதித்தார்கள்; ஆனால் வசூல் செய்ய

வில்லை. அரபுத் தலைமைக் கமிட்டி, 'வரிகளைச் செலுத்தாதே யுங்கள்' என்று உத்தரவு செய்தது; 'வேலையை விடுங்கள்!' என்று சகல அரபு உத்தியோகஸ்தர்களுக்கும் உத்தர விட்டது.

ஜெருஸலேமின் மஹா மப்தி (இஸ்லாம் மதத் தலைவர்) 'நாமே சுதந்திரமான முஸ்லிம் ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொள்கிறோம்' என்றார். அதே மஹா மப்தி, 'யூதர்கள் அராபியர்களுக்குக் கல்தா கொடுத்துவிட்டு, ஓமார் கலீபா வின் மசூதி யிருக்குமிடத்தில் ஒரு புதிய யூதர் கோயிலைக் கட்டுவதற்கு உத்தேசம் கொண்டிருக்கிறார்கள்' என்றும் எச்சரிக்கை செய்தார்.

ஊக்கத்துடன் இயக்கத்தில் சேராதவர்களைப் பயமுறுத் தப் புறப்பட்டார்கள் அராபியர்கள். ஹைபா துறைமுகத்தில், வேலை நிறுத்தம் செய்யவேண்டும் என்றார்கள். அது நிறை வேறவில்லை. கலகக்காரருக்குக் கோபம் மூண்டுவிட்டது. இரவில் மேயருடைய வீட்டிற்கு நெருப்பு வைத்தார்கள். பின்பு மஹா மப்தி நேரில் ஹைபாவுக்கு வந்து, வேலை நிறுத்தம் செய்யும்படி ஆக்ஞாபித்தார். வேலை நிறுத்தம் சொற்பமாக நடந்தது. சில கொத்தர்கள் வேலை செய்து கொண்டே யிருந்தார்கள். அவர்கள்மீது துப்பாக்கிப் பிர யோகம் செய்யப்பட்டது; ஒரு கொத்தன் செத்தான். பிரதேசம் முழுவதிலுமே, யூதர்களை எங்கே கண்டாலும் தாக்கினார்கள். ஒரு யூதருக்குச் சொந்தமான 800 ஏக்கர் பூமியிலுள்ள பண்டங்கள் மகசூல்கள் அனைத்தையும் கொளுத்தினார்கள். தினசரி ராஜதானியிலேயே யூதர்களைக் கொலை செய்தார்கள்.

இந்தக் கலவரங்களை யெல்லாம் சாங்கோபாங்கமாக விசா ரிப்பதற்காக ஒரு ராஜாங்கக் கமிஷனை லண்டனில் நியமித் தார்கள் பிரிட்டிஷார்.

இந்தச் செய்தி பாலஸ்தீனத்திற்கு வந்தது. 'சர்க்காருக்கு நம்மைக் கண்டால் பயம், பார்த்தீர்களா?' என்று அராபியத் தலைவர்கள் தங்களுடைய சீடர்களுக்கு வியாக்கியானம் செய்து, ஊக்கத்தைத் தீட்டிக் கொடுத்தார்கள்.

யோக்கியன் அயோக்கியன் என்பதை யோசியாமல், வீரர்களா யுள்ளவர்களெல்லாம் வரவேற்கப்பட்டார்கள். மலைகளிலிருந்தும் பேர்வழிகள் வந்து சேர்ந்தார்கள். ஓட்டமும் பிடியுமாக வேலை செய்தார்கள். சர்க்கார் தூங்கி வழிந்தது; கலகக்காரர்கள் மின்னலைப் போல் வேலை செய்தார்கள். போலீஸ் ஸ்டேஷன்களைத் தாக்கினார்கள்; அராபியப் போலீஸ்காரர்களைச் சுட்டுக் கொன்றார்கள்; ஒரு பிரிட்டிஷ் போலீஸ்காரரையும் சுட்டுக் கொன்றார்கள். சுட்டவன் ஒருபோதும் அகப்படுவது கிடையாது. ரோந்து சுற்றும் காலாட்படையைக் கூடத் தாக்கினார்கள். வெடிகுண்டுப் பிரயோகங்கள் பெருவாரியாக நடைபெற்றன. நூறு யூதக் குழந்தைகள் வசித்துவந்த ஒரு அநாதை ஆலயத்தில்கூட நெருப்பு வைத்தார்கள். நல்ல வேளையாகக் குழந்தைகள் தப்பின.

இந்தக் கலகக்காரர்களெல்லாம் பத்திரமாக ஒளிந்து கொள்வதற்குப் பல சேரிகள் இருந்தன. இந்தச் சேரிகளை சர்க்கார் காலி செய்தனர். இப்படிச் செய்ததன் காரணம் கலகக்காரருக்கு இந்த அடைக்கலமில்லாமல் செய்யவேண்டுமென்பதற்காகத்தான். ஆனால் சர்க்கார் அந்த உண்மையை வெளியே சொல்லவில்லை. அந்தச் சேரிகள் சுகாதாரத்திற்கு விரோதம் என்ற புகலைச் சொல்லிக்கொண்டார்கள். இதைச் சுட்டிக் காட்டி, கலகத் தலைவர்கள், தங்களுடைய சீடர்களிடம், 'திடீரென சர்க்காருக்குச் சுகாதாரத்தில் அக்கரை வந்துவிட்டதாம்! நம்மைப் பற்றி விரோதமாகப் பேசவே சர்க்காருக்கு நடுக்கம், பார்த்தீர்களா!' என்று தைரியமூட்டினார்கள்.

அப்போது அபிஸீனியாவில் இத்தாலி அட்டகாச வேலை செய்துகொண்டிருந்த சமயம்.

அராபியத் தலைவர்களோ, மதப் பேச்சைப் பிரயோகித்து, எத்தனையோ கொலைகாரர்களைச் சொற்பக் கூலிக்குத் திரட்டிவிட முடியும். தினம் இரண்டாயிரம் பவுன்களைச் செலவு செய்துவந்தார்கள். ரயில்களைத் தாக்கினார்கள். தண்டவாளங்களைக் கழற்றினார்கள். கலகக்காரர்மீது ஆயுதங்களைப் பிரயோகித்தால், அரபுத் தலைமைக் கமிட்டி, 'இதென்ன அநியாயம்! நிராயுதபாணிகளான ஜனங்களின்மீது ஆயுதங்களைப் பிரயோகிப்பது!' என்று கண்டனம் செய்தது.

137-பெரிய அராபிய உத்தியோகஸ்தர்கள் சேர்ந்து ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்கள். சர்க்கார் செய்தது தவறென்றும் அரபுத் தலைமைக் கமிட்டி செய்வதுதான் சரியென்றும் அதில் தெரிவித்திருந்தார்கள்; அடுத்தாற்போல் அதுபோன்ற மெமோரியலை அராபிய குமாஸ்தாக்களெல்லாம் சமர்ப்பித்தார்கள்.

சர்க்கார், 'ஏதோ சில கொள்ளைக்காரக் கோஷ்டிகள் செய்திடும் அட்டூழியம்' என்றார்கள்.

'இல்லை—பிரிட்டிஷார் ராஜ்யத்துடன்தான் நாங்கள் போர் செய்தோம்' என்று கொள்ளைக்காரர்கள் சார்பாகக் கோஷிக்கப்பட்டது.

கலகத் தலைவர்கள், 'சர்க்கார் திணறுகிறார்கள். அமைதிப் பிச்சை யெடுக்கிறார்கள். இன்னும் ஒரு பலாத்கார மூச்சுப் பிடித்தால் போதும்— மண்டியிட்டுவிடுவார்கள்' என்று சீடர்களுக்கு உத்தரவு போட்டார்கள்.

ஒரு மேயரைக் கொன்றார்கள். இன்னுமொரு மேயர் காயத்துடன் தப்பித்தார். இரண்டு நர்ஸுகளைக் கொலை செய்தார்கள். ஓர் அரபு பாஷை புரொபஸரைப் படிக்கும் அறையில் வைத்துச் சுட்டுக் கொன்றார்கள்.

'நாங்கள் கீழ்ப்படிய மாட்டோம்' என்ற கோஷங்களைக் கிளப்பினார்கள்.

27-9-1936ல் அரபுக் கமிட்டியின் தலைவரையே கொலை செய்துவிட்டார்கள். அவர் சமரசப் பேச்சை ஆதரித்ததாகத் தெரிந்ததால் கொலை செய்யப்பட்டாராம்.

பின்பு 29-9-1936ல் அரபு அரசர் இபன் ஸாத்தும், ஈராக் மன்னரும், மற்றுமுள்ள முஸ்லிம் பிரமுகர்களும், 'எங்களுடைய புதல்வர்களான பாலஸ்தீனவாசிகளான உத்தம அராபியர்களுக்கு,' என்றெல்லாம் ஸ்ரீமுகம் விடுத்துச் சாந்தப்படுத்தினார்கள். 'என்ன கேடு நேரிட்டபோதிலும், பழிவாங்குவதற்கு நாங்கள் தயாராக நிற்போம்' என்று அவர்கள் உறுதி கொடுத்தார்கள். இதற்குமேல்தான் அமைதி நிலவியது.

# மர்மங்கள்

சரித்திரக்காரர்கள் இந்த இடத்தில் திணறுகிறார்கள். ஏன் இந்தப் பிரிட்டிஷ் சர்க்கார் கலகத்தை இவ்வளவு முற்றிப் போகும்படி விட்டார்கள்? இந்த மனப்பான்மையின் அந்தரங்கம் என்ன? 'அயர்லாந்தைத்தான் உதாரணமாகச் சொல்லலாம். வேண்டாத கொள்கையிலேயே திடமாக நின்றுகொண்டு, பிடிவாதத்தின் பலனாகக் கடைசியில் அயர்லாந்தையே இழக்கும்படி நேர்ந்ததே — அதைப் போல் இது ஒன்று' என்பது ஒருவருடைய அபிப்பிராயம். அயர்லாந்தில் இங்கிலாந்துக்கு என்ன நஷ்டம்? எப்படியும் அயர்லாந்தைக் குறைந்தது 400 வருஷங்கள் இங்கிலாந்து ஆண்டு வந்தது. அதே மாதிரி பாலஸ்தீனத்தையும் 400 வருஷங்கள் ஆண்டுவந்தால் போதுமே! அயர்லாந்தைச் சுட்டிக்காட்டி இங்கிலாந்தைக் கேலிசெய்வது முற்றிலும் அசம்பாவிதம்.

அயர்லாந்தில் இரண்டு பிரிவுகள் உண்டாகி, ரத்தப் பிரவாகம் ஓடி, என்றைக்கும் ஆறாத மனப் புண்களும் கசப்புக்களும் உண்டாகியிருந்ததனால்தான் அது 400 வருஷங்கள் தக்கியிருந்தது. இன்றைக்கும் அயர்லாந்தின் ஒரு பாகம் இங்கிலாந்தின் கட்சியில் இருந்து வருகிறது.

பா. 5

'பாலஸ்தீனம் ஒரு கசாப்புக்கடை யாகிவிட்டது. புண்ணிய பூமியில் ரத்தம் வெள்ளமாக ஓடிற்று. என்ன கொலைகள்! கண்டுபிடிக்கப்படாத குற்றவாளிகள்! தண்டிக்கப்படாத குற்றங்கள்! தினசரி குற்றமற்ற மக்கள் பலியிடப்பட்டனர். நமது "மேண்டேட்"டை நிர்வகிக்க நம்மால் முடியாதென்றால், அதை யார் நம்புகிறார்கள்! நமக்கு மனமில்லை யென்றுதான் உலகம் சொல்லும்' என்று ஒருவர் புலம்புகிறார்.

'பாலஸ்தீனத்தில் வேலை செய்துவந்த பிரிட்டிஷ் அதிகாரிகளுடைய நடத்தையிலிருந்து, அராபியர்களும் யூதர்களும் ஒரே அபிப்பிராயத்திற்கு வந்திருக்கிறார்கள். இவ்விருவர்களுக்குள் பிளவை உண்டாக்கித் தாங்கள் ஆட்சி புரியவேண்டும் என்பதுதான் பிரிட்டிஷ் சங்கற்பம் என்று பாலஸ்தீனத்தில் இருதரப்பினரும் ஏகோபித்துத் தீர்மானித்திருக்கிறார்கள்,' என்று ஒரு பிரமுகர் அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்.

பாலஸ்தீனத்தில் 1923-1931 வரைக்கும் பிரிட்டிஷ் சர்க்கார் உத்தியோகத்திலிருந்த ஒருவர், தாம் எழுதி வைத்த டயரியை 1938-ல் புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறார். அதற்கு லாயிட் ஜார்ஜ் முகவுரை எழுதியிருக்கிறார். இந்த டயரியில் எழுதியிருப்பதாவது: 'யூதர்களில் பெரும்பாலாரும் அராபியர்களில் பெரும்பாலாரும், இருதரப்பினரும் தாங்கள் ஒற்றுமையாக வாழவேண்டு மென்று பிரிட்டிஷ் சர்க்கார் விரும்பவே யில்லை யென்றே அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். இப்படி அபிப்பிராயம் கொள்வது அவர்களுடைய குற்றமே யில்லை. முற்றிலும் சர்க்காருடைய குற்றம்தான்.'

ஸ்ரீ. லாயிட் ஜார்ஜ், 'அராபியருடைய விரோதம், யூதருடைய விரோதம், இருவருடைய விரோதமும் நமது தலையில் விழப்போகிறது. அது போனால் போகட்டும், உலகம்

முழுவதிலும் நமது கண்ணியமே மங்கிப் போய்விடும். நம்மை எட்டுத் திக்கிலும், மோசக்கார ஆல்பியன், திருட்டு பிரிட்டன் என்று ஏசுவார்கள்' என்று புலம்பினர்.

'இந்தப் பாலஸ்தீனத்தில் உத்தியோகம் வகிக்கும் பிரிட்டிஷார்கள் அயோக்கியர்களா அல்லது லாயக்கற்றவர்களா என்பது தெளிவாகத் தெரியவில்லையே!' என்று ஒருவர் அதட்டாமல் அதட்டுகிறார்.

'யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் இடையில், கொஞ்சம் நாணயமுள்ள தரகர்களாக நமது பிரிட்டிஷ் சர்க்கார் நடந்துகொண்டிருக்கக் கூடாதா?' என்று ஒருவர் விசனிக்கிறார்.

'அமைதியை நிலைநாட்டுவது ஒரு சர்க்காருடைய கடமை யல்லவா? யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் எவ்வித மான தகராறு இருந்தபோதிலும் சரி — நாம் கலகத்தை அடக்கவேண்டியது முதற் கடமை யல்லவா? ஆட்சி செய்வதற்கு பிரிட்டிஷார் லாயக்கே யில்லை யென்றல்லவோ ஏற்படுகிறது!' என்று ஒருவர் தீர்ப்புச் சொல்லுகிறார்.

'மோசம்! துரோகம்!' என்று ஒருவர் அலறுகிறார்.

'பிரிட்டிஷாராகிய நாம், எந்த முனையில் எந்த நன்மையைச் செய்யப் புறப்பட்டாலும், பாலஸ்தீனக் களங்கம் குறுக்கே வந்து விழுகிறது. நமது பாலஸ்தீன நடத்தையைக் குறித்து வாதம் செய்யாத நாடே கிடையாது. "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்" என்ற பட்டத்தை நமக்குத் திட்டமாகக் கட்டிவிட்டார்கள். நாம் முடமாகக் கிடக்கிறோம்' என்று கஷ்டப்பட்ட ஒருவர் சொல்லுகிறார்.

'நமது மந்திரிகளும் தந்திரிகளும் செய்த பாபங்களுக்கு நாம் தண்டிக்கப் படுகிறோம்' என்று வேறொருவர் பரிதபிக்கிறார்.

'நாமாகவே பிரச்னைகளைச் சிடுக்குப்படுத்தி அவிழ்க்க வழி தெரியாமல் திண்டாடுகிறோம்' என்று ஒரு பேதை புலம்புகிறார்.

'அராபியரைக் காட்டிலும் அதிக அராபியராக ஏன் பாலஸ்தீன சர்க்கார் நடந்துகொண்டனர்?' என்று ஒருவன் கேட்டதற்கு, 'உலகம் முழுதும் யூதரை விரட்டி யடிக்கிறது. யூதர் பிரிட்டனை மீறமாட்டார்கள். முஸ்லிம் உலகம் கட்டுப்பாடாக நிற்கிறது. பிரிட்டனுக்குப் பல கோடி பிரஜைகள் இருந்து வருகிறார்கள். சலுகை அவர்களுக்குத் தான் காட்டுவதாகத் தோன்ற வேண்டும். கலகங்களும் நடந்துகொண்டிருந்தால், பாகப் பிரிவினை செய்தால்தான் காரியம் சரிப்படும் என்ற முடிவுக்கு வந்துவிடலாம்' என்று பரிசாரம் சொல்லப்பட்டது.

'மொத்தத்தில் பாலஸ்தீனத்தில் அமைதியை நிலைநாட்டும் விஷயத்தில், பிரிட்டிஷ் சர்க்கார் முயற்சி செய்யத் தவறினார்களா? அல்லது தவறிவிடவே முயற்சி செய்தார்களா? இதன் உண்மை தெரியவில்லை' என்று ஒருவர் திகைத்து நிற்கிறார்.

ஆனால் பிரிட்டிஷ் சர்க்கார் மாத்திரம், 'அராபியர்கள் கலகம் செய்ததை நாங்கள் கண்டிக்கிறோம். ஆயினும் யூதர்களிடத்திலும் குற்றமில்லாமல் இல்லை' என்று சொல்லினர். ஸிந்து மாகாணத்து ஸக்கர் கலகங்களைக் குறித்து நீதிபதி மெஸ்டன் என்ன சொல்லுகிறாரோ, அதே போலத்தான் பாலஸ்தீன முஸ்லிம்கள் விஷயத்திலும் அந்த சர்க்கார் சொல்லிக்கொண்டார்கள்.

அத்தியாயம் - 10

# பிரிவினை மருந்து

இந்த அத்தியாயத்தில் பாலஸ்தீனத்திற்குப் பிரிவினை மருந்து கொடுக்கப்பட்டதையும், இந்தியாவுக்கும் அதே மருந்து கொடுக்கவேண்டும் என்று சிபாரிசு செய்யப்படுவதையும் பற்றிக் கவனிப்போம். நோய்க்குத் தகுந்த மருந்தைக் கொடுப்பது உலக முறை. ஆனால், மருந்துக்குத் தக்க நோயை ஏன் உண்டாக்கிக் கொள்ளக் கூடாது?

ஐந்து மாதங்கள் வரை அனுமதிக்கப்பட்டது போல் தோன்றிய கலகத்தை அராபியர்கள் நடத்திக் காட்டிய பிற்பாடு, ஒரு ராஜாங்கக் கமிஷன் நியமிக்கப்பட்டது.

அராபியர்களின் தலைவர்கள், இன்னும் ஒரு மூச்சுப் பிடித்துக் கலகம் செய்தால் பிரிட்டனுக்குப் பாடம் சரியாக ஏறிவிடும் என்றும், யூதர்களும் தலைவணங்கத் தயாராகி விடுவார்கள் என்றும் தங்களுடைய சீடர்களுக்குத் தூபம் போட்டார்கள்.

மூன்று மாதங்கள் மேலும் மேலும் கலகங்கள் நடந்தன.

'கமிஷன் வரும்போது கலகம் எதற்கு?' என்று சொன்னவர்களையும் கொலை செய்தார்கள்.

பின்னிட்டு, பாலஸ்தீனப் பிரதேசத்தில் சம்பந்தப் படாத வெளிநாட்டு முஸ்லிம் பிரமுகர்கள், 'எங்களுடைய புதல்வர்களே!' என்று இந்த அராபியக் கலகக் குழந்தைகளை அழைத்து, நல்ல வார்த்தை சொல்லி, 'அவசியமானால் உங்களுடைய சகாயத்திற்கு நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம்' என்ற வாக்குறுதியும் கொடுத்த பிற்பாடுதான் கலகம் நின்றது.

பின்பு கமிஷன் வந்து சேர்ந்தது. அராபியர்கள் கமிஷனைப் பகிஷ்கரித்தார்கள். பின்பு, பலத்த சிபார்சுகளின் பேரில், சில சாட்சிகளை மாத்திரம் அனுப்பி வைத்தார்கள்.

கமிஷன் அங்கத்தினர்கள் லண்டனுக்குத் திரும்பினார்கள். இரண்டு மாதங்கள் விசாரணை செய்து பெற்ற வாக்குமூலங்களைப் பற்றி ஆறு மாதம் ஆலோசித்தார்கள். 'பிரிவினை செய்வதுதான் சரி — பிரிவினை செய்தால் ஒற்றுமை ஏற்படும்' என்று சொல்லி முடித்தார்கள்.

அராபியருக்கு ஒரு பாகம், யூதருக்கு ஒரு பாகம், மத்தியில் ஒற்றுமைத் தரகருக்கு (பிரிட்டனுக்கு) ஒரு பாகம் (துறைமுகங்களுடன் கூடிய பாகம்) — என்று பாகம் பிரித்தார்கள்.

வரவர யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் விரோதம் ரொம்பவும் முற்றிப்போய்விட்டது. இனிப் பிரிவினைதான் ஒற்றுமைக்கு மார்க்கம்; மத்தியில் பிரிட்டன் நின்றுகொண்டு வேலை செய்தால்தான் வருங்காலத்திலாவது ஒற்றுமை ஏற்படும்; மேலும், பிரிட்டன் மத்தியஸ்தமாக வேலைசெய்யும் போது ஒற்றுமை ஏற்படாமல் போகாது. இவ்வாறு பிரிவினை மருந்துக்குக் கமிஷனர்களே வியாக்கியானம் செய்து கொடுத்தார்கள்.

வல்லமை படைத்த பிரிட்டன் — அமைதியை நிலை நாட்டுவதில் கைதேர்ந்த பிரிட்டன் — ஏன் கலகங்கள் நிகழும் படி விட்டது? ஏன் வல்லமையைக் காட்டவில்லை? ஏன் சர்க்காரின் முதற் கடமையாகிய அமைதி ஏற்படுத்துவதில் தவறினார்கள்?

இந்தப் பிரச்னைகளைக் குறித்தெல்லாம் ராஜாங்கக் கமிஷன் யாதொரு பிரஸ்தாபத்தையும் செய்யவில்லை. 'மௌனம் கலகம் நாஸ்தி' என்று, இந்த மிகவும் முக்கிய மான விஷயத்தில் மௌனத்தைச் சாதித்துவிட்டார்கள்.

'போனது போகட்டும், வருங்காலத்துக்கு உருப்படி யான ஏற்பாட்டைச் செய்வோம்' என்றார்கள். தனித்தனி யாக இரண்டு ராஜ்யங்களை ஸ்தாபித்துவிட்டால், விலைமதிக்க முடியாத அமைதி என்ற வரப்பிரஸாதம் அணுகிவரும் என்று, துண்டு போடுவதைக் கமிஷனர்கள் ஸ்தோத்திரம் செய்தார்கள்.

சர்வதேச சங்கத்தார், 'இப்போது யூதர்களோ, அராபி யர்களோ, சுயராஜ்யத்திற்கு லாயக்காகிவிட்டார்கள் என்று சொல்வதற்கு எங்களுடைய மனச்சாட்சி இடங் கொடுக்க வில்லை' என்று கூறிவிட்டார்கள். ஆகையினால், பிரிட்டன் அங்கிருந்து உபகாரத்தைச் செய்துகொண்டே யிருக்க வேண்டும் என்று ஏற்பட்டது.

இனி இந்தியா விஷயத்தைக் கவனிப்போம்.

பாகிஸ்தான் - வாதி கேட்கிறார்: 'பிரிட்டிஷ் ஐயா, அராபியர் கலகம் செய்கிற மாதிரி, இந்திய முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு விரோதமாகக் கலகங்களை நடத்திவர வில்லையா? அதிலிருந்து எங்களுக்கும் அவர்களுக்கும் நிவர்த்திக்க முடியாத வித்தியாசங்கள் இருந்து வருகின்றன என்று ஏற்படவில்லையா? ஒற்றுமைக்காகச் செய்யப்படும் முயற்சியெல்லாம் வீணாகி வரவில்லையா? ஹிந்து மெஜா

ரிட்டியை நாங்கள் ஒருபோதும் சகிக்க முடியாது என்று ஏற்படவில்லையா? ஆகையினால் உங்களுடைய பாலஸ்தீன மருந்தையே இங்கே இந்தியாவிலும் பிரயோகம் செய்யுங்கள். இந்தியாவைத் துண்டு போடுங்கள்.'

மேலும், 'அராபியர்களுக்கு நாங்கள் எந்த விஷயத்தில் குறைந்து போனோம்? ஸிந்து மாகாணத்தில் ஸக்கர் ஜில்லாவில் இந்திய முஸ்லிம்களுடைய பராக்கிரமங்கள் உங்களுக்கு எட்டவில்லையா? அதிலிருந்தாவது இந்திய முஸ்லிம்களுடைய மனம் ஹிந்துக்கள் விஷயத்தில் எவ்வளவு கசப்புக் கொண்டிருக்கிறது என்பது தெரியவில்லையா?' என்று கேட்கிறார்.

மேலும், 'இந்தக் குடியரசும் குப்பையும் வேண்டாம். ஹிந்துக்கள் மெஜாரிட்டியா யிருக்கும் பிரதேசங்களில், நாங்கள் குடியரசை ஏற்றுக்கொள்ளவே முடியாது. அதைச் சகிக்கவே மாட்டோம். எங்களைப் பிரித்துவிடுங்கள்!' என்கிறார்.

மேலும், 'சென்ற மகா யுத்தத்தில் அராபியர்களுடைய உதவி உங்களுக்குத் தேவையாக இருந்ததென்றால், இந்த யுத்தத்தில் இன்னமும் அதிகமாகத் தேவை' என்கிறார்.

'பாலஸ்தீன அராபியர்கள் உங்களுடைய ராஜாங்கக் கமிஷனைக் கண்டு மயங்கிவிட்டார்களா? நியமித்த பின்னும், மூன்று மாதம் கலகம் செய்யவில்லையா? கொலை செய்யவில்லையா? கொள்ளையடிக்கவில்லையா? பயிர்களுக்கெல்லாம் தீ வைக்கவில்லையா? சுடவில்லையா? சுட்டுவிட்டு ஓடவில்லையா? கொலை பாதகர்களை உங்களால் கண்டுபிடிக்க முடிந்ததா? நீங்கள் சொன்ன பேச்சை அராபியர்கள் கேட்டார்களா? அரபுத் தலைவர் இபன் ஸாத் அவர்களும், இன்னும் மற்ற பாலஸ்தீனத்திற்கு வெளியேயுள்ள முஸ்லிம் தலைவர்களும் செய்த சிபார்சுகளைத்தானே நாங்கள் ஏற்றுக்கொண்டோம். அதி

லிருந்தாவது, எங்களது அகில-அண்ட-இஸ்லாம் இயக்கம் தங்களுக்குப் புலப்படவில்லையா? கமிஷன் வந்து சேர்ந்ததே — அராபியர்கள் சாட்சி சொல்ல முன்வந்தார்களா? முன் போலவே, பாலஸ்தீனத்தில் சம்பந்தமில்லாத வெளி முஸ்லிம் தலைவர்கள் சிபார்சின் பேரில்தானே, ஏதோ சில சாட்சிகள் வந்தார்கள். இதிலிருந்தும், உங்களுக்கு எங்களுடைய இயக்கத்தின் பலம் புலப்படவில்லையா? இன்றைக்குச் சகல முஸ்லிம் நாடுகளும் ஒரே கட்சியி லிருந்துவருகிறோம். எங்களைப் பிரிக்க முடியாது!' என்கிறார்.

இவ்வாறு பாலஸ்தீனம் சம்பந்தமான விபரங்களிலிருந்து, இந்தியாவில் பிரயோகிக்கப்பட்டுவரும் கொள்கைகளும் பிரிவினையில் கொண்டுபோய்த் தள்ளுவதற்குத்தான் உபயோகப்படும் என்பது தெளிவாகப் புலப்படும். பாலஸ்தீனம் ஒரு குட்டி இந்தியாவாகச் செய்யப்பட்டது. இப்பொழுது இந்தியா ஒரு பெரிய பாலஸ்தீனமாவதற்கே பாகிஸ்தான் பிரச்னை வந்து விழுந்திருக்கிறது போல் தோன்றுகிறதல்லவா?

# வகுப்புவாத விபரீதங்கள்

'இந்தியாவையாவது, துண்டு போடவாவது — நடக்கிற பேச்சா இது? சபைக்கு வரக்கூடிய பேச்சா? இதைப் பொருட்படுத்துவதே பிசகு. இதை எதிர்த்துப் பேசுவது கூட, லாயக்கில்லாத பெருமையை இதற்குக் கொடுப்பதாகும். இதை உதாசீனம் செய்துவிடவேண்டும். உதாசீனம்தான் இதற்குப் பொருத்தமான பதில். பாகிஸ்தான் பேச்சையெடுத்தவர்களுக்கே அதில் நம்பிக்கை யிருக்காதே! விஷயம் அப்படி யிருக்கும்போது, நாம் அதற்குக் கௌரவம் கொடுத்து, எதிர்க்கப் புறப்பட்டோமானால், அந்த இயக்கத்திற்கு நாம் வலிமை கொடுத்தவர்களாவோம். ஆகையினால் அந்தப் பேச்சை நாம் காதில்கூடப் போட்டுக்கொள்ளக் கூடாது. அதை நாம் எதிர்த்துப் பேசவும் தேவையில்லை" என்று அரசியல்வாதிகளில் ஒரு சாரார் அபிப்பிராயப்படுகிறார்கள்.

பாகிஸ்தான் பேச்சு அவர்களுக்கு அவ்வளவு பிரத்தியட்ச அநியாயமாக இருக்கிறது. உடனே உதறித் தள்ள வேண்டிய பிரஸ்தாபத்தை ஒரு பிரச்னையாக வைத்து விளம்பரப்படுத்துவது தகாத காரியம் என்கிறார்கள். உடனே

கல்தா கொடுக்கவேண்டிய ஒரு முறையற்ற கொள்கைக்குத் தர்க்க வாதம் செய்வது, விவேகமற்றது என்று சொல்லுகிறார்கள். செத்தே பிறக்கும் குழந்தையைப் போன்றது இந்தப் பாகிஸ்தான் பிரஸ்தாபம்; இதை உடனே புதைக்கவேண்டும் என்கிறார்கள்.

நமது அபிப்பிராயத்தில், இது அவ்வளவு லேசாக அகற்றிவிடக்கூடிய விஷயமன்று. இந்தியாவினுடைய சரித்திரத்தில் இடையிடையே, பல சனியன்கள் உற்பத்தியாகி வந்திருக்கின்றன. அந்த வரிசையில், இந்தப் பாகிஸ்தான் கடைசியாக வந்துள்ளது.

ஒன்றை ஆதரித்தாலும் நாசம், எதிர்த்தாலும் நாசம், சும்மா விட்டாலும் நாசம் என்று தோன்றும் அபாயங்களுக்குத்தான் பிரத்தியட்ச சனியன் என்று சொல்வது. பாகிஸ்தான் அத்தகையது.

பாகிஸ்தானுக்கு ஒரு தாய்ச் சனியன் உண்டு. அது தான் தனித் தொகுதி. ஒவ்வொரு பிரிவினரும் தமக்குத் தாமே தனியாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள். அந்தப் பிரதிநிதிகள் மற்றவர்களுடன் சேர்ந்து, தங்கள் பிரிவுக்கு மட்டுமல்லாது, தேசம் பூராவுக்குமே சட்டதிட்டங்கள் அமைப்பார்கள். ஜனநாயக நாடுகளில் தனித் தனித் தொகுதிகள் ஏற்படுத்துவதில்லை; ஓட்டர்களில் பேதமே கிடையாது. ஆனால் ராஜீயவாதிகள், கொள்கை பேதங்களால், சில கட்சிகளாக இருப்பார்கள். ஜனங்கள், எல்லா மதத்தினரும், பாஷையினரும், பேதமில்லாமல் கூடித் தங்களுக்குப் பிடித்தமான கட்சி அங்கத்தினருக்கு ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால் நம் தேசத்தில் மதத்தை வைத்துத் தொகுதி பிரிக்கப்பட்டது. முஸ்லிம்களுக்கு ஒரு தனித் தொகுதி என்று பிரிக்கப்பட்டது. அவர்கள் தேச ஜனத் தொகையில் சிறுபான்மை

யினர் என்பதனுல் இப்படிச் செய்யப்பட்டது. அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக இப்படிச் செய்யப்பட்டது. நாளடைவில் என்ன ஏற்பட்டது? தற்காலிகமாகத் தனியாகப் பிரிக்கப்பட்ட தொகுதி, என்றுமே மெஜாரிட்டியுடன் சேராமல் இறுகி வருவதுடன், துவேஷத்தால் தூரத் தூர விலகி ஓடுகிறது. இந்த விபரீதம் ஏற்படுமென்று தேசியத் தலைவர் யாவருக்கும் தெரியும். அவர்கள் ஆட்சேபித்தார்கள். தனித் தொகுதியை ஏற்படுத்திய பிரிட்டிஷாருக்கும் தெரியும். விபரீத பலன் விளைய வேண்டும் என்றே அவர்கள் செய்தது போலாயிற்று. தனித் தொகுதி ஏற்படுத்தியதால், பெரும்பான்மைக் கட்சியினரும் விசனிக்கிருர்கள். காங்கிரஸ் வருந்துகிறது. பிரிட்டிஷாரும் கவலைப்படுகின்றனர். முஸ்லிம்களும் பலனடையவில்லை. பலனைக் காணவில்லை என்றதும், சில முஸ்லிம் தலைவர்கள், 'பலன் இல்லாததற்குக் காரணம், தனியாகப் பிரிந்தது பிழை என்பதில்லை; பிரிந்தும் கொஞ்சம் கொஞ்சம் ஒட்டும் உறவும் இருப்பதுதான் காரணம். அறவே, சம்பந்தமே இல்லாமல் பிரிந்துவிட்டால், ஒரு குறையுமே இல்லாமல் சகல சுகங்களும் ஏற்பட்டுவிடும்' என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். 'தனித் தொகுதி' 'தனி ராஜ்ய'மாகப் பரிணமித்துவிட்டது.

பிரபல முஸ்லிம் தலைவரான ஸர் அலி இமாம் கூறியதைக் கவனிப்போம். அவர் வைசிராய் நிர்வாக சபையில் அங்கத்தினரா யிருந்தவர், இந்திய காங்கிரஸுக்கு ஒரு தலைவரா யிருந்தவர், பிரபல பாரிஸ்டர். அவர் கூறியதாவது: 'தனித் தொகுதி கேட்பது பைத்தியக்காரத்தனம். அதைப் பற்றிச் சந்தேகமே யில்லை. ஆனுல், அதைக் கேட்டுவிட்ட பின்பு, அதை மறுப்பதும் பைத்தியக்காரத்தனம்தான்.' தனித் தொகுதி ஒற்றுமைக்கு அழகன்று; நம்பிக்கைக்கும்

அறிகுறியன்று; ஆனால் அதை மறுத்தாலோ, வேற்றுமையும், பிளவும், அவநம்பிக்கையும் அதிகமாகும் என்பது அவர் கருத்து. தனித் தொகுதியை வேண்டியவர்கள் அவநம்பிக்கையினால்தான் வேண்டினார்கள்; அவர்கள் வேண்டினதைக் கொடுத்துவிட்டால், அவநம்பிக்கை சொல்லாமலே செத்துப்போகும் என்பது அவருடைய அபிப்பிராயம்.

'குடியரசு — ஓட்டின்படி அரசு என்பது தோன்றிய போதே இந்தியாவில் மைனாரிட்டியி லிருக்கும் முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்குத் தாழ்ந்தவர்க ளாகிவிடுகிறார்கள். இது முஸ்லிம்கள் சகிக்க முடியாத விஷயம்' என்பது சில முஸ்லிம்களின் தீவிர உணர்ச்சி. இந்த உணர்ச்சிதான், முஸ்லீம் லீகை ஸ்தாபித்தது, அவநம்பிக்கையை ஏற்படுத்தியது, தனித் தொகுதியை வேண்டியது, அதிக ஸ்தானத்தை வேண்டியது, பாதுகாப்புகளை வேண்டியது, சுயராஜ்யத்தையே குறுக்கிட்டது, 'பாகிஸ்தான் கொடு' என்று மிரட்டிக் கேட்கிறது. நம் மனத்தில் இதுதான் உண்மையென்று படுகிறது.

தேசீய இயக்கங்கள் அனைத்திலும் அகங்காரம் வீசிக் கொண்டே யிருக்கிறது. தனிப்பட்ட நபர்களுடைய சொந்த அகங்காரங்களல்ல — அந்தந்த நாட்டின் அகங்காரம் — உத்வேகமுள்ள தேச கௌரவம் — வேலை செய்கிறது. அத்துடன் சமூகங்களின் ஆத்ம கௌரவமும் முளை விடுகிறது. ஒரு செடிக்கென்று தண்ணீரைப் பாய்ச்சினால், மற்ற முட்செடிகளும் வளர்ந்துவிடுகின்றன. அதுபோலத் தனிச் சமூகங்களின் அகங்காரங்களும் தேசீய ஆக்ரோஷத்தோடு இப்போது இந்தியாவில் கிளம்பியிருக்கின்றன. ஆயினும் முஸ்லிம் லீகின் அகங்காரம் ஓர் அலாதி ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது.

எல்லா இந்திய முஸ்லிம்களும் — இந்தியாவைத் தங்கள் முன்னோர் அநேக நூற்றாண்டுகளாக ஆண்டுவந்தார்கள் என்பதை மறக்க முடியுமா? அப்போது மைனாரிட்டிகளாக

இருந்தும், மெஜாரிட்டியான ஹிந்துக்கள்மீது ஆட்சி நடத்தினதைப் பல முஸ்லிம்களால் மறக்க முடியவில்லை.

'கம்பீர முகலாயன்' என்ற பெயருடன், ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா முழுவதிலும் பிரசித்தி பெற்ற அந்தக் காலத்தை மறக்க முடியுமா? மத்திய காலத்தில் பிரிட்டிஷாரிடம் முஸ்லிமும் அடிமை, ஹிந்துவும் அடிமை, இது உண்மைதான். ஆயினும் ஹிந்து முஸ்லிமின் தலைக்குமேல் ஏறிவிடவில்லையே; ஆகையினால் இந்த அடிமைத்தனத்தைச் சகித்துக்கொள்ளலாம். இந்த அடிமைத்தனம் நீங்கினால், ஹிந்துவின் ஆதிக்கிய மல்லவோ ஏற்பட்டுவிடும்! அதை எந்த முஸ்லிம் சகிக்க முடியும்? இது லீகின் மனப் போக்கு.

சில தீராத நோக்காடுகள் உண்டு. அவைகளுடன் சேர்ந்தது இந்த அகங்கார நோய்.

ஒரு சிறு பையன் அழுதுகொண்டிருந்தான். அதைப் பார்த்த ஒருவர் 'ஏன் அழுகிறாய்?' என்று கேட்டதற்குத் தான் ஒரு சல்லிக்காசு வைத்திருந்ததாகவும், விளையாடும் போது அது மணலில் விழுந்துவிட்டதாயும், எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை யென்றும் சொன்னான். வந்தவர் தொலைந்துபோன சல்லிக்காக அழவேண்டாம் என்று சொல்லிக்கொண்டே, தம்மிடமிருந்த ஒரு சல்லிக்காசைக் குழந்தையிடம் கொடுத்துச் சமாதானப்படுத்த முயன்றார். குழந்தை இன்னமும் பலமாக அழத் தொடங்கிவிட்டான். 'ஏன்?' என்று அவர் மீண்டும் கேட்டதற்கு, 'அந்தக் காணாமற்போன காசும் இருந்தால், இப்போது இரண்டு காசாகக் கையிலிருக்குமே — இப்பொழுது ஒன்றுதானே இருக்கிறது!' என்று அழுதானாம். அந்தப் பையனுக்கு எந்த ஜன்மத்திலாவது ஆறுதல் ஏற்படுமா?

கிலாபத் இயக்கத்தை மகாத்மா காந்தியும் அலி சகோதரர்களும் தலைமை வகித்து நடத்தினார்கள். அந்தக் காலத்

தில் மிஸ்டர் ஜின்ஞ வெகு தூரம் விலகியே நின்ருர். எனி னும் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஸ்தாபித மாகிவிட்ட தென்றே தோன்றியது. இப்பொழுது அதே ஜின்ஞ லீகின் தலைவராய் வந்து, 'முஸ்லிம் லீகே இந்திய முஸ்லிம்கள் அனை வருக்கும் ஏகப் பிரதிநிதி சபை என்பதை ஒப்புக்கொள்ளா தவர்களிடம் பேசவே தயாரில்லை!' என்கிருர்.

'புகழ் வேட்டை' என்ற ஒரு புதிய வியாதி இந்தி யாவில் தோன்றிவிட்டது. இதற்குக் காரணம் — மகாத்மா காந்தி யன்று — அவருடைய ஜகத் கியாதிதான். திடீ ரென்று அவருடைய கீர்த்தி உலகமெங்கும் பரந்து வீசி யடித்தது.

1922-ல் ஒரு ஜில்லா கோர்ட்டில், ஒரு கட்சிக்காரர் சுய புத்தி யுடையவரா அல்லது பைத்தியமா, அவருக்குக் கார்டி யன் நியமிக்க வேண்டுமா என்ற பிரச்னை வந்தது. இரு தரப்பு வக்கீல்களும் அந்த நபரைச் சாட்சிப் பெட்டியில் ஏற்றி, அநேகம் கேள்விகள் கேட்டார்கள். ஆனல் ஐரோப் பிய ஜட்ஜுக்கு அவன் பைத்தியக்காரன அல்லவா என்றே நிச்சயம் செய்ய முடியவில்லை. திடீரென அந்த ஆளை ஒரு கேள்வி கேட்டார், 'உனக்கு மகாத்மா காந்தியைத் தெரி யுமா?' என்று. அவன், 'அது என்ன துரையே! எனக்குத் தெரியாதுங்களே!' என்ருன். ஜட்ஜ், உடனே, 'அவன் பைத் தியம்தான்,' என்று அங்கேயே தீர்ப்புச் சொல்லிவிட்டார். அவ்வளவு புகழ் காந்திக்கு! அநேகர், காந்திஜியினுடைய அபாரமான குணங்களைக் கொண்டாடுவது கிடையாது. இவைகள் அவர்களுக்குப் பிரமாதமென்று படுவதும் கிடை யாது. இந்த ஆசாமிகளுக் கெல்லாம், அவருடைய கியாதி தான் பெரியதாகத் தோன்றியது. ஆகையினல், 'கியாதி தான் பெரிய விஷயம்; நாமும் கியாதியை அடைய வேண் டும்' என்று அந்த வேட்டையில் ஈடுபட்டார்கள்.

இந்த மனோபாவம் பரவி வரவே, கிலாபத் இயக்கத்தினால், மகாத்மா காந்தியின் கியாதிதான் உலகமெங்கும் பரவியது. 'அவர் ஒரு ஹிந்து; முஸ்லிம்களாகிய நாம் செய்த தியாகமெல்லாம் இந்த ஹிந்துவின் கியாதியாக மாறிவிட்டது' என்று முஸ்லிம் தலைவர்களுடைய மனத்தில் பெருத்த வியாகூலம் உதயமாகிவிட்டது. ஒற்றுமையின் பங்கத்திற்கு இது ஒரு காரணம்.

சுயராஜ்யம் இந்தத் தலைமுறையில் இந்தியாவிற்குக் கிடைத்துவிட்டால், உலகமும் வருங்கால சரித்திரமும் மகாத்மா காந்தியால்தான் கிடைத்தது என்று சொல்லும். காந்தி ஒரு ஹிந்து. இதை எப்படி எல்லா முஸ்லிம்களும் சகித்துக்கொள்ள முடியும்? ஆகையினால், முஸ்லிம்கள் மனது வைத்தால்தான் சுயராஜ்யம் சித்திக்கும்; முஸ்லிம்களால் சுயராஜ்யம் வருவதைத் தடைசெய்ய முடியும் என்பதை முஸ்லிம் பிரமுகர்கள் ஸ்தாபித்துவிடவேண்டும். இப்படி ஒரு உணர்ச்சி அலைமோதியது.

கிலாபத் இயக்கத்தினால் முஸ்லிம்களுக்கு என்ன லாபம் ஏற்பட்டது என்பதைக் கணக்கெடுத்தார்கள். ஹிந்து வியாபாரிகள் கூசாமல் கோடிப் பிரபுக்களானபோது, கிலாபத் இயக்கத்தின் தலைவர்களாக வேலை செய்த பம்பாய் முஸ்லிம் தலைவர்கள் பலர் பெருத்த நஷ்டத்திற்கு ஆளானார்கள். கிலாபத் இயக்கக் காலத்தில் சில முஸ்லிம்கள் இந்தியாவை விட்டே வெளியேறி ஹிஜ்ரத் செய்தார்கள். ஆப்கானிஸ்தானத்திற்குப் புறப்பட்டார்கள். ஆனால் அங்கே பல கஷ்டங்கள் ஏற்பட்டுத் திரும்பிவிட்டார்கள்.

முஸ்லிம்கள் நடத்திவந்த அலிகார் சர்வகலாசாலை கிலாபத் இயக்கத்தின் காரணமாகக் காலி செய்யப்பட்டது; காசி ஹிந்து சர்வகலாசாலை காலி செய்யப்படவில்லை. முஸ்லிம்கள்தான் ஏமாந்தவர்கள் என்று எண்ணிக்கொண்டார்கள்.

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையில் வீரர்களான மலையாள மாப்பிள்ளைமார்கள் கலகம் செய்தார்கள். கிலாபத் இயக்கத்தின் ஒரு பகுதியாக மாப்பிள்ளைமார்கள் நடத்திய கலகத்தினால் அவர்கள் பல கஷ்டங்களுக் கெல்லாம் உள்ளானார்கள். பல அவதூறு களுக்கெல்லாம் ஆளானார்கள்.

கடைசியாக, துருக்கியர்களே கிலாபத்தை ரத்துச் செய்துவிட்ட பிற்பாடு, காந்திஜி இந்திய முஸ்லிம் சமூகத் தைத் தப்பான வழியில் கொண்டுபோய்த் தள்ளி, நஷ்டத் திற்கும் கஷ்டத்திற்கும் அவமானத்திற்கும் ஆளாக்கி, கியாதியை யெல்லாம் ஹிந்து சமூகத்திற்கும், அபக்கியா தியை யெல்லாம் முஸ்லிம் சமூகத்திற்கும் பாகமாகும்படி செய்வித்தார் என்று சிலர் எண்ணினார்கள்.

இந்த விதமாக முஸ்லிம்கள் காந்திஜி நடத்திய கிலாபத் இயக்கத்தின் லாப நஷ்டத்தைக் கணக்குச் செய்துகொண் டார்கள்.

ஆயினும் மகாத்மா காந்தி அந்த இயக்கத்தில் தலை யிட்ட காரணம் சத்தியத்தின் அழைப்புத்தான். துருக்கியில் பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் பிரிட்டன் தன் வாக்குறுதிகளில் மோசம் செய்த விவரங்கள் முஸ்லிம் உலகத் தையே பரம விசனத்தில் மூழ்கடித்தன என்பதை நாம் நன் கறிவோம். எந்த முஸ்லிம் தலைவர்கள் யுத்த காலத்தில் சிறை யில் வைக்கப்பட்டிருந்தார்களோ, அந்த அலி சகோதரர்களே, காந்திஜியின் உதவியை நாடினார்கள். அவருக்குத் தெரிந்த வழி சத்தியமும் அஹிம்சையும்தான். அதைப் பின்பற்றி இயக் கத்தை நடத்தினார். மாப்பிள்ளைமார்களும் மற்றவர்களும் ஹிம்சையில் இறங்கினார்கள். மற்றும் அநேகர், சுய காரியங் களைப் பார்த்துக்கொண்டு, சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு, பொழுதைப் போக்கினார்கள். இயக்கம் தோற்றது.

இதையெல்லாம் ஆற அமர யார் யோசிக்கிறார்கள்? கிலாபத் இயக்கக் காலத்தில், தியாக மார்க்கத்திலிருந்து விலகியிருந்த பல முஸ்லிம் தலைவர்கள், மார் தட்டிக்கொண்டு வெளியே வந்தார்கள். 'நாங்கள்தான் புத்திசாலிகள்!' என்றார்கள். 'இனி நாங்கள் சொல்வதைக் கேளுங்கள்' என்றார்கள். 'நாங்கள் முஸ்லிம்கள்பால் பிரிட்டிஷாரின் நட்பைத் திரும்பவும் திரட்டித் தருகிறோம்' என்றார்கள். இதற்குப் பின்னால் ஏற்பட ஆரம்பித்த கலகங்கள் இன்னும் ஓயவில்லை.

கிலாபத் ஸ்தாபனத்தைத் துருக்கி தீரர் முஸ்தாபா கமாலே கவிழ்த்துவிட்டார். அந்தச் செய்தி முதன் முதலாக இந்தியாவுக்கு வந்தபோது இந்திய முஸ்லிம்கள் நம்பவில்லை. மகா கனம் ஸையத் அமீர்அலி முதலிய பிரமுகர்களைக் கொண்டு தந்தியடித்துக் கேட்டார்கள். 'அதைப்பற்றிச் சந்தேகமே யில்லை' என்று பதில் வந்தது. சரித்திர மார்க்கம் அப்படிச் சென்றுவிட்டது. இந்திய முஸ்லிம்களுடைய மனத்தில் கசப்பு ஏற்பட்டது. அண்டை வீட்டுக்காரன் பேரில் குரோதம் ஏற்பட்டால், தனது மனைவியை அடிப்பது ஒரு சுபாவம்; மனைவி கொஞ்சம் திடமான பேர் வழியா யிருந்தால், குழந்தையை மர்த்தனம் செய்வது ஒரு சுபாவம். அதே போல, ஐரோப்பியர்களின் கையில் மோசமும் அவமானமும் அடைந்துவிட்டால், துருக்கியர்களின் கையில் துரோகத்தை அடைந்தால், இங்கே பரிகாரம் ஏது? வெள்ளைக்காரரிடத்திலோ வாலாட்ட முடியாது. இதையெல்லாம் அறியாத சிலர், பரம அக்கிரமங்களை, பராக்கிரமங்களாக நினைத்துக்கொண்டு செய்தார்கள்.

அமெரிக்காவின் ஆசிரியர் லத்ராப் ஸ்டோட்டார்டு, 'குயவனுடைய கையில் களிமண் இருப்பது போல் இந்த அகில-அண்ட-இஸ்லாமியர்களுடைய கையில் பாமர முஸ்லிம்கள் இருந்து வருகிறார்கள்' என்று எழுதியிருக்கிறார்.

நகரங்களில் பாமர ஜனங்களுக்குள் கலகம் தோன்றியதால், காரண காரிய ஆராய்ச்சியே இல்லாமல், உயிர்ச் சேதமும் ஏற்பட்டுக்கொண்டே வந்தது.

மகாத்மா காந்தியும் அவருடைய முஸ்லிம் தோழர்களும் சமரசப்படுத்தி விடுவார்கள் என்று ஹிந்துக்கள் கொஞ்ச காலம் எதிர்பார்த்தார்கள். அது பகற்கனவாக முடிந்தது. உடனே ஹிந்துக்கள் தயார் செய்துகொண்டார்கள். கலகத்தி லெல்லாம் இரு தரப்பினருக்கும் சேதம் ஏற்பட்டு வந்தது. ஆனால், கலகங்கள் திடீர் திடீரென்று சில இடங்களில் ஏற் பட்டதாகத் தோன்றினவே தவிர, கட்டுப்பாடாக, எங் கும் ஒரே மாதிரி ஸ்தாபனங்கள் வேலை செய்து கிளப்பிய தாகத் தெரியவில்லை.

வெள்ளைக்காரர்களைப் பற்றின மயக்கம் முஸ்லிம் உல கம் சம்பந்தப்பட்ட மட்டில் இப்போது முற்றிலும் நீங்கி விட்டது. சென்ற மகா யுத்தம் முடிந்த பின்பு, நேச தேசங் கள் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டதும், ஏசிக்கொண்ட தும் முஸ்லிம்களுடைய ஏளனத்திற்கு இலக்காகிவிட்டது. பாலஸ்தீன விஷயத்தில் இயற்றிய துரோகம், இங்கிலீஷ் காரரைப் பகைக்கும்படி செய்தது. பின்னிட்டு, யூதர்கள் மீது பாலஸ்தீனத்தில் முஸ்லிம்கள் செய்த அட்டூழியங்களை யெல்லாம் பிரிட்டிஷ் சர்க்கார் சகித்துக்கொண் டிருந்ததி லிருந்து, முஸ்லிம் நட்புத்தான் உலக அரசியலில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உயிர்ப் படகு என்பதை முஸ்லிம் உலகம் உணர்ந்துகொண்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் இன்று துருக்கி, எகிப்து, ஸிரியா நாடுகளின் உதவியை நாடுகிறது. இந்திய முஸ்லிம் உலகமும் தன் வலிமையை உணர்ந்து கொண்டிருக்கிறது.

‘நமது எல்லைக்கோடுகளை இஸ்லாம் மதிக்கிறதில்லை. மகான் ஜமாலுத்தீன் அமைத்த அகிலாண்ட இஸ்லாத்தின்

வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. முஸ்லிம் உலகத்தில் இஸ்லாம் இன்றைக்குப் புத்துயிரைப் பெற்றுவிட்டது. அதன் கியாதி திரும்பவும் உலகத்தில் ஜயித்திடும் என்ற நம்பிக்கை பிரவாகமாக ஓடிக்கொண்டிருக்கிறது' என்று மாஸிக்னன் என்ற ஒரு பிரெஞ்சுக்காரர் எழுதுகிறார்.

'மேற்கத்திய உலகம் அழுகி வருகிறது. ஐரோப்பாவின் எல்லையற்ற பேராசை பலஹீனமே தவிர வேறில்லை. எந்த ஜாதியானாலும், சகல முஸ்லிம்களையும் புதிய ஆசை பிடித்துக்கொண்டிருக்கிறது. கீழ்த் திசை பூராவிலும் இன்றைக்கு உண்மையான பொதுஜன அபிப்பிராயம் ஓங்கி நிற்கிறது. ஐரோப்பாவின் கொடுங்கோன்மையே இந்தப் பெருத்த மாறுதலை இயற்றிவிட்டது. கடவுளின் இச்சை பூர்த்தியாகிக்கொண்டு வருகிறது. ஆசியாவின் கதவுகள் ஐரோப்பியரை வெளியே தள்ளிச் சாத்தப்பட்டுவிடும். உலக சரித்திரத்திலேயே ஒப்புயர்வில்லாத ஒரு நிகழ்ச்சி நமது கண்ணெதிரே வந்துகொண்டிருக்கிறது. ஒரு நவயுகமே அணுகி வருகிறது' என்று எகிப்திய முஸ்லிம் ஜட்ஜ் ஒருவர் எழுதுகிறார்.

மேலே காட்டப்பட்ட இரு அபிப்பிராயங்களை அனுசரித்தே முஸ்லிம் எழுச்சியும் இருக்கிறது. எங்கணும் ஒரு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் தேசீயம் கொழுந்துவிட்டு எரிகிறது. எழுச்சி பெற்ற மதப்பற்று மிகுந்த முஸ்லிம்கள் தேசீயத்தில் கலந்துகொள்வதா, வகுப்புவாத இயக்கத்தில் சேர்ந்து கொள்வதா என்ற பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள நேர்ந்த பொழுது, இரண்டிலும் லாப நஷ்டங்களைக் கணக்குப் பார்க்க ஆரம்பித்தார்கள். வகுப்புவாதமே தங்கள் சமூகத்திற்கு நலமென்று பலர் கருதிவிட்டார்கள். இதனாலும், சமீப கால நிகழ்ச்சிகளாலும் முஸ்லிம் லீக் அதிக வலிமையை அடைந்திருக்கிறது.



காக்ஸார் படைத் தலைவர்

ஜனப் அல்லாமா மஷ்ரூகி

# இங்கும் அங்கும்

துருக்கியின் முன்னேற்றத்தையும் இந்தியாவின் பின்னேற்றத்தையும் இந்த அத்தியாயத்தில் கவனிப்போம். அரேபியாவுக்கு அடுத்த முக்கியமான இஸ்லாமிய நாடு துருக்கியே யாகும்.

காக்ஸார் இயக்கத்தைப் பற்றி முன்னுல் குறிப்பிட்டோம். பஞ்சாபில் சமீப காலத்தில் அவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்கள், திடீர் திடீரென்று ஆயுதம் தாங்கி வெளிப்படுவதையும், மசூதிகள் முதலிய புனித ஸ்தலங்களில் மறைந்துகொள்வதையும், போலீஸுக்கும் அவர்களுக்கும் நடக்கும் லடாய்களேயும் பற்றி அவ்வப்பொழுது வரும் செய்திகளேத் தவிர நமக்கு வேறு ஒன்றும் விசேஷமாய்த் தெரியவில்லே. ஆயினும், இவ்வியக்கம் வல்லமை மிக்கது, அடிப்படையான அகண்டமான ஒரு நோக்கம் இதற்கு உண்டு என்று நாம் கருதுகிறேம். இயக்கத்திற்கு அஸ்திவாரம் பலாத்காரம் என்பது வெளிப்படை. காக்ஸார் படை லட்சக்கணக்கான அங்கத்தினரை உடையது; அது மிகவும் கட்டுப்பாடுள்ள ஸ்தாபனம். இடையில் அதற்கும் நாஜி

இயக்கத்திற்கும்கூட ஏதோ சம்பந்தம் இருப்பதாக ஒரு வதந்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. இப்பொழுது நாம் அந்தச் சம்பந்தத்தைப் பற்றிக் கவனிக்க வேண்டியதில்லை.

காக்ஸார் படையின் தலைவர் மகான் அல்லாமா மஷ்ருகி. இவருடைய ஆசை, இஸ்லாம் மதத்தை உலகம் முழுவதிலும் ஸ்தாபித்து விடவேண்டும்; உலகத்தையே இஸ்லாம் மதத்தினர் ஆட்சி புரியவேண்டும், இந்த முயற்சிக்கு முதற்படியாக, இந்தியாவை இஸ்லாமின் ஆதிக்கியத்திற்கு உட்படுத்தவேண்டும். அதன் பொருட்டு, காக்ஸார் படையைத் திரட்டியிருக்கிறார்.

இந்த மகான் அல்லாமா இனயதுல்லாகான் மஷ்ருகி 1937-முதல் அரும்பாடு பட்டு வருகிறார். இவர்தான் காக்ஸார் படையின் சர்வாதிகாரி. இவர் ஆயுள் முழுதும் சர்வாதிகாரி. இவருடைய வாக்கியங்களிலிருந்தே இவர் நோக்கம் புலனாகும். கீழேயுள்ள வாக்கியங்களைப் பாருங்கள்:

'மகம்மது நபி நாயகம் உண்மையான மதத்துடன் வந்தார். முஸ்லிமல்லாதாருக்குக் கிலேசம் ஏற்படுமே என்று தாட்சண்யத்தைப் பாராட்டக் கூடாது. அந்த இளக்கம் கூடாது. மற்ற மதங்களை அமுக்கிப் போடவேண்டும் — அவைகளுக்கு மேலே இஸ்லாத்தை ஏற்றியாகவேண்டும். குர்ஆன் இதையே தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

'உண்மையில் இஸ்லாம் "எஸ்ஸென்"ஸில் (சாராம்சத்தில்) சிப்பாய் மதந்தான். இந்த மௌல்விகள் உலகத்திலிருந்து மதத்தைப் பிரித்தார்கள்; மதத்திலிருந்து சிப்பாய்க் குணங்களைப் பிரித்தார்கள்; ராணுவ வாழ்வை விடுத்தார்கள். வந்தது ஆண்டவனின் கோபம்; வெந்தது முஸ்லிமின் ஆதிக்கியம். ஒன்றன் பின் ஒன்றாகத் தேசங்களை அல்லா முஸ்லிம்களிடமிருந்து பிடுங்கி, மற்ற ராணுவ நாட்டினரிடம் கொடுத்துவிட்டார்.

'இந்த மௌல்விகள் ஏதோ மத சம்பிரதாயங்களைக் கட்டித் தழுவுகிறார்கள். எனது அபிப்பிராயத்தில் இஸ்லாம் என்றால் ஆதிக்கியம் என்றுதான் அர்த்தம்.

'சுவர்க்கம் வேண்டுமானால், போரில் சத்துருவைத் தாக்கித் தீரவேண்டும்.

'நமாஸ், ஹஜ், ஸக்காத் போன்ற சகலமான சம்பிரதாயங்களும் ஒற்றுமையைத் திரட்டவும் தைரியத்தைப் போஷிக்கவும்தான். முஸ்லிம் என்றால் சிப்பாய் என்றுதான் அர்த்தம். கோட்டையைப் பிடிக்க முயல்பவன் பட்டினி கிடக்க வேண்டியிருக்கும். பட்டினியை இலகுவில் தாங்கிக் கொள்ளப் பழகுவதற்குத்தான் உபவாஸம்.........

நம்பிக்கை திடமாக இருந்தால், உலகத்தை ஜயிப்பது நிச்சயம். காக்ஸார்கள் ஒற்றுமையாக இருக்கவேண்டும். உலகத்தில் முஸ்லிம்கள் யஜமானர்களாகவும் ஜயசீலர்களாகவும் பிரகாசிக்க வேண்டும். குர்ஆன் போதிப்பது இதுதான். இதனால்தான், இஸ்லாத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம்கள் உலகத்திற்கே யஜமானர்க ளானார்கள்.

'முஸ்லிம்கள் யாருக்குக் கீழ்ப்படிய வேண்டும்? எந்த முஸ்லிம் மன்னன் — உலகத்தின் வாரீசு - வாளைத் தனது கையில் வைத்திருக்கிறானோ அவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அந்த மன்னன்தான் உண்மையான ஆசாரியன்.

'எனது அபிப்பிராயத்தில் முஸ்லிம்களின் சரியான பீர் யார் என்றால், அது துருக்கியை ஆளும் முஸ்தாபா கமால் பாஷாதான். சரியான மௌலானா யார் என்றால், அரேபியாவின் மன்னன் காஜி இபன் ஸாத். சரியான மேதாவி - வித்வான் யாரென்றால், பாரசீகத்தின் மன்னன் ரேஸா-ஷா-பேஹ்லவிதான். இதுவரைக்கும் சரியான பக்கிரி யார் என்றால், காஜி நாதர்ஷாதான்.

'படியாமல் பிளவுபட்டுக் கிடந்த அராபியர்கள் பூமண்டலத்தின் பெரும் பாகத்தை ஆளும்படி, நபிநாயகம் செய்தார். இந்தத் தலைமுறை முஸ்லிம்களும், தங்களுடைய மதத்தை மெய்ப்படுத்த வேண்டுமானால், சிப்பாய் வாழ்க்கையை நடத்தவேண்டும் — தங்களுக்குள்ள முதல்களையும் சாமர்த்தியங்களையும் உலகத்தை ஜயிக்கவும் பிரபுத்துவத்தை நடத்தவும் பிரயோகிக்கவேண்டும். இதைத் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டுமா? இஸ்லாமும் முஸ்லிம்களும் உலகத்திற்கு யஜமானர்களாக வேண்டும். இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியை ஸ்தாபிக்கவேண்டும் — பின்பு, சாத்தியமானால், உலகம் பூராவிலும் ஸ்தாபித்திட வேண்டும்.'

அல்லாமா இனயதுல்லாகான் மஷ்ருகி, முஸ்தாபா கமால் பாஷாவைக் கொண்டாடுகிறார். ஆனால் பொதுவாக இந்திய முஸ்லிம்களுக்கு கமால் பாஷாவை என்ன செய்வதென்று தெரியவில்லை. கமால் பாஷாவிற்கோ, இந்திய முஸ்லிம்களைக் குறித்துப் பெருமிதமான அவமதிப்பு. இவர்கள் சுதந்திரத்திற்கு உழைக்காத கோழைகள் என்றும், இவர்களுடைய தலைவர்கள் இங்கிலீஷ்காரருடைய ஆட்சிக்கு குலாமிகள் என்றும், அவர் அபிப்பிராயப்பட்டிருந்தார். இந்தியாவில் ஏழு கோடி முஸ்லிம்கள் இருந்தும், ஹிந்துக்கள் சுயராஜ்ய இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்தும், இந்திய முஸ்லிம்கள் ஹிந்துக்களுடன் ஒத்துழைத்துப் பிரிட்டிஷாரிடமிருந்து சுயராஜ்யத்தைப் பெறவில்லையே என்பதைக் குறித்து, கமால் பாஷாவுக்கு எல்லையற்ற அருவருப்பு ஏற்பட்டிருந்தது. இங்கிலீஷ்காரருக்கும் கமாலுக்கும் பரஸ்பரம் கொடிய விரோதம். தமது துருக்கியில் என்ன கலகம் நேர்ந்தபோதிலும் கமால், 'இந்தக் கலகத்தை இங்கிலீஷ்காரன்தான் தூண்டிவிட்டிருக்கிறான்' என்று உடனே தீர்மானித்துவிடுவார். இங்கிலீஷ்காரரும், 'நமது மேற்கு

ஆசியா காரியத்தை யெல்லாம் இந்தக் கமால்தான் கெடுத்து வருகிறான்' என்று தீர்மானித்துவிடுவார்கள்.

கமால் பாஷாவுக்கும் இந்திய முஸ்லிம்களுக்கும் இந்த விஷயத்தில் மாத்திரம் முரண்பாடு என்று சொல்லிவிட முடியாது.

மதக் கோட்பாடுகளிலும் மலையளவு முரண்பாடு உண்டு. துருக்கிக் குல்லாவை இந்திய முஸ்லிம்கள் கொண்டாடுகிறார்கள். கமால் பாஷா அந்தக் குல்லாவைத் தம் நாட்டில் அகற்றிவிட்டார். அந்தக் குல்லாவைத் தரித்தாலே குற்றம் என்று சட்டத்தை இயற்றினார். குல்லா தரித்தவர்களைத் தண்டித்தார். துருக்கியில் பர்தாவையும் கோஷாவையும் ஒழித்துவிட்டார். ஸ்திரீகள் வக்கீல்களானார்கள்; டாக்டர்கள், ஜட்ஜுகள், வாத்தியார்கள் ஆனார்கள். முஸ்லிம் ஸ்திரீகள் போலீஸ் வேலைகூடப் பார்க்கிறார்கள்!

கமால் பாஷாவிற்கு நடனம் என்றால் மிகுந்த பிரேமை. அதுவும் வெள்ளையருடைய நர்த்தனத்தில் அவருக்கு ரொம்பவும் ருசி. நர்த்தன பாத்தியதைதான் ஸ்திரீகளுடைய சுதந்திரத்தின் அஸ்திவாரம் என்று கமால் கருதினார்.

முஸ்தாபா கமால் மடங்களெல்லாம் தேவையில்லையென்று கலைத்துவிட்டார். அவைகளைச் சேர்ந்த சொத்துக்களையெல்லாம் ராஜாங்கத்திற்கே அபகரித்துக்கொண்டுவிட்டார். மடங்களில் சுக ஜீவனம் செய்துவந்த 'டார்விஷ்' களைக் கலைத்துவிட்டார். 'வேலை செய்து பிழையுங்கள்' என்று கட்டளையிட்டார். அவர்களுடைய விசேஷ ஆடைகளை யெல்லாம் கழற்றி யெறிந்தார். இது மாத்திரமல்ல. மதப் பள்ளிக்கூடங்களை யெல்லாம் மூடிவிட்டார். லௌகிகப் படிப்புக்களே போதும் என்று தீர்மானித்து நடத்தினார்.

மிகவும் முக்கியமான கிலாபத் ஸ்தாபனத்தையே ஆபத்தென்று கவிழ்த்துவிட்டார். முஸ்லிம் சட்டத்தையும் மாற்றி

விட்டார். ஸ்விட்ஜர்லாந்துச் சட்டம், இத்தாலியச் சட்டம், ஜெர்மன் சட்டம் - இவைகளையெல்லாம் அப்படியே எடுத்துத் துருக்கிச் சட்ட மாக்கிக்கொண்டார். முஸ்லிம்களில் ஒரு நபருக்குப் பல மனைவிக ளிருப்பது சகஜம். ஒருவன், ஒரு மனைவி உயிருடனிருக்கும்போது, இரண்டாவது மனைவியை மணந்துகொண்டால், ஒரு மனைவிகூட அருகில் இல்லாமல், அவன் ஜெயிலில் வசிக்கவேண்டு மென்று கமால் சட்ட மிட்டார்.

இத்துடன் நிற்கவில்லை. இஸ்லாமிய நாகரிகத்தில், பொம்மை, வர்ணப்படம், சிற்பம் — இவையெல்லாம் மத விரோதம். கமால் இந்த மதத் தடையை அகற்றிவிட்டார். சித்திர கலாசாலைகளைத் திறந்துவைத்தார். பாலர்களும் பாலிகைகளும் அங்கே கலைகளைக் கற்கும்படி செய்தார்.

இஸ்லாம் மதத் தலைமை, இஸ்லாமியச் சட்டம், இஸ்லாம் நாகரிகம், இஸ்லாமியத் திருமணம், இஸ்லாமிய உடை அனைத்தையும் கமால் துணிந்து மாற்றிவிட்டார். 'ஸலாம்' கூடக் கூடாது — கைகளைத்தான் குலுக்கிக்கொள்ள வேண்டுமென்று ஆக்ஞாபித்தார். துருக்கியின் பாஷையின் லிபியை ரோமன் எழுத்தில் எழுதவேண்டு மென்று விதித்தார். பாஷையின் எழுத்தை மட்டுமின்றி, இதனால் தேசத்தின் தலையெழுத்தையும் மாற்றிவிட்டார்.

கமால், வைதீகத்தை விட்டு, நவநாகரிக உலகைக் கண்டார். மற்ற நாட்டவரின் முன்பு நின்றிடும்போது அவருக்கு வெட்கம் மண்டிற்று. தேச சுதந்திரத்திற்கும், ஒற்றுமைக்கும், செழிப்புக்கும், தொழில் விருத்திக்கும், கலை வளத்திற்கும், பிறநாட்டாருடைய நன்மதிப்பைப் பெறுவதற்கும் இடையூறாக எது இருந்தாலும் அதைத் தகர்த்தெறிய முற்பட்டார். பழைய மத சம்பிரதாயங்களில் சில விருத்தமாய் வழிமறித்ததால், அவற்றை அகற்றிவிட்டார்.

சில ஆசாரங்களைப் பலி கொடுத்து, தேசத்தையும், மதத்தையும், ஆதிக்கியத்தையும் முன்னைவிட அதிகமாக வலுப்படுத்திக்கொண்டுவிட்டார். அவர் தீர்க்க தரிசனமுடையவர், மூடப்பிடிவாத மற்றவர், முரடர், — எல்லாவற்றிற்கும் மேலாக நாகரிக புருஷர்.

இஸ்லாத்தின் ஆசாரங்களையே மாற்றத் துணிந்தவர் கமால். துருக்கியில் அவரால் எல்லாம் சாத்தியமாயிற்று. ஆனால், இந்தியாவிலோ இதற்கு முற்றிலும் மாறாக இருக்கிறது. இந்திய முஸ்லிம்களில் பெரும்பாலோர் மாறுதலே வேண்டாதவர்கள். கடுகளவு ஆசாரத்தையும் கைவிட மாட்டார்கள்.

இவ்வளவு முரண்பாடு இருந்தபோதிலும், மகான் மஷ்ரூகி கமாலைக் கொண்டாடுகிறார்! ஏன்? இஸ்லாமிய விதிகளைக் கமால் உதாசீனம் செய்தபோதிலும், இஸ்லாமிய வீர மமதையைக் கமால் தமது பராக்கிரமங்களினால் சோதிக்கிறாரல்லவா! அதனால்தான் சிலர் அவரைக் கொண்டாடுகிறார்கள் என்று தோன்றுகிறது. இவ்விடத்துக்கு அவ்விடம் எவ்வளவு வேற்றுமையா யிருக்கிறது!

# மிஸ்டர் ஜின்ளு

ஜின்ளு ஸாஹிப் அவர்களே நாம் மிஸ்டர் என்றே அழைக்க விரும்புகிறோம். அவர் நவநாகரிக புருஷர். சிறப்பாக ஆங்கில மோஸ்தரில் உள்ளவர். கர்நாடக முறைகளே வெறுப்பவர். அவர் மதகுருவும் அல்லர்.

இந்த மிஸ்டர் ஜின்ளுதான் முஸ்லிம் லீகின் அதிபதி-மேலும் பாகிஸ்தானின் படைப்பாளர்.

இவருக்குத் தைரியம் கொடுத்துவரும் சாதனங்கள் காக்ஸார் படையும், பொதுவாக முஸ்லிம் பாமர மக்களின் சக்தியும், சில பணக்காரர் உதவியும்.

இவருடைய சரிதையை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். 1920-ஏப்ரல் மாதத்தில் 'இந்தியன் ஹோம் ரூல் லீக்' என்ற பெயருடன் லோகமான்ய பாலகங்காதர திலகர் பம்பாயில் ஸ்தாபித்திருந்த சங்கத்தின் அக்கிராசனத் தேர்தல் நடந்தது. அதற்கு முன் இருந்தவர், தேசியவாதி ஜின்ளு — அதற்குப் பின்னிட்டு வந்தவர் வகுப்புவாதி ஜின்ளு.

அந்தத் தேர்தலிலிருந்துதான் மிஸ்டர் ஜின்னுவி னுடைய போக்கு விபரீதமான மாறுதலை யடைந்தது. காரணம் அந்தத் தேர்தலின் போக்குத்தான்.

மிஸ்டர் ஜின்னு மிகுந்த சாமர்த்தியமுள்ள பாரிஸ்டர். பம்பாய் ஹைகோர்ட்டில் ஒரு பெரிய கேஸில் அவர் ஒரு தரப்பில் வக்காலத்து தாக்கல் செய்திருந்தார். அந்தக் கேஸ் ஒரு நாள் விசாரணைக்கு வந்தபோது, மிஸ்டர் ஜின்னுவின் கட்சிக்காரர், கல்கத்தாவிலிருந்து மிகப் பெரிய ஒரு பாரிஸ்டரைத் தமக்காகக் கூட்டி வரப்போவதாகச் சொல்லி, வாய்தா கேட்டார். ஹைகோர்ட்டு ஜட்ஜு, 'மிஸ்டர் ஜின்னு உமக்கு ஆஜராகும்போது, உமக்கு வேறு வக்கீல் தேவையில்லை. அவருடைய திறமை உமக்குக் கொடுக்க முடியாத நன்மையை, வேறு எவரும் உமக்குக் கொடுத்துவிட முடியாது. இந்தக் காரணத்தினுல், நான் உமக்கு வாய்தா கொடுக்கமாட்டேன்' என்று சொல்லிவிட்டார். இளம் வயதில் மிஸ்டர் ஜின்னு இவ்வளவு பிராபல்யத்தை அடைந்துவிட்டார். அரசியல் விஷயத்திலும் நிபுணராக விளங்கினுர். காங்கிரஸ் மேடையில், அவர் எப்போதும் மிகுந்த குதூகலத்துடன் வரவேற்கப்பட்ட பிரசங்கியாக இருந்தார். தர்க்கம் புரிவதில் அவர் ஒரு கற்பனைக் கடல். அவர் பூரண தேசியவாதியாக விளங்கினுர். நல்ல தைரியசாலி. சட்டசபையில் பூரண வல்லமையுடன் பிரகாசித்தார். கவியரசி — காங்கிரஸ் தலைவி — ஸரோஜினி தேவி, இவருடைய குணகணங்களைக் கண்டு பரவசமானவர்களில் ஒருவர். 'ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு இவரே தூதர்,' என்று ஸரோஜினி தேவி மிஸ்டர் ஜின்னுவைக் கொண்டாடிவந்தார்.

சென்ற மகா யுத்தத்தின்போது லார்டு வில்லிங்டன் பம்பாய் மாகாணத்துக் கவர்னராக இருந்தார். அவர் ஒரு யுத்த மகாநாட்டைக் கூட்டினுர். லோகமான்ய திலகர் பிர

சன்னமாகி யிருந்தார். மிஸ்டர் ஜின்னு, இன்னும் எத்தனையோ பிரமுகர்கள் கூட்டத்தில் இருந்தார்கள். லார்டு வில்லிங்டன் லோகமான்யரை அவமதித்தார். மிஸ்டர் ஜின்னு அதைச் சகிக்கவில்லை; தீரமாக ஆட்சேபித்தார். உடனே பம்பாய் நகரத்திற்கே மிஸ்டர் ஜின்னு முடிசூடா மன்னராக விளங்கினுர். ஜனங்களுக்கு அவர்மீது ஏற்பட்ட பிரேமை பெருவெள்ளமாக ஓடியது. தங்களுடைய பிரேமைக்கும் அவருடைய பெருமைக்கும் ஒரு ரூபத்தை அளிக்க வேண்டும் என்று பொதுஜனங்கள் தீர்மானித்தார்கள். உடனே நன்கொடைகள் கரைபுரண்டு வந்தன. ஒரு கட்டிடத்தைக் கட்டினுர்கள். அதற்கு 'ஜின்னு மண்டபம்' என்று நாமகரணஞ் செய்யப்பட்டது.

நமது சென்னை மாகாணத்தில் அன்னி பெஸண்டு அம்மையார் காங்கிரஸுக்கு உதவி புரியும்பொருட்டு ஒரு ஹோம் ரூல் லீக் ஸ்தாபித்த மாதிரி, பம்பாய் மாகாணத்தில் திலகர் ஓர் 'இந்தியன் ஹோம் ரூல் லீக்' ஸ்தாபித்து நடத்தி வந்தார். 1920-ல் திலகருக்குத் தேகம் சரியா யில்லை. லீக் தேர்தல் நடந்தது. அக்கிராசனர் பதவிக்கு காந்திஜி ஓர் அபேட்சகர்; மிஸ்டர் ஜின்னு ஓர் அபேட்சகர். மூன்ருவது அபேட்சகர் கிடையாது. கணக்கெடுத்ததில், மிஸ்டர் ஜின்னு தோல்வியுற்ருர்; காந்திஜி வெற்றி பெற்ருர், தேர்தல் முறையில் சில தோஷங்கள் நிகழ்ந்துவிட்டதாகவும் தேர்தல் செல்லாதென்றும் மிஸ்டர் ஜின்னு முறையிட்டார். இவருடைய ஆட்சேபணை செல்லாதென்று சொல்லப்பட்டது. மிஸ்டர் ஜின்னு வெளியே சென்றுவிட்டார். பின்பு பத்திரிகைகளிலும் இதைக் குறித்து வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. காந்திஜி, 'விதிகளுக்கு விரோதமாக இருந்தபோதிலும், தேர்தலில் தோஷமில்லை. தாத்பரியத்தைத்தான் நாம் கவனிக்க வேண்டும். விதிகளையே பூஜித்துக் கொண்டிருக்

கக் கூடாது' என்று தமது யௌவன இந்தியாவில் எழுதி ஞர்.

அப்போதே 'மஹாத்மா' காந்தி என்று பிரசித்தி ஏற்பட்டிருந்தது. இந்தத் தேர்தல் தகராறு சிலருக்குப் பிடிக்கவில்லை. 'இந்தப் போட்டிகளிலெல்லாம் நீர் சம்பந் தப்படக் கூடாது. நீர் பிரத்தியேகமாக நின்றுகொண்டு, உமது மகத்தான வேலையைச் செய்து வரவேண்டும்' என் ருர்கள். இதற்கும் காந்திஜி, தமது யௌவன இந்தியாவில் கண்டிப்பான பதிலை எழுதிவிட்டார். 'எனது கொள்கை வெறும் பள்ளிக்கூடப் பாடமன்று. அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்துடன்தான் நான் கொள்கை களை வைத்துக்கொண் டிருக்கிறேன். இந்திய ஹோம் ரூல் லீக் என்ற ஒரு ஸ்தாபனம் தயாரா யிருந்தது. எனது கொள்கையைப் பிரசாரம் செய்வதற்கு, நான் என் அதை உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடாது? நான் கட்சி கட் டவா தேர்தலுக்கு நின்றேன்?' என்று சொல்லிவிட்டார்.

தேர்தல் விஷயம் அதோடு தீர்ந்தது. தேர்தல் விஷம் மாத்திரம் தனது விஷம வேலையை நாளிது வரைக்கும் நடத்தி வருகிறது. அதுமுதல் மஹாத்மா காந்தி எந்த வேலை யில் தமது கையை வைத்தாலும், அதற்கு உலைவைக்க மிஸ்டர் ஜின்னுவின் கை எப்போதும் தயாரா யிருந்துவருகிறது.

நாளடைவில் ஆங்கில ராஜதந்திரிகள் இதைக் கண்டு கொண்டார்கள். காந்திஜியின் இயக்கங்களைத் தவிடுபொடி யாக்குவதற்கு, மிஸ்டர் ஜின்ணு ஒருவரே தமக்குப் போதும் என்று தீர்மானித்து, அந்தத் தந்திரிகள் அவருடன் உறவாடி ஞர்கள்.

தந்திரத்தில் மிஸ்டர் ஜின்ணு ஒரு சர்ப்பத்திற்குச் சமா னம். சர்ப்பத்திற்கு மறதியே கிடையாது. சர்ப்பத்திற் குச் சிறிய காரியங்கள் செய்யவும் தெரியாது.

சர்ப்பத்திற்கு 'த்வி-ஜிஹ்வம்' என்ற பெயருண்டு: அதாவது 'இரு-நாக்கன்' என்று அர்த்தம். சர்ப்பத்திற்கு இரண்டு நாக்குகள் உண்டு என்பது ஐதீகம். மிஸ்டர் ஜின்னு, 1920-க்கு முன்பு ஒரு நாக்கையும், அதற்குப் பின்பு மறு நாக்கையும் உபயோகித்து வந்திருக்கிறார். 'லாயக்கோ லாயக்கில்லையோ, சுதந்திரம் இந்தியாவின் பிறப்புரிமை; இந்தியாவை இந்தியரைத் தவிர, வேறு யாரும் ஆள உரிமை கிடையாது' என்ற தேசீயத்திற்கும், 'இந்தியா ஒரு தேசமே இல்லை — வெட்டு இரண்டாக' என்ற எல்லை கடந்த வகுப்பு வாதத்திற்கும் எவ்வளவு வித்தியாசம்!

சர்க்காரிடம் தொங்கு ஸலாம் போட்டு, பொய்ப் பெருமைகளைப் பெற்று, முலாம் பூசிக்கொண்டு பிரகாசிக்க வேண்டும் என்ற நினைப்பே மிஸ்டர் ஜின்னுவுக்குக் கிடையாது. இதுபோன்ற நுனிப்புல் மேயும் கருத்தே அவரிடம் கிடையாது. இதுபோன்ற கேவலமான ஆசைகளை அவர் படைத்திருந்தால் அவர் அலட்சியம் செய்து தள்ளிவிடத் தக்க சாதாரண ஆசாமியாகப் போயிருப்பார். அவர் இந்தியாவிற்கு அபாயகரமான சத்துருவாக வாய்த்திருக்க முடியாது. அவருடைய சிலாக்கியமான குணங்கள்தான் அவருடைய வைராக்கியத்தைக் கொடியதாகச் செய்துவந்திருக்கின்றன. அற்பமான ஆசைகளே மிஸ்டர் ஜின்னுவுக்குக் கிடையாது. உலகமே திடுக்கிடும்படியான செயல்களைச் செய்து வரவேண்டும் என்பதுதான் அவருடைய ஆசை. மிஸ்டர் ஜின்னு ஒரு சரித்திர புருஷர்தான் என்பதில் சந்தேகமில்லை.

அவர் தொடுத்திருக்கும் இயக்கம் இப்போதைக்கு ஒழியாது; அது நாளுக்கு நாள் ஆக்கம் பெற்றுவரும்.

'முஸ்லிம்-இந்தியா' புதிய சந்திப்பி லிருக்கிறது. இஸ்லாமிய உலகுடன் தமது வாழ்வு மாட்டிக்கொண்டிருக்கிற தென்ற உணர்ச்சி இந்திய-முஸ்லிம்களுக்குள் பரவிக்

கிடக்கிறது. முஸ்லிம்-இந்தியா கண்களை விழித்துக்கொண்டு விட்டது. இந்த விழித்த கண்கள், இஸ்லாம் நாடுகளின் ஐக்கிய சமஷ்டியை விட்டு அகலுவது கிடையாது. சர்வ முஸ்லிம் தேசங்களும் சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் பங் கெடுத்துக்கொள்வதற்கு, இந்திய-முஸ்லிம்கள் எப்போதும் தயாரா யிருக்கிருர்கள்.

'மாடேர்ன் ரிவியூ'வின் பத்திராதிபர் பாபு ராமானந்த சட்டர்ஜியே மிஸ்டர் ஜின்னுவின் குணங்களைக் கண்டு திகைத்து நிற்கிருர். 'மிஸ்டர் ஜின்னு எவ்வளவு நியாய மற்றும் விபரீதமாயும் இருந்தபோதிலும், இரண்டு காரணங் களுக்காக அவரை உதாசீனம் செய்யக் கூடாது.

'1. மிஸ்டர் ஜின்னு மிகவும் கெட்டிக்காரர்; ரொம்பக் குறும்பு செய்ய அவருக்குச் சக்தியுண்டு.

'2. இந்திய சுதந்திரத்தின் பிரிட்டிஷ் விரோதிகள்—சிலர் ரகசியமாகவும் சிலர் பகிரங்கமாகவும்—மிஸ்டர் ஜின் னுவை ஆதரிக்கிருர்கள்.

'நாம் அவரை உதாசீனப் படுத்தாவிட்டாலும்கூட, நாம் அவரைப் பற்றியாவது, அவர் சொல்வதைப் பற்றியா வது ரொம்ப எழுதுவது கிடையாது. ஏனென்ருல்:

'உண்மைகளாவது நியாய வாதங்களாவது மிஸ்டர் ஜின்னுவை ஒன்றும் அசைக்க முடியாது.

'அவரைக் குறித்துக் குறை சொல்லக் கூடியதை முஸ் லிம்களே திறமையுடன் சொல்லி வருகிருர்கள்.'

மேலும் அவர் கூறுவதாவது :

'இந்தப் பாகிஸ்தான் அசாத்தியம், பைத்தியம் பிடித்த பேச்சு; இதனுல் மிஸ்டர் ஜின்னுவைத் தடைப்படுத்த முடி யாது. முப்பது கோடி ஹிந்துக்களும் இதை எதிர்ப்பார்கள். உலகத்தில் எந்தச் சக்திதான் இதை நடத்தி வைத்திடுமோ, —அந்த வல்லமையைப் பார்க்க, நமக்கு ஆசையாகத்தான்

இருக்கிறது...பிரிட்டிஷ் சாம்ராஜ்யவாதிகள், இந்திய சுய ராஜ்யத்தைக் குறுக்கிடுவதற்கு, இந்தப் பாகிஸ்தான் கூக்குரல் நல்ல கருவி என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அராபிய - யூதர் பிரச்னையைக் காட்டிலும் 100 மடங்கு கடினமான பிரச்னையை இந்தியாவில் இவர்கள் கிளப்ப விரும்புகிறார்களா என்று கேட்கிறோம். சகல பிரச்னைகளையும் தங்களால் தீர்க்க முடியும் என்ற ஆணவத்தை இவர்கள் கொண்டிருக்க வேண்டாம். ஜாக்கிரதையாக இருக்கட்டும். மிஸ்டர் ஜின்னாவினுடைய திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால், எல்லையற்ற தொல்லைதான்; வகுப்புக் கசப்பு எல்லைகளையெல்லாம் கடந்துவிடும்.'

மிஸ்டர் ஜின்னாவைப் போன்ற கெட்டிக்காரரான பாரிஸ்டர் கால்ஹௌன் என்றவர் சென்ற நூற்றாண்டில் அமெரிக்காவில் இருந்தார். மிஸ்டர் ஜின்னாவைப் போலவே அவரும் பிரபலமான அரசியல் வாதி. இவரைப் போலவே அவரும் அபாயகரமான அரசியல் வியாதி. இவரைப் போலவே அவரும் நடு வயதில் சொக்காயை மாற்றிக்கொண்டவர். அவர் அங்கே செய்த வேலையைத்தான் இன்றைக்கு மிஸ்டர் ஜின்னா இங்கே செய்துகொண்டிருக்கிறார்.

இப்பொழுது ஜனாதிபதி ரூஸ்வெல்டு ஆண்டுவரும் அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில்தான், கால்ஹௌன், பாரிஸ்டர் தொழிலையும், அரசியல் வேலையையும் நடத்தி வந்தார். அங்கே வடக்கு ஜில்லாக்களில் அடிமைகள் கிடையாது; தெற்கு ஜில்லாக்களில் அடிமைகளை வைத்து வேலை வாங்கினார்கள். அடிமைகளை வைத்துக் கட்டாய வேலை வாங்குவதையும், அடிமை வியாபாரத்தையும் வடக்கத்தியர் எதிர்த்தார்கள்; தெற்கத்தியர் இரண்டும் தர்மம் என்று ஓங்கியடித்தார்கள். சத்தம் பெருகிச் சண்டையில் வந்து முடிந்தது. தெற்கையும் வடக்கையும் பிரிக்கவேண்டும் என்ற

பிரச்னை கிளம்பிற்று. கால்ஹௌன் முதலில் பிரிவினைக்கு யமனாக எதிர்த்தார். பின்னால் ஒரே பல்டி யடித்து, பிரிவினை யின் பக்தரானார். பாரிஸ்டர் அல்லவா! விவாதங்கள் செய்து ஆதரவு பெறப் பேசத் தெரியாதா? காரணத்தின் மேல் காரணமாக அள்ளிவிட்டார். முடிவு? உள்நாட்டுக் கலகம் காட்டுத் தீ போல் பரவிற்று. மிஸ்டர் ஜின்னா நம் நாட்டுக் கால்ஹௌன்.

ஜின்னாவின் வாழ்க்கையில் நாகபுரி காங்கிரஸுக்குப் பின் பெரும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. காந்திஜியின் ஒத்துழை யாமை, மனுப் போட்டு சுயராஜ்யம் வாங்கும் கொள்கையை உடைத்தெறிந்துவிட்டது. மிதவாதிகள் விலகி ஓடிவிட்ட னர். கஷ்டப்படத் தயாரா யில்லாதவர்கள் காங்கிரஸிலிருந்து தலைகளைக் கழற்றிக்கொண்டார்கள். ஜின்னாவுக்கோ, காந்தி, காங்கிரஸ், ஒத்துழையாமை, அஹிம்சை, நிர்மாணத் திட் டம் — ஒன்றுமே பிடிக்கவில்லை.

கிலாபத் பிரச்னை ஒத்துழையாமையில் முக்கியமான திட்டமல்லவா? கிலாபத் ஸ்தாபனமும் காங்கிரஸும் ஒத் துழைத்தன. முஸ்லிம் லீகும் காங்கிரஸ் கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொண்டது. எனவே ஜின்னாவுக்கு ஒரு வழியுமில்லை. ஆனால் அவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தினிடம் சரணாகதி அடைந்து புகழும் பதவியும் பெற்றிருக்க முடியும். பணிவு அறியாத ஜின்னாவின் முடி, இன்று அகில இந்திய முஸ்லிம் லீகின் நிரந்தரத் தலைவர் என்ற பட்டம் சூட்டிக் கொள்ளவேண்டிய முடி, அப்படி வணங்கிப் பிழைக்க இசையுமா?

காந்திஜியின் ஒத்துழையாமை 1922-ல் சௌரிசௌரா சம்பவம் காரணமாகத் திடீரென்று நிறுத்தப்பட்டது. துருக்கியில் கமால் பாஷா கிலாபத் ஸ்தாபனத்தையே எடுத்துவிட்டார். இவற்றால் ஹிந்துக்கள் அயர்ந்தனர்.

முஸ்லிம்கள் வெற்றியின்றிப் புழுங்கினர். தேசத்தில் மக்களின் மனம் ஒடிந்து கிடந்தது. இந்தச் சமயத்தில்தான், வகுப்புவாத வெறி ஆரம்பமாகி, வளர்வதற்கு ஏற்ற தருணம் வாய்த்தது. சைமன் கமிஷன் வந்தது; திரும்பிப் போயிற்று. வட்டமேஜை மகாநாடு கூடிற்று; கலைந்தது. ஆனல், இவற்றிலெல்லாம் காங்கிரஸ் முக்கியத்துவம் பெற வில்லை; தேசிய முஸ்லிம்களுக்கோ செல்வாக்கே இல்லாமல் பிரிட்டிஷ் சர்க்கார் கவனித்துக்கொண்டது. பிந்திய வட்ட மேஜை மகாநாடுகளின் பயனாக 'வகுப்புத் தீர்ப்பு' வந்தது. 'தனித் தொகுதி' தோன்றிற்று. தேர்தல் கோஷம் ஆரம்ப மாயிற்று.

ஜின்னாவின் லீகும் அபேட்சகர்களை நிறுத்தியது. ஆனல் காங்கிரஸே அமோகமான வெற்றியை அடைந்தது. இதனால் இரண்டு வருஷ காலம், ஜின்னா தம் வலியைத் திரட்ட வேலை செய்யலானார். அவர் இரண்டு முறைகளைக் கையாண்டார். ஊரூராய் லீக் சபைகளை அமைப்பது; மறு பக்கத்தில் காங்கிரஸோடு ராஜி பேசுவது. லாபமோ நஷ்டமோ, காந்திஜியும் நேருவும் அவரைப் பேட்டி காணும்படி ஓர் உறுதியான நிலையை அவர் அமைத்துக்கொண்டுவிட்டார். இன்று ஒரு குட்டி ஹிட்லரைப் போல், எல்லா விஷயங்களையும் — யுத்தம், காங்கிரஸ், சட்டமறுப்பு — எல்லாவற்றையும் தம் நிலையைப் பலப்படுத்த உபயோகித்துக் கொள்கிறார்.

ஜின்னாவின் செல்வாக்குக்கு மூல காரணம் அவர் முஸ்லிம்களின் உணர்ச்சிகளைக் கிளப்பிவிடும் தோரணையே யாகும். அதாவது ஹிருதயத்தைத் தொட்டு விளையாடுவதில் அவர் நிபுணர்; மூளை ஏற்றுக்கொள்ளுமாறு நீதியும் காரணமும் சொல்லி அவரால் ஜயிக்க முடியாது. வகுப்புத் துவேஷங்களை அவர் கைவிடட்டும்; மறு நிமிஷம் அவருக்குத் தலைமை இல்லை. காங்கிரஸோடு முஸ்லிம்கள் ராஜி செய்துகொள்ளட்

Y44 Q7
N(41)

டும்; ஜின்னுவின் செல்வாக்குத் தொலைந்துவிடும். ஜின்னு வெறும் செயலாளர், தீர்க்கமான சிந்தனையாளர் அல்லர். நிர்மாண அரசியல் திட்டமொன்றும் அவருக்குத் தெரியாது, புரியாது. சமூகப் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்க அவரால் வழி காண முடியாது. அவருடைய முஸ்லிம் சமூகத்தைப் பொருளாதாரத் துறையில் புனர் நிர்மாணம் செய்ய வேணுமானுல் வேறு யாரேனுந்தான் திட்டம் போட்டுக் கொடுக்கவேணும். அவ்ருக்குத் திட்டமொன்றும் இல்லை என்பது, முஸ்லிம் லீக் மந்திரி சபைகள் நடந்துவரும் வங்காளத்திலும் பஞ்சாபிலும் அவர் தலையிடாதிருப்பது ஒன்றிலிருந்தே தெரியும். அவ்விடங்களில் சுயேச்சையாக ஆள்பவர்கள் ஸ்ரீ. பஸ்லுல் ஹக்கும், ஸ்ரீ. ஸிக்கந்தர் ஹயாத் கானும். ஜீவாதாரப் பிரச்னைகளையும் சிக்கல்களையும் தீர்க்க ஜின்னுவால் முடியாது. ஆனுல் உணர்ச்சிகளைக் கிளப்ப அவர்தான் வரவேண்டும்.

மிஸ்டர் ஜின்னு இப்பொழுதுள்ள நிலையில் பின்வாங்கவும் முடியாது, ஓய்ந்து உட்காரவும் முடியாது. அவர் ஊட்டிய உற்சாகத்திற்கு இரை தேடிப் போடவேண்டியது அவர் பொறுப்பாகிவிட்டது. இதனுல்தான், 'விடுதலை தினம்', 'பாகிஸ்தான் திட்டம்', 'முஸ்லிம் நாடுகள் தினம்' என்றெல்லாம் கிளப்பிவிட்டுக்கொண்டே யிருக்கிருர்.

அவரை வெளியார் லஞ்சம் கொடுத்துத் திருப்ப முடியாது; தாமாகவும் ஓயமாட்டார்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. ______
108187

# பாகிஸ்தான் பிரச்னே

1. பாகிஸ்தான் என்பது என்ன? எந்தப் பிரதேசங்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவை?

'பாகிஸ்தான்' என்ற பதம், பஞ்சாப், ஆப்கானிஸ்தானம் (வடமேற்கு எல்லேப்புற மாகாணம்), காஷ்மீர், ஸிந்து என்ற நான்கு பதங்களின் முதல் எழுத்துக்களுடன் 'ஸ்தான்' என்ற சொல்லேச் சேர்த்து உண்டாக்கப்பட்டிருக்கிறது.

லாகூரில் கூடிய அகில இந்திய முஸ்லிம் லீகிஞல் நியமிக்கப்பட்ட கமிட்டியார் பாகிஸ்தான் பிராந்தியத்தின் எல்லேகளே நிர்மாணித்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது. அநேகமாய் ஜனங்கள் பிரதேசங்களே விட்டு மாறவேண்டி யிராதாம். ஆனல் இந்தியாவில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் முஸ்லிம் வகுப்பினருக்குக் கிடைக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிருர்களாம். அவர்கள் கேட்கப்போகிற பிராந்தியங்கள், ஸிந்து, பலுசிஸ்தானம், பஞ்சாப், வடமேற்கு எல்லேப்புறம், டில்லி மாகாணம், மலே வகுப்பினர் வசிக்கும் இடங்கள், இரண்டு ஜில்லாக்களே நீக்கி வங்காளம், அஸ்ஸாம், தட்சிணத்தில் ஹைதராபாத், காஷ்மீர், சென்னேயில் சில ஜில்லாக்கள் என்று சொல்லப்படுகிறது. இவைகள்

தனித் தனி ராஜ்யங்களாக இருக்குமாம். ஆனால், ஒரு மத்திய முஸ்லிம் சர்க்காருக்கு அடங்கி யிருக்குமாம்.

2. இந்தியா ஒன்று, இரண்டா, பலவா ?

இது பார்ப்பவர்கள் கண்ணையும் மனத்தையும் பொறுத்தது. கண்ணில் கோளாறு இருந்தாலும், மனத்தில் கோளாறு இருந்தாலும் இந்தியா பலவாய்த்தான் தெரியும். இரண்டிலும் கோளாறு இருந்தால், இந்தியா 40 கோடிப் பிரிவுகளாகத் தெரியும். ஏனெனில், இந்தியாவில் இப்பொழுது சுமார் 40 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள் ; ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரிவு !

இந்தியா ஒன்று. பூகோள அமைப்பிலும், இயற்கையிலும், சரித்திர பூர்வமாகவும் இந்தியா ஏகமானது. ஹிமய மலையில் அவள் எழில் முடி பிரகாசிக்கிறது. குமரி முனையில் அவள் திருவடி விளங்குகிறது. மூன்று புறங்களில் கடல், மற்றப் பக்கங்களில் மாபெரும் மலைகள், மத்தியில் விளங்குவது அகண்டமான பாரத தேசம், ஹிந்துஸ்தான்.

3. இந்தியா எக்காலத்திலும் அரசியல், சமூக வாழ்க்கையில் ஒன்று யிருந்ததே யில்லையாமே ?

இருந்திருக்கிறது. எத்தனையோ சிறு ராஜ்யங்கள் ஆங்காங்கே விளங்கிவந்த போதிலும், பேரரசர்கள் பலர் தேசம் முழுவதையும் கட்டி ஆண்டிருக்கிறார்கள். ஹிந்து - முஸ்லிம் சாம்ராட்டுகள் எல்லோரும், தங்கள் எல்லைக்குள் வராத சிறு ராஜ்யங்களையும் சேர்த்துக்கொண்டு, அகண்டமான இந்தியாவை ஆளவே முயற்சித்துவந்தார்கள். ஸ்ரீராமன் காலம் முதல், சந்திரகுப்தன், அசோகன், முகலாய சக்ரவர்த்திகள் காலத்திலும், இன்று பிரிட்டிஷார் காலத்திலும், அதே எண்ணந்தான் நிலைபெற்றிருக்கிறது. இந்தியா என்பது, இமயமலைக்குத் தெற்கே, குமரிக்கு வடக்கே, ஹிந்து குஷக்

குக் கிழக்கே, வங்காள விரிகுடாவுக்கு மேற்கேயுள்ள முழு நாடுந்தான்—இதில் காணி நிலம் குறைந்தாலும் ஏக இந்தியாவிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டதாகும். ஹிந்துக்கள் தினசரி பிரார்த்தனை செய்யும்பொழுது காசியிலிருந்து ராமேஸ்வரம்வரை உள்ள சகல புண்ணிய நதிகளையும், க்ஷேத்திரங்களையும் நினைக்கிறார்களே ஒழிய, ஒரு மூலை ஒரு முடுக்கைப் பற்றிக்கொண்டு, அதுதான் பாரத வர்ஷம் என்று என்றும் மயங்கி யிருந்ததில்லை. இது போலவே, முஸ்லிம்களும் இதுவரை—மிஸ்டர் ஜின்னா, ஜனாப் பஸ்லுல் ஹக், டாக்டர் ஏ. அப்துல் லத்தீப், ஸர் ஸிக்கந்தர் ஹயாத்கான் முதலியோர் தலையெடுக்கும் வரை—எண்ணிவந்திருக்கிறார்கள். முஸ்லிம் லீகின் ஞான குருவாகிய காலஞ்சென்ற புலவர் இக்பால்,

**'ஸாரே ஜஹா(ங்)ஸே அச்சா ஹிந்துஸ்தான்!'**

('எல்லா இடங்களைப் பார்க்கினும் ஹிந்துஸ்தானே உயர்ந்த இடம்') என்று பாடியிருக்கவில்லையா? அக்பர் பாகிஸ்தானுக்காகவா போராடினார்? ஔரங்கஜீப், தம் முன்னோர்களின் பூர்விக ஸ்தானத்தைச் சூழ்ந்த சொற்ப இடத்தையா வேண்டினார்?

## 4. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரு - தேசத்தார்களா?

ரஷ்யர்கள் ஸ்லாவ் பிரிவினர்; ஜெர்மானியர் ஆரியர். இந்த மாதிரியா ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது? இல்லை. முஸ்லிம்கள் எல்லோரும் வெளியிலிருந்து வந்த தனித் தேசத்தவரா? இல்லை. இந்தத் தேசத்தார்தான் பின்னால் முஸ்லிம்களாக மாறினார்கள். வந்த முஸ்லிம்கள் கொஞ்சப் பேர்தான்; இப்பொழுது 8 கோடியாகிவிட்டார்கள். ஆகவே, அவர்களில் பெரும்பாலோர் ஹிந்துக் குடும்பங்களின் வாரிசுகள். இப்பொழுது மதத்

தில் வேருக இருக்கிருர்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. மாகாணங்களிலுள்ள முஸ்லிம்கள் அந்தந்த மாகாண பாஷைகளில்தான் பேசுகிருர்கள். ஹிந்துஸ்தானியோ, உருதுவோ, அரபியோ தெரியாத தமிழ் முஸ்லிம்கள் எத்தனையோ பேர் இருக்கிருர்கள். ஹிந்துக்களில் கையெழுத்தே போடத் தெரியாமலிருக்கும் ஜனங்களைப் போலவே முஸ்லிம்களிலும் கோடானு கோடி நிரட்சரகுட்சிகளுண்டு. இடம், பாஷை, சரீர அமைப்பு, அரசியல், பொருளாதாரம், தேவைகள்—எல்லாம் இரு மதத்தினருக்கும் பொதுவானவை. அதிலும் நான்கு நூற்ருண்டுகளாக இந்தியா அனுபவித்து வரும் துயரங்களில், இரு மதத்தினரும் சம - துக்கிகள். இருவர் உடல்களிலும் ஒரே ரத்தந்தான் ஓடுகிறது.

வடமேற்குப் பகுதியில் பஷ்டு, காஷ்மீரி, பஞ்சாபி, ஸிந்தி, பலூச்சி முதலிய மாறுபட்ட பாஷைகள் பேசக் கூடிய இடங்களெல்லாமே பாகிஸ்தானில் ஒன்று சேர முடிந்தால், இந்தியா முழுவதும் ஏன் ஒன்றுசேர முடியாது?

முஸ்லிம் மன்னர்கள் காலத்தில்கூட, அதிகாரம் கைவசம் இருந்தும்கூட, இரு-தேசத்தார் என்ற தோரணையில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் நடத்தப்பட்டதில்லை. இருவருக்குள்ளும் இருந்த பழக்க வழக்க வித்தியாசங்களைக் குறைக்க வழி தேடினர்களே அன்றி, பெருக்க வழி தேடவில்லை. ஹிந்துக்கள் முஸ்லிம்களிடமிருந்து எத்தனையோ பழக்கங்களைப் பெற்றிருக்கிருர்கள். அது போலவே முஸ்லிம்களின் பழக்கங்களில் பல ஹிந்துக்களுடையவை. ஹிந்துக்கள் தானே பின்னல் இஸ்லாமில் சேர்ந்தவர்கள்! அதனல் பழைய பழக்க வாசனைகளை உதறித் தள்ள முடிந்திராது. எனவே, இஸ்லாமில் சேர்ந்த ஹிந்துக்கள், சேராத ஹிந்துக்கள் என்ற இரு பிரிவினரே முன்னல் இருந்து வந்திருக்கிருர்கள். பொதுவான பழக்கங்களுக்கு இது அடிப்படை. முஸ்

லிம்கள் 'காபிர்'களுடைய பழக்கங்களை விட்டுவிட வேண்டு மென்றால், பிரசாரம் செய்தால் போகிறது. இதற்கு ஒரே யடியாய்த் தேசத்தையே பல கூறு போடவேண்டும் என்பா னேன்? முஸ்லிம்களுக்குள்ளும் எத்தனையோ பிரிவுகள், வழக்க வேறுபாடுகள், பாஷை வேறுபாடுகள் உண்டு. ஆனால் ஒவ்வொருவரும் தனிப் பிரிவுகளாகப் பிரியாமல், ஒரே கடவுளைத் தொழுது, ஒரே நபிநாயகத்தை நம்பி வர முடிகின்றது. சொற்ப வித்தியாசங்கள் அவர்களைப் பல-தேசத்தவராக ஆக்கவில்லை.

முஸ்லிம்களிலும், துருக்கி, எகிப்து, அரேபியா, ஆப் கானிஸ்தானம் முதலிய நாடுகளி லுள்ளோர் எல்லோரும் ஒரே மாதிரிப் பழக்க வழக்கங்க ளுடையவர்களா? இல்லை. அப்படியானால் ஹைதராபாத் ஸாயபுவும், எல்லைப்புறப் பட் டாணியரும், மற்ற இந்திய முஸ்லிம்களும் அந்த நாட்டார் களோடு மதத்தைத் தவிர வேறு எதில் ஒற்றுமை யுள்ளவர் கள்? வெளி நாட்டார்களைப் பார்க்கிலும் இவர்களுக்கு ஹிந்துக்களோடுதான் அதிக ஒற்றுமை உண்டு.

5. முஸ்லிம்களின் மதமும் தத்துவ ஞானமும் முற்றிலும் மாறுபட்டிருப்பதால், ஹிந்துக்களோடு ஒரே இடத்தில் வாழ முடியாதல்லவா?

இதில் முதல் பகுதிதான் உண்மை. இரண்டாம் பகுதி உண்மையில்லை. ஏன் ஒரே இடத்தில் வாழ முடியாது? துருக்கியருக்கும் அராபியருக்கும் வேற்றுமைகளே இல்லை யோ? இஸ்லாத்தைப் பின்பற்றுகிறவர்கள் உலகம் எங்கும் ஒரே மாதிரி வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள வில்லை. தேசந்தோறும் மாறுபாடுகள் உண்டு. ஆனால் அடிப்படையான மார்க்க தத்துவம் எல்லோராலும் பின் பற்றப்படுகிறது. இஸ்லாத்தின் அடிப்படையான தத்து

வமே முக்கியமாகக் கருதப்பட்டு, மற்ற வாழ்க்கை முறைக ளெல்லாம், காலத்திற்கும் தேசத்திற்கும் தக்கபடி அமைக் கப்பட்டிருக்கின்றன. ஆதலால் தாங்கள் பிறந்த ஜன்மபூமி யிடம் பற்றுக்கொள்ள முஸ்லிம்கள் விரும்பாதது வியப்பே யாகும். இந்தியா 'கண்டம்' 'கண்டம்' என்கிறார்கள். இந்தக் கண்டத்தையும் ஆண்டவன்தானே, ஏகமாக, மற்ற உலகத்திலிருந்து பிரித்து, தனி நாயகமாகப் படைத்திருக்கி றான்!

6. **முஸ்லிம்களுக்கு வேறு என்னதான் பாதுகாப்பு உண்டு? பேதமில்லை, ஒரு தேசத்தார்—எல்லாம் சரிதான். ஆனால், முஸ்லிம்கள் ஹிந்துக்களல்லர் என்பது உண்மை யல்லவா? அவர்களுடைய மதம், மத உரிமை கள், கலைப் பண்பு.—எல்லாம் பாதுகாக்கப்பட வேண் டாமா? ஹிந்துக்களையும், மற்றவர்களையும் எதிர்பார்த்து எதிர்பார்த்து இவைகளைப் பாதுகாக்க முடியுமா?**

உண்மைதான். முஸ்லிம்களுக்குப் பாதுகாப்புகள் வேண்டியதுதான். பிரார்த்தனை, வழிபாடு முதலியவற்றிற் குப் பூரண உரிமை வேண்டியதுதான். இந்திய அரசியல் அமைக்கப்படும்போது, முதலிலேயே இந்த உரிமைகள் எல்லாம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று சட்டம் செய்து விடலாம். யாரும் இதுவரை இதை ஆட்சேபித்ததில்லை— ஜின்னாவைத் தவிர. அவர் ஏன் ஆட்சேபிக்கிறார் என்றால், அவர் பாதுகாப்பையே விரும்பவில்லை — தேசமே அல்லவா அவருக்கு வேண்டும்! முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு மட்டு மின்றி, ஜனத்தொகையின் அளவுக்கு மேலேயே வசதிகள் செய்து தரப்படும். விசேஷ உரிமைகளையும் அளிக்கலாம். ஆனல் — ஆனால் — இவற்றால், அவர்கள் இந்தியரல்லாதவர் என்று ஆகிவிடாது. அவர்கள் முஸ்லிம்களா யிருக்கட்டும்,

வைதீகமா யிருக்கட்டும் — ஆனால், இந்தியராயும் இருக்க வேண்டும். இந்த ஒற்றுமை பெரிதா? பாகிஸ்தான் பெயரால், ராஜ்யங்கள் அமைத்துக்கொண்டு, வாழை நாரால் கட்டிக்கொள்வது போல் ஒவ்வொரு ராஜ்யமும் ஒன்றையொன்று கட்டிக்கொண்டு வாழ்வது மேலா? அந்த வாழ்வும் நெடுநாள் செல்லாது.

7. **காங்கிரஸ் மந்திரி சபைகளை ஏற்று நடத்தும் பொழுது செய்த அக்கிரமங்களை மறக்க முடியுமா? இம்மாதிரி அக்கிரமங்களிலிருந்து முஸ்லிம்கள் தப்புவதற்குப் பாகிஸ்தானைத் தவிர வேறு என்ன வழி?**

காங்கிரஸ் மந்திரி சபைகள் முஸ்லிம்கள் விஷயத்தில் அட்டூழியங்களைச் செய்துவிட்டதாக முஸ்லிம் லீகினர் பிராதுகளைத் தயார் செய்தனர். அவைகளைப் பிரசாரம் செய்தனர். அவைகள் மலை போன்ற பொய்கள் என்றும், ஹிமய மலையைப் போன்ற பொய்களென்றும் பதில் சொல்லப்பட்டது. 'ஒரு நீதிபதியின் முன்பு அவைகளை விசாரணைக்கு வைத்திடும்' என்று மிஸ்டர் ஜின்னா அறைகூவி அழைக்கப்பட்டார். 'அந்தக் காகிதக் கட்டுக்களை யெல்லாம் வைஸ்ராயின் சந்நிதானத்தில் ஏற்கனவே சமர்ப்பித்தாய் விட்டது,' என்று அவர் பதில் சொல்லிவிட்டார். அவைகளை விசாரிப்பதற்கு இந்தியாவின் சம்ராட்டாகிய ஜார்ஜ் மன்னர், ஒரு ராயல் கமிஷனை நியமித்து, அந்தப் பிராதுக் கட்டுக்களை விசாரிக்க வேண்டும் என்று முஸ்லிம் லீகினர் வேண்டிக் கொண்டனர். லண்டனி லிருக்கும் இந்தியா மந்திரி, 'இத்தனை பிராதுகளை ஒரு ராயல் கமிஷன் விசாரிக்கப் புறப்பட்டால், குறைந்தது ஆறு மாதங்கள் பிடிக்கும்; அந்த ஆறு மாதங்களும் இவ்விரண்டு சமூகங்களுக்குள்ளும் கசப்பே வீசிக்கொண்டிருக்கும்; ஆகையினால் விசாரணை

வேண்டாம்,' என்று, அந்த 'ராயல் கமிஷன்' நியமன வேண்டு கோளை அங்கீகரிக்கவில்லை.

அந்தப் புகார்கள் ருஜூப்பிக்கப்படவே யில்லை, விசாரிக் கப்படவும் இல்லை! ஆயினும் ஆதாரமற்ற அந்தப் புகார் களையே அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு பாகிஸ்தான் வேண்டப்படுகிறது.

மிஸ்டர் ஹக் பீஹார் மாகாணத்தில் நடந்த 'அட்டூ ழியங்களை'க்குறித்து ஒரு ஜாபிதாவைப் பிரசுரித்திருந்தார். அதில் 100-ல் 99 பசு வதையைக் குறித்தே இருந்தன. படிப் பதற்கு அந்த ஜாபிதா மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது. பல நகரங்களில், முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ராஜி ஏற்பட்டு, பசு வதையை நிறுத்துவதாக முஸ்லிம்கள் உறுதி கொடுத்துவிட்டார்கள். இதை பஸ்லுக் ஹக்கால் சகிக்கவே முடியவில்லை.

ஆயினும், இந்தப் புகார்கள் விஷயத்தில், பிரிட்டிஷார் நடந்துகொண்டதுதான் மிகவும் விசித்திரம். மைனரிட்டிகளை மெஜாரிட்டிகள் தொந்தரவு செய்யாமல் பாதுகாப்பதற்கு, கவர்னர்களுக்கு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கவர்னர்கள் அந்த அதிகாரத்தைப் பிரயோகிக்காததனால், காங்கிரஸ் மந்திரிகள் அக்கிரமங்கள் செய்யவில்லை யென்பது தான் கவர்னர்களுடைய அபிப்பிராயமா யிருக்கவேண்டும். 'மௌனம் சாதிக்க வேண்டாம். தங்களுடைய அபிப்பி ராயத்தை வெளியிடுங்கள்' என்று கவர்னர்களைக் கேட்டுக் கொண்டதற்கு அவர்கள் வாயையே திறக்கவில்லை!

மகா யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. சரியான முனையில் எகிப்தும், துருக்கியும், ஸிரியாவும், பாலஸ்தீனமும் இருக் கின்றன. இவை யெல்லாம் முஸ்லிம் நாடுகள். முஸ்லிம் லீக் சொல்வதை முழுப் பொய் என்று சொல்வது, அந்த முஸ்லிம் நாடுகளின் கோபத்தை யல்லவோ கிளப்பிவிடும்! நிஜம்

என்று சொன்னால், ஹிந்துக்கள் நியாயமான கோபத்தைக் கொள்ளுவார்கள். அவர்களுடைய உதவியும் தேவை. ஆகையினால், 'மௌனம் கலகம் நாஸ்தி' என்பதைக் கவர்னர்கள் அனுசரித்துவிட்டார்கள் போலும்!

8. **அரசாங்கத்தார் பாகிஸ்தான் திட்டத்தையோ, லீகின் போக்கையோ கண்டிக்கவில்லை. சாதாரணமாக வகுப்புத் துவேஷத்தை வளர்ப்பவர்களையே பரம தண்டனைகளுக்குள்ளாக்கும் அதிகாரம் அவர்களுக்கிருந்தும் பேசாதிருக்கிறார்களே! அவர்களுடைய மௌனமே லீகின் திட்டத்தை ஆதரிக்கும் பொழுது, பாகிஸ்தான் விபரீதம் என்று எப்படிச் சொல்லலாம்?**

இது ஒரு நல்ல கேள்விதான். இதற்கு, 'மௌனமாயிருந்து ஆதரிப்பார்களானால், வாய் திறந்து ஆதரிப்பதாக ஒரு வார்த்தை சொன்னால் வாய்முத்து உதிர்ந்து விடுமோ?' என்றுதான் நாம் கேட்கலாம். பிரிட்டிஷாருடைய மௌனம் கால நிலையைப் பொறுத்தது. வேறொன்றுமில்லை.

இந்தியா மந்திரி அமெரி, தமது கடைசிப் பேச்சில் பாகிஸ்தானைப்பற்றி ஒரு மூச்சுக்கூட விடவில்லை. மஹாத்மா காந்தியிடம் எந்த விஷயத்தைக் குறித்தும், வைஸராய் மௌனத்தையே சாதித்தார். முஸ்லிம் லீகில் பாகிஸ்தானத்தை இதற்கு முன்பு எதிர்த்தவர்கள்கூட வாயையே திறவாமல் ஏகமனதாகப் பாகிஸ்தான் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

மத்திய சர்க்கார் விஷயத்திலும் காங்கிரஸ் மாகாணங்கள் விஷயத்திலும் மிஸ்டர் ஜின்னா வேண்டிக்கொண்டதையெல்லாம் வைஸராய் மறுத்துவிட்டார். வைஸராய் அப்படிச் செய்தும், தோற்றத்தில் மிஸ்டர் ஜின்னாவுக்கு முழுத் தோல்வி ஏற்பட்டிருந்தும், வைஸராயின்மீது

மிஸ்டர் ஜின்னுவுக்கும் முஸ்லிம் லீகுக்கும் கோபம் ஏற்படுவதற்கு நியாயம் இருந்தும்கூட, மிஸ்டர் ஜின்னுவாவது அவருடைய லீகாவது கொஞ்சம்கூடக் கோபத்தையே காட்டவில்லை. கொஞ்சம்கூடக் கோபமே யில்லை என்பதை மாலிக் பர்க்கத் அலி மறு தினமே பத்திரிகைகளில் தெளிவாக்கிவிட்டார்.

அமெரியின் மௌனம், வைஸராய் காந்திஜியிடம் காட்டிய மௌனம், லீகின் ஏகோபித்த அபிப்பிராயம், லீகின் கோபமின்மை — இதெல்லாம் எதைக் காண்பிக்கிறது?

ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இம் மூன்று வல்லரசுகளைக் குறித்துப் பிரதம மந்திரி சர்ச்சில் என்ன சொல்லுகிருர்? பிரசுரிக்கப்பட்ட தகவல்களைப் பார்த்தால் ஜப்பானுக்கு யாதொரு லாபத்தையும் காணும்; ஆகையினுல் ரகசிய ஷரத்துக்கள் இருக்கவேண்டும், அவைகள் ஜப்பானுக்கு இனிமையா யிருக்கவேண்டும் என்று ஊகித்தார். இது போல் ஊகிக்கும்படி வைஸராய்க்கும் ஜின்னுவுக்கும் இடையே என்ன ஏற்பாடு நடந்தது என்பது இன்னும் புலப்படவில்லை.

9. **ஹிந்துக்களிடமும் காங்கிரஸிடமும் நீதியையும் நியாயத்தையும் எடுத்துச் சொல்லிச் சமாதானம் செய்து கொள்ள முற்படாமல், ராஜி பேசவே இடமில்லை என்று கதவை லீக் அடைத்துவிட்டதே! இதனுல், பிரிட்டிஷாருக்கு பாகிஸ்தான் ஏற்படுவதில் ரொம்ப அக்கரை இருக்கிறது என்று ஏற்படுகிறதல்லவா?**

இதுவும் ஓர் ஊகமான கேள்வி. இப்படியொன்றும் இல்லை. பாகிஸ்தான் பேச்சு பிரிட்டிஷாருக்குத் தற்காலிக உதவிதான். ஆயினும் அது ஏற்பட்டுத் தீரவேண்டும் என்று அவர்கள் நினைக்கமாட்டார்கள். அவர்கள் கண்ணை மூடிக்

கொண்டு பார்க்கும் குருட்டு ராஜ தந்திரிகள் அல்லர். யுத்த காலத்திற்குப் பின் ஏற்படுவது ஒருபுறமிருக்க, இப்பொழுது அவர்களுக்கு யுத்தப் பிரச்னை ஒன்றே முழுமுதல் பிரச்னை.

யுத்தம் முடிந்து பாகிஸ்தான் அமுலுக்கு வர வேண்டிய முகூர்த்தத்தில், கைக்கு எட்டினது வாய்க்கு எட்டாமலும், வாய்க்கு எட்டினது தொண்டைக்கு எட்டாமலும், தொண்டைக்கு எட்டினது விக்கலெடுத்து வயிற்றுக்கு எட்டாமலும் போகக்கூடும்.

யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றி ஏற்பட்டுவிட்டால், பாகிஸ்தான் வாதிகளைத் தகர்த்துவிடுவதற்குப் பிரிட்டனுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்? யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றி யேற்படாமல் போகும் பட்சத்தில், பாகிஸ்தான் என்ன கதியாவதென்ன, ஹிந்துஸ்தான் என்ன கதியாவதென்ன?

ஆகையினால், யுத்த நிலைமையைக் கண்டு, வைஸராயும் இந்தியா மந்திரியும் எவ்விதம் நடந்துகொண்ட போதிலும், அது மர்மத்துடன் கூடிய மௌனமா யிருந்தாலும், விபரீத அர்த்தங்கள் கற்பித்துக்கொண்டே போவதில் பயனில்லை.

**10. ஹிந்து இந்தியா, முஸ்லிம் இந்தியா என்று பிரித்து விட்டு விட்டால், மோதுதலும் தகராறும் ஒழியுமல்லவா? சிறுபான்மையோர் என்ற பிரச்னையும் தீருமல்லவா?**

சிறுபான்மையோர் பிரச்னை, பாகிஸ்தானால் அதிகக் குழப்பத்தையே உண்டாக்கும். பாகிஸ்தானிலும் ஹிந்துக்கள் இருப்பார்கள். 'ஹிந்து'ஸ்தானிலும் முஸ்லிம்கள் இருப்பார்கள். முஸ்லிம்கள் தங்களுடனுள்ள சிறுபான்மை ஹிந்துக்களைத் துன்புறுத்தினால், வெளியிலுள்ள ஹிந்துக்கள் தங்களுடனுள்ள முஸ்லிம்களை எப்படி நடத்துவார்கள்?

இப்பொழுது இந்தியாவுக்குப் பிரச்னையாயிருப்பது முஸ்லிம் மைனுரிட்டி விஷயம். இதற்குப் பதிலாக, ஒரு பாதியில் ஹிந்து மைனுரிட்டியையும், மறு பாதியில் முஸ்லிம் மைனு ரிட்டியையும் ஏற்படுத்துவதால், மைனுரிட்டி பிரச்னை இரட் டிக்கிறதா, ஒழிந்துபோகிறதா?

11. லாபமோ, நஷ்டமோ, முஸ்லிம்கள் தங்களுக்கு வேண்டு மென்று கேட்பதை, மற்றவர்கள் ஏன் ஆட்சேபிக் கிறுர்கள்?

முஸ்லிம்கள் எல்லோரும் — 8 கோடிப் பேரும் — பாகிஸ்தான் கேட்கவில்லை. பலர் இப்பொழுது உற்சாகமாய் இதை வரவேற்றுலும், நிச்சயமாய்ப் பாகிஸ்தான் வந்துவிடப் போகிறது என்று ஏற்பட்டால், அவர்கள் பின்வாங்கவும் கூடும். 8 கோடி முஸ்லிம்களும் வேண்டினுல் அதை யாரும் தடுக்கமாட்டார்கள், தடுக்கவும் முடியாது என்று மகாத்மா காந்தியே சொல்லியிருக்கிறுர்.

எல்லோரும் வேண்டாவிட்டாலும், மிஸ்டர் ஜின்ன வைப் போன்ற முஸ்லிம் நலத்தில் அக்கரையுள்ளவர்கள் பாகிஸ்தானைக் கேட்கும்பொழுது ஆட்சேபிப்பது சரியா என்று நினைக்கலாம். இவர்கள் கேட்பதுகூட உண்மையா என்பது சந்தேகந்தான். வேறு ஏதோ அவலை நினைத்துக் கொண்டு, இவர்கள் இந்தப் பாகிஸ்தான் உரலை இடிப்பது போலத் தெரிகிறது. பாகிஸ்தானையே கேட்டுவிட்டால், கிடைத்ததெல்லாம் ஆதாயம் என்று எண்ணுவது போல் தெரிகிறது.

12. பாகிஸ்தான் திட்டத்திலிருந்து வேறு நன்மையான விஷ யம் ஒன்றும் புலப்படவில்லையா?

நன்ருய்ப் புலப்படுகிறது. சில படித்த முஸ்லிம்கள், அரசியல் பதவிகளை அநுபவித்த முஸ்லிம் தலைவர்கள்,—

இவர்களுடைய மனப்போக்கு எப்படி யிருக்கிறது என்பது புலப்படுகிறது. 'எப்பொழுதுமே நாங்கள் பாகிஸ்தானைப் போன்ற பிரிவினையையே மனசில் வைத்துக்கொண் டிருந் தோம்' என்று இப்பொழுது சொல்லுகிறார்கள். எப்பொழு துமே மனசுக்குள் ஊறிக்கொண்டிருப்பது வெளியே அம்ப லத்துக்கு வர, மூன்றாவது பானிபட் யுத்தத்திலிருந்து இன்றுவரை 300 வருஷங்க ளாகியிருக்கிறது!

## 13. பாகிஸ்தானுக்குப் பதில் வேறு என்ன யோசனை?

இதுதான் சரியான கேள்வி. உண்மையிலேயே முஸ் லிம்களின் நலன்களுக்குப் பாதகம் ஏற்பட்டிருக்குமானால், எதிர்காலத்தில் ஏற்படலாம் என்ற பயம் இருக்குமானால், சட்ட திட்டங்களால் அந்த நலன்களைப் பாதுகாக்க வேண்டி யது. வெள்ளைக்காரரைப் பின்பற்றி முஸ்லிம் தலைவர்கள் ராஜதந்திரத்தைப் படிக்கவேண்டும். ராஜீயச் சதுரங்கத் தில் துணிந்து காய்களை உருட்டி விளையாடி, வெற்றிபெற முயற்சிக்கவேண்டும். லீக் தலைவர்கள் இப்படித்தான் சாமர்த் தியமாய்ச் செய்திருக்கிறார்கள். ஆனால், செய்ததை அதிக மாய்ச் செய்ததுதான் அவர்கள் பிழை. நாகரிக வெள்ளைக் காரர்கள், மிகப் பெரிய குழப்பங்கள் வந்த காலத்திலும், வெறி கொள்ளுவதில்லை; தடபுடல் செய்வதில்லை; முதலி லேயே கோடரியால் வெட்டிவிட்டுப் பிறகு ஒட்டுப் போட் டுத் தைக்க உட்காருவதில்லை.

அத்தியாயம் - 15

# அபிப்பிராய வெள்ளம்

## 1. முஸ்லிம் லீக்

மிஸ்டர் ஜின்னா:

'இந்தியாவின் பிரச்னை வகுப்புக்கள் சம்பந்தமான தன்று. அது ஒரு பல-தேசப் பிரச்னை. இந்த அடிப்படையான உண்மை உணரப்படாதவரை, அமைக்கப்படும் எந்த அரசியலமைப்பும் நாசமுறும். அது முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாமல், பிரிட்டிஷாருக்கும், ஹிந்துக்களுக்குமே நாச கரமானது. பெரும்பான்மைச் சமூகங்களாகிய ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தனித் தனி ராஜ்யங்கள் அமைக்க வழி காட்டுவதே நம் எல்லோருக்கும் நல்லதான ஒரே வழி. இந்த ராஜ்யங்கள் ஒன்றோடொன்று விரோதமா யிருக்கக் காரணமே யில்லை. பரஸ்பர ஒப்பந்தங்களின் மூலம் ஒற்றுமை பெறலாம்.

'ஹிந்துக்களும் முஸல்மான்களும் மதத்தில் மட்டும் வேறுபட்டவர் அல்லர்; சட்ட திட்டங்களிலும் கலைப் பண்பி

லும் வேறுபட்டவர்கள். இருவரும் இரு தனி நாகரிகங்களைக் கொண்டவர்கள் என்று சொல்லலாம்.

'ஹிந்து நண்பர்கள் இஸ்லாம், ஹிந்து மதம் இரண்டின் உண்மை நிலையை உணராமலிருப்பது புரியவில்லை. இரண்டும் மதங்கள் அல்ல, இரண்டு மாறுபட்ட சமூக அமைப்புக்கள். ஹிந்துக்களும் முஸல்மான்களும் ஒரு பொதுவான தேசிய அமைப்பாகச் சேர முடியும் என்பது வீண் கனவு. சீக்கிரத்தில் நாம் இந்த ஏகமான தேசீய அமைப்பு என்பதைப் பற்றிய கருத்துக்களை மாற்றிக்கொள்ளாவிட்டால், இந்தியா நாசத்தை நோக்கிச் சென்றுவிடும். ஹிந்துக்களும் முஸல்மான்களும் வேறுபட்ட இரண்டு மதத் தத்துவ ஞானங்களை உடையவர்கள். அதுபோலவே சமூகப் பழக்கங்களும், இலக்கியங்களும். இருவரும் கலப்பு விவாகமோ, சமபந்தி போஜனமோ செய்வதில்லை. வாழ்க்கையைப் பற்றியும் அவர்கள் கருத்துக்கள் வேறுபட்டவை. இவர்கள் வெவ்வேறு புராணங்கள் உடையவர்கள். வெவ்வேறு வீரர்களைப் போற்றுகிறவர்கள்.

'பால்கன் தீபகற்பத்தில் எழெட்டு ராஜ்யங்கள் இருக்கின்றன. இதுபோல் எத்தனையோ இடங்களில் இருக்கின்றன. இந்தியாவில் மட்டும் ஒரே தேசம், ஒரே மத்திய ராஜாங்கம் என்ற போக்கைப் பின்பற்றுவது முடியாது. 1200 வருஷங்களாக ஒற்றுமைப்படுத்த முடியவில்லை என்பதே சரித்திர அத்தாட்சி. எப்பொழுதும் இந்தியா, ஹிந்து இந்தியா, முஸல்மான் இந்தியா என்று இரண்டாகவே இருந்து வருகிறது.

'பிரிட்டிஷார் ஜயித்த பிறகுதான் ஒரு இந்தியா என்ற கற்பனை ஐக்கியம் தோன்றியது. பிரிட்டிஷ் ஈட்டிகளே இந்திய ஐக்கியத்தைக் காக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி மாறினால், சென்ற ஓராயிர வருஷமாய் ஏற்படாத ஆபத்துக்கள்

உடனே ஆரம்பமாகிவிடும். 150 வருஷம் ஆண்டுவிட்டு, பிரிட்டிஷார் இப்படியா வைத்துப் போகப் போகிறூர் கள்?

'முஸல்மான்கள் மைனூரிட்டி இல்லே. ஹிந்து காங் கிரஸ் தலைமை அதிகாரிகள் ஒத்துழையாமை செய்யத் தீர் மானித்து விலகிய போதிலும், 11 மாகாணங்களில் நான்கில் சட்டசபை ஆட்சி நடைபெறுகிறது. அங்கெல்லாம் முஸ் லிம் ஜனங்கள் அதிகம்.

'பயமுறுத்தல்கள் மிரட்டல்களுக்கு நாங்கள் பயந்து விட்டுக்கொடுக்க மாட்டோம்.

'மிஸ்டர் காந்திக்கும் காங்கிரஸுக்கும் நான் ஒன்று சொல்லட்டுமா? அவர்கள் நாம் ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் அரசியல் நிர்ணய சபைக்காகப் போராடுகிறூர்கள்...மிஸ்டர் காந்தி, "நானும் ஹிந்து, என் காங்கிரஸும் ஹிந்துக்களு டைய சபைதான்" என்று சொல்ல ஏன் பெருமை கொள்ளக்கூடாது? "நான் முஸ்லிம், முஸ்லிம் லீகும் முஸ் லிம்கள் சபைதான்" என்று சொல்வதில் நான் பெருமை கொள்ளுகிறேன். மிஸ்டர் காந்தி ஒரு ஹிந்துத் தலைவராக வரட்டும், நான் முஸல்மான்களின் பிரதிநிதியாக அவரைச் சந்திக்கிறேன்.

'நமக்குத் தெரியாமல், பின்புறமாக, நம் சம்மதமில்லா மல், எந்த ஏற்பாடும் நடக்கக் கூடாதென்று நாம் பிரிட்டிஷ் சர்க்காரிடம் சொல்லிவிட்டோம். முஸல்மான்கள் வேண் டாத எந்த அரசியல் அமைப்பும் நம் தலைமேல் சுமத்தப் படுவதை நாம் வேண்டவில்லை.

'பிரிட்டிஷ் சர்க்கார் இந்த உறுதியைக் கொடுக்கு மென்று நம்புகிறேன். அவர்கள் (உறுதிமொழி) கொடுத் தாலும் கொடுக்காவிட்டாலும், நாம் நம் பலத்தையே நம்பிக் கொண்டிருக்கிறோம்.'

டாக்டர் கே. எம். அஷ்ராப் (ஸோஷலிஸ்ட்):

'பாகிஸ்தானின்மீது முஸ்லிம்கள் மோகம் கொண்டிருக்கிறார்கள். காந்திஜியின் ராம ராஜ்யத்திற்குப் பதில் பாகிஸ்தான். 1930-ல் கவி இக்பால் பாகிஸ்தானை நடமாட விட்டார். அது வெறும் அழகிய கவிதையாகக் கருதப்பட்டது. இன்றைக்கு நிஜ உலகத்தில் வீரமாக நடமாடுகிறது. இதற்காக உள்நாட்டு யுத்தங்கள் நடைபெறலாம்.'

நவாப்ஜாதா லியாகத் அலி கான்:

'பாகிஸ்தான் என்றால், உடனே உதறி எறிகிறார்கள்! இது மிஸ்டர் ஜின்னாவின் வினோதக் குயுக்தியா? தீராத சமூகப் பிரச்னையைத் தீர்த்து வைக்கும் சத்திய வழி இது. சில அரசியல்வாதிகள், "மதம் என்பது தனி விஷயம்—கடவுளுக்கும் தனி மனிதனுக்குமுள்ள அந்தரங்க விஷயம்" எனும்போது எனக்குச் சிரிப்பு வருகிறது. அவர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இஸ்லாம் சர்வாங்க சட்டம்—சநாதனத் திட்டம். சுதந்திரம் வேண்டுமானால் பாகிஸ்தானை ஏற்றுக்கொள்ளுங்கள்! சென்ற வழியிலே சென்று, கால் வலியெடுக்க வேண்டாம். இதோ மிஸ்டர் ஜின்னா புதிய ராஜபாட்டை போட்டுக் கொடுத்திருக்கிறார். பிரிட்டிஷ் ஈட்டிகளுக்குக் கட்டுப்பட்டது போதும். நாம் பிரிந்து அன்புடன் வாழலாம் என்றால், கோபம் ஏன் புயலைப் போல் அடிக்கிறது! எங்களை அதமர்கள் என்கிறார்கள். எங்களை ஆங்கில ஏகாதிபத்தியத்தின் தோழர்கள் என்கிறார்கள். இதையெல்லாம் நாங்கள் அவமதிக்கிறோம்.

'ஹிந்துக்களுக்கு மெஜாரிட்டி இனிப்பாக இருக்கிறதல்லவா!—அந்த இனிப்பை முஸ்லிம்களுக்கு வேண்டுகிறோம். முஸ்லிம்கள் மெஜாரிட்டியாக இருந்தால் அவர்கள் ஒருகாலும்

அநியாயம் செய்யமாட்டார்கள். இப்போது பாருங்கள்—மந்திரி சபையில் முஸ்லி மல்லாதாருக்குச் சரிபாதி ஸ்தானம் கொடுக்கிறார்கள். மத்திய மாகாணத்தில் ஒரு முஸ்லிமைச் சொற்ப காலம் மந்திரியாக வைத்துக்கொண்டு, பின்னிட்டுக் கல்தா கொடுத்தார்கள். வேறு ஒருவரையும் நியமிக்கவில்லை. ஒரிஸா மந்திரி சபையில் ஆதிமுதல் முஸ்லிம் மந்திரியே கிடையாது. யார் மிரட்டினாலும், என்ன மிரட்டினாலும், முஸ்லிம்கள் இந்தியாவில் மைனாரிட்டியாக வாழ முடியாது. பிரிவினையானால் சண்டையாகும் என்கிறார்கள். அதனால் என்ன ஏற்படுகிறது? மனப்பான்மை அந்த அழகில் இருக்கிறது என்றுதான் அர்த்தம். துண்டு போட்டுவிட்டால் முட்டலுக்கும் மோதலுக்கும் இடமில்லை. பிரிவினையில்தான் உண்மையான ஒற்றுமை ஏற்படும்.'

நவாப் ஸர் எம். முகம்மது யூசுப்:

'மிஸ்டர் ஜின்னாவின் மனது புழுத்துப் போய்விட்டது என்று சிலர் சொல்லுகிறார்கள். அது பிசகு. மிஸ்டர் ஜின்னாவின் மூளை வெகு ஜோராக வேலை செய்கிறது. காங்கிரஸ், தனது மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு, தேசத்தை நாசம் செய்யப் பார்க்கிறது. இந்தியா ஒரு தேசம் என்று இன்னமும் பேசிக்கொண்டேயிருந்தால், அது விபரீதம்தான். சுய நிர்ணயத்தைப் பூஜிக்கும் காங்கிரஸ் — இந்தப் பாகிஸ்தானைக் கண்டு பயப்படும்போது — நமக்குச் சிரிப்புத்தான் வருகிறது. பாகிஸ்தான் மூலமாக நமது பிரச்னைகளைச் சாச்வதமாக, சிநேகமாகத் தீர்த்துக்கொள்ளலாம்.'

ஸர் கரீம்பாய் இப்ராஹீம்:

'அவர்களின் மனத்துக்கு பாகிஸ்தான் மருந்தும் விருந்துமாக இருக்கிறது. மிஸ்டர் ஜின்னாவுக்குத்தான்

என்ன பொறுமை! ஒற்றுமைக்காக அவர் என்ன பாடுபடுகிறார்! காங்கிரஸ்தான் சமூகவாதக் கட்சி. அதன் வித்யா மந்திரமும், வந்தே மாதரமும், வார்தா திட்டமும் மகா மோசம்!

'லாலா லஜபதிராயும் ஸி. ஆர். தாஸும், "முஸ்லிமும் ஹிந்துவும் ஒருகாலும் சந்திக்க மாட்டார்கள்," என்று சொல்லிவிட்டார்கள். காங்கிரஸின் தேசீயம் தேசத்தின் மூளையையே கெடுத்துவிட்டது. அது போலி மார்க்கம். முஸ்லிமுக்கும் ஹிந்துவுக்கும் சர்வாங்க வித்தியாசமல்லவோ! உண்மையான ஒற்றுமைக்கு "சான்ஸே" கிடையாதே!

'"சமூகவாதி" என்று சொல்லி முஸ்லிமை அவமானப்படுத்தப் பார்க்கிறார்கள். விரலால் எண்ணிவிடலாம்—அவ்வளவு சிறியதொரு காங்கிரஸ் - முஸ்லிம் கூட்டத்தை வைத்துக்கொண்டு, முஸ்லிம் லீகைச் சமூகவாத ஸ்தாபனம் என்று உலகமெல்லாம் பரிமாறுகிறார்கள். வித்யா மந்திரமெல்லாம் தந்திரமாக ஹிந்து ராஜ்யத்தை ஸ்தாபிக்கும் பொருட்டுத்தான். ஹிந்துக்களுக்கு நியாய புத்தியே கிடையாது. "தீண்டாத ஜாதியின"ரை அவர்கள் நடத்தும் விதத்தைப் பாருங்கள். தங்களுடைய ஜனங்களுக்கே அவர்களால் நியாயத்தைச் செய்ய முடியவில்லையே!

'ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக இருக்கிற மாதிரி முஸ்லிம்கள் மெஜாரிட்டியி லிருந்தால்—முஸ்லிம்கள் வீட்டுக்கு வீடு சென்று ஹிந்துக்கள் வேண்டுவதை யெல்லாம் கொடுத்திடுவோம். மெஜாரிட்டியின் கடமை தியாகம் செய்வதே. ஸி. ஆர். தாஸ் ஒருவருக்குத்தான் நல்ல புத்தி யிருந்தது. அவரும் போய்விட்டார்.

'முஸ்லிம்கள் என்ற ஒரு ஜாதி உண்டு என்பதையே மறந்து பண்டித நேரு பேசுகிறார். ஹிந்துக்களுக்கு

மகாத்மா — காங்கிரஸுக்கு அப்பன்—காந்திஜி — உண்மைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, ஹிந்துக்களின் ஆதிக்கியக் கனவையே கண்டுகொண்டிருக்கிறார். அஹிம்சை யென்று சொல்லிக்கொண்டே ஸிந்து மாகாணத்து ஸக்கர் ஹிந்துக்களுக்கு, "அடிக்குப் பதில் அடி கொடுக்கத் தயார் செய்து கொள்ளுங்கள்" என்று உபதேசம் செய்கிறார்.

'இவர்களெல்லாம் என்ன சொன்னாலென்ன? என்ன செய்தாலென்ன? பாகிஸ்தானுக்காக, முஸ்லிம்களும் முஸ்லிம் லீகும் சகல தியாகங்களையும் செய்யத் தயார்.'

சௌதுரி ரஹமத் அலி:

' "இந்தியனிஸம்" என்பதே அபாயம். இந்தியா என்ற பெயரையே பெயர்த்து எடுத்துவிட வேண்டும். தெற்கு ஆசியாதான் நம்முடையது. அதுதான் நமக்கு வேண்டும். தெற்கு ஆசியா என்றால், நாம் யஜமான். இந்தியா என்றால், நாம் அடிமைதான். சுயநிர்ணயம் என்றால், சுயநாசம்தான். அதெல்லாம் எதற்கு? நாம் ஆசியாக்காரர்கள், இந்தியரல்லர். பாகிஸ்தான் வடமேற்கில், வங்காளம் வடகிழக்கில், உஸ்மானிஸ்தானம் என்ற நிஜாம் ராஜ்யம் தட்சிணத்தில்! இங்குதான் இனிய வாழ்வு!'

## 2. ஹிந்து மகா சபை

ஸ்ரீ. விநாயக தாமோதர சாவர்க்கர்:

'ஹிந்து மகா சபையின் கொள்கைப்படி ஸ்வராஜ்யம் என்றால், இந்திய தேசிய சமுதாயத்தைச் சேர்ந்த எல்லோருடைய சொத்துரிமை, சலுகைகள், பிற உரிமைகள், கௌரவம் எல்லாம் மத வித்தியாசம் தத்துவ வேறுபாடுகள் பாராட்டாமல் பாதுகாக்கப்படும் ஒரு ராஜாங்கத்தை அமைப்பதே யாகும். சுதந்திரத்திற்காகப் போரிடும் குறிப்

பிடத் தகுந்த எந்தத் தேசிய ஸ்தாபனமும் இதை முதலில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

'ஹிந்து மகா சபை செயலில் இறங்கப் பயப்படவில்லை. இப்பொழுது அது சண்டை போடவில்லை என்பது உண்மை தான். அது அமைதியான வழிகளையே அவலம்பித்தது...... இன்று ஹிந்துக்கள் "தீனர்களாய், உதவியற்று, நொண்டிகளாய்" இருக்கிறார்கள். இத்தகைய துன்பம் நிறைந்த நிலைமைகளை ஹிந்துக்கள் எல்லையில்லாத காலத்திற்கு விட்டுக்கொண்டு போகப் போகிறார்களா? தூக்கத்தைவிட்டு அவர்கள் எழுந்திருக்க முடியாதா? தங்கள் மேல் ஏறியுள்ள இந்த அவச் சொல்லை மனிதர்களைப் போல் எழுந்து தொலைக்க மாட்டார்களா? அடுத்த தலைமுறையார் ராணுவ முறையிலும் வல்லமையிலும் தக்கபடி கட்டுத் திட்டத்துடன் ஐக்கியப்படுத்தப்பட வேண்டும். அப்பொழுது தாக்குதல்களுக்குத் தக்க பதில் சொல்ல முடியும்.

'முஸ்லிம்கள் நமது தம்பிகள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் உண்மையில் தம்பிகளாய் இருந்தால் நான் எல்லாவற்றையும் விட்டுவிடுகிறேன். ஆனால் பிரச்னை என்ன? அவர்கள் சகோதரர்களாகவாவது இருக்கிறார்களா? அவர்கள் இந்திய ராஜாங்கத்திற்கு விச்வாசமாய் இருக்கிறார்களா? இந்தியாவுக்கு வெளியிலிருந்து அவர்கள் உதவியை எதிர்பார்க்கவில்லையா?

'பாரதத் தாய் நமக்கு ஏகம். அவளைப் பிரிக்க முடியாது. ஹிந்துஸ்தானின் ஐக்கியம் வேதகாலம் முதல் இன்றுவரை நிலைநாட்டப்பட்ட விஷயம். இப்படியிருக்கையில், முஸ்லிம்கள் கேட்கிறபடி, இந்தியாவைத் துண்டுபோட ஹிந்துக்கள் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

'காங்கிரஸுக்குள்ளிருக்கும் ஹிந்துக்களும், வெளியேயிருக்கும் ஹிந்துக்களும், பிரிட்டிஷ் ஆதிக்கியத்தை எதிர்ப்

பது போல், இந்த இரு - நாட்டுத் தத்துவத்தையும் தீவிர மாக எதிர்க்கவேணும்.

'மௌலானு அபுல்கலாம் அஸாத் காங்கிரஸ் தலைமை உரையின் கடைசியில், முஸ்லிம்களின் நியாய உரிமைகளுக்கு ஹானி ஏற்படுவதைத் தாம் ஒருகாலும் சகிக்க முடியாது என்ருர். அந்தப் பேச்சு பாரிஸ்டர் ஜின்ன பேச்சுக்களில் ஒன்று மாதிரியே இருக்கிறது.

'இரண்டு "மெஜாரிட்டிகள்" உள்ள தேசம் இந்தியா ஒன்றுதான். நேற்றுவரை மைனரிட்டியா யிருந்த ஒரு வகுப்பு இன்று மெஜாரிட்டியாக எப்படியோ ஆகிவிட்டதாம். இதைக் கண்டுபிடித்தவர் பாரிஸ்டர் ஜின்ன.

'காயிதே - ஆஜாம் (கம்பீரத் தலைவர்) ஆன ஜின்ன வின் கோரிக்கையைக் கண்டு ஹிந்து மகா சபை கலங்கவில்லை. அவுரங்கஸீப் கால முதலே அந்தக் கொள்கை இருந்துவருவது அவர்களுக்குத் தெரியும்... ஆனல் மீன் எப்படித் திமிங்கிலம் ஆக முடியும்?

'ஹிந்து சேனையைத் தவிர வேறு எந்தச் சேனையை யும் இந்தியாவின் சேனை என்று நம்ப முடியாது. அத்தகைய சேனை, கடைசித் துளி ரத்தம் உள்ளவரை இந்தியாவின் - ஹிந்துஸ்தானின் - மானத்தைக் காக்கப் போரிட்டு வரும்.'

## ஸ்ரீ. எஸ். ஸ்ரீனிவாச அய்யர்:

'லக்ஷ்மணபுரி ஒப்பந்தம் செய்யப்பட்ட காலத்தில் அதுவே முடிவான, ஏகோபித்த, கடைசி ஒப்பந்தம் என்று கருதப்பட்டது. ஆனல், அது முஸ்லிம் அபிலாஷைகள் மிதித்து மேலேறும் முதற்படியாகவே உபயோகமாகி யிருக் கிறது. மிஸ்டர் ஜின்னவின் 14-பாயின்டுகளும் பிரிட்டிஷ் சர்க்காரின் "வகுப்புத் திட்ட"த்தில் கொடுக்கப்பட்டுவிட் டன. அதன் மூலம் அரசியல் முக்கியத்துவத்தில் ஒவ்

வொரு ஹிந்துவையும் $\frac{1}{3}$ முஸ்லிமுக்கு இணையாக்கப்பட்டு விட்டது. முஸ்லிம்கள் வகுப்புத் திட்டத்தை ஆதரித்தார்கள்; ஹிந்துக்கள் நிராகரித்தார்கள். ஆனால் இப்பொழுது முஸ்லிம்கள் இன்னுமோர் ஏற்பாட்டை வேண்டுகிறார்கள். இன்னும் ஹிந்து உரிமைகளை விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதுதான் இதன் அர்த்தம்.

'முஸ்லிம்களுக்காகக் கேட்கப்படும் "சமத்துவம்" என்பதன் பொருள் என்ன? சட்டத்தின் முன்பும், ராஜாங்கக் காரியங்களிலும் முஸ்லிமுக்கும் ஹிந்துவுக்கும் சமத்துவம் வேண்டினால், யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். ஆனால், 6% முஸ்லிம்கள் பாக்கியுள்ள 94% முஸ்லிமல்லாதாரின் நோக்கங்களைப் போலவே சர்க்கார் காரியாதிகளில் தங்கள் நோக்கத்திற்கும் சமத்துவம் வேண்டினால், அந்த உரிமை ஒரு நிமிஷங்கூடக் கவனிக்கப்படத் தக்கதன்று. அது "சமத்துவ"த்தின் பெயரால் ஆதிக்கியம் கோருவதாகும்.

' துண்டு போடுவதால் எந்த விதத்திலும் முஸ்லிம்களுக்கும் நன்மையாகப் போவதில்லை. அவர்கள் இரண்டு குட்டி ராஜ்யங்களைப் பெறுவார்கள். இரண்டும் இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் பிரிந்து நிற்கும். இடையிலுள்ள பிராந்தியத்தில் ஹிந்துக்கள் இருப்பார்கள். அந்த இரண்டு தவிர வெளியே நாடெங்குமுள்ள சிறுபான்மையினரான முஸ்லிம்கள், பம்பாயில் பார்சிகளைப் போலவும், கொச்சியில் யூதர்களைப் போலவும், மலையாளத்தில் மாப்பிள்ளைகளைப் போலவும், திருவிதாங்கூரில் சாரிஸ்டியர்களைப் போலவும் மற்ற ஹிந்துக்களோடு அன்னியோன்யமாய் வாழப் பழகிக் கொண்டிருப்பார்கள். மிஸ்டர் பஸ்லுல் ஹக்கும் அவரோடு சேர்ந்த கிழக்கு வங்காள முஸ்லிம்களும், வெகு தொலையிலுள்ள பெஷாவாரில் அல்லாமா மஷ்ருகியின் கலக ஆவேசத்

தால் தாங்களும் உத்வேகம் கொள்ள முடியாமற் போகும். மூன்றாவது பானிபட் யுத்தத்தின் பெருமைகளை அவர்கள் மறந்து போவார்கள். அந்தப் போரில் ஒரு வங்காளிகூடக் கலந்துகொள்ளவில்லை. ஆனால் (வங்காளத்தில் நடந்த) பிளாஸி யுத்தம் மட்டும் அவர்களுக்கு ஞாபகமிருக்கும். அதில் வங்காளத்து முஸ்லிம் படைகளைக் கிளைவின் தலைமையிலிருந்த நமது சென்னை ஹரிஜனங்கள் விரட்டி விரட்டி அடித்தார்கள். இதை உணர்ந்த பிறகு அவர்கள் (ஹக்கும் தோழர்களும்) அஹிம்சா விரதம் பூண்டு, கிழக்கு வங்காளத்து ஹிந்து ஜமீன்தார்களுக்கு ஒழுங்காக வரிப் பாக்கிகளைச் செலுத்திவர நேரும்.

'ஹிந்துஸ்தானம் தாருல் - இஸ்லாம் நாடாக இல்லாமல் காபிர்களின் நாடாக இருக்கப்போவதாலும், ஹிந்து மாகாணங்களில் சிதறியுள்ள நமது முஸ்லிம் சகோதரர்கள் ஹிஜரத் செய்ய விரும்பலாம். ஹிந்துக்கள் கெஞ்சியும் கேட்காமல் அவர்கள் புறப்பட்டால் வழிச் செலவுக்கும் கொடுத்தனுப்பத் தயார். பாலஸ்தீனத்து கிராண்டு மப்தி அவர்களை விரித்த கைகளுடன் வரவேற்கட்டும், அல்லது அவர்கள் இத்தாலியர்களைத் தாக்கி, முடியிழந்த அல்பேனிய அரசர் ஜோகுவுக்கு மறுபடி ராஜ்யாபிஷேகம் செய்து அவர் பிரஜைகளாக ஆகிவிடட்டும்.

'மிஸ்டர் ஜின்னாவின் சாத்தியமில்லாத திட்டம் முஸ்லிம்களுக்கே தற்கொலைக்கு ஒப்பாகும். அவர்கள் இந்தியாவில் தங்களுக்குள்ள வலிமையை—சக்தியை—இழந்து விடுவார்கள்... மிஸ்டர் ஜின்னாவின் விளையாடல் தெளிவா யிருக்கிறது. அவர் முஸ்லிம் ராஜ விச்வாசத்தை ஏலங் கூறுகிறார். அதற்குரிய விலையைப் பிரிட்டிஷார், ஹிந்துக்கள் கணக்கில் எழுதிக்கொண்டு, கொடுத்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறார். ஏலத் தொகையைத் தூக்கிவிடுவதற்கு, அவர் பிரிட்

டிஷார் கலவர மடையும்படியாக ஹிந்துக்களோடு போலி ராஜி ஏற்பாடுகளுக்கும் வரக்கூடும்.'

டாக்டர் ராதா குமுத முகர்ஜி :

'வகுப்புத் திட்ட வினையை அமுலுக்குக் கொண்டுவந்ததால் இந்திய அரசியல் ஒற்றுமை சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதன் சிகரமாக, 8 கோடி முஸ்லிம்களின் சார்பாகப் பேசும் ஒரு பெரிய இந்தியர், இந்தியா ஒரே தேசமில்லை என்று சொல்லுவதில் வந்து சேர்ந்திருக்கிறது.

'இந்திய நாகரிகத்தின் சிருஷ்டிகர்த்தாக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியா முழுதும் காஷ்மீரத்திலிருந்து கன்னியா குமரிவரை பிரிக்க முடியாத ஒரே தேசமாகவே இருப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதைச் சரித்திராசிரியன் என்ற முறையில் நான் சொல்லித் தீர வேண்டும்.

' "இந்தியாவும் ஹிந்து மதமும், உடலும் உயிரும் போல், ஏகமாக ஐக்கியப்பட்டவையாகும்" என்று காலஞ்சென்ற பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஜே. ராம்ஸே மாக்டொனல்டு கூறியிருக்கிறார்.

'பிரிட்டிஷாரே பிரித்தாள எண்ணுவது ஒருபுறமிருந்தாலும், இந்தியரே தங்களுக்குள் பிரிவினை செய்துகொள்ளவும் முனைந்துவிட்டார்கள்.'

## 3. மிதவாதிகள்

ஸர் சமன்லால் ஸேதல்வாட் :

'மிஸ்டர் ஜின்னா காங்கிரஸையே திணற வைத்து முஸ்லிம் எதிர்ப்பை உருவாக்கியதற்கு அவருடைய திறமையையும் தீரத்தையும் எவரும் வியக்கவேண்டும்.

'காங்கிரஸ் சர்க்கார்களால் முஸ்லிம்கள் சரியாக நடத்தப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனாலும், ஜனங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தூக்கிச் செல்ல முடியாது. ஹிந்து சமஸ்தானங்களுக்கும் முஸ்லிம் சமஸ்தானங்களுக்கும் வரும் சண்டைகளைத் தவிர்க்க முடியாது.

'தாழ்த்தப்பட்ட வகுப்பார் 7 கோடி ஜனங்களின் நிலை என்ன? அவர்களுக்கும் ஒரு தனி நாடா?

'ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரு தேசீய சமூகமாக ஆக முடியாது என்கிறார் மிஸ்டர் ஜின்னா. ஹிந்துக்களுக்குள்ளேயே எத்தனையோ வகுப்புக்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் தனித் தனி ஏற்பாடு சாத்தியமா? முஸ்லிம்களிலேயே ஷீயாக்களும் ஸுன்னிகளும் தீவிர மத வேறுபாடுகளால் சண்டைகள் செய்கிறார்கள். இவை ஒவ்வொன்றும் தனி சமூகங்களா? மேலும், முஸ்லிம்களின் முன்னோர்களில் பெரும் பகுதியினர் ஹிந்துக்களாயிருந்து இஸ்லாத்துக்கு மாறினவர்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

'ஒரே இந்தியாவை வைத்துக்கொண்டு அதற்கு வேண்டிய அரசியல் அமைப்பைத் தயாரிப்பதே தக்க பரிகாரம் என்று என் மனத்திற்குத் தோன்றுகிறது.'

டாக்டர் ரகுநாத பாண்டுரேங்க பராஞ்சபை:

'ஹிந்து - முஸ்லிம்களுக்குள் முரண்பாடுகள் என்ன உண்டோ அவைகளை ஸென்ஸஸ் போலக் கணக்கெடுத்து வையுங்கள். நாளுக்கு நாள் அதிகப்படாமல் குறைத்துக் கொண்டு வாருங்கள். இந்தியாவைத் துண்டு போடுவதை விட்டுவிடுங்கள்.'

## 4. காங்கிரஸ் தலைவர்கள்

### ஸ்ரீ. சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்:

'மதவாரியாக மாகாணங்களுக்கு எல்லைக் கோடு கட்டிப் பிரிப்பதைப் பற்றி எண்ணிப் பார்த்தால் இன்பமாய்த்தான் இருக்கும். ஆனால் அந்தக் கோடு, ஜாதி, பாஷை, தொழில், எல்லாவற்றிலும் அருமையான வீடு, நிலம்—எல்லாவற்றையும் குறுக்கே வெட்டிவிடும்.'

### ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி:

'கோபம் சரியான வாதமில்லை. வசவும் வாதமில்லை. மிஸ்டர் ஜின்னா இரண்டுமே சரியான வாதங்கள் என்று கருதுகிறார் போலிருக்கிறது.'

'மிஸ்டர் ஜின்னாவின் முழு வாதமும் என்னவென்றால், இந்தியா ஒரே தேசமாயிருந்தால், முஸ்லிம்கள் மைனாரிட்டியாக இருப்பார்கள், அவர்கள் மெஜாரிட்டியாக இருக்க இந்தியாவில் ஒரு பாகமேனும் வேணும் என்பதுதான். அவர் திட்டத்தில் ஆகப் பலவீனமான பாகம் இதுதான்.

'மிஸ்டர் ஜின்னாவின் ஆராய்ச்சி முடிவு இந்தியாவின் இரண்டு பாகங்களிலுமுள்ள மைனாரிட்டிகளுக்கும் அதிகக் கொடுமை ஏற்படவே ஹேதுவாகும்.

'மிஸ்டர் ஜின்னாவின் திட்டம் கருவிலேயே செத்துப் பிறந்தது. எந்த முஸல்மானும், முக்கியமாக அவர் பிரித்துள்ள ஹிந்து இந்தியாவிலுள்ள எந்த முஸல்மானும், ஏற்றுக் கொள்ளத் தக்கதில்லை. முஸல்மான்களில் மேம்பாடுள்ளவர்கள், இதைப்பற்றி வெளிப்படையாக அபிப்பிராயம் கூறி, மிஸ்டர் ஜின்னாவிடம், 'போதுமையா, நிறுத்தும்!' என்று சொல்லவேண்டிய காலம் வந்துவிட்டது.'

ஜனுப் ஹாபீஸ் முகம்மது இப்ராஹீம்
(மாஜி ஐக்கிய மாகாண மந்திரி) :

'பாகிஸ்தான் ஓர் ஆகாச அரண்மனை. இரட்டை-நாட்டுக் கொள்கை முஸ்லிம் சமூகத்திற்கு நன்மையைப் பார்க்கிலும் அதிகத் தின்மையையே விளைவிக்கும்.

'லீக் முஸ்லிம்களை ஒன்றுசேர்த்துவிட்டதாம். ஒன்று சேர்த்ததின் நோக்கம் என்ன? நோக்கமில்லாமல் ஐக்கியப் படுத்துவது என்பது வழி தெரியாமல் சிதறவா? இப் பொழுது இருளில் லேசாகத் தெரியும் நோக்கமெல்லாம் காங்கிரஸை எதிர்ப்பது என்பதுதான்.

'இந்தக் கொள்கையில், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் புனிதமற்ற முறையில் காங்கிரஸுக்கு எதிராகச் சேர்ந்து செய்யப்படும் ஏமாற்றின் வாசனையே வீசுகிறது.'

## 5. பத்திரிகைகள்

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' :

'இந்தியாவை மைனுரிட்டிகள் மயமாகவும், மைனுரிட்டி சங்கடங்கள் மயமாகவும் செய்யத்தான் இந்தப் பாகிஸ்தான் உபாயம் உதவும்.'

'அம்ருத பஜார்' :

'1906-ல் இந்த லீகர்கள் தனித் தொகுதியை விரும்பினர்கள். அன்றைக்கு இந்தியா இரண்டு தேசம் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. இந்த முப்பது வருஷங்களாகவும் அவர்களுக்குத் தெரியவில்லை. வைஸராய் பிரபு மிஸ்டர் ஜின்னுவைப் பெருமைப்படுத்திவிட்டாராம். அந்த அமிர்தத்திற்குப் பிரதி அமிர்தமாக — இந்தியாவைத் துண்டுபோட வேண்டுகிறுர் மிஸ்டர் ஜின்னு. ஹிந்து மெஜாரிட்டியை இவர் நம்ப மாட்டாராம். ஹிந்து மைனு

ரிட்டிகள் இவரை நம்பவேண்டுமாம்! அல்லது ஏதோ இந்திரஜாலம் செய்து, சூன்யம் வைத்து, ஹிந்து மைனரிட்டிகளே உலகத்தில் இல்லாமல் அடித்துவிடலா மென்று நினைக்கிருரோ? மேலும், உலகத்திலேயே இல்லாத புதுமையை மிஸ்டர் ஜின்ஞ அவிழ்த்து விட்டிருக்கிருர். இன்றைக்கு ஒற்றுமையாக வாழும் ஒவ்வொரு தேசத்திலும், சென்ற காலத்தில், சூரர்கள் இரு கட்சிகளாகப் பிரிந்து போர் புரிந்திருக்கிருர்கள். அதற்காக, இன்றைக்கும் தேசத்தைப் பிளந்து தள்ளவேண்டும் என்று ஒருவருமே சொல்லக் காணுமே! சரித்திர சாரமே இந்த மிஸ்டர் ஜின்ஞவுக்குப் புரியவில்லையே! மேலும், ஒரு தேசத்தின் பழைய சரித்திரமேதான் முக்கிய மென்று கருதிவிடக் கூடாது. வருங் காலத்தையும் நோக்க வேண்டும்.'

**'ஸ்டேட்ஸ்மன்':**

'துண்டு போடுதல் முக்கியமான பிரச்னையாக வந்து விட்ட தென்பதை நாம் ஒப்புக்கொண்டு தீரவேண்டும்.

'துண்டுபோட வேண்டுபவர்களின் உள் அந்தரங்கத்தில், இந்தியாவின் மறு பாதியையும், (காந்தி சொல்லுகிறபடி நால் நூற்பதா அல்லது ரஷ்யப் பொதுவுடைமையா, எது நல்லது என்று,) சர்க்கா - வாதிகளும் அபேதவாதிகளும் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் சமயம் பார்த்து, அதையும் பிடித்துக் கபளீகரம் பண்ணி, தற்கால உலகில் ஜோதி நிலைக்கும்படி ஓர் இஸ்லாமிய ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க வேணும் என்ற எண்ணம் ஒருவேளை இருக்கலாம்.'

## நமது படிப்பினை

மேலே காட்டிய அபிப்பிராயச் சுருக்கங்களிலிருந்து உண்மை புலனுகும். இந்தப் பாகிஸ்தான் வாதத்தை ஒரு நியாய வாதமாக நினைத்து நடந்துகொண்டால், அது விவேக

மற்ற முறையாகும். பாகிஸ்தான், வல்லமை வாதத்தைச் சேர்ந்தது. இங்கிலீஷில் 'பவர் பாலிடிக்ஸ்' ('அதிகார அரசியல்') என்பார்கள். அதிகார அரசியல் தர்ம கர்த்தாக்கள் ஹிட்லர், ஸ்டாலின், முஸோலினி முதலிய வர்கள். சென்ற காலத்தில் கிளைவ், வாரேன் ஹேஸ்டிங்ஸ், லார்டு டல்ஹௌஸி, ஸெஸில் ரோட்ஸ் முதலியவர்கள். அதற்கும் முந்திச் சென்ருல், செங்கிஸ்கான், டாமர்லேன், நாதர்ஷா முதலியவர்கள். இன்றைக்கு வேண்டுமானுல், இந்தியாவில் காக்ஸார் படையினர், ஸிந்து மாகாணத்தில் கொலைகளை இயற்றுபவர்கள், நிஜாம் ராஜ்யத்தில் பீடாரில் தீ வைத்தவர்கள். சத்தியத்திற்கு எதிரிடையாகப் பொய்யும் அஹிம்சைக்கு எதிரிடையாகக் கொலையும்தான் 'பவர் பாலி டிக்'ஸினுடைய துவஜத்தில் பிரகாசிக்கும். பாகிஸ்தான் வாதி களின் வியாசங்களில் 'ஸுடேட்டன்' ஜெர்மானியரின் மார்க்க மும் நாஜி வாசனைகளும் நன்கு வீசுகின்றன. 'அதிகார அரசியல்' வாதிகள் இருக்கும் பொழுது நீதிஸ்தலத்தில் நியாயம் பெறலாம் என்று எண்ணவே முடியாது. பேச வேண்டிய வக்கீலே காணுமற் போய்விட்டால், என்ன செய் வது? அதற்கல்லவோ பரிகாரம் தேடவேண்டும். வல்ல மைக்கு வல்லமைதான் மருந்து.

அத்தியாயம் - 16

## முரண்மயத் திட்டங்கள்

டாக்டர் அப்துல் லத்தீப் என்பவர்தான் பிரிவினை விஷயத்தில் மிஸ்டர் ஜின்னாவுக்கு சமஸ்தான வித்வான். பிரிவினைத் திட்டம் பற்றி அவர் ஒரு வியாசம் எழுதியிருந்தார். அவருடைய வியாசத்தில் நான்கு விஷயங்கள் புலப்படுகின்றன.

1. பிரிட்டிஷாரின் மனம் புண்படக் கூடாது, அதிகாரம் மட்டுப்படக் கூடாது.
2. ஹிந்து மதமும், ஆசாரமும், சட்டமும், இஸ்லாம் மதம், ஆசாரம், சட்டம் இவைகளுடன் ஐக்கியமாகிவிட வேண்டும். இல்லையேல் ஒற்றுமையில்லை.
3. முஸ்லிம்கள் தான் சமத்துவத்தின் நாயகர்கள்.
4. இந்த மெஜாரிட்டி சமூகம் (ஹிந்துக்கள்) மத்திய சர்க்காரில் அதிகாரத்தைப் பிடித்துக் கொள்வதற்கு என்ன முயற்சி செய்தபோதிலும், அது கலப்பற்ற திமிரே யாகும்; மெஜாரிட்டி சமூகத்தை

வெகுகாலம் ஆண்டுவந்த முஸ்லிம்கள் ஒரு போதும் சகிக்கவே மாட்டார்கள்.

நாகரிகப் பேச்சு, மற்றப் பேச்சுக்கள் எல்லாம் ஒரு புற மிருக்கட்டும். நியாயம் அநியாயம் ஒரு மூலேயில் கிடக்கட்டும். 'ஹிந்து மெஜாரிட்டிக்கு உரித்தான யாத்தியதையை வீர முஸ்லிம்கள் சகிக்கவே மாட்டார்கள்' என்று டாக்டர் லத்தீபி கோஷித்திருக்கிறார்.

டாக்டர் லத்தீபி திட்டம் போட்டிருப்பதைப் போல ஒரு பஞ்சாபியும் திட்டம் போட்டிருக்கிறார். இரண்டு அலிகார் புரொபஸர்கள் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள்.

ஒரு திட்டத்திலாவது இந்தியாவிற்குப் பூரண சுதந்திரம் வேண்டும் என்ற தோற்றமே யில்லே. ஹிந்து மெஜாரிட்டியைக் குலேக்கவேண்டும்; அல்லது அதை விட்டு விலகிவிட வேண்டும்—இந்த ஒரே ஆசைதான் இவர்களேப் பிசாசு போல் பிடித்துக்கொண்டிருக்கிறது. சுதந்திரம் ஏற்பட்டால், ஹிந்து ஆதிக்கம் ஏற்பட்டுவிடுமே என்ற ஒரே விசனத்தில் தவிக்கிறார்கள்.

'ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் அண்டாத பிளவு இருந்து வருகிறது; இவர்கள் எக் காலத்திலும் ஒரே தேசத்தினர் என்ற மனப்பான்மையை அடையவே முடியாது. மதத்தையும், அரசியலேயும் பிரித்துவிட வேண்டும் என்று தேசியவாதிகள் உபதேசிக்கிறார்கள். ஹிந்துக்களுக்கு இது சுலபம்; முஸ்லிம்களுக்கு இது முடியவே முடியாத காரியம், மசூதி வெறும் பிரார்த்தனே மண்டபம் மாத்திரமல்ல. அது சபா மண்டபமும் கூடத்தான். மத, சமூக, பொருளாதார, அரசியல் முதலிய வாழ்க்கையின் சகல அம்சங்களும் மசூதியில் நடைபெற வேண்டும். ஆதலால் அவர்களால் மதத்தையும், அரசியலேயும் பிரிக்கவே

முடியாது. ஆகையால் ஹிந்துவும் முஸ்லிமும் ஒற்றுமை யாக வாழ்வ தென்றால், அது கனவிலும் காண முடியாத விஷயம். இஸ்லாமிய ராஜ்யம் என்றாலே அது தனி நாடா கத்தான் நிற்க வேண்டும். பல மதத்தினரும் முஸ்லிம்களு டன் ஒரே ராஜ்யத்தில் வாழ்வ தென்பது இஸ்லாத்திற்கு முற்றிலும் முரண்பட்டது. அது ஒருகாலும் உருப்படாத யோசனை. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உண்டான பிளவை எந்தப் பாலமும் கடக்க முடியாது. பிரிட்டிஷ் கயிறு இரு சமூகங்களையும் கட்டி வைத்திருக்கிறது. இந்தக் கயிறு அறுந்து போகும்போது, இரு சமூகங்களும் வாழும் அழகைப் பார்க்கவேண்டும். விபரீதங்கள்தான் ஏற்படும். மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்ந்தால், இஸ்லாமியர்களுக்குக் கதி மோட்சமே கிடையாது.

'ஹிந்துக்களுக்குச் சுதந்திரம் தேசீய அவசியம்; தேசீய சுயமரியாதைக்கு அவசியம். முஸ்லிம்களுக்குச் சுதந் திரம் மத அவசியம். அந்நிய ஆட்சியி லாகட்டும், சிநேகமா யிருக்கும் முஸ்லிமல்லாதாருடன் கூடி நடத்தும் ஆட்சியி லாகட்டும்,—இஸ்லாமிய சொரூபம் வளர்ச்சி பெறாது; இஸ் லாமியருக்கு விமோசனம் கிட்டாமல் போய்விடும். இஸ்லா மிய தேசத்திலேதான், இஸ்லாம் மயமான தேசத்திலே தான், முஸ்லிம்களுக்கு இகலோக சாதகமும், பரலோக சாதகமும் கிடைக்கும். மற்ற நாடுகளில் நரக அவஸ்தை யான வாழ்வுதான் கிட்டும்.

'இப்போதைக்கு நாம் பிரிந்துவிட வேண்டும். பின் னிட்டு - பாடுபட்டு - உலகத்தையே இஸ்லாம் மயமாக்கவேண் டும். இந்தப் பிரிவினைக்கு ஒவ்வொரு முஸ்லிமும் போரிட வேண்டும். மைனாரிட்டியா யிருக்கும் பிரதேசங்களிலிருந்து முஸ்லிம்களை அப்புறப்படுத்திக்கொள்ளும் வேலையைப் பின் னிட்டு வைத்துக்கொள்வோம். நாளடைவில், பின்னர்

அவசியமானுல், பரிவர்த்தனை செய்துகொள்ளலாம்'—இது தான் துண்டு போடும் வியாசங்களின் சாரம்.

• ஆனுல், உண்மையில் அவர்கள் பரிவர்த்தனையை விரும்பவில்லை.

ஸர் ஸிக்கந்தர் ஹயாத்கானுடைய திட்டம் ஒன்றிருக்கிறது. அவர் இந்தியாவைத் துண்டுபோட விரும்பவில்லை. அவருடைய திட்டத்தில் ஒரு விசேஷமான அம்சத்தை நாம் மறந்துவிடக் கூடாது. 1-1-1937 ல் இந்தியச் சேனை எப்படி அமைக்கப்பட்டிருந்ததோ அப்படியே அமைக்கப்பட்டிருக்கவேண்டுமாம். அதில் எவ்வளவு பங்கு முஸ்லிம் சமூகத்தினர் இருந்து வருகிருர்களோ, அந்த விகிதாசாரம் குறைந்திடக் கூடாதாம்! இது ஸர் ஸிக்கந்தர் ஹயாத்கானுடைய யோசனைகளில் ஒன்று. விஷம் கலந்த பால்தான்!

இப்போது முஸ்லிம் அகங்காரம் ஓங்கி நிற்கிறது. அந்த அகங்காரம்தான் மஹாத்மா காந்தியின் இயக்கத்தை ஹத்தி செய்தது. அந்த அகங்காரம் ஒழிவதற்கு எத்தனை தலைவர்கள் சமரசம் பேசினுலும் முடியாது. ஹிந்து சமூகம் முழுதுமே தைரியசாலிகளாக ஒன்றுபட்டவர்களால் நிறைந்தது என்பது ருஜுவானு லொழிய அந்த அகங்காரம் ஒழியவே ஒழியாது. அது ஒழியாதிருப்பதுதான் தர்மம். ஹிந்துக்கள் ஒற்றுமைப்படாமலும், தைரிய மில்லாமலும் இருந்தால், ஏன் அவர்களைச் சமமாக மதிக்கவேண்டும்? ஒரு ஹிந்துவை ஒரு முஸ்லிமுக்குச் சமமாக ஏன் மதிக்க வேண்டும்?

காங்கிரஸ் - முஸ்லிம்களால் சமரசமுண்டாக்க முடியாது. மௌலானு ஆஸாத்தை, 'பொம்மைப் பையன்' என்று மிஸ்டர் ஜின்னு பகிரங்கமாகச் சொல்லிவிட்டார். சமரச மூர்த்தி ஸர் ஸிக்கந்தர் ஹயாத்கான் அவர்களே, 'பஞ்சாபிலும், எல்லைப்புறத்திலும் சில முஸ்லிம்களை லஞ்சம்

கொடுத்து காங்கிரஸில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள்' என்று சமீபத்தில் கோஷித்திருக்கிறார்.

மசூதிகளில் பிரசாரம் நடந்துவருகின்றது. காக்ஸார் படைகள் விடுதலை செய்யப்பட்டு வெளியே வருகின்றன. நிஜாம் மன்னருடைய சகாக்கள் ஊக்கமா யிருக்கின்றனர். ஸ்ரீ. முன்ஷி (பம்பாயின் மாஜி காங்கிரஸ் மந்திரி) இப்போதுதான், 'சிந்து ஹிந்துக்கள் அனைவரும் ஒருங்கே சேர்ந்து என் வேலைசெய்யக்கூடாது?' என்கிறார். ஒரு ஹிந்து, முஸ்லிம் வெறியால் கொலை செய்யப்பட்டவுடனேயே, இந்த உணர்ச்சி அவருக்கு ஏற்படவில்லை. சிந்து ஹிந்துக்களுக்கு ஏற்பட்ட அதோகதி இந்தியா முழுவதிலும் ஹிந்துக்களுக்கு ஏற்படாமலிருக்க வேண்டுமானால், அகில இந்தியாவின் ஹிந்துக்களும் ஒரே கட்டுப்பாட்டுடன் வேலை செய்வதைத் தவிர வேறு வழி கிடையாது.

எல்லைப்புறத் தொல்லை தொலைந்தபாடில்லை. கெட்டிக்கார டாக்டர் என்றால், வியாதியஸ்தனும் சாகக் கூடாது, வியாதியும் சாகக் கூடாது. அதுபோல் இந்தத் தொல்லை தீராமலேயே பாதுகாக்கப்படுகிறது. காங்கிரஸ் தூதர்கள் அங்கே சென்றால் சமரஸம் ஏற்பட்டுவிடுமென்று சொல்லுகிறார்கள்.

மஹாத்மா காந்திக்கு அங்கே செல்ல அனுமதி கொடுக்கப்படவில்லை. கான் அப்துல் கபார்கானுக்கு அனுமதி கிடையாது. சமீபத்தில் ஜனாப் ஆஸப் அலிக்கும், ஸ்ரீ. புலாபாய் தேசாய்க்கும் அனுமதி வேண்டினார்கள். சர்க்கார் 'கிடையாது' என்று சொல்லிவிட்டது. ஆஸப் அலியும், தேசாயும் சென்றால் சமரசப்படுத்திவிடுவார்கள் என்று பல ஹிந்துக்கள் நினைக்கிறார்கள். சிந்து மாகாணத்திற்கு இந்தத் தலைவர்களோ, மற்றத் தலைவர்களோ போவதை எவரும் தடுக்கவில்லை. அவர்கள் என் சென்று முஸ்லிம்களின் அட்டூழியங்களைக் காலாகாலத்தில் தடுக்கவில்லை? ஆனால்,

ராஷ்டிரபதி ஆஸாத் ஏதோ ஒட்டுப்போட்டு வைத்திருக்கிறார். கூட்டு மந்திரி சபை அமைந்திருக்கிறது. ஒட்டு எத்தனை நாளைக்கு நிலைக்குமோ தெரியவில்லை.

குற்றத்தை மஹாத்மா காந்தியின் பேரிலும் சுமத்த முடியாது. 'பயங்கொள்ளிகளாக இராதீர்! அஹிம்சையில் நம்பிக்கை யில்லாவிட்டால், ஹிம்சைக்குத் தயார் செய்து கொண்டு, உங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்,' என்று 1924-முதல் காந்திஜி எச்சரிக்கை செய்து வந்திருக்கிறார்.

அத்தியாயம் - 17

## மஹாத்மாவின் மணிவாசகம்

மஹாத்மா காந்திக்குக் கடிதங்கள் லட்சக்கணக்கில் வந்து குவிகின்றன. இரண்டு காரியதரிசிகள் அவைகளைப் படித்துப் பரிசீலனை செய்கிறார்கள். சாரமுள்ளதையெல்லாம் அவர்கள் காந்திஜியிடம் வைக்கிறார்கள். அவர் தமது 'ஹரிஜன்' பத்திரிகையில் அவைகளுக்குப் பதிலெழுதிக் கொண்டு வருகிறார்.

ஒரு முஸ்லிம், 'நான் பாகிஸ்தான் பக்தன்; அஹிம்சை பக்தனும்கூட. பாகிஸ்தானை அடைவதற்கு அஹிம்சை மார்க்கத்தில் தங்களுடைய உபதேசத்தை வேண்டுகிறேன்' என்று எழுதியிருந்தார். இவர் ஒரு கிண்டல் - பக்தன் என்று நமக்குத் தோன்றுகிறதல்லவா?

இவருக்கு மஹாத்மா, 'அஹிம்சையின் மூலமாக, ஒருவன் ஓர் அநீதியான ஆசையை நிறைவேற்றிக்கொள்ள முடியாது. அஹிம்சையாக உம்மால் திருட முடியாது. எனது அபிப்பிராயத்தில் பாகிஸ்தான் ஒரு துராசைதான்,' என்று பதில் எழுதினார்.

மஹாத்மாவுக்குக் கடிதங்கள் எழுதும் முஸ்லிம்களில் வெகு சிலரைத் தவிர, மற்றவர் அனைவரும், ஹிந்துக்களையும் ஹிந்து மதத்தையும் தூஷித்தே எழுதி வருகிறார்களாம். இதைக் குறித்து, மகாத்மா, 'ஆமாம், பாகிஸ்தானை விரும்புகிறவர்களுக்கு வேறு வழி யில்லை. ஹிந்துக்களைத் தூஷிக்காவிட்டால், பாகிஸ்தானுக்கு அஸ்திவாரமே யில்லாமல் போய்விடும்,' என்று எழுதுகிறார்.

இஸ்லாத்திற்கும் இந்திய முஸ்லிம்களுக்கும் காந்திஜி பரம விரோதி யென்றும், வடிகட்டின விரோதி யென்றும் இந்த முஸ்லிம் கடிதங்கள் வர்ணித்து வருகின்றனவாம். அதேபோல, அநேகம் ஹிந்து மத வாதிகளும் ஹிந்துக்களுக்கு காந்திஜிதான் பரம விரோதி என்றும், வடிகட்டின துரோகி என்றும் கோஷித்து வருகிறார்கள்.

ஸெய்ன்ட் ஸ்டீபன் என்ற மஹாத்மாவைக் கற்களை யெறிந்தே கொலை செய்துவிட்டார்கள் என்று சரித்திரத்தில் காண்கிறோம். இந்த ஹிந்து - வாதிகளும் முஸ்லிம் - வாதிகளும், தங்களுடைய மனக் கொதிப்பில், அப்படியே இந்த மஹாத்மாவையும் ஒழித்துவிடத் தயார்தான். ஆனால், காந்திஜிமீது இந்த ஹிந்துக்கள் வீசும் கற்களும், முஸ்லிம்கள் வீசும் கற்களும் அவர் மேல் விழாமல், எந்த மனிதன் பேரிலும் விழாமல், யாருக்கும் ஒரு சேதமும் இல்லாமல், தங்கள் மனங்களில் தேங்கிக் கிடந்த விஷங்கள் மாத்திரம் இந்த ரூபமாக வெளிப்பட்டு, ஒன்றோடொன்று மோதிச் சிதறின என்றுதான் ஏற்படும் என்று நாம் நம்புகிறோம்.

மிஸ்டர் ஜின்னாவின் வலது கை யென்று சொல்லப்படும் நவாப் ஜாதா லியாகத் அலி கான் காந்திஜியைக் குறித்து எழுதுகிறார்: 'காந்திஜி வளர்த்துவரும் காங்கிரஸுக்கு ஒரே ஒரு வேலைதான், ஒரே ஒரு ஆசைதான். ஹிந்து

மதத்திற்குப் புத்துயிரைக் கொடுத்து, புனருத்தாரணம் செய்யவேண்டும்; ஹிந்து அல்லாதாருடைய தலையிலெல்லாம் ஹிந்து நாகரிகத்தைச் சுமத்தவேண்டும் என்பதுதான்.' காந்திஜியும், அவருடைய லட்சக்கணக்கான தொண்டர்களும், பக்தர்களும் முஸ்லிம்கள்பால் நடந்துகொண்ட முறைக்கு, இந்தப் பலன்தான் கிடைத்தது. முஸ்லிம்கள் விஷயத்தில் வைத்த எண்ணமெல்லாம் இந்த விதமாக வீணுயிற்று.

ஒருவர், 'காங்கிரஸ் தப்பிதமாக நடந்துகொண்டதினுல் தான், முஸ்லிம் லீகினர், தங்களுடைய பாகிஸ்தான் திட்டத்தைத் திடீரென அவிழ்த்துவிட்டிருக்கிருர்கள் என்றே அநேகர் நம்புகிருர்கள். தாங்கள் இதற்கென்ன சொல்லுகிறீர்கள்?' என்று காந்திஜியைக் கேட்டார். அதற்கு காந்திஜி, 'நான் அப்படி நினைக்கவில்லை. உண்மையாக அவ்விதமே நேர்ந்திருந்த போதிலும், அது ஓர் அனுகூலம்தான். மனத்தினுள்ளே இருந்துவந்தது வெளியே வந்துவிட்டால், அது நல்லதே தவிர வேறில்லை. இப்போது அந்தப் பிரச்னையைச் சமாளிப்பது முன்னிருந்ததைக் காட்டிலும் சுலபமாயிருக்கும். இனி இந்த ஹிந்து - முஸ்லிம் பிரச்னை எப்படியோ பைசலாகிவிடும். இன்னும் ஒரு பெருத்த லாபமும் இருக்கிறது. இதுவரையில் தூங்கி விழுந்தவர் போல் நடந்து கொண்ட தேசீய முஸ்லிம்களுக்குத் தங்களுடைய கடமையைச் செய்யவேண்டிய உணர்ச்சி ஏற்பட்டதும், பாகிஸ்தான் பிரஸ்தாபத்தால் ஏற்பட்ட பெரிய லாபமாகும்,' என்று பதில் எழுதினர்.

'தூங்கி விழுந்தவர்கள்' என்று மஹாத்மா வர்ணித்த தேசீய முஸ்லிம்களைக் குறித்து, ஒரு டில்லி கான் பகதூர், 'காங்கிரஸ் முஸ்லிம்கள் ஒரு சோம்பேறிக் கூட்டம். ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கும் இந்திய சுதந்திரத்திற்கும்

அவர்கள் விரோதிகள். காங்கிரஸ் கொள்கைகளுக்கு முஸ்லிம் மகா ஜனங்களைத் திருப்புவதற்கு, இந்தக் காங்கிரஸ் முஸ்லிம்களுக்குத் தைரியம் கிடையாது' என்று காந்திஜிக்கு எழுதினர்.

பீடாரில் ஒரு பீடை நடைபெற்றது. பீடார், நிஜாம் ராஜ்யத்தில் ஒரு ஜில்லாவின் தலை நகரம். அதிகாரிகளுடைய பக்க பலத்தில், ரொம்ப நிதானமாக, ஹிந்துக்களுக்குச் சொந்தமான நூறுக் கதிகமான கடைகளைச் சில காலி முஸ்லிம்கள் பட்டப் பகலில் தீ வைத்து நாசம் செய்தார்கள். முஸ்லிம்களுக்குச் சொந்தமான சாமான்களை மாத்திரம், தீ வைப்பதற்கு முன்பு, ஜாக்கிரதையாக அப்புறப் படுத்தினர்கள். தீயை அணைப்பதற்குச் செய்யப்பட்ட முயற்சிகளை யெல்லாம் தடுத்துவிட்டார்கள். ஹிந்துக்களுக்குச் சொந்தமான அநேக லட்சம் ரூபாய் பெறுமான சொத்துக்கள் இவ்விதமாக நாசமாயின. இதைப்பற்றிய தகவல்கள் வெளியே செல்வதைத் தடை செய்வதற்கு, முஸ்லிம் அதிகாரிகள் நல்ல பிரயாசையும் எடுத்துக்கொண்டார்கள். ஜவாஹர்லால் நேரு இந்த அக்கிரமத்தைக் கண்டித்தார். மகாத்மா காந்தியும் கண்டித்தார். அத்துடன், 'நிஜாம் ராஜ்யத்திற்கு வெளியேயுள்ள முஸ்லிம்கள் இந்தச் சம்பவங்களைக் குறித்து ஒரு பாரபட்சமற்ற கமிட்டி விசாரணை செய்யவேண்டுமென வற்புறுத்துவார்களென்று நான் நம்புகிறேன்' என்று காந்திஜி எழுதினர். தேசீய முஸ்லிம்கள் பீடார் விஷயத்தில் யாதொரு முயற்சியும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

சிந்து மாகாணத்தில் நடைபெற்று வந்த அக்கிரமங்களைக் குறித்து, நமது தமிழ் மாகாண முஸ்லிம்கள் யாதொரு கண்டனக் கூட்டங்களையும் நடத்தினதாகக் காணேம்.

1937-ஆம் வருஷத்தில் ஐக்கிய மாகாணத்தில் பிஜ்னோர் என்ற தொகுதியில் தேர்தல் நடந்தது. முஸ்லிம் லீக் அபேட்சகருக்கும் காங்கிரஸ் முஸ்லிம் அபேட்சகருக்கும் போட்டி நடந்தது. போட்டி ரொம்ப உக்கிரமாக நடந்தது. பிரபலமான காங்கிரஸ் தலைவர்களும் முஸ்லிம் லீக் தலைவர்களும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்கள்.

முஸ்லிம் லீகின் சார்பாக மிஸ்டர் ஜின்னாவினுடைய கையெழுத்தை ஆதாரமாகக் காட்டிக்கொண்டு, 'இஸ்லாத்திற்கு அபாயம்' என்ற மகுடத்துடன் அநேகம் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. பண்டிதர் நேரு இவைகளைக் கண்டித்து, 'இதுதானா தேர்தல் முறை! நமது வருங்காலத்து அரசியல் தேர்தல்களெல்லாம் இந்த மதவெறி முறையிலா நடக்கப் போகின்றன? தங்களுடைய கையெழுத்து நிஜமென்று நான் நம்ப முடியவில்லை. இதை நீங்கள் கவனிக்க வேண்டும்,' என்று மிஸ்டர் ஜின்னாவுக்கு எழுதினார். அதற்கு யாதொரு பதிலும் கிடையாது. காங்கிரஸுக்கு வெற்றி கிடைத்தது. சில முஸ்லிம் லீகினருக்கு வெறி பிடித்தது. காங்கிரஸுக்காக வேலை செய்த ஒரு பிரபல தேசீய முஸ்லிமை ரயில் வண்டியில் குத்திக் காயம் செய்தார்கள்! மிஸ்டர் ஜின்னாவுக்குச் சில வாரங்கள் சீக்குப் பிடித்துக்கொண்டது.

இது மாதிரி 'இழவு'கள் ஏற்படுமென்றுதான் பைசல் செய்துகொள்ள முயற்சிகள் நடந்தன. 'முஸ்லிம் லீக்தான் இந்திய முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதி யென்பதை ஒப்புக்கொண்டால்தான் மேல்பேச்சு நடைபெறும்' என்று மிஸ்டர் ஜின்னா வற்புறுத்திக்கொண்டே வந்தார். 'இப்படி எதற்காகக் கேட்கிறார் என்பது எனக்குப் புரியவே யில்லை' என்று காந்திஜி சொல்லிவந்தார்.

இப்போது அந்த வற்புறுத்தலுக்குக் காரணம் விளங்கிவிட்டது. 'முஸ்லிம் லீகைச் சேராத இந்திய முஸ்லிம்

கள் துரோக முஸ்லிம்கள் ; காங்கிரஸ் வெறும் ஹிந்து சபை ; ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமாக ஒரே சபை இருக்க முடியாது ; ஹிந்துக்கள் வேறு ஜாதி, முஸ்லிம்கள் வேறு ஜாதி ; இருவரையும் ஒருவராகக் கருத முடியாது ; சம அந்தஸ்துடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம் ; இரண்டு துண்டுகள் ஒட்டிக்கொண்டிருக்கலாம் ; இல்லாவிட்டால் இந்தியாவைத் துண்டுபோட வேண்டும்' என்ற அபிப்பிராயங்களை யெல்லாம் குட்டாக வைத்துக்கொண்டு, இந்திய முஸ்லிம்களுக்கு மிஸ்டர் ஜின்னுதான் சர்வாதிகாரி என்பதைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்ளும்படி மிஸ்டர் ஜின்னு 'கண்டிஷன்' பண்ணினுர்.

ஒரு இங்கிலீஷ் நண்பர், இந்த விஷயமாக, காந்திஜிக்குப் பின்வருமாறு எச்சரிக்கை செய்தார் : 'மத்திய சர்க்காரில் ஆதிக்கியம் எவருக்கு இருக்கவேண்டும்? ஹிந்துக்களா, முஸ்லிம்களா? காங்கிரஸ் தாராளமான சலுகைகளைக் காட்டுவதற்குத் தயாரா யிருக்கவேண்டும். பார்லிமெண்டு குடியரசுக் கொள்கைகளையும், மெஜாரிட்டி ஆட்சிக் கொள்கைகளையும் ஒதுக்கிவைத்துவிட வேண்டும். இரண்டு பிரத்தியேகமான நாகரிகங்கள் அந்நியோன்னியமாக நடந்துகொள்ள வேண்டுமானுல், அந்தக் கொள்கைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. மெஜாரிட்டி ஆட்சி என்ருலே, எப்படியாவது மெஜாரிட்டி நாகரிகம் மைனுரிட்டி நாகரிகத்தை அமுக்கிவிடும் என்று முஸ்லிம்கள் அச்சம் கொண்டிருக்கிருர்கள். இந்த முஸ்லிம் உணர்ச்சியைக் காங்கிரஸ் விரைவாக அறிந்துகொள்ளாத பட்சத்தில், பிரிவினையே சிலாக்கியமான மார்க்கமாக ஏற்பட்டுவிடும் என்று எனக்குப் பயம் உண்டாகிறது. பிரிவினையே சிலாக்கியமாகுமானுல், மற்ற மார்க்கங்கள் எவ்வளவு விபரீதமாக இருக்குமென்பது நான் சொல்லாமலேயே உமக்கு விளங்கும்.'

இதற்கு, மஹாத்மா காந்தி கீழ்க்கண்ட பதிலைத் தெரிவித்தார்:

'பிரிட்டிஷ் சர்க்கார் மனது வைத்தால் எவ்வளவோ செய்யலாம். ஏற்கனவே பலாத்காரமாக அந்த சர்க்கார் எவ்வளவோ செய்திருக்கிறார்கள். சமரசத்துக்கு வராத கட்சிகளைப் பைசல் செய்துகொள்ளும்படி, சர்க்கார் கட்டாயப் படுத்தலாம். ஆனால் அவர்கள் அவ்வளவு தூரம் செல்வதற்கு அவசியமில்லை. இதுவரைக்கும் சர்க்கார் செய்து வந்ததென்ன? சரியான பைசல் ஏற்படுவதை அவர்கள் தடுத்து வந்திருக்கிறார்கள். அவ்வளவுதான். பிரிட்டிஷ் சர்க்கார் இந்த மனப்பான்மையை மாற்றிக்கொள்ளட்டும். அவர்கள் மாற்றிக்கொள்வார்களா? பிரித்தாளும் முறையை அனுசரித்தால்தான், இந்தியாவின் மீதுள்ள பிடிப்பை அவர்கள் வைத்துக்கொண்டிருக்க முடியும். ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உண்மையான ஜீவனுடன் கூடிய ஒற்றுமையில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அபாயம் இருந்தே தீரும்; அப்பொழுது அந்த ஆட்சி தீர்ந்தது, என்று அர்த்தம். ஆகையினால், அந்த ஆட்சி ஒழியும் முகூர்த்தத்தில்தான் ஓர் உண்மையான பைசல் ஏற்படும் என்று தோன்றுகிறது. "இந்தியாவைத் துண்டு போடு" என்று மிரட்டுவதற்காக, நாம் என்ன செய்ய முடியும்? அது மிரட்டல் அன்று, அது விரும்பத் தக்க நிலைமைதான் என்றிருந்தால், துண்டு போடுவதை நாம் ஏன் தடை செய்ய வேண்டும்? பிரிவினை விரும்பத் தக்க விஷயமன்று. பிரிவினை மிரட்டலைக் காண்பித்து, முஸ்லிம்களுக்கு அதிகச் சலுகைகளைத் திரட்டுவதுதான் உண்மையான எண்ணம் என்றால், இந்த விதமான எந்தப் பைசலும் அநீதியான பைசல்தான். அநீதியான பைசலைக் காட்டிலும், பைசலே இல்லாமலிருப்பதுதான் சிலாக்கியம். ஆகையால், அபாயம் விலகும் வரைக்கும், பைசலுக்காகக்

காத்திருப்பதற்கு நான் தயார். இந்திய சுதந்திர மென்பது ஜீவனுடன் கூடிய விஷயம். சப்புக் கட்டெல்லாம் அதற்குப் பொருந்தாது. உலகமே புனர் ஜன்மம் எடுக்கப் போகிறது; அந்தப் பிரசவ வேதனையிலிருந்து வருகிறது இப்பொழுது. அல்பமான தொரு தற்கால லாபத்திற்காகச் செய்யப்படும் காரியம், கர்ப்பத்தைக் கீறிச் சிசுவை வெளிப்படுத்துவதற் கொப்பாகும். குறுகிய ஹிந்து மதத்தையாவது, குறுகிய இஸ்லாத்தையாவது நான் பின்பற்ற முடியாது. ஒட்டுப்போட்ட பைசல்களில் எனக்கு அக்கரையே கிடையாது. இந்தியா ஒரு மகத்தான தேசம் — பல நாகரிகங்கள் அதில் நிலைத்து இருந்து வருகின்றன; ஒன்றோடொன்று உறவாடி வருகின்றன; ஒன்றில் இல்லாதது மற்றொன்றில் இருக்கிறது. இந்த உறவு பூர்த்தியாகும் வரைக்கும் நான் காத்திருக்க வேண்டுமானுல் காத்திருக்கத் தயார். எனது ஆயுளில் அது பூர்த்தியாகாம லிருக்கலாம். ஒரு நல்ல காலம் வரும்; அந்தக் காலத்தில் அந்த உறவு பூர்ணத்துவத்தை அடையும் என்ற நம்பிக்கையுடனேயாவது நான் கண்ணை மூட விரும்புகிறேன். அந்த உறவு பூர்ணத்துவம் அடைவதை எவ்விதத்திலும் நான் தடை செய்யாமல் எனது காலத்தைக் கழித்துவிட்டேன் என்றுலே எனக்குச் சந்தோஷம்தான். இந்த ஒன்றுக்கு உட்பட்டு — நான் சமரசத்தின் பொருட்டு எதைச் செய்யவும் தயாரா யிருக்கிறேன். எனது வாழ்க்கையை ஒரு ராஜி வரிசையாகவே மதிக்கலாம். ஆயினும் ஒவ்வொரு ராஜியும் சங்கற்பத்திற்கு அருகாமையிலேயே நம்மைக் கொண்டு போயிருக்கிறது. அந்நிய ஆட்சியைக் காட்டிலும் பாகிஸ்தான் கேவலமாக இருக்க முடியாது. மனது ஒப்பாமல் போனுலும், அந்நியரின் ஆட்சியையே நான் சகித்து வந்திருக்கிறேன். பகவத் சங்கற்பம் அப்படியிருக்கும் பட்சத்தில், எனது இன்பக் கனவு சீர்குலைந்து

போவதை நான் கண்ணூரக் காணும்படி, அநாதையாக நிற்கும்படி, நேரக்கூடும். ஆயினும், இந்தியாவைத் துண்டு போடவேண்டுமென்று முஸ்லிம்கள் உண்மையாக விரும்புகிறார்கள் என்று நான் நம்பவில்லை.'

மிஸ்டர் ஜின்னாவின் வலது கையான நவாப் ஜாதா லியாகத் அலிகானுக்கு மகாத்மா காந்தி பின்வரும் பதிலை அளித்தார்:

'நான் அஹிம்சை மனிதன். இந்திய முஸ்லிம்கள் பிரிவினை செய்துதான் ஆகவேண்டும் என்று உண்மையாக வற்புறுத்துவார்களானால், நான் பலாத்காரமாக அதைத் தடுக்க மாட்டேன். ஆயினும், அந்தச் சின்ன பின்னத்திற்கு நான் ஒருபோதும் எனது சம்மதத்தைக் கொடுக்க முடியாது. அஹிம்சைக்குப் பொருத்தமான சகல உபாயங்களையும் பிரயோகித்துப் பிரிவினையைத் தடுப்பதற்கே நான் முயல்வேன். பிரிவினை யென்பதன் தாத்பரியம் என்ன? ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே நாட்டினராக, ஒற்றுமையாக வாழ்வதற்குக் கணக்கற்ற ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து அநேகம் நூற்றாண்டுகளாகச் செய்து வந்த வேலையை நிர்மூலமாக்குவதாகும். ஹிந்து மதமும் இஸ்லாமும் இரண்டு முரண்பட்ட நாகரிகங்களையும் கொள்கைகளையும் பிரதிபலிக்கின்றன என்ற சித்தாந்தத்தை நினைத்தால் எனது ஆத்மா முழுதும் கலகம் செய்கிறது. இந்த விபரீத சித்தாந்தத்தை ஒப்புக்கொள்வது எனது அபிப்பிராயத்தில் கடவுளே இல்லையென்று சாதிப்பதற்கு ஒப்பாகும். ஏனென்றால், குர்ஆன் போதிக்கும் கடவுளும் பகவத் கீதை உபதேசிக்கும் கடவுளும் ஒன்றே என்றுதான் எனது ஆத்மா பூராவும் நம்பி வருகிறது. நாம் என்ன பெயர்களைச் சூட்டிக்கொண்ட போதிலும் நாமனைவரும் ஒரே கடவுளின் குழந்தைகள்தான் என்பது எனது பரிபூரண நம்பிக்கை.

அன்றைக்கு ஹிந்துக்களா யிருந்த கோடிக்கணக்கான இந்தியர்கள், மதம் மாறினதால் மாத்திரமே வேறு நாட்டினர்களாகிவிட்டார்கள் என்ற கொள்கையை நான் வெறுத்துத் தான் தீருவேன். இதெல்லாம் எனது நம்பிக்கை. தாங்கள் வேறு நாட்டினர் என்று நினைத்துவரும் முஸ்லிம்கள் சிந்தனையில் இந்த எனது நம்பிக்கையை நான் புகுத்த முடியாது. ஹிந்து முதலிய இதர மதத்தினருக்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்று எட்டுக் கோடி முஸ்லிம்கள் சொல்லுகிறார்கள் என்பதை நான் நம்ப மாட்டேன். அவர்களுடைய உள்ளத்தி லிருப்பதை அறிந்து கொள்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. "பிரிவினையா, அல்லவா?" என்ற ஒரே பிரச்னையை வைத்துக்கொண்டு, முஸ்லிம்களுடைய ஓட்டைக் கேட்க வேண்டும். இது போன்ற மூலாதாரப் பிரச்னையில் மத்தியஸ்தம் என்பது சற்றும் பொருந்தாது. இது நல்ல, சுத்தமான, தெளிவான சுய நிர்ணயப் பிரச்னை. எட்டுக் கோடி முஸ்லிம்களுடைய மனத்தைக் கண்டுகொள்வதற்கு, வேறு முடிவான மார்க்கம் யாதொன்றையும் நான் அறியேன். அமைதியான மார்க்கத்தில் சுதந்திரம் அடைவதை எட்டுக் கோடி முஸ்லிம்கள் வெகு சுலபமாகத் தடைசெய்து விடலாம்.'

முஸ்லிம்களின் சுய நிர்ணயம் சம்பந்தமாக மகாத்மா காந்தி மேலே சொல்லியதைக் குறித்து, ஒருவர் காந்திஜிக்குப் பின்வருமாறு எழுதுகிறார்: 'எட்டுக் கோடி முஸ்லிம்கள் பிரிவினையை விரும்பினால், இவ் வுலகத்தில் உண்டான எந்த வல்லமையும் அதைத் தடுத்திட முடியாது என்று தாங்கள் எழுதுகிறீர்கள். முஸ்லிமல்லாதார் 25 கோடிப் பேர்கள் இருக்கிறார்களே. இவர்களுடைய அபிப்பிராயத்திற்கும் இந்தப் பிரிவினை விஷயத்தில் மதிப்புக் கொடுக்கவேண்டும் என்று உமக்குத் தோன்றவில்லையா? ஹிந்துக்களுடைய

அபிப்பிராயத்தின் மதிப்பைக் குறைத்து முஸ்லிம் அபிப் பிராயத்தின் மதிப்பை ஏன் இப்படித் தூக்கி வைக் கிறீர்கள்?'

இந்தக் கேள்விக்கு மகாத்மா காந்தி பின்வரும் பதிலைக் கொடுத்தார்: 'எனது அபிப்பிராயத்தை நான் தெரிவித் தேன். ஹிந்து மெஜாரிட்டியோ, கிறிஸ்தவ மெஜாரிட்டியோ, சீக்கிய மெஜாரிட்டியோ, மிகவும் சிறுபான்மையினரான பார்ஸி மெஜாரிட்டியோ, எட்டுக் கோடி முஸ்லிம்களின் சரி யான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வியக்த மாகத் தெரிவிக்கும் விருப்பத்தைப் பிடிவாதமாக எதிர்க்கப் புறப்படும் பட்சத்தில், அந்த எதிர்ப்பானது உள்நாட்டுப் போரில்தான் முடியும். இது மெஜாரிட்டி மைனாரிட்டி பிரச்னை யன்று. நமது பிரச்னைகளை அஹிம்சை முறையில் நாம் பைசல் செய்துகொள்ள விரும்பினால், நான் சொல்வதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது. எட்டுக் கோடி பேர்கள் முஸ்லிம்கள் என்ற காரணத்தினால், நான் இவ்விதம் சொல்ல வில்லை. எட்டுக் கோடிப் பேர்கள் எந்தச் சமூகத்தினராக இருந்தாலும், இதையேதான் நான் சொல்வேன்.'

மேலும் ஒருவர், 'ஹிந்துக்கள், சீக்கியர்கள் முதலியவர் களைப் பிரமாதமாகப் பாதிக்கும் ஒரு விஷயத்தில் முஸ்லிம் களுக்குச் சுய நிர்ணய உரிமையை நீர் அவ்வளவு தாராளமாக அளித்திடுவது சரியாகுமா? முஸ்லிம் லீக் தீர்மானத்தைப் பின்பற்றி, பாகிஸ்தானை முஸ்லிம்களுக்குள் பெரும் பான்மையோர் ஆதரித்துவிட்டார்களானால், பாகிஸ்தான் பிரதேசங்களில் மைனாரிட்டிகளாயிருக்கும் ஹிந்துக்கள், சீக் கியர்கள் முதலியவர்களுடைய சுய நிர்ணய உரிமைகளுக்கு என்ன நேர்ந்திடும்? இப்படியே நீர் சுய நிர்ணயத்தைப் பரி மாறிக்கொண்டே போனால், அதன் கடைசி முடிவென்ன?' என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்கு, காந்திஜி, 'ஹிந்துக்களுக்கும் மற்றவர்களுக்கும், முஸ்லிம்களைப் போலவே சுய நிர்ணய உரிமை நிச்சயமாக உண்டு என்றுதான் நான் சொல்லிவந்திருக்கிறேன். ஆனால், பிரச்னையைத் தீர்ப்பதற்கு அஹிம்சை மார்க்கத்தில் நான் சொல்வதைத் தவிர வேறு வசதி கிடையாது. தேசத்தில் இருந்துவரும் ஒவ்வொரு சமூகமும் சுய நிர்ணய உரிமையைக் கொண்டாடப் புறப்படுமானல், ஒரு தேசம் என்பதும் அற்றுப் போய்விடும். சுதந்திரம் என்றும் இல்லாமலே போய்விடும். பாகிஸ்தான் அசத்தியம்; நிற்பதற்கு அதற்குக் கால் கிடையாது என்று நான் ஏற்கனவே தெளிவாகச் சொல்லிவிட்டேன். பாகிஸ்தானின் கர்த்தாக்கள் அதை விவரமாக அனுஷ்டானத்தில் கொண்டுவர யோசிக்கும்போது, அது சாத்தியமில்லையென்பது அவர்களுக்குத் தெளிவாகப் புலப்படும். அதெல்லாம் எப்படியேனும் இருக்கட்டும்: எனது அபிப்பிராயம் அது. கோடிக்கணக்கான ஹிந்துக்கள் இந்த விஷயத்தில் என்ன செய்வார்களோ, என்ன சொல்வார்களோ—எனக்குத் தெரியாது. எல்லோருடைய நன்மைக்கும், எல்லோருடைய ஒற்றுமைக்கும் பாடுபடுவதுதான் எனது வாழ்க்கையின் வேலை, எனது ஜன்மத்தின் தருமம்' என்று பதிலளித்தார்.

# அமிர்த - இந்தியா

இந்தியா வெறும் கந்தையா என்பதற்குப் பதில் சொல்வோம்.

மகா பாரதத்தில் கௌரவர்களும் பாண்டவர்களும் போர் செய்துகொண்டதனால், இந்தியா இரண்டு இந்தியாக்களாகிவிடாது. ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும் படைகளும் பங்கெடுத்துக்கொண்ட அந்த மகா யுத்தத்திற்கும் அதன் கதைக்கும் மகா பாரதம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாரதம் என்பது இந்த ஐம்பத்தாறு நாடுகளையும் ஐக்கியப்படுத்திக்கொண்ட ஒரே தேசம் என்பது சரித்திர உண்மை. அதற்குப் பாரத வர்ஷம் என்று பெயர். அதன் ஸ்தாபகர் பரதன் என்பவர். அதன் எல்லை ஸிந்து - ஹிமாலய - ஸேது என்பதும் புராதன விஷயம்.

பூகோள சாஸ்திரமே இந்தியா ஒன்று, அது தனிப்பட்ட பிரதேசம் என்று சொல்கிறது.

இது கம்பீரமான மலைகளாலும் கம்பீரமான சமுத்திரங்களாலும் சூழப்பெற்ற நாடு! பூமி தேவியே எல்லை கட்டிக்கொடுத்த நாடு!

யுவான் சங் என்ற புராதன சீன யாத்திரீகர், 'சந்திரன் தனது குளிர்ச்சியான நிலவைச் சொரிந்துகொண்டிருப்பது போல, பல பரிசுத்தவான்களான ஞானிகள் ஜனங்களுக்கு உபதேசங்களைச் செய்தே, இங்கு ஆட்சி புரிந்து வருகிறார்கள். இதனால் இந்தத் தேசத்திற்கு இந்து என்ற பெயர். இரவில் நட்சத்திரங்களுக் கிடையில் சந்திரன் சுந்தரமாகப் பிரகாசிப்பது போல உலகத்தின் மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்து தேசம் பெரியதாகவும் சிறந்ததாகவும் ஓங்கி நிற்கிற காரணத்தினாலும், இந்து என்று இதற்குப் பெயர்' என்று எழுதுகிறார்.

அபு மஷார் என்பவர் ஆதி முஸ்லிம் அரபு வித்வான். 825-ம் வருஷத்தில் இந்தியாவிற்கு வந்தவர். அவர், 'இந்திய அரசர்கள் ஞானிகள் என்ற பெயரை அடைந்துள்ளார்கள். சாஸ்திரங்களில் அவர்களுக்குள்ள அக்கரைக்கும், ருசிக்கும், ஆனந்தத்திற்கும் எல்லையே யில்லை. உலகத்து நாடுகளி லெல்லாம் இந்த இந்தியாவிற்கு "ஞானத்தின் பொக்கிஷம்" என்றும், "தர்மத்தின் நதி" என்றும், "நியாயத்தின் ஊற்று" என்றும் பிரசித்தி ஏற்பட்டிருக்கிறது' என்று எழுதுகிறார்.

கபீர்தாசரும், குரு நானக்கும், இன்னும் எத்தனையோ பேர்களும் இந்திய நாகரிகத்தை அமிர்தம் போல அனுபவித்திருக்கிறார்கள்.

இந்து அல்லது சந்திரன் என்ற பெயரைப் பெற்ற இந்த நாட்டினர் அரிச்சந்திரனையும் சந்திரமதியையும் ஒரு காலும் மறக்கமாட்டார்கள்.

சந்திரமதிதான் இந்து தேசம். ஒரேநாடாக ஒழுங்கான எல்லைகளுடன் இந்து தேசம் பிறந்த மாதிரியேதான் சந்திரமதியும் தாலிக் கழுத்தோடு பிறந்தாள். அப்பேர்க்கொத்த சிறப்பு வாய்ந்த ஸ்திரீ ரத்தினத்திற்கு உகந்தவன்,

4407
N41



உரித்தானவன் யார்? அவன்தான் அரிச்சந்திரன், சத்தியத்திற்காக அரிச்சந்திரன் நாடு நகரத்தை யெல்லாம் இழந்து, கடைசியில் சந்திரமதியையே வெட்ட நேர்ந்தது. அவனே வெட்ட முயன்றான் — பலிக்கவில்லை. தேவர்கள் பிரசன்னமானார்கள். புஷ்பமாரி பொழிந்தது. சந்திரமதியையா துண்டுபோட முடியும்?

கலியுக அரிச்சந்திரனான மகாத்மா காந்தியாலும்கூட இந்தியாவைத் துண்டுபோட முடியாது.

இந்தியா ஒன்று; கந்தை யல்ல என்பதை யார் அறிவார்? சந்திரமதியின் மாங்கல்யத்தை யார் காண்பர்? சந்திரமதிக்கு உரித்தானவன்தான் தாலியைக் காண்பான். இந்தியாவில் வசித்துவர உரிமையுள்ளவன்தான் இந்தியா ஒன்று என்பதைக் கண்டறிவான். இந்தியா ஒன்று என்பதைக் கண்டுகொள்ளாதவன் இந்தியாவிற்கு உரித்தானவ னல்லன். அவன் வெளியே போகவேண்டியவன்தான்.

இந்தியாவைத் துண்டுபோட முடியுமா? சந்திரமதியை வெட்ட முடிந்ததா?